
# கல்கி

காந்தி மலர்

KALKI
5.10.1969
40காசு





நாலு நண்பர்களுக்கு நடுவிலோ...அல்லது தனிமையில் இன்பம் காணும் தருணத்திலோ...எந்த நேரத்தையும் இனிமையாக்குகிறது கோகா கோலா. விறுவிறுப்பான அதன் தீஞ்சுவையை சுவைத்து மகிழுங்கள். பருகப் பருகத் தெவிட்டாத இன்பம் அது. அருந்தி மகிழுங்கள் கோகா கோலா, ஐஸ்-குளிர் கோகா கோலா!

புத்துணர்வூட்டிடும் அருமை, கோகா கோலாவின் பெருமை!


கோகா கோலா, கோகா கோலா கம்பெனியின் ரெஜிஸ்டர்டு டிரேடு மார்க்

**எத்தருணத்திலும்**
**இனிமை,**
**கோகா-கோலாவின்**
**மகிமை!**

Coca-Cola

CMCC-6-162-TAM

"WHERE HE SAT WAS A TEMPLE
WHERE HE WALKED WAS HALLOWED GROUND"
—Jawaharlal Nehru



"The Andhras have captivated me"

# WHAT MAHATMA GANDHI SAID OF "ANDHRA DESH" AND ITS PEOPLE

"The Andhras are a virile people, proud of their traditions. They are devoutly religious people, capable of sacrifice. Much is expected from them by the country."

* * * * * *

"Andhra Desh is full of vigour. The people are strong, powerful, insistent, generous and loving. They have faith in the future of their own province and India.

The Andhras have captivated me. Andhra has hardy, staunch workers, it has resources, it has poetry, it has faith, it has the spirit of sacrifices. It has the greatest possibilities in hand-spinning and hand-weaving and grows fine cotton. It has two mighty rivers watering the hinterland. It has ports which were at one time famous."


*(Young India, April 13, 1921)*


# கல்கி காந்தி மலர்

## பொருளடக்கம்



சௌமிய, புரட்டாசி 19 - அக்டோபர் 5


இதைக் கண்டு என்ன பயம்? இது ஒரு பூனைக் குடும்பத்தைச் சேர்ந்ததுதான்!
கம்யூனிஸம்.
PK


ஆ, மந்திரக்காளர்! இப்போது இந்த யானை மறைந்து விடும், பாருங்கள்!
நகர்ப்புறச் சொத்து
பாங்கு சர்க்கார் உடைமை



தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

மலர் 29 ★ இதழ் 10

# நூற்றாண்டு விழா

இது மகாத்மா காந்திஜியின் ஜனன நூற்றாண்டு திருவிழா வாரம். பிரார்த்தனை செலுத்தவேண்டிய வாரம் இது. காந்திஜியின் உபதேசங்களையும் நோக்கங்களையும் புரிந்துகொண்டு, பின்பற்றத் தவறிவிட்ட நாம், அந்தக் குற்றத்துக்குப் பிராயச்சித்தமாக அவரது குணாதிசய மகிமையைப் பற்றி வாய்ப்பந்தல் போட்டு இந்த வாரத்தைச் செலவழிப்பதில் பயனில்லை.

என்னுடைய குறிப்புப் புத்தகமொன்றைப் பிரித்துப் பார்க்கையில் 1956ம் ஆண்டு அக்டோபர் 25ந் தேதி பின்வருமாறு நான் எழுதி யிருப்பதைக் காண்கிறேன்:

> காந்திஜி எண்ணிய எண்ணங்களை மற்றவர்கள் எண்ணியதுண்டு. நானும் எண்ணியதுண்டு; அவர் தம் எண்ணங்களை மற்றவர்களுக்கு எடுத்துரைக்குமுன்பே கூட, இவ்வாறு பிறரும் எண்ணியதுண்டு. ஆனால் தாம் எண்ணியதைச் செயலாக்கிக் காட்டுவதற்கான சக்தியை அவர் பகவானிடமிருந்து பெற்றிருந்தார். இதனால்தான் அவரைப் பகவானின் ஆணை பெற்றுவந்த ஓர் அவதாரமாக நான் கருதுகிறேன்.

வேதங்கள் கடலில் மூழ்கியபோது மத்ஸ அவதாரம் எடுத்து இறைவன் அவற்றை மீட்டதுபோல், அடிமைத்தனத்தில் மூழ்கியிருந்த இந்தியாவை காந்திஜி மீட்டார். மீட்கப்பட்ட இந்திய சுதந்திரத்தைக் காக்கும் பொறுப்புப் பெற்றவர்கள் என்ன செய்கிறார்கள் என்ற கேள்வி எழுகிறது. கல்வியும் செல்வமும் படைத்த மக்கள் அனைவரும் தம்மைத் தாமே கேட்டுக்கொள்ள வேண்டிய கேள்வி இது. பகவான் கடலிலிருந்து மீட்ட வேதங்களை ரிஷிகளிடமும், மன்னர்களிடமும் தந்தான். அவர்களே மக்களின் மனநலனுக்கும் உடல் நலனுக்கும் பொறுப்பேற்றவர்கள் என்பதால் அவர்களிடம் பகவான் தந்தான்.


நமது மக்களில் கல்வியாலும், செல்வத்தாலும் உயர்நிலையில் உள்ளவர்களிடம் இந்திய சுதந்திரம் என்பது ஒரு காப்புப் பொருளாக விடப்பட்டது. நம் காலத்து மத்ஸ அவதாரமாகத் தோன்றிய காந்திஜி தந்த காப்புப் பொருளை, முறைப்படிக் காத்து, அவதார புருஷரின் நம்பிக்கையை நிறைவேற்றினோமா என்று மேன்மக்கள் சிந்திக்க வேண்டும். இதுவரை தவறியதற்கு ஈடு செய்வதாக அவர்கள் உடனடியாகப் பிரதிக்ஞை எடுத்துக் கொள்ள வேண்டும்.

குற்றத்துக்கு மனமாரத் துயரப்பட்டுக் குற்றத்தை நிவர்த்தி செய்யும் முயற்சிகள்தாம் உண்மையான பிராயச்சித்தமாகும். வீண் புகழ்மொழிகள் செலுத்துவதில் ஒரு பயனும் இல்லை.

இந்தியாவின் அரசியல் விவகாரம் தன் வழியே செல்லப் போகிறது. அது ஒருபுறம் இருக்க, காந்திஜி இப்போது இந்தியாவைவிட உலகுக்கே உரியவர் ஆகி விட்டார். உலக சமாதானமே அவரது வாழ்க்கைப்பணி. உலகைச் சர்வ நாசம் என்ற பீதி இன்று அச்சுறுத்துகிறது. உலக மக்கள் எல்லோருக்கும் காந்திஜி கூறிய புத்திமதி என்னவென்றால் ஒவ்வொருவரும்

மற்ற எல்லோருடனும் நல்லெண்ணத்தையும் நட்புறவையும் வளர்த்துக் கொள்ள வேண்டும்; இந்த மாபெரும் முயற்சிக்குப் பிறரை எதிர்பார்க்காமல், தானே முனைந்து முதலடி எடுத்து வைக்க வேண்டும். காந்திஜியின் இவ்வுபதேசத்தை அதிமுக்கியமாக மதித்து, உடனடியாகச் செயல்படுத்தாவிடில் உலக நாடுகள் அனைத்துக்குமே பூரண அழிவு ஏற்படுகிற அபாயம் ஏற்பட்டிருக்கிறது.

மக்கள் இன வேறுபாடுகளையும் மற்ற தவறான மனப்போக்குகளையும் மறந்து விடவேண்டும். மனித சமூகம் என்பது பேதப்படுத்தக் கூடாத ஓர் ஐக்கிய அமைப்பு என்பதை எல்லோரும் தெளிந்துணர வேண்டும். இது சிரமமான காரியமா யிருக்கலாம். ஆனால் ஒவ்வொருவரும் பகவானைத் துணைகொண்டால் எல்லாச் சிரமங்களும் பறந்து போகும்.



# என்ன சேதி?

### சர்வோதய நூல்கள்

சர்வோதய பிரசுராலயம் ஒரு தர்ம ஸ்தாபனம். சென்ற இருபது ஆண்டுகளாகக் குறைந்த விலையில், லாப நோக்கமில்லாமல், காந்தி-வினோபா சர்வோதய நூல்களைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளியிட்டு நம் தேசத்திலும் வெளிநாடுகளிலும் விநியோகித்து வருகிறது. இதுவரை காந்தி சர்வோதய நூல்கள் சுமார் இருநூற்றினைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளியிட்டு, சுமார் பதினைந்து லட்சம் பிரதிகள் விற்றுள்ளது.

தமிழிலும் ஆங்கிலத்திலும் இரண்டு மாதப் பத்திரிகைகளும் சர்வோதயப் பிரசுராலயத்தினரால் வெளியிடப்படுகிறது. அண்ணலின் நூற்றாண்டில் இந்த நூல்களுக்கு அன்பர்களின் ஆதரவு கிட்டுமென நம்புகிறோம்.

விவரங்களுக்கு எழுத வேண்டிய முகவரி: **திரு கா. ராமஸ்வாமி, நிர்வாக ஆசிரியர், சர்வோதய பிரசுராலயம், 24, ஸ்ரீநிவாசபுரம், தஞ்சாவூர்.**

### ஒரு புண்ணிய கைங்கரியம்

ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதர்கள் அவதரித்த காலடியில் ஸ்ரீ பரமஹம்ஸ ராமகிருஷ்ணரின் பெருமையை விளக்கும் அத்வைத ஆசிரமமொன்று முப்பதாண்டுகளுக்கு மேலாக அரிய முறையில் ஆஸ்திக, சமூக கல்விப் பணி புரிந்து வருகிறது. 1300 மாணவர்கள் பயிலும் உயர்நிலைப் பள்ளியும், ஆயுர்வேத வைத்தியசாலையும், ஹரிஜன மேம்பாட்டுப் பணியும் இந்த ஆசிரமத்தின் குறிப்பிடத்தக்க அம்சங்களாகும். தற்போது ஆசிரமத்துக்குக் கட்டிடமும், பூஜா நிலையமும், பிரார்த்தனைக் கூடமும் எழுப்புவதற்குத் திட்டமிட்டிருக்கிறார்கள். இதற்கு லட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. உத்தமமான இப் பணிக்கு ஆஸ்திக அன்பர்கள் தாராளமாக உதவவேணும். நிதி அனுப்பவேண்டிய முகவரி: **ஸ்வாமி சிதம்பரானந்தர், ஸ்ரீ ராமகிருஷ்ண அத்வைத ஆசிரமம், காலடி, எர்ணாகுளம் மாவட்டம், கேரளம்.**

# ராஜாஜியின் கருத்துக்கள்

அகமதாபாத்தில் பயங்கரமான கொலைகளும் கொடுமைகளும் ரகளைகளும் தோன்றிப் பல நாட்கள் ஆன போதிலும், இப்படிப்பட்ட சூழ்நிலை எப்படி எழுந்தது என்பது பற்றிப் பத்திரிகைகள் எவ்விதக் குறிப்பும் காட்டவில்லை. பயப் பிராந்தி உண்டு பண்ணுதிருப்பதும், வகுப்புணர்ச்சிகளைக் கொதித்தெழச் செய்யாமலிருப்பதும் நல்லதுதான். ஆனால் செய்திகளை வெளியிடாமல் அமுக்கி வைப்பதிலும் அதியாகச் சென்றுவிடக் கூடாது.

★

'தானிய விலைகளில் ஏற்றத் தாழ்வை நீக்கும் பொருட்டும், பஞ்சப் பகுதிகளுக்குத் தானியங்கள் எளிதில் கிடைக்கும் பொருட்டும் தேச முழுவதும் தானியப் போக்குவரத்துக் கட்டுப்பாடுகளைப் பூரணமாக நீக்கிவிட வேண்டும்' எனச் சென்னை ராஜ்ய உணவு தானிய வியாபாரிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. 'கட்டுப்பாடுகள் உள்ள வரையில் விலைகளில் மிகுந்த ஏற்றத் தாழ்வு இருக்கத்தான் செய்யும்; பற்றாக் குறைப் பகுதிகளில் உயர்ந்த விலையும், உபரியாக விளைச்சல் கண்ட பகுதிகளில் தாழ்ந்த விலையும் நிலவும்; இதனால் உற்பத்தியாளர், பொருளை வாங்கும் மக்கள் இருவருமே பாதிக்கப்படுவர். இதுவே எங்களுக்கு அநுபவ பூர்வமாகத் தெரியும் நிலவரம்' என்று சங்கத்தின் அறிக்கை கூறுகிறது.

ஆயினும் இதுபோல் கோரிக்கை விடுப்பதால் நம் ஆட்சி யஜமானர்களை அது தொடுவதில்லை. அவர்களது கொள்கைகள் அரசியல் நெரிசலைத்தான் சார்ந்துள்ளனவேயன்றி, பொருளாதார அடிப்படைகளை அல்ல. இதை மேற்படி வர்த்தக சங்கத்தினர் இத்தனை நாட்களில் உணர்ந்திருக்க வேண்டும். இன்று சுதந்திரப் பொருளாதார வழியைப் பின்பற்ற வேண்டுமென விரும்புவோர், அதையே இலட்சியமாகக் கொண்ட அரசியல் கட்சியில் சேர்ந்து அதற்கு வலு ஊட்ட வேண்டுமே யன்றி, வெறுமனே தீர்மானம் நிறைவேற்றி விட்டு, அதையொட்டிச் செயலில் இறங்காதிருந்தால் வெறும் பனிப் படலமாகவே முடிந்து போகும்.

★

சட்டத்தை மீறிச் சாராயம் காய்ச்சிச் சிலர் லாபமடிக்கிறார்கள் என்பதற்காக, கள்ளுக் கடைகளுக்கு லைசென்ஸ் வழங்கிப் பகிரங்கமாகத் திறந்தால் அது பரிதாபமாகும். சர்க்காரின் வருமானம் என்பதொன்றே பிரச்னையாகில், வருமான வரிக்கு 'ஸர்சார்ஜ்' விதிப்பதே நியாயமான தீர்வாகும். கள் குடிக்கக் கூடியவர்களைக் குடிக்கச் செய்து அவர்கள் மீது மட்டும் வரி போடுவதைவிட, எல்லாப் பண்டங்களையும் வாங்கும் மக்கள் அனைவர் மீதும் உபரியாக விற்பனைவரி விதிப்பதே கௌரவமாயிருக்கும்.

மதுவிலக்கினால் ஏற்படும் வரி நஷ்டத்தை ஈடு செய்வதற்காகவே விற்பனை வரி விதிக்கப்பட்டது. விற்பனை வரி என்று ஒன்றை விதிப்பதற்கு நியாயமே மதுவிலக்குத்தான். விற்பனை வரி எல்லா ராஜ்யங்களுக்கும் காமதேனுவாக உதவி வருகிறது. இப்போது இதில் தமிழ் நாட்டு அரசாங்கத்துக்கு ரூ. 65 கோடி கிடைக்கிறது. முன்பு மதுவிலக்கை அமுல் செய்து இப்படிப்பட்ட ஒரு வரியைச் சாத்தியமாக்கியவர்களிடம் அரசாங்கம் நன்றி கொள்ள வேண்டும்.

விற்பனை வரி எவரையும் பெரிதாகப் பாதிக்கவில்லை. அதே சமயத்தில் இதன் மூலம் மதுவிலக்கு ஏற்பட்டிருப்பதால், ஏழைகள் பணத்திலும் நெறியிலும் அடைந்த நஷ்டத்தைத் தவிர்த்திருக்கிறோம். விற்பனை வரி செலுத்துவதால் மக்கள் பண்டங்களை வாங்குவதில் பாதிப்பு ஏற்படவில்லை. ஆனால் மதுவுக்காக ஏழைகள் செலவழிக்கும் போதோ அவர்கள் தம் குடும்பத்துக்குச் சுகமும், ஆரோக்கியமும் தருகிற பல பண்டங்களை வாங்காமலே இருந்து விடுகின்றனர். இப்பண்டங்களிலிருந்து சர்க்காருக்குக் கிடைக்கும் வரியும் நஷ்டமாகிறது.

காந்தி சதாப்தி முடிந்தவுடன் 'தமிழக அரசாங்கம் மதுவிலக்கை எடுத்துவிடப் போகிறது என்று காணும் பத்திரிகைச் செய்தி ஆதாரமற்ற கட்டுக்கதை என நம்புகிறேன்.

★

ஸ்ரீ ஜகஜீவன்ராம் பத்தாண்டுகளாக வருமானக் கணக்குக் காட்டாததற்குக் காரணம், ஏராளமான அலுவல் உள்ள மந்திரி வாழ்க்கையில் ஏற்படக்கூடிய ஞாபக மறதியே என்கிறார் ஸ்ரீமதி இந்திரா காந்தி. மந்திரிகளாக இல்லாத நம்மில் பலருக்கும் பல அலுவல்கள் உள்ளன என்பதைக் குறிப்பிட வேண்டும். அப்படியே மந்திரியின் ஞாபக மறதியைக் கண்டிக்காமல் விட்டு விட்டாலும், பத்தாண்டுகளாக வருமான வரி அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காததற்கு விளக்கம் உண்டா? பத்தாண்டுகளாக வரி விதிக்கப்படாத வருமானத்தின் கூட்டுத் தொகை என்ன என்று அறிவதும் இப்பிரச்னைக்குத் தொடர்புள்ள விஷயமே.

மேற்கண்ட விஷயமாக ஸ்ரீ வி. வி. தேசாய் அவர்கள் பிரதமருடன் கடிதப் போக்கு நடத்தி வருகிறார். யூனியன் மந்திரிசபையைச் சேர்ந்த பதினொரு பேர் வருமானக் கணக்குக் காட்டாததாக அவரது கடிதத்திலிருந்து தெரிகிறது. நிதிமந்திரி பதவியிலிருந்து விலகுவதற்கு முன்பே ஸ்ரீ மொரார்ஜி தேசாய், ஸ்ரீ ஜகஜீவன்ராமின் தவற்றை ஸெக்ரடேரியட்டின் கவனத்துக்கு நடவடிக்கைக்காகக் கொண்டு வந்ததாகத் தெரிகிறது.

# முன்னுரை

காந்தியடிகளுடைய மனத்தைக் கவர்ந்த பிரார்த்தனைப் பாட்டு 'ரகுபதி ராகவ ராஜாராம்' என்பது. இது அனைவருக்கும் தெரிந்த விஷயம். காந்தி மகான் அவ்வப்போது பகவத் விஷயமாக எழுதி வந்த வாசகங்களை மறுபடியும் இந்தக் காந்தி நூற்றாண்டு திருவிழா கொண்டாடும் சமயம் மக்கள் படிப்பது மிக்க நலன் தரும். இந்தக் கருத்தோடு அவற்றைத் தொடர் கட்டுரைகளாகக் கல்கியில் மறுபடியும் பிரசுரிக்கலாம் என்று நான் சொன்ன யோசனையை சதாசிவம் அவர்கள் ஒப்புக் கொண்டதற்கு என்னுடைய நன்றி.

காந்தி மகான் நம்முடைய நாட்டுக்காகவும் மனித சமூகத்துக்காகவும் அநேக காரியங்கள் செய்தார். அவற்றில் மகோந்நதமான வெற்றிகள் அடைந்து புகழ் பெற்றார். அரசியல் துறையிலும், சமுதாய சீர்திருத்தத் துறையிலும், தொழில் துறையிலும் பல பிரசித்தி பெற்ற பணிகள் ஆற்றினார். இந்தக் கட்டுரைத் தொடரில் அடங்குகிற காந்தி வாசகங்கள் மற்ற விஷயங்களைத் தவிர்த்து, கடவுளைப் பற்றியும் சமயங்களைப் பற்றியுமே இருக்கும். சத்தியாக்கிரகம், கதர், தீண்டாமை ஒழிப்பு முதலான விஷயங்களைப் பற்றி எழுதியதை இந்த மஞ்சரியில் எதிர்பார்க்க வேண்டாம். பகவத் விஷயம் ஒன்றே இந்த 'ரகுபதி ராகவ' தொடரில் வரும்.

இந்தியாவுக்குச் சுதந்திரத்தைச் சம்பாதித்துத் தந்த நமது அப்பன் வெறும் அரசியல்வாதியல்ல, தெய்வத்தைக் காட்டி வந்த முனிவனுமாவான். காந்தி மகானுடைய அந்தரங்க உள்ளத்தை அறிய வேண்டுமானால் அவருடைய அரசியல் சரித்திரத்தைப் படித்து விட்டால் மட்டும் போதாது. சம்பூரண காந்தியை அவருடைய பிரார்த்தனைக் கூட்டங்களில்தான் மக்கள் கண்டார்கள். எழுத்திலும்கூட அவருடைய அறிவுரைகளில்தான் அவரைச் சரியாகக் கண்டு குறையின்றி உணரலாம்.

நம்முடைய சுதந்திரத்தின் தனிச் சிறப்பு என்னவென்றால் அதன் வெற்றிச் சரித்திரத்தில் கலந்து வந்த கடவுள் பக்தியும், அதையொட்டிய சாத்துவிகமும். அந்தத் தனிச் சிறப்பை மங்காமல் மறவாமல் நாம் காப்பாற்றி வரவேண்டும். அப்போதுதான் பாரத நாட்டுக்கு உலகத்தில் ஒரு தனி ஆசனம் இருக்கும். இல்லாவிடில் மற்றவர்களோடு பின் வரிசையில் பத்தோடு பதினொன்றாக இருக்க வேண்டியதுதான்.

நம்முடைய காந்தி மிகக் கூர்மையான மூளையும் தற்கால விஞ்ஞானக் கல்வியும் படைத்தவர். இந்த யுகத்தின் ஆட்சேபணை ஐயப்பாடுகள் அனைத்தையும் அறிந்த இத்தகையவர், நம்முடைய அரசியல் தலைவர், ராம பஜனை செய்து வந்தார். மதங்கள் அனைத்திலும் ஒரே தெய்வம் என்பதைப் போதித்தார். இருபதாவது நூற்றாண்டில் ஓர் ஆஸ்திகராக விளங்கினார். இதைப் பாரத மக்கள் கல்லெழுத்தில் எழுதிய சாசனமாக வைத்துக் கொண்டு வாழ்க்கை நடத்த வேண்டும். அப்படி நடத்தினால்தான் ஆண்டவன் அருள் பெற்றுச் சுதந்திரத்துடன் சுகமும் பெறுவோம்.



## 1

*நான் உண்மையைக் கண்டு விட்டவன் அல்ல. மெய்ப் பொருளை நாடும் மக்களில் நான் ஒருவன். அவ்வளவுதான். ஒரு பெருமை நான் சொல்லிக் கொள்ளலாம். உண்மையைக் காண்பதற்கு வழி கண்டேன் — அவ்வளவே. மெய்ப் பொருளைக் காணுவதற்கு இடையறாமல் முயன்று வருகிறேனாயினும் நாடும் பெரும் பொருளை இன்னும் காணவில்லை. ஒருவன் மெய்ப் பொருளை முழுதும் கண்டு விட்டால் அவன் வீடு பெற்றவனே ஆவான்; வாழ்க்கையின் பலனை அடைந்துவிட்டு முக்தி கண்டவன் ஆவான்.

என்னுடைய குறைகளை நான் உணராமல் இல்லை. நன்றாகவே உணர்வேன். உணர்ந்து அதற்காக வருந்த

* இந்தக் கட்டுரையிலும் தொடர்ந்து வரும் கட்டுரைகளிலும் 'நான்' என்னும் இடங்கள் காந்திஜியைக் குறிக்கும்.

மும் படுகிறேன். ஒருவன் தன் குறைகளைக் கண்டு கொண்டு விட்டால் அதுவே ஒரு பெரும் பாக்கியம். எனக்கு ஏதேனும் விசேஷ சக்தி இருப்பின் அதன் இரகசியம் என்னவென்றால் என் குறைகளை நான் நன்றாக அறிந்திருப்பதே ஆகும்.

மற்றவர்களுடைய குறைகளை யாருமே காண்பார்கள். தன்னுடைய குற்றம் குறைகளை ஒருவன் கண்டு கொள்வது அரிது. அதற்கு வேண்டிய ஞானம் எளிதில் கிடைக்காது. அந்த அறிவைப் பெற்றிருப்பதே என்னுடைய பாக்கியம்.

* * *

எனக்குப் பூரண அறிவு இல்லை என்பதற்கு என்னுடைய துயரமே போதிய சாட்சி. நான் சம்பூரண ஞானம் அடைந்தவனாக இருந்தால் நான் காணும் துயரம் என் உள்ளத்தைக் கலங்கச் செய்யாது. ஞானியானவன் துயரங்களைக் காண்பான். ஆனால் அவற்றைக் கண்டு கலக்கம் அடைய மாட்டான். துயரத்துக்கு மருந்து என்ன என்பதைச் சொல்வான்.

பூரண ஞானம் பெற்று நான் ஒரு சித்தனாக இருந்திருப்பேனாகில், நான் கண்ட உண்மையும் சொல்லும் மருந்தும் தாமாகவே பிறரை வசப்படுத்தியிருக்கும். நான் ஒன்றும் அதற்காகச் செய்ய வேண்டியிருக்காது. நான் சொல்லிக் காட்டும் உண்மையே அதை உணரும் சக்தியைப் பிறருக்குத் தந்திருக்கும். நான் கண்டு விட்டதைப் பிறருக்கு எடுத்துக்காட்டி அறிவு ஊட்ட இவ்வளவு வருத்தப்பட வேண்டியிராது. என் அறிவானது குறையும் குற்றமும் கலந்த அறிவு. பூரண அறிவு அல்ல. அதனாலேதான் நான் கண்டதைப் பிறருக்கு உணர்த்தும் சக்தி எனக்குப் போதிய அளவில் உண்டாகவில்லை. நான் கண்டு என் மனத்தில் உறுதியாக நிற்பதைப் பிறர் காணும்படி செய்வது மிகவும் சிரமமாக இருக்கிறது. நான் சொல்லுவது பிறருக்கு எளிதில் விளங்குவதில்லை. பல சமயம் சொல்லுவதெல்லாம் வீணாகிறது. என் முயற்சி பலன் தராமலும் போகிறது. இதற்கெல்லாம் காரணம் என்னுடைய காட்சியிலுள்ள குறையே.

சம்பூரண ஞானியாகாத நான் என்னுடைய ஞானக் குறைவினால் நாட்டிலுள்ள வறுமையைக் கண்டு வருத்தம் அடைகிறேன். பூரண ஞானம் அடைந்தவனுக்குத் துயரம் என்பது இல்லை.




முற்றிய அறிவு பெறாத ஒருவன் துயரத்தில் மூழ்கித் தத்தளிப்பவர்களைக் கண்டு அநுதாபம் இல்லாமல் இருந்தால் அவன் மிருகமே ஆவான் அல்லவா? நாட்டில் நாம் காணும் கஷ்டங்கள் இருக்க வேண்டியதில்லை. அவற்றைத் தவிர்த்துக் கொள்ளாமல் இருக்கிறார்களே என்று துயரம் உண்டாகிறது. ஆண்டவன் ஆளும் உலகத்தில் இவ்வித வறுமை ஏன்? மக்கள் ஊமைகளாக, எலும்பும் தோலுமாக ஏன் இருக்க வேண்டும்? இவ்வாறு எண்ணி நான் துக்கத்தில் மூழ்கி நிற்கிறேன்.

(யங் இந்தியா 17-11-21)



वैष्णव जन तो तेने कहीअे, जे पीड पराअी जाणे रे;
परदु:खे अुपकार करे तोये, मन अभिमान न आणे रे
सकळ लोकमां सहुने वंदे, निंदा न करे केणी रे;
वाच,काछ,मन निश्चळ राखे, धन धन जननी तेनी रे
समदृष्टी ने तृष्णा त्यागी, परस्त्री जेने मात रे;
जिह्वा थकी असत्य न बोले, परधन नव झाले हाथ रे
मोह माया व्यापे नहि जेने, दृढ वैराग्य जेना मनमां रे;
रामनामशुं ताळी लागी, सकळ तीरथ तेना तनमां रे
वणलोभी ने कपटरहित छे, काम क्रोध निवार्यां रे;
भणे नरसैंयो तेनुं दरसन करतां,
कुळ अेकोतेर तार्यां रे.

ஓவியங்கள் : கனுதேசாய்

மேலே : காந்திஜி விரும்பிய
கீதத்தை எழுதிய நரஸிமேதா

கீழே : ஆதிசங்கரர்
சபரி
ஜனகர்











# காந்திஜி விரும்பிய கீதம்

**காந்தி அடிகளின் மனம் கவர்ந்த 'வைஷ்ணவ ஜனதோ' பாடலின் மூலத்தையும், பொருளையும் இங்கு வாசகர்களுக்கு அளிக்கிறோம். உண்மையான அடியாரின் இயல்புகளை இப் பாடலில் நரஸிமேதா விவரிக்கிறார். பாடலை யாத்த நரஸி மேதாவும், பாடலால் ஈர்க்கப் பெற்ற அண்ணலும் அவ்வியல் புகள் அனைத்துக்கும் மூர்த்தியாக விளங்கினர்.**

வைஷ்ணவன் என்று எவனைக் கூறுவது ?

எவன் ஒருவன் பிறர் துயரங்களை உணர்வானோ, பிறர் கஷ்டங்களைக் களைந்து உதவுவானோ, அகத்தில் அகந்தைக்கு இடமே கொடுக்க மாட்டானோ, அவனே உண்மையான வைஷ்ணவன்.

எவன் உலகத்தின் உயிரினம் அனைத்தையும் வணங்குகிறவனோ, எவன் பிறரை நிந்திக்கவேமாட்டானோ, மனம் - வாக்கு - காயம் ஆகியவற்றைச் சலனமின்றி வைத்துக் கொள்பவனோ, அவனைப் பெற்ற அன்னை மிகவும் கொடுத்து வைத்தவள்.

எவன் சமநோக்கு உடையவனோ, வேட்கையை விட்டொழித்தவனோ, பிற மாதர்களைத் தாயாக வணங்குபவனோ, எவன் பொய்யே பேச மாட்டானோ, பிறர் பொருளைக் கையால் தீண்டவும் மாட்டானோ, அவனே உண்மையான வைஷ்ணவன்.

எவனை மோகமும் மாயையும் அண்டாவோ, எவன் மனத்திலே திட வைராக்கியம் குடிகொண்டிருக்குமோ, எவன் வாய் ராம நாமத்தையே ஓயாது ஓதிக் கொண்டிருக்குமோ, அவனுடைய உடல் எல்லாப் புனிதத் தீர்த்தங்களுக்கும் உறைவிடம் ஆகும்.

எவன் பேராசையும், கபடமும் இல்லாதவனோ, எவன் காமத்தையும் கோபத்தையும் விட்டொழித்தவனோ அவனே உண்மையான வைஷ்ணவன்.

அவனைத் தரிசிப்பவர்கள் தலைமுறை தலைமுறைக்கும் கடைத்தேறியவர்கள் ஆவார்கள்.

— இப்படிக் கூறுகிறார் நரஸிமேதா


மேலே : ராமதாஸர்
மீரா
தியாகராஜர்

கீழே : அரிச்சந்திரன்
சைதன்யர்
தருமபுத்திரர்





# டிவிஎஸ் வினியோகிக்கும் உறுப்புகள் நம்பகமானவை




டிவிஎஸ் வினியோகிக்கும் உறுப்புகளை உற்பத்தி செய்வோரில் பெரும்பாலோர் தங்கள் தங்கள் துறைகளில் தலைசிறந்தவர். அவை நீண்ட நாள் உழைக்கும் என்பதில் ஐயமில்லை.

**உங்கள் நம்பிக்கைக்கு உரியது டிவிஎஸ்**

**டி வி சுந்தரம் அய்யங்கார் & சன்ஸ் பிரைவேட் லிமிடெட்**
மதுரை-திருச்சி-திருநெல்வேலி-புதுக்கோட்டை-சேலம்-கோயமுத்தூர்-திருவனந்தபுரம்

**சுந்தரம் மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெட்**
மதராஸ்-பெங்களூர்-செகந்திராபாத் விசாகபட்டினம்

**மதராஸ் ஆட்டோ சர்வீஸ் பிரைவேட் லிமிடெட்**
மதராஸ்-பெங்களூர்-விஜயவாடா

TVS

TVS-4096







## காந்தி தரிசனம்





மேலே: காந்திமகானின் இளமைத் தோற்றங்கள் சில ○ அன்னை கஸ்தூரிபா அண்ணலுக்குப் பாதம் கழுவும் காட்சி.

கீழே: ஸ்ரீமதி இந்திரா காந்தி ஆறு வயதுச் சிறுமியாக இருந்த போது காந்திஜியுடன் ○ பிரார்த்தனைக் கூட்டத்துக்குப் புறப்பட்டு விட்டார் மகாத்மா. அவருக்கு இருபுறமும் ராஜாஜி யின் புதல்விகளான நாமகிரியும் லக்ஷ்மியும்.










- காந்திஜியும் ராஜாஜியும்.
- நேருஜியுடன்.
- கவியரசரின் உபசாரம்.
- ஹரிபுராவில் சுபாஷ் போஸுடன்.
- அபுல்கலாம்ஆஸாத், ஆசாரிய கிருபளானியுடன்.
- வட்டமேஜை மகாநாட்டுக்குக் கிளம்பும்போது மாளவியா, சரோஜினியுடன்.
- வல்லபாய் பட்டேலும் காந்திஜியும்.
- மவுண்ட்பாட்டன் தம்பதியுடன்.

















□ 1945ல் தமிழ்நாட்டில் சுற்றுப் பயணம் செய்த போது தமிழகம் தந்த வரவேற்பு □ பிரார்த்தனைக் கூட்டத்தில் அண்ணல் பேசுகிறார். ஆர்வமுடன் கேட்போரில் ஸ்ரீமதி எம். எஸ். ஒருவர்.






□ ரயில் பிரயாணத்தின் போது ஹரிஜன நிதி திரட்டுகிறார் □ இத்தாலியில் முஸோலினி படை வீரர்கள் அண்ணலுக்கு மரியாதை செலுத்தினர் □ ரோமேன் ரோலண்ட் என்ற பிரபல பிரஞ்சு சிந்தனையாளருடன் □ ஜாகிர் ஹுஸைனுடன் காந்திஜி.

















■ குஷ்டரோகியிடம் அன்பும் பரிவும் காட்டும் அண்ணல் ■ தமிழ் நாட்டில் மாபெரும் கூட்டத்தில் அண்ணல் ஹிந்தியில் பேசுவது மொழிபெயர்க்கப் படுகிறது ■ பிரிட்டன், காந்தி நூற்றாண்டு விழா தபால் தலை வெளியிட்டிருக்கிறது ■ புதுதில்லியில் இந்தியா கேட் வழியாக அண்ணலின் இறுதி யாத்திரை ■ காந்தி மகானை என்றும் நினைவுபடுத்திக் கொண்டிருக்கும் சென்னை காந்தி மண்டபம்.






சாருலதா
சாருலதா
சாருலதா
கி.ராஜேந்திரன்

## அத்தியாயம் 1

# அதிர்ச்சி தரும் அழகு!



**கா**லச் சக்கரம் சரித்திரப் பாதையில் சுழல்வதுபோல் வெகு வேகமாகச் சாருலதாவின் கார்ச் சக்கரங்கள் சுழன்றன. உதகமண்டலம் நோக்கிச் சென்று கொண்டிருந்த அவள் இப்போது சென்னை — சேலம் சாலையில் விரைந்தாள்.

''மணி என்ன ஆகிறது?'' என்று கேட்டாள் சாருலதா.

''பத்து முப்பது. சாப்பாட்டு நேரத்துக்குச் சேலம் போய்விடலாம். அவசரமில்லை; மெதுவாக ஓட்டு'' என்றான் அவள் பக்கத்தில் முன் ஸீட்டில் அமர்ந்திருந்த டாக்டர் வேணுகோபாலன்.

கார் சுமார் ஐம்பது—அறுபது மைல் வேகத்தில் போய்க் கொண்டிருந்தது. அந்த ஹெரால்ட் காருக்குப் பின்னால் வேறு நாலைந்து கார்கள் வந்தன. அவற்றில் சிலவற்றை முதலாளிகளே ஓட்டினர். வேறு சிலவற்றை டிரைவர்கள் செலுத்தினர். இரண்டு கார்களுக்கு இடையில் சுமார் நாற்பது அல்லது ஐம்பது அடி இடைவெளிவிட்டு எல்லாக் கார்களும் ஒரே சீராகச் சென்றன. சாருலதாவைத் தவிர கார்களில் இருந்த அனைவருமே ஆடவர்கள். பல வயதினர், பல நிறத்தவர், பல ஜாதியினர். பலவித அலுவல்களில் ஈடுபட்டிருப்பவர்கள். இப்போது அனைவரிடத்திலும் இருந்த ஓர் ஒற்றுமை விடுமுறை ஜுரம் அவர்களைப் பற்றி இருந்தது தான். எல்லாக் கார்களிலும் சிரிப்பும் கும்மாளமும் மிகுந்திருந்தன.

எல்லாக் கார்களுக்கும் முன்னதாகச் சென்றது சாருலதாவின் ஹெரால்ட். அதில் அவளைத் தவிர டாக்டர் வேணுகோபால் மட்டுமே இருந்தான். ''சாரு! நான் உன்னுடன் கிளம்பி வந்தது பிசகோ என்று இப்போது தோன்றுகிறது'' என்றான்.

''ஏன்? அதற்குள் உங்கள் வீட்டுக்கு வந்து போகும் நோயாளிகளின் ஞாபகம் வந்து விட்டதா? ஓய்ச்சல் ஒழிவில்லாமல் நோயாளிகளைக் கட்டிக் கொண்டு அழுகிறீர்கள் என்றுதானே நாலு நாள் விடுமுறையில் உங்களைக் கிளம்பி வரச் சொன்னேன் என்னோடு?''

''எனக்கும் விடுமுறை தேவைதான் சாரு. ஓய்வு இல்லாமல் எந்த மனிதனால் உழைக்க முடியும்?''

''ஆனாலும் உங்களைப் போல இரவு பகல் பார்க்காமல் உயிரை விடுகிற வேறு ஒரு மனிதரைப் பார்க்க முடியாது. டாக்டர் என்றால் அதற்காக....? நான் சொல்கிறேன், 'ரிஸப்ஷனிஸ்ட்' ஒருத்தியைப் போட்டுக் கொள்ளுங்கள். அவள் அழகானவளாகக்கூட இருக்கலாம். நான் பொறாமைப் பட மாட்டேன்...!''

வேணு சிரித்துக் கொண்டான். ''அப்புறம்?''

''முன் கூட்டியே 'அப்பாய்ண்ட்மெண்ட்' இல்லாமல் யாரையும் பார்க்க முடியாது என்று சொல்லுங்கள். ஒரு நாளைக்கு அதிகபட்சம் பத்து அல்லது பதினைந்து பேர்களைப் பரிசோதித்தால் போதும். மருந்துச் சீட்டு வாங்கிக் கொண்டு அவர்கள் வெளியே வரும்போது 'ரிஸப்ஷனிஸ்ட்' குயிலாட்டம் கூவ வேண்டும்: 'தட் வில் பி டுவெண்டி ஃபைவ் பிளீஸ்!' ஒருவருக்கு இருபத்திஐந்து ரூபாய் என்றால் ஒரு நாளைக்கு முந்நூற்றி எழுபத்தைந்து ரூபாய் ஆயிற்று. போதாதா? அரை ஃபர்லாங் நீளத்துக்கு உங்கள் வீட்டெதிரே குஞ்சும் குட்டியுமாய்ச் சேரி மக்கள் க்யூ நிற்பதைப் பார்க்கவே சகிக்கலை.''



''பார்க்கச் சகிக்கலேதான் சாரு! ஆனுல் கேட்டிருக்கிருயா அவர்கள் சொல்வதை? 'டாக்டர் ஐயா, புண்ணியவான், மகராஜஞ யிருக்கணும்' என்று அவர்கள் சொல்வது ஒவ்வொரு சமயம் என் அறை ஜன்னல் வழியே என் காதில் விழும். அதை விட ஒரு மனுஷனுக்கு வேறே என்ன வேண்டும்?''

''வேறே என்ன வேண்டும்?—தலைக்கு நாலணுவும் எட்டணுவும் கொடுக்கிருர்களே; சிலர் கையை விரித்துவிட்டும் போகிருர்களே, போதாதா? சேச்சே, என்ன பிழைப்பு இது? ஒரு 'டிக்னிடி' வேண்டாம்?''

''சாரு! இப்படியே சாலை ஓரமாகக் காரைக் கொஞ்சம் நிறுத்து. நான் இறங்கிக் கொள்கிறேன். சென்னை நோக்கிச் செல்லும் பஸ் ஏதாவது வரும். கைநீட்டி நிறுத்தி ஏறிக்கொண்டு போய் விடுகிறேன்.''

'' அடடா ! டாக்டர் ஸாருக்குக் கோபம் வந்து விட்டதா? ஐ ஆம் ஸாரி, டாக்டர்! நான் உங்கள் சொந்த விஷயத்தைப் பற்றிப் பேசியது தப்புத் தான். மன்னிச்சுடுங்க!''

''சாரு! என் சொந்த வாழ்க்கையைப் பற்றி நீ இப்போதுதாஞ புதிதாகப் பேசுகிருய்? யார் என்னைப் பற்றி என்ன பேசினுலும் நான் லட்சியம் செய்ய மாட்டேன். அது உனக்கே தெரியும். என் மனச்சாட்சிதான் எனக்கு முக்கியம். நானும் எத்தனையோ தடவைகள் உன்னைப் பற்றிக் குற்றம் குறைகளைச் சொல்லி யிருக்கிறேன். கேட்டுச் சிரித்து விட்டுப் போவதுதானே நம் வழக்கம்?''

'' டாக்டர் ! ஓய்வு உங்களுக்குத் தேவை என்று ஒப்புக் கொள்கிறீர்கள். ஆனுல் என்னோடு கிளம்பி வந்தது தவறு என்கிறீர்கள். இதற்கு என்ன அர்த்தம்? என்னை உங்களுக்குப் பிடிக்கவில்லை என்ருல் தெளிவாகச் சொல்லி விடலாமே!''

''அபத்தமான குற்றச்சாட்டு! இதற்குப் பதில் சொல்வது அதை விட அபத்தமானதாகும். சாரு! 'ஊட்டிக்கு வா' என்ருய். 'சரி' என்று ஒப்புக் கொண்டேன். ஆனுல் நமக்குப் பின்னுல் ஐந்து கார்களில் வருகிறதே பட்டாளம்! அதை நான் எதிர்பார்க்கவில்லை. அவர்களுக்கும் எனக்கும் ஒத்து வருமா? அவர்களுடன் கலகலப்பாகப் பேசவோ பழகவோ எனக்குத் தெரியாது; பிடிக்கவும் பிடிக்காது. அதனுல்....''

''கவலையை விடுங்கள். சேர்ந்தாற் போல் நாலு நாட்கள் லீவு அபூர்வமாக இந்த வருஷம் குதிர்ந்திருக்கிறது. கூட இரண்டே நாட்கள் லீவு எடுத்துக் கொண்டால் போதும். என்னுடைய எஸ்டேட்டில் நண்பர்களை அழைத்து 'எண்டர்டெய்ன்' செய்ய ஒரு நல்ல சந்தர்ப்பம். 'கெஸ்ட் ஹவுஸ்'ஸுக்குப் போனதும் போகாததுமாக அந்தக் குளிருக்குப் 'பாட்டிலை'த் திறந்து விடுவார்கள்!''

எதிரே சாலையைப் பார்த்துக்கொண்டிருந்த வேணு, 'சட்'டென்று சாரு பக்கம் கழுத்தை ஒடித்தான். ''அது வேறேயா?''

''பயப்படாதீர்கள்! நத்திங் இல்லீகல்! எல்லாரிடமும் 'பர்மிட்' இருக்கிறது. ஒரு சொட்டுக் கூட மது அருந்தாத எனக்குக் கூட பர்மிட் வாங்கி வைத்திருக்கிறேன், முன் எச்சரிக்கையாக. நான் பழகும் சூழ்நிலைக்கு அது அவசியம்! அவர்கள் எல்லாம் சாய்ந்து விழுகிற வரையில் தப்பும் தவறுமாக ரம்மி ஆடுவார்கள். பிறகு எனக்குத் துணை வேண்டாமா? அதற்காகத் தான் உங்களை அழைத்தேன்!''

''இத்தகைய பேர்வழிகளுக்கிடையில் உனக்குத் துணை அவசியம்தான்!''

சாரு சிரித்தாள். ''வேணு! எனக்கு அந்த மாதிரி 'பாடிகார்டு' துணை தேவையில்லை. என்னைக் கவனித்துக் கொள்ள எனக்கே தெரியும். அவர்கள் அத்தனை பேரும் 'காக்டெய்ல்' பார்ட்டியில் மூழ்கி விட்ட பின்னர் எனக்குப் 'போர்' அடிக்கும். பேச்சுத் துணைக்கு யாராவது வேண்டுமே என்றுதான் உங்களை வரச் சொன்னேன்!''

''சாரு! சில சமயங்களில் நீ பெண் தாஞ என்றே எனக்குச் சந்தேகம் ஏற்பட்டு விடுகிறது.''

சாருலதா உடனே காரின் வேகத்தைக் குறைத்துப் பிரேக்கை அழுத்தினுள். சாலை ஓரமாகக் கிச்சிட்டுக் கொண்டு வண்டி நின்றது. இஞ்சினின் இயக்கத்தை நிறுத்தி விட்டுக் கதவுப் பக்கமாகச் சாய்ந்து வேணு கோபாலனை நோக்கித் திரும்பினுள் சாருலதா.

''வேணு! என்னைப் பற்றி நிறையக் குற்றம் குறைகளைச் சொல்லி யிருக்கிறீர்கள்! ஆனுல் இப்படி 'இன்ஸல்ட்' பண்ண வேண்டாம். இதோ பாருங்கள்! என்னைச் சரியாகப் பாருங்கள்! நான் பெண்தாஞ என்பதிலா உங்களுக்குச் சந்தேகம்!''

சிரிக்கும் கண்களுடனும் குறும்புத் தனம் குமிழியிடும் அதரங்களுடனும் சாருலதா வேணுகோபாலனுக்கு முன்—அருகே — மிக அருகே — காட்சிப் பொருளாக அமர்ந்திருந்தாள். வேணுகோபாலன் பார்த்தான்:

கைதேர்ந்த சிகை அலங்காரக் கலைஞனால் கழுத்தளவோடு கருத்துடன் வெட்டப்பட்டிருந்த அவளது பட்டுக் கேசங்களில் சில இழைகள், பளிங்குக் கன்னங்களைத் தாம் வருட உதவியதற்காகப் பூங்காற்றுக்கு நன்றி கூறிக்கொண்டிருக்கும் என்று டாக்டர் வேணுகோபாலுக்குத் தோன்றியது.

வலது கையை மடக்கி ஜன்னல்மீது மிருதுவான முழங்கையை வைத்து இடது கரத்தை 'ஸீட்' முதுகின் மேலாகத் துவள விட்டிருந்தாள். இளஞ் சிவப்பு நிறம் பூசப்பெற்ற நீண்ட நகங்களுடன் கூடிய விரல்கள் பஞ்சின் மென்மையுடன் வேணுவின் தோள் மீது பட்டும் படாமலும் கிடந்தன.

இந்த நிலையில் அவள் பொய்க் கோபத்துடன் சர்ப்பம் போல் நிமிர்ந்து வேணுவை நோக்கியபோது அவள் எடுப்பான தோற்றம் எதிர்பாராமல் கன்னத்தில் விழுந்த அறை போல் ஓர் அதிர்ச்சியையே ஏற்படுத்தியது. இந்த இடம் இப்படி இருந்தால் இன்னும் நன்றாக இருக்குமே என்று எண்ணவே இடமில்லாத பரிபூரண அழகு. அழகா அது? அழகுத் தேவதையையே வெட்கித் தலை குனியச் செய்யக் கூடிய ஒரு பேரெழிலை அழகு என்று சொல்லி எப்படித் திருப்திப்படுவது?

டெர்ரிகாட் புடவையின் இள மஞ்சள் நிறப் பின்னணி அவள் உடலோடு இனம் பிரிக்க முடியாதபடி ஒன்றிவிட அந்தத் தேகம் முழுவதும் வண்ண வண்ண மலர்களை அள்ளித் தூவியதாலேயே மறைந்திருப்பது போல் ஒரு பிரமை! புடவை காற்றில் படபடத்தபோது அவள் உடலைத் தீண்டும் பாக்கியம் பெற்றதால் அம்மலர்கள் மகிழ்ச்சிப் பரவசத்தில் சிரிப்பதுபோல் ஓர் எண்ணம். தலையின் முன்புறம், செருகப்பட்டிருந்த ரத்தச் சிவப்பான செம்பருத்திப் பூ, கேசத்தின் கருமைக்குச் சவால் விடுவது போல் ஒரு திகைப்பு!

ஏற்கனவே பல தடவைகள் வேணுகோபால் பார்த்துத் தனக்குள் ரசித்திருக்கும் ஓர் உருவம்தான். அங்கம் அங்கமாகப் பார்த்துப் பார்த்துப் பழகினாலும் ஒவ்வொரு முறை பார்க்கும் போதும் ஒவ்வொரு அங்கத்திலும் அழகின் ஒரு புது மெருகைக் கண்டு அதிசயிக்கக் கூடிய வளரும் வனப்பு அது. என்றாலும் ஒவ்வொரு தடவையும் ஒருசில விநாடிகளுக்கு மேல் பார்க்க முடியாமல் கண்களைக் கூசச் செய்கிற ஒரு காந்தியும் அந்த அழகுச் சொரூபத்துக்கு இருந்தது.

இப்போதும் வேணுவின் கண்கள் சூரியனை நோக்கியது போல் கூசின. இமைகள் படபடத்துத் தாழ்ந்தன. அவன் ஒரு பெருமூச்சு விட்டான்.

''சாத்தியமானால் கொள்ளையடித்துக்கொண்டு போக ஆசையைத் தூண்டும் அழகு சாரு!''

''அப்படிச் சொல்லுங்கள்!''

''சொல்கிறேன், உன் அழகைப்பற்றி வண்டி வண்டியாகச் சொல்லலாம்.''

''பிறகு, 'பெண்தானு' என்றால் என்ன அர்த்தம்?''

''உன் நடத்தை, உன் போக்கு, உன் திறமை — தொழில் வர்த்தக சாம்ராஜ்யத்தையே அல்லவா நிர்வகிக்கிறாய்!''

''அதில் என்ன அதிசயம்? சரித்திரத்தில் எத்தனையோ பெண்கள் கிளியோபாத்ரா முதல் இந்திரா காந்தி வரைசாம்ராஜ்யங்களை ஆளவில்லையா?''

''அதிசயம் என்று சொன்னேனா?''

''இல்லை யென்றால் வேறென்ன அனர்த்தத்தைக் கண்டீர்கள்?''


''பின்னால் வருகிற கார்களில் இருப்பவர்கள் யார் யார்? ஒரு பாங்கின் செக்ரடரி, எல். ஐ. ஸி. உயர் அதிகாரி ஒருவர், தொழில்களில் முதலீடு செய்ய அயல்நாடுகளிலிருந்து வந்த இருவர், ராஜ்ய, மத்திய சர்க்கார்களில் உயர் மட்டத்தில் உத்தியோகம் பார்க்கும் இருவர், வருமான வரி இலாக்காவில் உள்ள ஒருவர் என்று இப்படிப் பலரை வளைத்துப் போட்டு அழைத்துப் போகிறாயே, என்ன தைரியம் உனக்கு?''

''டாக்டர்! நான் எதற்குப் பயப்பட வேண்டும்? சட்ட விரோதமாக எதை யாவது செய்து விட்டேனா? அவர்கள் என் நண்பர்கள். விடுமுறையைக் கழிக்க என் எஸ்டேட்டுக்கு விருந்தினராக வருகிறார்கள். இதில் தவறு என்ன?''

''தவறு ஒன்றுமில்லை. ஆனால் அவர்களை இப்படி அழைத்துப் போவதன் உன் நோக்கம் என்ன? அவர்களைக் குஷிப்படுத்தி வைத்தால் உனக்கு—உன் தொழில் வர்த்தக சாம்ராஜ்யத்துக்கு-ஏதேனும் ஒரு சமயத்தில் உதவியாக இருப்பார்கள் என்பதுதானே?''

''வேணு! எனக்கு லட்சிய வாழ்வில் நம்பிக்கை கிடையாது. ஐ ஆம் எ பிராக்டிகல் உமன்; எ ரியலிஸ்ட்!''

கார் கிளம்பியது. பின்னால் வந்த கார்கள், சாரு ஓட்டி வந்த கார் நிற்பதைப் பார்த்ததும் நின்றன. அவற்றிலிருந்து சிலர் கீழே இறங்கிச் சாருவின் காரை நோக்கி நடந்து வந்து கொண்டிருந்தார்கள், என்ன ஏது என்று விசாரிக்க. அதைத் தனக்கு முன்னாலிருந்த நிலைக் கண்ணாடியில் பார்த்து விட்ட




Bombay 28-9-44

Dear Subbalakshami,

Rajaji has told me everything about your good work in connection with Kasturba Memorial Fund by using your musical gifts. May God bless you

Yours

மோ. க. காந்தி



கஸ்தூரிபா நினைவு நிதி சம்பந்தமாக ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி தமது இசையால் ஆற்றிய தொண்டு பற்றி ராஜாஜி மூலம் அறிந்த காந்திஜி, மன மகிழ்ந்தார். ஸ்ரீமதி எம். எஸ்ஸுக்கு ஆசி கூறித் தமிழில் கையெழுத்திட்டுக் கடிதம் எழுதினார்.

சாரு, ஹெரால்டைக் கிளப்பினாள். ஆனால் அதன் வேகம் முன்போல் இல்லை; நிதானமாகவே சென்றது.

''நானும் அப்படியொன்றும் ஐடியலிஸ்ட் இல்லை சாரு! ஆனால் ரியலிஸம் என்பது அருவருப்பு ஊட்டுகிற காரியங்களில்மட்டுமே இருக்கிறது என்பதை நம்பாதவன். காந்தி அடிகள் இருந்தாரே அவர் ஐடியலிஸ்ட்தான். ஆனால் அவர் நம் கண்ணுக்கு மெய்யாக லட்சிய வாழ்க்கை வாழ்ந்து காட்டியதில் ரியலிஸத்தைக் காணவில்லையா நாம்?''

''டாக்டர்! காந்தி பெயரை நம் விவாதத்தில் இழுத்து என்னைப் பயமுறுத்த முயல வேண்டாம்'' என்றாள் சாருலதா.

இதன் பிறகு வேணுகோபால் ஏதும் பேசவில்லை. சாரு கலகலப்புக் குறைந்து காணப்பட்டாள். வேணுவோ வேதனை அடைந்தவனாகவே தோன்றினான்.

சற்று நேரத்தில் பின்னால் வந்த ஒரு கார் ஹாரன் அடித்தது. சாருவின் ஹெராால்டை முந்திக்கொண்டு போயிற்று. போகிற போக்கில் அதிலிருந்த ஒருவன் சாருவுக்கு டாட்டா காண்பித்தான். விரைவிலேயே இன்னொரு காரும் சாருவை 'ஓவர் டேக்' செய்தது.

அவ்வளவுதான், சாருவின் முகத்தில் காணப்பட்ட சஞ்சலம் எங்கோ இருந்த இடம் தெரியாமல் மறைந்து போயிற்று. சவாலை ஏற்றுக் கொண்டதும் அவள் முகம் பிரகாசமடைந்தது. எதிர்ப்பும் போட்டியும் அவளை ஊக்குவித்தன. 'களுக்'கென்று சிரித்துக் கொண்டே ஆக்ஸிலேட்டரை அழுத்தினாள். லாகவமாக ஸ்டியரிங்கை இயக்கினாள். அவளுடைய கார் உறுமவில்லை. கோயில் மணி அடித்து ஓயும் போது 'உம்ம்ம்' என்று ஓர் ஓசை கேட்குமே, அப்படி காரின் இஞ்சின் 'கும்'மென்று செயல்பட்டது. ஹாரன் ஒலிகூட எழுப்பாமல் இலகுவாக லவலேசமும் சிரமமின்றி அந்த இரண்டு கார்களையும்

மூந்திக் கொண்டது சாருவின் ஹெரால்ட். சில நிமிஷங்களில் வெகு தூரம், அவர்கள் கண்களிலிருந்து மறையும் தொலைவுக்குப் போய் விட்டது !

சாரு பெரிதாகச் சிரித்தாள். ''இந்தக் கார் பார்ப்பதற்குத்தான் ஹெரால்ட். உள்ளுக்குள்ளே இருப்பது இம்போர்ட்டட் இன்ஜின்! எல்லாரும் சாரு ஏன் ஹெரால்ட் வைத்திருக்கிறாள்? எஸ். டி. வி. ஏலத்தில் ஒரு அமெரிக்கக் காரை வாங்கிக் கொள்ளக் கூடாதோ என்று நினைக்கிறார்கள். இப்போது இது இப்படிப் பறப்பதைக் கண்டு அவர்களுக்கு ஒரே வியப்பாக இருக்கும்!''

''எதற்கு அப்படி நீ செய்ய வேண்டும் சாரு? அயல் நாட்டுக் காரை அப்படியே வைத்துக் கொள்வது தானே? அந்த இஞ்சினைக் கழற்றி இந்த 'பாடி'யில் பொருத்துவானேன்?''

''சாரு செய்கிற காரியங்களைப் பற்றி ஏன் எதற்கு என்று தட்டிக் கேட்பவர்கள் இரண்டே பேர்தான்! ஒருவர் நீங்கள். மற்றொருவன் என் தம்பி. இதில் வேடிக்கை என்னவென்றால் இரண்டு பேரிடமும் நான் ரொம்பப் பிரியம் வைத்திருக்கிறேன்!''

''ஆனால் அவர்கள் தட்டிக் கேட்பது உனக்குப் பிடிக்கவில்லை.''

''அயல்நாட்டு நண்பர் ஒருவர் இங்கு என் தொழிலகத்தில் பயிற்சி அளிப்பதற்காக இரண்டு வருஷங்கள் தங்கி இருந்தார். அவர் வரும்போது ஒரு ஜகுவார் வாங்கி வரச் சொன்னேன். கொஞ்ச நாட்கள் அதை ஓட்டியதில் ஆசை விழுந்து விட்டது. அதனால் எஸ். டி. வி. டெண்டரில் மற்றவர்களைவிட ஆயிரம் ரூபாய் அதிகம் தருவதாய் எழுதினேன். காரைச் சொந்தமாக்கிக் கொண்ட பிறகு அந்த பாடியின் ஷேப் எனக்குப் பிடிக்கவில்லை. ஆகவே, இஞ்சினைக் கழற்றி இதில் பொருத்தச் சொன்னேன். இப்போது இதில் பாடி மட்டும்தான் ஹெரால்ட். மற்றபடி அநேகமாக எல்லாமே ஜகுவார் பாகங்கள்தாம்!''

''பணக்காரப் பெண் ஒருத்தியின் 'விம்ஸ் அண்டு ஃபான்ஸிஸ்' எப்படி இருக்கும் என்று புரிந்து கொண்டேன் சாரு. கிடக்கட்டும், இந்த வேகத்தில் பறந்து அடித்துக் கொண்டு போய் என்ன பிரயோஜனம்? விடுமுறை என்றால் சுற்றுப்புறச் சூழ்நிலையை மனோ ரம்மியமான காட்சிகளை அனுபவித்து மகிழ வேண்டும். பரக்கப் பரக்க ஓடுவானேன்?''

''காரியார்த்தமாக இயங்கத்தான் எனக்குத் தெரியும் வேணு. இயற்கையை ரசிக்க எனக்கு நேரமில்லை!''

''கரெக்ட்! விடுமுறை என்றாலும் அதில் பிஸினஸையும் இணைத்துத் தானே இவர்களை எல்லாம் இழுத்து வந்திருக்கிறாய்! என்ன ஹாலிடேயோ! காரைச் சற்று நேரம் நிறுத்தினாயே! அப்போதே நான் கீழே இறங்கியிருக்க வேண்டும்!''

''வேணு! கிளம்பி வந்தது வந்து விட்டீர்கள்! இப்போது பாதியில் திரும்பினால் மற்றவர்கள் என்ன நினைப்பார்கள்? ஹாலிடே மூடே கெட்டுக் குட்டிச்சுவராகி விடுமே!''

''அப்போ, உன் நண்பர்களின் 'மூட்' கெட்டுவிடக் கூடாது என்பதற்காகத் தான் என்னை வரச் சொல்கிறாய். மற்றபடி நான் இப்போதே சென்னை திரும்பினால் கவலை இல்லை உனக்கு!''

''உங்களிடம் பேசி என்னால் ஜெயிக்க முடியாது!''

''பேச்சிலே உன்னை நான் வெற்றி கொள்ளலாம்; ஆனால் உன் மனத்தை? அதை வெற்றி கொள்ள என்னால் முடியவில்லையே, சாரு?'' வேணுகோபாலின் குரலில் ஏக்கம் தொனித்தது.

சாருலதாவின் இடது கரம் சட்டென்று ஸ்டியரிங்கிலிருந்து விடுபட்டு வேணுவுடைய வலக் கரத்தின் மீது வந்து அமர்ந்தது. ஆனால் அவள் பார்வை சாலையை விட்டு ஒரு கணமும் திரும்பவில்லை.

''வேணு! பிளீஸ்! இன்னும் நாலு நாளைக்கு நீங்கள் சென்னைக்குத் திரும்புவது பற்றிப் பேசக் கூடாது. இரண்டாவது......''

''காதல் என்ற மூன்றெழுத்து பற்றி மூச்சு விடக் கூடாது! அதைத் தானே சொல்ல வந்து தயங்கி நிற்கிறாய் சாரு?''

''தயக்கம் ஒன்றுமில்லை, எந்தவிதமாகச் சொல்வது என்று ஒரு கணம் யோசித்தேன். நட்பு என்கிற பிரதேசத்திலிருந்து அன்பு என்கிற எல்லைக் கோட்டைத் தாண்டிக் காதல் என்ற பகுதிக்கு நீங்கள் படையெடுத்தால் நான் தற்காப்பு நடவடிக்கை எடுக்க நேரிடும்! ஆம் ஐ கிளியர்?''

''இதைவிடத் தெளிவாகச் சொல்ல சாட்சாத் சரஸ்வதி தேவிக்குக்கூட வார்த்தைகள் அகப்படாது. கவலைப் படாதே!'' என்றான் வேணு. அப்போது அவன் குரல் ஆதங்கத்தில் கரகரத்தது. கண்கள் சற்றே கலங்கியதை அவன் வேறுபுறம் திரும்பி மறைத்துக் கொண்டான். **(தொடரும்)**


# சுருங்கிய உடைகள் உடம்பை இறுகப் பிடிக்கின்றனவா? திருவாளர் சுருக்கத்-தை விரட்டியடிக்கிறது சான்:.போரைஸ்ட்


**·SANFORIZED·**
REGD TD MK



"ஸான்:.போரைஸ்ட்" லேபின் கொண்ட பருத்தித் துணிகள் அல்லது பருத்தி இணைந்த துணிகளில் தயாரிக்கப்பட்டால், உடைகள் ஒருபோதும் சலவைக்குப் பின் சுருங்காது. இந்த ட்ரேட் மார்க், துணிகளின் சுருங்காத் தன்மைக்கு நீங்கள் பெறும் உத்தரவாதமாகும். 'ஸான்:.போரைஸ்ட்' முத்திரை கொண்ட துணிகளை தைப்பதற்குமுன் நனைக்கவேண்டிய அவசியம் இல்லை உலகப்பிரசித்தி வாய்ந்த 'ஸான்:.போரைஸ்ட்' என்னும் பெயர், இந்தியாவின் பருத்தித் துணிகளின் ஏராளமான ஏற்றுமதிக்கு பெருமளவில் உதவிவருகிறது.

'ஸான்:.போரைஸ்ட்' என்னும் ட்ரேட் மார்க்கின் உரிமையாளர்களான க்ளுபெட், பீபாடி அண்ட் கோ. இன்க். (யு.எஸ்.ஏ. வில் வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் இணைக்கப்பட்டது) வெளியிட்டது. சுருங்காத்தன்மையின் கடுமையான தேவைகளைப் பூர்த்தி செய்யும், பரிசீலிக்கப்பட்ட துணிகளுக்கு மட்டுமே உரிமையாளர்கள் இந்த ட்ரேட் மார்க்கை உபயோகின்றனர் அல்லது பதிவுசெய்யப்பட்ட உபயோகிப்பாளர்களை உபயோகிக்க அனுமதிக்கின்றனர்.





# உலக விவகாரங்களில்

[1965 மே மாதம் 5ந் தேதி புதுதில்லியில் தொடங்கிய காந்தி வட்ட மேஜை மகாநாட்டில் அமெரிக்க தூதர் செஸ்டர் பௌல்ஸ் பேசியதன் சுருக்கம்.]

'அகிலத்துக்கே பொதுவான உண்மைகள்' என்று காந்தி குறிப்பிட்ட கருத்துக்கள் புரட்சிகரமான மூன்று தனித் தனித் துறைகளில் மாறுதல்கள் நிகழக் காரணமாய் இருந்திருக்கின்றன. நம் காலத்திய உலக சரித்திரத்தை உருவாக்குவதிலும், மனித சமுதாயம் முழுமையையும் மேலும் பக்குவம் பெற்ற நிலைக்கு உயர்த்துவதிலும் உதவியிருக்கின்றன.

இவற்றுள் முதல் புரட்சி காலனி ஆதிக்கத்தை எதிர்த்து நிகழ்ந்தது. தனி மனிதனின் கௌரவத்தைக் காப்பதற்காக இரண்டாவது புரட்சி. மூன்றாவது உலக சமாதானத்துக்காகத் தொடர்ந்த புரட்சி.



இரண்டாவது உலக யுத்தத்துக்குப் பிறகு நூறு கோடி ஆசிய ஆப்பிரிக்க மக்கள் அந்நிய ஆட்சியிலிருந்து விடுதலை பெற்றிருக்கிறார்கள். காலனி ஆதிக்க முறையை எதிர்த்து நிகழ்ந்த இந்தப் புரட்சியில் காந்தியத்தின் செல்வாக்கை முதலில் கவனிப்போம்.

உரிமைகள் இழந்த மக்களிடையே நிலவிய அதிருப்தியைப் பயன்படுத்திக் கொள்வதற்குப் பதிலாக காந்தி ஒவ்வொரு தனி மனிதனுக்கும் பெருமித உணர்ச்சியை ஊட்டினார். இது அவர்களிடம் நிரம்பவும் பொறுமையை வளர்த்ததோடல்லாமல் அசைக்க முடியாத ஆத்ம பலத்தையும் அவர்களுக்கு அளித்தது. எதிரிகளை அழிப்பதற்குப் பதிலாக அவர்களைப் படிப்படியாக அன்பாலும் மரியாதை காட்டியும் வற்புறுத்தி நம் வழிக்குத் திருப்ப வேண்டும் என்று கற்றுக் கொடுத்தார்.



# காந்தீயத்தின் செல்வாக்கு

## செஸ்டர் பௌல்ஸ்

ஒரே ஒரு தலைமுறைக்குள் சில சாம்ராஜ்யங்களையே கொண்டிருந்த உலகம், பல சுதந்திர நாடுகள் நிறைந்த உலகமாக மாறிவிட்டதைக் காண்கிறோம். இந்தப் போராட்டத்துக்கு இன்னும் முடிவு ஏற்படவில்லை. எனினும் ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின் சரித்திரம் என்ன சொல்லும்? காலனி ஆதிக்கம் புரிந்தவர்களும் அடிமைப்பட்டிருந்த நாட்டினரும் தங்கள் செயல் முறையை நிர்ணயித்துக் கொள்ள மோகன் தாஸ் கே. காந்தியின் தலைமையில் நடைபெற்ற இந்திய சுதந்திர இயக்கமே வழிகாட்டியாக அமைந்திருந்தது என்று தான் சொல்லும்.

காலனி ஆதிக்கத்தை எதிர்த்து நடந்த சமப காலத்திய முதல் புரட்சி — பெரிய இயக்கம் — இந்திய சுதந்திரப் போராட்டமே. ஆத்திரமும் வெறுப்புணர்ச்சியும் மிக்க தலைவர்களால் இது நடத்தப்பட்டிருந்தால் கடந்த பத்தாண்டுகளின் சரித்திரமே வேறுவிதமாக — நாசகரமானதாக — இருந்திருக்கும். ஏனெனில் விரக்தியுற்ற ஆசிய ஆப்பிரிக்க மக்கள் அனைவரும் இதே போன்ற பலாத்கார அழிவுப் பாதையில் தங்கள் தங்கள் நாடுகளில் காலனி ஆதிக்கத்தை எதிர்த்திருப்பார்கள்.

ஆனால், சரித்திரத்தின் ஓர் இக்கட்டான கட்டத்தில் காந்தி, ஆதிக்கத்தையும் அடக்குமுறையையும் அஹிம்சா முறையில் எதிர்த்து வெற்றி பெறலாம் என்று நிரூபித்துக் காட்டினார். இதன் பலன்—இந்தியாவில் அமைதியான முறையில் அதிகார மாற்றம். முன்பு ஆண்டவர்களுக்கும் ஆளப்பட்டவர்களுக்கும் இடையே இன்று நிலையான ஸ்நேகம், பரஸ்பர மரியாதை. அரசியல் ரீதியில் ஸ்திரமானதும் பொருளாதார ரீதியில் முன்னேற்றகரமானதும் ஜனநாயகம் தழைப்பதுமான ஒரு நாடு உருவாயிற்று. காந்தியை மற்ற பல ஆசிய ஆப்பிரிக்க

படங்கள்: இடது பக்கம் மேலே செஸ்டர் பௌல்ஸ்.

கீழே: தண்டி யாத்திரையும், வாஷிங்டன் யாத்திரையும். வலது கோடியில் நடப்பவர் கிங்.







## குறை எங்கே?

காந்தியடிகள் 1931ஆம் ஆண்டு வட்டமேஜை மகாநாட்டுக்காக லண்டனில் சென்று தங்கியிருந்த சமயம் அது. ஸ்ரீமதி பூஸ்டெஸ் மைல்ஸ் என்னும் அம்மையார் அவரைச் சந்தித்தபோது, ''உங்களுக்குக் கோபம் வருவது உண்டா?'' என்று கேட்டார்.

''இந்தக் கேள்வியை என்னிடம் கேட்டால்....? கஸ்தூரி பாயிடம் அல்லவா கேட்க வேண்டும்!'' என்றார் அண்ணல்.

''என்ன அப்படிச் சொல்கிறீர்கள்?''

''உலகத்தாருடன் நான் மிக நல்ல முறையில் நடந்து கொள்ளுகிறேனாம். அவளுடன் மட்டும் நான் சரியானபடி நடந்து கொள்வதில்லையாம். ஸ்ரீமதி காந்திக்கு இது பெருங் குறை.''

காந்தியடிகளின் இந்த வேடிக்கைப் பேச்சில் மகிழ்ந்த ஸ்ரீமதி மைல்ஸ், ''என் கணவர் என்னிடம் மிகுந்த நல்ல முறையில் நடந்து கொள்ளுகிறார்!'' என்றார்.

''அப்படியா? இதில் ஏதோ சூது இருக்க வேண்டும்!''

''சூதா? அதெப்படி இருக்க முடியும்?''

''ஸ்ரீ மைல்ஸ் உங்களுக்குக் கணிசமான லஞ்சம் கொடுத்து வாய்ப் பூட்டு போட்டிருக்க வேண்டும் என்றே தோன்றுகிறது. இல்லாவிட்டால் பெண்களுக்கே இயல்பான குறையை நீங்கள் இப்படி மறைப்பீர்களா?'' என்றார் காந்திஜி. - விஷ்ணு

---

நாடுகளில் உள்ளோரும் பின்பற்றியதால் ஒரு சில நாடுகளைத் தவிர மற்றவற்றுக்குச் சுதந்திரம், பரஸ்பரம் நல்லெண்ணத்துடனும், மரியாதையுடனும் வந்து சேர்ந்தது.

இரண்டாவதாக, தனி மனிதனின் கௌரவத்தைக் காக்க நடந்த புரட்சிக்கு காந்தி செய்த தொண்டைக் கவனிப்போம். இந்தப் போராட்டத்திலும் காந்தி இந்தியாவில் ஏற்றி வைத்த மெழுகுவர்த்தி ஒரு பெரிய விளக்காக வளர்ந்து உலகம் முழுவதிலுமுள்ள பல நாடுகளில் ஒடுக்கப்பட்ட சிறுபான்மையினருக்குப் புதிய பலமும் நம்பிக்கையும் தந்து வருகிறது.

ஜாதி வித்தியாசங்களால் விளைந்த காரணமற்ற வெறுப்புக்கள் இந்திய மக்களைப் பிரித்து வைத்திருக்கின்றன; இந்தப் பேதங்கள் ஒழியும்வரை இந்தியா சுயமரியாதையையோ சுதந்திரத்தையோ அடையவே முடியாது என்று காந்தி தெளிவாகக் கண்டார். ஹரிஜனங்களுக்குச் சம வாய்ப்புக்களையும் முழுமையான கௌரவத்தையும் அளிக்க அவர் முயன்றதும் எல்லா மதங்கள், ஜாதியினரிடையேயும் சமூக நலன் பற்றிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த அவர் பாடுபட்டதும் தாம் இன்றைய இந்திய ஜனநாயகத்துக்குப் பலத்தையும் வீரியத்தையும் அளித்திருக்கின்றன.

அனைவருக்கும் சம வாய்ப்பு அமைதல், தனி மனிதனுக்கு உரிய கௌரவத்தை அளித்தல் என்ற இரு அம்சங்களில் காந்தி செயலாற்றியதன் காரணமாக என்னுடைய நாடு அவருக்குப் பெரிதும் கடன்பட்டிருக்கிறது.

சுமார் இரண்டு கோடி அமெரிக்க நீக்ரோக்கள் இன்று முதல் தரப் பிரஜைகளாக வேண்டும் என்று உரிமை கோரிப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். அரசியல் சட்ட ரீதியாக வோட்டுப் போடும் உரிமை, கல்வி பெறும் உரிமை, சம வேலை வாய்ப்புக்கள், பொதுமக்களுக்கென ஏற்படுத்தப்பட்ட வசதிகளைப் பயன்படுத்துவதில் சம அந்தஸ்து இவற்றை நீக்ரோக்கள் இன்று கேட்கிறார்கள். காந்திய லட்சியங்களையும் காந்திய வழிகளையும் கையாண்டே தங்கள் குறிக்கோளைப் படிப்படியாக அடைந்து வருகின்றனர்.

காந்தி ஒரு முறை சொன்னார், ''அஹிம்சா தத்துவத்தின் உண்மையான, கலப்படமற்ற செய்தியை உலகுக்கு அறிவிப்பது நீக்ரோக்களாக இருக்கலாம்'' என்று. ஆனால் பத்து ஆண்டுகளுக்கு முன்னால் கூட அமெரிக்காவில் இப்படி ஒரு நிலை உருவாவதென்பது நடக்க முடியாத ஒன்றாகத்தான் தோன்றியது.

செயல் திறனின்றி, நடப்பது நடக்கட்டும் என்ற மனப்பாவத்துடன் நீக்ரோக்கள் இருந்து வந்த நிலையில் ஜாஜ்வல்யமான ஒருவர், பேச்சாற்றல் மிக்கதோர் இளம் நீக்ரோ தோன்றினார். காந்தியக் கொள்கைகளினால் ஈர்க்கப்பட்டு அவற்றில் மிக ஆழ்ந்து ஈடுபட்டதினால் மனப் பக்குவம் பெற்றிருந்தார் மார்ட்டின் லூதர் கிங். நிற பேதம் பாராட்டிய அமெரிக்காவின் தெற்குப் பகுதியில் அவர் மாதா கோயில்களிலும் பொதுக் கூட்டங்களிலும் பேசும்போதெல்லாம் காந்திய வழியில் செயலாற்றும் முறையைக் காண்பிக்கத் தொடங்கினார்.*

அலபாமா ராஜ்யத்தில் மாண்ட்கோமரி என்ற நகரில் அவருக்கு முதல் வெற்றி கிடைத்தது. பஸ் போக்குவரத்தைப் பயன்படுத்துவதில் நிற பேதம் காட்டப்பட்டதை எதிர்த்து நீக்ரோக்கள் பகிஷ்காரம் செய்தார்கள். இதன் பயனாக நகராட்சி, பஸ் போக்குவரத்தில் நிற பேதம் காட்டலாகாது என்று உத்தரவு பிறப்பிக்க வேண்டியதாயிற்று.

இந்த ஆரம்ப வெற்றி நம்பிக்கை அளிப்பதாக இருந்தது. இதைத் தொடர்ந்து டாக்டர் கிங் மிக ஜாக்கிரதையாகத் தமது எண்ணங்களையும் செயல் நுணுக்கங்களையும் ஊழியர்களின் அமைப்புக்களையும் பரிசோதனைகளுக்கு உள்ளாக்கிக் கொண்டே படிப்படியாக முன்னேறி இன்று நீக்ரோக்களுக்குச் சகல துறைகளிலும் சம அந்தஸ்து கோரும் ஒரு மிகப் பெரிய தேசிய இயக்கத்துக்குத் தலைவராக விளங்குகிறார். இதனால், சென்ற நூறு ஆண்டுகளில் மிகச் சிரமப்பட்டும் சில சமயங்களில் ரத்தம் சிந்தியும் கிடைத்த உரிமைகளை விடப் பல மடங்கு அதிகமான உரிமைகளைக் கடந்த பத்து ஆண்டுகளுக்குள் நீக்ரோக்கள் பெற முடிந்தது.

---

*** டாக்டர் மார்ட்டின் லூதர் கிங், அமெரிக்காவின் டென்னஸி மாகாணத்தில் மெம்பிஸ் நகரில், ஏப்ரல் 5, 1968ல் சுட்டுக் கொல்லப்பட்டார்.**

டாக்டர் கிங், ஜனநாயக முறையில் நடத்தும் அறப் போரின் ஆத்ம பலம், அந்த அறப் போரின் கொள்கைகள், அவற்றை விளக்க அவர் பயன்படுத்தும் சொற்கள் ஆகியவை காந்திய அடிப்படையில் அமைந்தவை.

டாக்டர் கிங் கூறுகிறார்: ''நீக்ரோவானவன் தனது வெள்ளைச் சகோதரர்களிடம் என்ன சொல்ல வேண்டும்? 'நீங்கள் எந்த அளவுக்கு எங்களைக் கொடுமைப்படுத்தும் சக்தி பெற்றிருக்கிறீர்களோ அந்த அளவுக்கு அந்தக் கொடுமைகளைத் தாங்கும் சக்தியை நாங்கள் பெற்று ஈடு செய்வோம். உங்கள் சரீர சக்தியை எங்கள் ஆன்மீக சக்தியால் எதிர்ப்போம். உங்களை நாங்கள் வெறுக்க மாட்டோம். ஆனால் உங்களுடைய கொடுமை மிக்க சட்டங்களுக்குக் கீழ்ப்படியமாட்டோம். நாங்கள் கொடுமையைச் சகிக்கும் திறனால் உங்களைச் சீக்கிரமே பலவீனப்படுத்தி விடுவோம்.

'' 'ஆகவே நாங்கள் வெற்றி பெறும்போது —எங்களுக்குரிய சுதந்திரத்தை அடையும் போது — உங்களது மனச்சாட்சிக்கும் இதயத்துக்கும் நாங்கள் விடுத்த வேண்டுகோள்கள் காரணமாக நீங்களும் மாறியிருப்பீர்கள். எனவே எங்கள் வெற்றி இரட்டை வெற்றியாகத் திகழும். கொடுமை மிக்க ஒரு நடைமுறையை வீழ்த்துவோம். அந்த நடைமுறையை அமுல் படுத்துவோரின் மனங்களையும் ஆன்மாக்களையும் வெற்றி கொள்ளுவோம்.' ''

கௌரவமான வாழ்க்கை, தன்னம்பிக்கை ஆகியவற்றால் ஏற்படுகிற பலத்தைத் தம்மைப் பின்பற்றுவோருக்கு அளிக்க மார்ட்டின் லூதர் கிங் இன்னொரு காந்தியக் கருத்தைக் கடன் வாங்கினார். சுய சீர்திருத்தம் என்பதே அது.

அறுபது ஆண்டுகளுக்கு முன்னால் காந்தி தென் ஆப்பிரிக்காவில் சொன்னார்: ''நம்மைப் பற்றி வெள்ளையர்கள் கூறும் குற்றங்குறைகளை முதலில் நாம் ஆராய்வோம். நம்மை நிற பேதம் செய்து தாழ்த்தப்பட்டோராக்குவதற்கு அவர்கள் கூறும் காரணங்கள் நியாயமானவையா எனப் பார்ப்போம். முதலில் நம் வீட்டை நாமே நேராக்கிக் கொள்வோம். நாம் கோரும் உரிமைகளை அவர்கள் அளிக்க முன்வருவதற்கு முன்னதாகவே — சம உரிமைகளுக்கு நாம் போராடிக் கொண்டிருக்கையிலேயே இந்தக் காரியத்தைச் செய்து முடிப்போம். நமது சிரமங்கள் எல்லாவற்றுக்கும் வெள்ளையர் மீதே பழி சுமத்த முடியாது.''

இதே போல் அமெரிக்கா முழுவதிலும் மார்ட்டின் லூதர்கிங் இன்று தமது நீக்ரோச் சீடர்களுக்குச் சொல்லி வருகிறார்: ''நிற பேதம் செய்வதற்கு வெள்ளையர் கூறும் காரணங்களை ஆராய்வோம். அவற்றில் எந்தெந்தக் காரணங்களை நீக்கிவிட நாமே முயற்சி எடுத்துக் கொள்ளலாம் என்று பார்ப்போம்.''

நீக்ரோக்களுக்குச் சம உரிமைகள் கோரி அமெரிக்காவில் காந்திய முறையில் நடைபெற்ற போராட்டங்கள் பல வெற்றிகளைத் தேடித் தந்திருக்கின்றன. இவற்றில் சில மிகப் பெரிய வெற்றிகள், வேறு பல சிறிய வெற்றிகள்.

1963ல் டாக்டர் கிங், வெள்ளையரும் நீக்ரோக்களுமான வேறு பல தலைவர்களின் ஒத்துழைப்புடன், அமெரிக்க சரித்திரம் அது வரை கண்டிராத அளவுக்கு ஒரு மிகப் பெரிய ஆர்ப்பாட்டத்தை அமைதியான



## அரிய பொக்கிஷம் !

'தங்கள் குடும்பத்தில் திருமண வைபவம் நிகழப் போவதை அறிந்து மகிழ்ந்தேன். பிரிட்டிஷ் ராணியான எலிஸபெத்துக்கும், இளவரசர் பிலிப்ஸுக்கும் நடைபெறப்போகும் திருமணத்துக்கு என் வாழ்த்துக்களை முன்கூட்டியே தெரிவித்துக்கொள்கிறேன். நானோ ஆண்டி. மணமக்களை வாழ்த்தி மகிழ்வதைக் காட்டிலும் என்னால் வேறு என்ன பரிசு அளிக்க முடியும்?'

மகாத்மா காந்தியிடமிருந்து அப்போது இந்திய வைஸிராயாக இருந்த மவுண்ட் பாட்டன் பிரபுவுக்கு இப்பொருள் தரும் கடிதம் போயிற்று.

மணமகன் - மணமகள் இருவருடைய குடும்பத்தோடும் நெருங்கிய உறவு கொண்ட மவுண்ட் பாட்டன் காந்தியடிகளின் வாழ்த்தால் மகிழ்ந்தார் என்றாலும் காந்திஜிக்கு வேடிக்கையாக ஒரு கடிதம் எழுதினார்:

''அதென்ன அப்படிச் சொல்லி விட்டீர்கள்? உங்கள் கையில்தான் உலகத்தையே அச்சுறுத்தும் ஓர் ஆயுதம் இருக்கிறதே. அதன் உதவிகொண்டு உங்கள் அன்புப் பரிசை அனுப்பி வைக்கலாமே!''

காந்தியடிகளுக்கு அவர் குறிப்பிட்ட ஆயுதம் என்னவென்று புரிந்து விட்டது. கடிதம் கிடைத்த நாள் முதலே தமது ஆயுதத்தை இயக்கினார்; சுழன்றாடும் ராட்டையில் ஒரு துவாலைக்கான நூலை நூற்றார்.

அழகான துவாலை தயாராகியது. காந்தியடிகள் திருமணப் பரிசாக அந்தத் துவாலையை மவுண்ட் பாட்டன் மூலம் ராணி எலிஸபெத்துக்கு அனுப்பி வைத்தார்.

அதைக் காந்தியடிகளின் சார்பில் வழங்கிய மவுண்ட்பாட்டன் ராணி எலிஸபெத்திடம் கூறியதாவது: ''இதனை உன் மணிமகுடத்துக்கு ஈடாகப் போற்றிப் பாதுகாக்க வேண்டும். இது கிடைத்தற்கரிய பொருள்; விலை மதிக்க முடியாத பொருள். எனவே ஜாக்கிரதை! விலை மதிக்கக் கூடிய கிரீடத்தைக் காட்டிலும் கருத்தாகப் பாதுகாத்துப் பெருமை அடைவாயாக!''

- விஷ்ணு

முறையில் தலைநகர் வாஷிங்டனில் நடத்தினார். தேசத்தின் எல்லாத் திசைகளிலிருந்தும் வெள்ளையரும் கறுப்பருமாக ஆதரவாளர்கள் இரண்டு லட்சத்து முப்பதாயிரம் பேர் திரண்டார்கள். எந்த விதமான பலாத்காரச் செயலோ மனக் கசப்போ இன்றி அவர்கள் எங்கள் நாட்டின் தலைநகர் வீதிகளில் கரம் கோத்து நடந்தார்கள். அமெரிக்க சம உரிமை இயக்கத்தின் பாடலை — நெஞ்சை உருக்கும் பாடலை — பாடிக் கொண்டே நடந்தார்கள்.

நிற வேற்றுமை பாராட்டுவோரின் கோட்டையான மாண்ட் கோமரி நகரில்— டாக்டர் கிங் தமது அறப் போரை முதன் முதலில் ஆரம்பித்து வைத்த அதே நகரில்— வாஷிங்டனில் நடந்தது போலவே — ஆனால் அளவில் சிறியதான — இன்னொரு அமைதியான ஆர்ப்பாட்டம் நிகழ்ந்தது. இன்று அமெரிக்க மக்கள் தங்கள் டெலிவிஷன் திரைகளில் நீக்ரோக்கள் ஓட்டுரிமை பெற்றுத் தங்கள் பெயர்களைப் பதிவு செய்துகொள்ள நீண்ட க்யூவில் நிற்பதைப் பார்க்கிறார்கள். பொது இடங்களில் வெள்ளையருக்குச் சமமாகத் தாங்கள் நடத்தப்பட வேண்டும் என்பதற்காக ஏராளமான நீக்ரோக்கள் மரியாதைப் பண்புடனும் அமைதியாகவும் மறியல் செய்வதைப் பார்க்கிறார்கள்.

டாக்டர் கிங்கின் காந்தியக் கொள்கைகள் இந்தத் தலைமுறை அமெரிக்கர்களை மிகவும் கவர்ந்து விட்டது. நீண்ட நாட்களாக இருந்து வந்த காரணமற்ற வெறுப்புக்களையும் துவேஷங்களையும் ஒழித்துக் கட்டுவதில் இளம் அமெரிக்கர்கள் மகிழ்ச்சி யடைகிறார்கள்.

சகலருக்கும் சம உரிமை என்ற ஜனநாயக நோக்கு நிறைவெய்தும் பாதையில் செல்லும்போது அமெரிக்கப் பாணியில் அமைந்த காந்தியம்தான் இதைச் சாதித்தது என்பதில் யாருக்கும் சந்தேகம் சிறிதும் இல்லை.

**கா**ந்தியை மையமாகக் கொண்டு நமது காலத்தில் நிகழ்ந்த மூன்றாவது புரட்சி ஒன்றினைப் பார்ப்போம்.

இரண்டாவது உலக யுத்தம் தொடங்குவதற்குச் சிறிது காலம் முன்னால் காந்திஜி சொன்னார்: ''போர் ஆயுதங்களைச் செய்து குவிக்கும் இந்தப் பைத்தியக்காரத்தனமான போட்டி நீடித்தால் சரித்திரம் இதுவரை கண்டிராத அளவுக்கு மனிதர்கள் கொல்லப் படுவார்கள். அதன் முடிவில் வெற்றி பெற்ற ஒருவர் இருந்தால், அந்த வெற்றியே, உயிர் வாழும் மரணமாக வெற்றி பெற்றவருக்கு விளங்கும்.''

காந்தி தீர்க்க தரிசனத்துடன் கண்ட யுத்தம் வந்தது. ஆண்கள், பெண்கள் குழந்தைகள் என்ற வித்தியாசமின்றி நாலு கோடி மக்கள் மாண்டார்கள். அதோடு (காந்தி சொன்னது போல் உயிர் வாழும் மரணமாக) அணு ஆயுதங்களும் தோன்றின. எதிர்காலத்தில் யுத்தம் என்றால் இதைப் போன்று பத்து மடங்கு அதிகமான உயிர்ச் சேதம் ஏற்படும்.

ஆனால் அணு ஆயுதத்தைக் கண்டுபிடித்த இதே வியக்கத்தக்க விஞ்ஞான முன்னேற்றம் நம் உலகைச் சொர்க்க லோகமாகவே மாற்றக் கூடாதா?

ரேடியோ, டெலிவிஷன், தொலை தூரத் தொடர்புக்குப் பயன்படும் செயற்கைச் சந்திரன், ஒலியை விட வேகமாகச் செல்லும் விமானம் முதலியவை பல தேசத்து மக்களை நெருங்க வைத்து ஒருவரை யொருவர் நன்கு புரிந்து கொள்ளவும் ஒருவர் மற்றவரது வாழ்முறையை அறிந்து கொள்ளவும் உதவி யிருக்கின்றன. சுற்றுலா புரிவோரும் மாணவர்கள் பரிமாற்றமும் இந்த நட்புறவுப் பிணைப்புக்களை மேலும் இறுகச் செய்திருக்கின்றன.

காந்தி ஒருமுறை சொன்னார்: ''பல்வேறு நாட்டு அரசாங்க இயந்திரங்கள் மக்களுக்கு இடையில் நின்று ஒரு சமுதாய மக்களின் மனத்தை மற்றொரு சமுதாயத்தினிடமிருந்து மறைத்து விடுகிறது.'' — இது இன்றைக்கும் உண்மையாகத்தான் இருக்கிறது.

ஆயினும் இன்றைய உலகில் எந்த அரசியல் தலைவனும் — அவன் எவ்வளவுதான் பொறுப்பற்றவனா யிருந்தாலும் சரி,' சென்ற உலக யுத்தங்களில் தங்கள் மூதாதையர்களைப் பலி கொடுத்த கோடிக் கணக்கான மக்களின் நலனைக் கருதாமல் ஒரு பெரிய யுத்தத்தை ஆரம்பிப்பது பற்றி யோசிக்க முடியாது.

இந்த விஷயத்தில் காந்தி உலகுக்கு விடுத்த செய்தி மிக முக்கியமானதாக தோன்றுகிறது. பல நூற்றாண்டுகளாக இருந்துவந்த சகோதர அன்பு, சகிப்புத்தன்மை ஆகிய தத்துவங்களை இருபதாம் நூற்றாண்டின் அரசியல் சூழ் நிலைக்கு ஏற்பப் புதுப்பித்து அர்த்தம் கொடுத்தவர் அவரே.

உலகில் தாழ்த்தப்பட்ட நிலையில் இருந்த ஜன சமூகத்துக்குக் குரல் எழுப்பக் கற்றுக் கொடுத்ததன் மூலம், அவர் சமாதானத்துக்கான மிகப் பெரியதொரு சக்தியை விடுவித்துவிட்டார் என்று கருதலாம் அல்லவா? மிக உன்னதமான நோக்குடன் திகழும் ஐக்கிய நாடுகள் சபையின் சாஸனத்தை உருவாக்கியவர்களின் கரங்களை இயக்கியது காந்தியின் ஆன்மாதானே? அதே ஆன்மாதானே மாஸ்கோவில் அணு ஆயுதப் பரிசோதனைகளுக்குத் தடை விதிக்கும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டவர்களின் கரங்களையும் இயக்கியது?

காந்திஜி மரணமடைந்தபோது துக்கித்துப் பேசிய ஜெனரல் மக் ஆர்தர், உலக அமைதி காப்பதில் காந்திஜியின் பங்கைச் சுருக்கிச் சொன்னார்: ''மனித சமுதாயத்தின் நாகரிக முன்னேற்றம் உயிர் பிழைக்க வேண்டுமானால், எல்லா மனிதர்களும் கடைசியில் காந்தியின் நம்பிக்கையை அனுசரித்து மேற்கொள்ளாமல் இருக்க முடியாது.

''சர்ச்சைக்கு உட்பட்ட விஷயங்களில் பலாத்காரத்தைப் பயன்படுத்துவது அடிப்படையிலேயே தவறு என்பது மட்டுமல்ல, அதிலே சுய அழிவுக்கான கிருமிகளும் அடங்கியிருக்கின்றன என்பதே காந்திஜியின் அந்த நம்பிக்கை.''

தமிழாக்கம்: குமரன்

A View From New Delhi என்ற புத்தகத்திலிருந்து. பிரசுரம் : அல்லைட் பப்ளிஷர்ஸ், 38 - ஸி, மவுண்ட் ரோடு, சென்னை - 6. விலை : ரூ. 4 - 50.




## பூர்வ கதை

ஆயிரத்து நூறு ஆண்டுகளுக்கு முன்பு சோழ நாட்டின் சிறு பகுதியை ஆண்டு வந்த விஜயாலய சோழன் தஞ்சை முத்தரையர்களிடமிருந்து தஞ்சாவூரைக் கைப்பற்றினான். சோழப் பேரரசுக்கு அவன் அஸ்திவாரம் அமைத்தான். விஜயாலய சோழன் குலத்தில் ஒருவர்பின் ஒருவராகப் பல வீர மன்னர்கள் தோன்றினார்கள். சிதம்பரம் கோயிலுக்குப் பொற்கூரை வேய்ந்த முதலாவது பராந்தக சக்கரவர்த்தி பாண்டிய நாட்டையும் ஈழத்தில் பெரும் பகுதியையும் வெற்றி கொண்டார். வடக்கே வடபெண்ணை வரையில் அவருடைய ஆதிக்கம் வியாபித்தது. பராந்தகரின் அந்திய காலத்தில் வடக்கேயிருந்து இரட்டை மண்டலத்து மாபெரும் சைன்யம் சோழ நாட்டின் மீது படையெடுத்து வந்தது. பராந்தகரின் மூத்த புதல்வர் இராஜாதித்யர் அரக்கோணத்துக்கு அருகில் உள்ள தக்கோலத்தில் அந்த மாபெரும் சைன்யத்துடன் வீரப் போர் புரிந்து உயிர் துறந்தார். யானை மீதிருந்தபடியே இறந்தபடியால் 'யானை மேல் துஞ்சிய தேவர்' என்று புகழ் பெற்றார். இராஜாதித்யர் இறந்தார் எனினும் இரட்டை மண்டலத்துப் படையெடுப்பு தடுக்கப் பட்டது.

பராந்தக சக்கரவர்த்திக்குப் பிறகு அவருடைய இரண்டாவது புதல்வர் கண்டராதித்தர் சிம்மாதனம் ஏறினார். அச்சமயம் அவருக்குப் பிள்ளை இல்லை. ஆகையால் அவர் தமது சகோதரர் அரிஞ்சய சோழரின் புதல்வரான சுந்தர சோழருக்கு இளவரசுப் பட்டம் சூட்டினார்.

•

கண்டராதித்தர் சிறந்த சிவபக்தர். முதிர்ந்த வயதில் அவர் மழவரையர் மகளை மணந்து கொண்டார். செம்பியன் மாதேவி என்ற பெயருடன் விளங்கிய இக்கோமகளும் சிவபக்தியில் சிறந்தவள். கண்டராதித்தரின் அந்திய காலத்தில் செம்பியன் மாதேவிக்கு ஒரு புதல்வன் பிறந்தான். அவனுக்கு மதுராந்தகன் என்று பெயர் சூட்டினார்கள்.

பழைய ஏற்பாட்டின்படி கண்டராதித்தருக்குப் பிறகு அரிஞ்சயர் சிங்காதனம் ஏறி ஒரு வருஷத்துக்குள் உயிர் துறந்தார். அவருக்குப் பிறகு சுந்தர சோழர் சிங்காதனம் ஏறினார். சுந்தர சோழரின் காலத்தில் சோழ சாம்ராஜ்யம் மீண்டும் வளர்ந்து பரவலாயிற்று.

சுந்தர சோழர் திருக்கோவலூர் மலையமான் மகளாகிய வான மகாதேவியை மணந்து கொண்டார். இவர்களுக்கு ஆதித்த கரிகாலன், அருள்மொழிவர்மன் என்னும் இரு புதல்வர்களும், குந்தவைப் பிராட்டி என்னும் புதல்வியும் பிறந்தார்கள்.

ஆதித்த கரிகாலன் இளம் பிராயத்திலேயே மகாவீரன் எனப் புகழ் பெற்றான். மதுரையில் மீண்டும் தலைதூக்க முயன்ற வீரபாண்டியனைப் போரில் கொன்று 'வீர பாண்டியன் தலைகொண்டவன்' என்னும் பட்டமும் பெற்றான். பின்னர் இவன் பட்டத்து இளவரசனுகிக் காஞ்சியில் வசித்து வந்தான். காஞ்சியில் இவன் ஒரு பொன் மாளிகை கட்டினான். சுந்தர சோழர் காஞ்சிக்கு வந்து அந்தப் பொன் மாளிகையில் சில காலம் தங்கியிருக்க வேண்டும் என்று கோரி, வந்தியத்தேவன் என்னும் வாலிப வீரனிடம் தந்தைக்கு ஓலை கொடுத்து அனுப்பினான்.

• • •

அச்சமயம் சுந்தரசோழர் தஞ்சாவூர் அரண்மனையில் பாரிச வாயு நோயினால் பீடிக்கப்பட்டுப் படுத்த படுக்கையாயிருந்தார். தஞ்சையில் பழுவூர்க் குறுநில மன்னர்களாகிய பெரிய பழுவேட்டரையர் சின்னப் பழுவேட்டரையர் என்னும் சகோதரர்கள் மிகச் செல்வாக்குப் பெற்றிருந்தார்கள். இவர்களுடைய அநுமதியின்றி யாரும் சுந்தர சோழரைப் பார்க்க அநுமதிக்கப்படுவதில்லை.

பெரிய பழுவேட்டரையர் அறுபது வயதுக்கு மேல் நந்தினி என்னும் பெண்ணை மணந்து கொண்டிருந்தார். நாட்டில் பலருக்கும் அருவருப்பை அளித்த இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு பெரிய பழுவேட்டரையரின் அறிவும் இராஜ பக்தியும் தடுமாற்றமடைந்தன. சோழ குலத்தின் மீது நந்தினி

துவேஷங் கொள்ளச் சில அந்தரங்கக் காரணங்கள் இருந்தன. குந்தவைப் பிராட்டி நந்தினியை அவமதித்து அலட்சியம் செய்தது நந்தினியின் பகைமையை வளர்த்தது. இதிலிருந்து சோழ சாம்ராஜ்யத்தில் ஒரு பெரிய சதியாலோசனை தொடங்கியது. பழுவேட்டரையர்கள் கடம்பூர் சம்புவரையர்கள் முதலிய சோழ சாம்ராஜ்யத்தின் குறுநில மன்னர்களும் பெருந்தரத்து அதிகாரிகளும் இந்தச் சதியாலோசனையில் ஈடுபட்டார்கள். இவர்கள் சுந்தர சோழருக்கும் பிற்பாடு அவருடைய சந்ததிகளுக்கும் பட்டமில்லாமல் செய்து, கண்டராதித்தரின் புதல்வர் மதுராந்தகத் தேவருக்கு முடிசூட்டுவதென்று முடிவு செய்தார்கள்.

இந்த நிலைமையில், சுந்தர சோழரின் வம்சத்தை அடியோடு நிர்மூலம் செய்வதென்று கொலைகாரக் கூட்டம் ஒன்று மந்திரவாதி ரவிதாஸனின் தலைமையில் வேலை செய்து கொண்டிருந்தது. இந்தக் கூட்டத்தாருக்கு வேண்டிய பொருள் உதவியைப் பழுவூர் ராணி நந்தினி அந்தரங்கமாக அளித்து வந்தாள்.

• • •

**வ**ந்தியத் தேவன் காஞ்சியிலிருந்து தஞ்சை போகும் வழியில் கடம்பூர் மாளிகையில் ஓர் இரவு தங்கியிருந்த போது பழுவேட்டரையர்களின் சதியாலோசனையைப் பற்றித் தெரிந்து கொண்டான். அவன் பழுவூர் ராணி நந்தினியைத் தஞ்சைக்கு அருகில் தற்செயலாகச் சந்தித்தான். அவளுடைய உதவியினால் தஞ்சைக் கோட்டைக்குள் பிரவேசித்துச் சுந்தர சோழரைப் பார்த்து ஓலையையும் கொடுத்தான். அவரிடம் சதியாலோசனையைப் பற்றி எச்சரிக்கை செய்ய யத்தனித்த போது தஞ்சைக் கோட்டைத் தளபதியான சின்னப் பழுவேட்டரையர் வந்து தடுத்து விட்டார். பிறகு வந்தியத்தேவன் தஞ்சைக் கோட்டையிலிருந்து பொக்கிஷச் சாலை சுரங்க வழியின் மூலம்' தப்பித்து வெளியேறிப் பழையாறையை அடைந்தான். அங்கே குந்தவை தேவியிடம் தான் அறிந்த விவரங்களைக் கூறினான். குந்தவையின் செல்வத் தம்பியும் பின்னால் இராஜ இராஜன் என்று சரித்திரப் பிரசித்தி பெற்றவனுமான அருள்மொழிவர்மன் அச்சமயம் இலங்கையில் போர் நடத்திக் கொண்டிருந்தான். அவனை உடனே புறப்பட்டு வரும்படி ஓலை எழுதிக் குந்தவை வந்தியத்தேவனிடம் அதைக் கொடுத்து அனுப்பினாள். 'பொன்னியின் செல்வ!' என்று அந்த ஓலை ஆரம்பமாகியிருந்தது.

அருள்மொழி வர்மன் குழந்தையாயிருந்த போது பெற்றோர்களுடன் காவேரி நதியில் உல்லாசப் படகில் போய்க் கொண்டிருந்தான். அப்போது நதியில் மிதந்த பூவை எடுக்கக் குனிந்து வெள்ளத்தில் விழுந்து விட்டான். அவனை ஒரு ஸ்திரீ தண்ணீரிலிருந்து எடுத்துக் காப்பாற்றிப் படகில் சேர்த்து விட்டு உடனே மறைந்து விட்டாள். அவள் யார் என்பது தெரியவில்லை. ஆகையால் காவேரி அம்மன்தான் அவ்விதம் மானிடப் பெண் உருவில் தோன்றிக் குழந்தையைக் காப்பாற்றினாள் என்று பலரும் நம்பினார்கள். இதனால் அவனுக்குப் 'பொன்னியின் செல்வன்' என்னும் காரணப் பெயர் ஏற்பட்டது.

• • •

**வ**ந்தியத்தேவன் கோடிக்கரை சென்று அங்கே பூங்குழலி என்னும் பெண்ணின் உதவியால் ஈழ நாட்டை அடைந்தான். பொன்னியின் செல்வனைச் சந்தித்து ஓலையைக் கொடுத்தான். இருவரும் சந்தித்த தட்சணமே பரஸ்பரம் அறியா நேயம்கொண்ட நண்பர்கள் ஆயினர்.

இலங்கையில் தங்கியிருந்த சில தினங்களில் வந்தியத்தேவன் சில அதிசயமான விவரங்களை அறிந்தான்.

சுந்தர சோழர் பட்டத்து இளவரசராவதற்கு முன்னால் இலங்கையை அடுத்த பூதத் தீவில் சில நாள் தங்கும்படி நேர்ந்தது. அங்கே அவரைத் தாக்க வந்த ஒரு கரடியிடமிருந்து ஒரு பெண் அவரைக் காப்பாற்றினாள். அவள் பிறவி ஊமையும் செவிடுமான பெண். ஆயினும் அவளிடம் சுந்தர சோழர் காதல் கொண்டார். விரைவில் அந்த ஊமைப் பெண்ணை அவர் பிரிந்து போகும்படி நேர்ந்தது.

அந்த ஊமைப் பெண்தான் பின்னொரு காலத்தில் குழந்தை அருள்மொழி வர்மரைக் காவேரி வெள்ளத்திலிருந்து காப்பாற்றியவள் ஆவள். அருள்மொழி வர்மர் இலங்கையில் சோழ சைன்யத்துடன் வந்து தங்கியிருந்த போது மேற்கூறிய ஊமை ராணி அவரை மற்றும் பல அபாயங்களிலிருந்து தப்புவித்தாள். அவள் எழுதிக் காட்டிய சித்திரங்களிலிருந்து அவள் தமது பெரியன்னை முறையில் உள்ளவள் என்பதைப் பொன்னியின் செல்வர் உணர்ந்தார். அவளுக்குப் பிறந்த இரட்டைக் குழந்தைகள் என்னவானார்கள் என்பதைப் பற்றியும் அருள்மொழி வர்மர் சில ஊகங்களைச் செய்து கொண்டார். ஆகையால் தம் தந்தையைச் சந்தித்து இவ்விவரங்களைச் சொல்ல வேண்டும் என்று அவர் மிக்க ஆர்வம் கொண்டிருந்தார்.

• • •

**பொ**ன்னியின் செல்வரைப் பழையாறைக்கு அழைத்துப் போவதற்காக வந்தியத்தேவன் வந்த அதே சமயத்தில் அவரைக் காஞ்சிக்கு அழைத்துப் போவதற்காக ஆதித்த கரிகாலனின் அந்தரங்க நண்பனும் படைத் தலைவனுமான பார்த்திபேந்திரனும் வந்திருந்தான். தற்சமயம் தஞ்சைக்கும் பழையாறைக்கும் போவது அனர்த்தமாக முடியும் என்று கூறிக் காஞ்சிக்கு வரவேண்டும் என்று பார்த்திபேந்திரன் வற்புறுத்தினான்.

எங்கே போவது என்பது பற்றி இளவரசரின் மனத்தில் போராட்டம் நடந்து கொண்டிருந்தபோது, பூங்குழலி என்னும் பெண் ஒரு விந்தையான செய்தியைக் கொண்டு வந்தாள். சுந்தர சோழரின் கட்டளையின் பேரில் இளவரசரைச் சிறைப்படுத்தித் தஞ்சைக்குக் கொண்டு போவதற்காகப் பழுவேட்டரையர்களின் ஆட்கள் பலர் இரண்டு மரக்கலங்களில் வந்திருப்பதாக அவள் தெரிவித்தாள்.

உடனே இளவரசர் ஒரு முடிவுக்கு வந்தார். ''நானே வலியச் சென்று அவர்களிடம் என்னை ஒப்புக் கொடுத்துவிடப் போகிறேன்'' என்றார். அதைத் தடுப்பதற்குக் கொடும்பாளூர் பெரிய வேளாராகிய சேநாதிபதி விக்கிரமகேசரியும் பார்த்திபேந்திரனும் முயன்றார்கள். அவர்கள் முயற்சி கைகூடவில்லை. இளவரசர் பிடிவாதமாகப் புறப்பட்டு விட்டார். வழி காட்டுவதற்காகப் பூங்குழலியையும் அவர் அழைத்துப் போனார்.

இவர்கள் போய்ச் சேர்வதற்குள் அந்த மரக்கலங்களில் ஒன்று தரை தட்டிச் சேற்றில் அமிழ்ந்து விட்டது. இன்னொரு மரக்கலத்தை அராபியர்கள் சிலர் கைப்பற்றிக் கொண்டு போனார்கள். அந்தக் கப்பலில் இளவரசர் போகிறார் என்று தவறாக எண்ணி வந்தியத்தேவன் முரட்டுத்தனம் செய்து அதில் ஏறிக் கொண்டான். அவனை அராபியர்கள் பிடித்துக் கட்டிப் போட்டார்கள். அதே கப்பலில் ஏறியிருந்த மந்திரவாதி ரவிதாஸனும் அவனுடைய தோழனும் அராபியர்களைக் கொன்று விட்டு வந்தியத்தேவனைத் தனியாகக் கப்பலில் விட்டு விட்டுப் படகில் ஏறிச் சென்றார்கள். அச்சமயம் அகோரமான சுழற் காற்று வந்து கப்பலைத் தாக்கியது.

வந்தியத் தேவன் அக்கப்பலில் போவதை அறிந்து பொன்னியின் செல்வர் பார்த்திபேந்திரனுடைய கப்பலில் ஏறி அதைப் பின்தொடர்ந்து சென்றார்.

## அத்தியாயம் ஐம்பத்திரண்டு

# உடைந்த படகு

இடி விழுந்ததனால் பாய் மரத்தின் உச்சியில் தீப்பிடித்து எரிவதைப் பார்த்ததும் இனி அம்மரக்கலம் தப்பிக்க முடியாது என்று வந்தியத்தேவன் நிச்சயமடைந்தான். எனவே, தானும் உயிரோடு தப்பிக்க முடியாது.

வந்தியத்தேவனுக்கு அப்போது சிறிதும் மனக்கிலேசம் உண்டாகவில்லை. உற்சாகந்தான் மிகுந்தது. கலகலவென்று சிரித்தான். பாய் மரத்தோடு தன்னைக் கட்டியிருந்த கயிற்றை அவிழ்த்து விட்டான். நடுக் கடலில் தீயில் வெந்து சாக வேண்டியதில்லை அல்லவா? அதைக் காட்டிலும் குளிர்ந்த நீரில் முழுகிக் கடலின் அடியில் சென்று அமைதியாக உயிர் விடுவது மேல் அல்லவா ?

ஆயுளில் மிச்சமுள்ள சிறிது நேரத்தை வீணாக்க வந்தியத்தேவன் விரும்பவில்லை. தீப்பற்றி எரிந்த கப்பலின் வெளிச்சத்தில் சுற்று முற்றும் நன்றாகப் பார்த்துக் கொந்தளித்த கடலின் சௌந்தரியத்தை அநுபவிக்க விரும்பினான். தன் உடல் சமாதி அடையப் போகும் இடத்தை நன்றாகப் பார்த்துக் கொள்வது நல்லதல்லவா ? இம்மாதிரி அகால மரணமடைந்தவர்கள் ஆவி உருவத்தில் இறந்த இடத்தைச் சுற்றி வந்து கொண்டிருப்பார்கள் என்று சொல்வார்களே? அம்மாதிரி தன் ஆவியும் இந்தக் கடலின் மேலேயே வட்டமிட்டுக் கொண்டிருக்குமோ? காற்றில் மிதக்குமோ? அலைகளின் மேலே உலாவுமோ? சுழற்காற்று அடிக்கும் போது தன் ஆவியும் சுற்றிச் சுற்றி வருமோ ?

ஆகா! எப்போதாவது ஒரு நாள் இந்தக் கடலில் அரசிளங்குமரி கப்பல் ஏறிப் போனாலும் போவாள். கப்பலை ஓட்டும் மாலுமிகள், ''வந்தியத்தேவன் கப்பலோடு முழுகிய இடம் இது தான் !'' என்று காட்டுவார்கள். அவளுடைய வேல் விழிகளில் கண்ணீர் துளித்து அவளது முழுமதி முகத்தில் முத்து முத்தாகச் சிந்தும். ஆவி வடிவத்திலே அதை அருகிலிருந்து தான் பார்க்கும்படி நேர்ந்தால், அவளுடைய கண்ணீரைத் தன்னால் துடைக்க முடியுமா ?....

கப்பல் ஒரு பேரலையின் சிகரத்தின் மேலே ஏறியது. பாய்மரத் தீவர்த்தி போட்ட வெளிச்சத்தில் சுற்றிலும் வெகு தூரம் தெரிந்தது. கரும் பளிங்கு நிறம் பெற்றுத் திகழ்ந்த கடல் நீரில் பாய்மரத் தீயின் ஒளி விழுந்த இடம் மட்டும் பொன் வெள்ளமாகத் திகழ்ந்தது. இந்த அழகின் அற்புதத்தை வந்தியத்தேவன் பார்த்து மகிழ்ந்து முடிவதற்குள் அவனுடைய கண்ணையும் கவனத்தையும் வேறொன்று கவர்ந்தது.

சற்றுத் தூரத்தில் அவன் ஒரு மரக்கலத்தைப் பார்த்தான். அதில் புலிக் கொடி பறக்கக் கண்டான்.

கடவுளே! உன் விந்தைகளுக்கு எல்லையே இல்லை போலும்!—அந்த மரக்கலத்திலே வருகிறவர் இளவரசர் அருள்மொழிவர்மராகத்தான் இருக்க வேண்டும். தன்னைத் தேடிக் கொண்டுதான் அவர் வருகிறார்; — என்று அவனுடைய உள்ளுணர்ச்சி கூறியது!

* * *

வந்தியத்தேவன் ஏறியிருந்த கப்பல் சிக்கிக் கொண்டு தத்தளித்த அதே சுழிக் காற்றில் பார்த்திபேந்திரனுடைய கப்பலும் அகப்பட்டுக் கொண்டது. ஆனால் இந்தக் கப்பலில் அச்சுழிக் காற்றின் தன்மையை அறிந்தவர்களும் கப்பலோட்டும் கலையில் வல்லவர்களுமான மாலுமிகள் இருந்தார்கள். பாய்மரங்களில் விரித்திருந்த பாய்களை அவர்கள் இறக்கிச் சுற்றி வைத்தார்கள். காற்றின் வேகம் முழுவதையும் கப்பல் எதிர்த்து நிற்பது அவசியமில்லாத வண்ணமாகக் கப்பலின் சுக்கானைப் பிடித்து இயக்கி வந்தார்கள். ஒரு நிமிஷம் கப்பல் அடியோடு சாய்ந்து 'இதோ கவிழ்ந்து விட்டது' என்று தோன்றும். மறு நிமிடம் சமாளித்துக் கொண்டு நிமிர்ந்து நிற்கும். மலைபோன்ற அலைகள் அந்தக் கப்பலை எத்தனைதான் தாக்கியும் அதில் இணைக்கப்பட்டிருந்த மரங்களும் பலகைகளும் சிறிதேனும் பிளந்து கொடுக்க வேண்டுமே! கிடையவே கிடையாது! சமுத்திர ராஜன் அந்தக் கப்பலைப் பந்து ஆடுவதுபோல் தூக்கி எறிந்து விளையாடினான். சுழிக் காற்று அக்கப்பலைப் பம்பரம் சுற்றுவது போலச் சுழற்றிச் சுழற்றி அலைத்தது. வானத்திலிருந்து வெள்ளம் பொழிந்து அந்தக் கப்பலைக் கடலில் அமுக்கி அழித்துவிடப் பார்த்தது. சோழ நாட்டுத் தச்ச வேலை நிபுணர்கள் கட்டிய அக்கப்பலை, — தமிழகத்தின் புகழ்பெற்ற மாலுமிகள் ஓட்டிய அக்கப்பலை — கடலும் மழையும் காற்றும் சேர்ந்து தாக்கியும் ஒன்றும் செய்ய முடியவில்லை.

''இதைக் காட்டிலும் கொடிய சுழிக் காற்றுகளையும் சண்டமாருதங்களையும் நான் பார்த்திருக்கிறேன்; சமாளித்திருக்கிறேன். ஆகையால் கவலைப்படத் தேவையில்லை!'' என்று கலபதி கூறினான். ஆனால் அவன் பார்த்திபேந்திரனிடமும் இளவரசரிடமும் வேறொரு அபாயத்தைப் பற்றித் தன் பயத்தை வெளியிட்டான்.



கரிய மேகங்கள் திரண்டு வந்து வானை மூடி நாலாபுறமும் இருள் சூழச் செய்து விட்டன. போதாததற்குச் சோனாமாரியாக மழையும் பெய்தது. கடலில் எழுந்த அலைகளோ வரிசை வரிசையான மலைத்தொடர்களைப் போல் கப்பலைச் சுற்றித் திரையிட்டு மறைத்தன. இந்த நிலையில் அவர்கள் எந்தக் கப்பலைத் தேடிச் சென்றார்களோ, அது வெகு சமீபத்தில் வந்தாலும் பார்க்க முடியாது. அந்தக் கப்பலும் இதைப் போலத்தான் சுற்றிச் சுழன்று தத்தளித்துக் கொண்டிருக்கும். கப்பல்கள் ஒன்றோடொன்று மோதினால் இரண்டும் சுக்கல் சுக்கலாகப் போய்விடும். கப்பலில் உள்ளவர்களின் கதி அதோகதிதான்!

ஆகவே சுழிக் காற்றின் அபாயத்தைக் காட்டிலும் சுற்றிலும் ஒன்றும் பார்க்க முடியாமல் இருப்பதுதான் அதிக அபாயம் என்று அம்மரக்கலத் தலைவன் கூறினான்.



இது இளவரசருக்கும் தெரிந்த விஷயந்தான். ஆகவே அவர் அத்தனை காற்றிலும் மழையிலும் கப்பலின் ஓரமாக நின்று கொண்டு தம் கூரிய கண்களின் பார்வையை நாலாபுறமும் செலுத்திக் கொண்டிருந்தார். மின்னல் மின்னிய போதெல்லாம் அவருடைய கண்கள் அதிவேகமாகச் சுழன்று சுற்றுப்புறமெங்கும் உற்றுப் பார்த்தன. அவருடைய உள்ளம் எப்படித் தத்தளித்துக் கொண்டிருந்தது என்பதைச் சொல்லி முடியாது. தன் அருமைத் தமக்கை அனுப்பிய தூதன் முரட்டு அராபியர்களிடமும் கொலைகார மந்திரவாதிகளிடமும் அகப்பட்டுக் கொண்டிருக்கிறான். அது போதாது என்று இந்தச் சுழிக் காற்று வேறு வந்து சேர்ந்தது. ஒரு வேளை அவ்வீர வாலிபன் ஏறியுள்ள அக்கப்பலைக் கண்டுபிடிக்க முடியாமலே போய் விடுமோ! கண்டு பிடித்தாலும் அவனை உயிரோடு காண்பது சாத்தியமா? — கலபதி அஞ்சுவது போல் அவன் ஏறியிருக்கும் கப்பல் மேல் நம் கப்பல் மோதி இரண்டும் கடலில் மூழ்கினால் வேடிக்கையாகத் தானிருக்கும்! ஆனால் தந்தையிடம் சொல்லவேண்டிய செய்தியைச் சொல்லுவது யார்? பார்த்திபேந்திரனிடம் அந்தக் குடும்ப இரகசியத்தைக் கூறுவது இயலாத காரியம். கூறினால் அந்தப் பல்லவனுக்கு அது கேலியாயிருக்கும்; அதன் முக்கியத்தை அவன் உணர மாட்டான். இதுகாறும் இளவரசர் செய்ய எண்ணிய காரியம் எதிலும் தோல்வி யடைந்ததில்லை. இப்போது தோல்வி ஏற்பட்டு விடுமோ? — இல்லை, ஒரு நாளும் இல்லை. பொன்னியின் செல்வனுக்குத் தீங்கு நேருவதையோ, தோல்வி ஏற்படுவதையோ சமுத்திர ராஜன் பார்த்துக் கொண்டிருக்க மாட்டான்!

இருளையும் மழையையும் கிழித்துக்கொண்டு எல்லாத் திசைகளையும் பார்த்துக் கொண்டிருந்த இளவரசரும் அப்போது மின்னிய மின்னலுக்குக் கண்களைச் சிறிது மூடிக் கொள்ள வேண்டியதாயிற்று. அந்தப் பேரிடி முழக்கத்தைக் கேட்டார். கண்ணைத் திறந்து பார்த்தபோது மின்னல் வெளிச்சமில்லாத வேறொரு வெளிச்சத்தைக் கண்டார். சற்றுத் தூரத்தில் ஒரு கப்பல் விரித்த பாய்மரங்களுடன் பேயாடுவது போல் ஆடிக் கொண்டிருந்தது! அதன் பாய்மரத்தின் உச்சியில் தீப்பற்றி எரிந்தது! அந்தத் தீயின் வெளிச்சத்தில் இளவரசர் அதில் ஒரு மனிதன் பாய்மரத்தோடு சேர்ந்து நிற்பதைக் கண்டார்! கடவுளே! இத்தகைய அற்புதமும் நடக்கக்கூடுமா?— அவன் அந்த வீர இளைஞனாகிய வந்தியத்தேவன் தான்! அவன் மட்டும் ஏன் தனியாக நிற்கிறான்? மற்றவர்கள் என்ன ஆனார்கள்? — அதைப் பற்றியெல்லாம் யோசிப்பதற்கு இப்போது நேரமில்லை. செய்ய வேண்டியது இன்னதென்பதை ஒரு நொடிப் பொழுதில் இளவரசர் தீர்மானித்துக் கொண்டார்.

அவர் பார்த்த காட்சியைக் கப்பலில் இருந்த மற்றவர்கள் பலரும் பார்த்தார்கள். ''அதோ!'' என்று அவர்கள் ஏககாலத்தில் எழுப்பிய பெரிய கூச்சல் காற்றின் பயங்கர சத்தத்தையும் மீறிக் கொண்டு எழுந்தது.

கப்பலோடு சேர்த்துக் கட்டியிருந்த படகண்டை போய் இளவரசர் நின்று கொண்டு, அருகில் நின்ற மாலுமிகளைப் பார்த்து, ''உங்களில் யார் என்னுடன் வருவீர்கள்?'' என்று உரத்த குரலில் கேட்டார். அவர் செய்ய உத்தேசித்த காரியம் இன்னதென்று ஊகித்தறிந்து மாலுமிகள் திகைத்தார்கள். ஆயினும் பலர் போட்டியிட்டு முன் வந்தார்கள்.

பார்த்திபேந்திரனும் கலபதியும் வந்து தடுக்கப் பார்த்தார்கள். ''இளவரசே! இது என்ன காரியம்? இந்தக் கொந்தளிக்கும் கடலில் படகு எப்படிச் செலுத்த முடியும்?

எரிகின்ற கப்பலில் உள்ளவனை எப்படிக் காப்பாற்ற முடியும்?—ஆனாலும் முயற்சி செய்து பார்க்கலாம். தாங்கள் போக வேண்டாம்; போவதற்கு நாங்கள் எத்தனையோ பேர் இருக்கிறோம்'' என்றான் பார்த்திபேந்திரன்.

''ஜாக்கிரதை! இச்சமயம் என்னைத் தடுக்கப் பார்க்கிறவர்களை நான் ஒரு நாளும் மன்னிக்க முடியாது!'' என்று இராஜ கம்பீரமான அதிகார தோரணையில் கூறினார் இளவரசர். அதே சமயத்தில் படகை அவிழ்த்து விட்டார். ''உங்களில் இரண்டு பேர் போதும்; வாருங்கள்!'' என்றார்.

படகு கடலில் இறங்கியது. இளவரசரும் அவர் குறிப்பிட்ட இருவரும் அதில் குதித்தார்கள். மறு கணமே படகு கப்பலை விட்டு அகன்று சென்றது. அலைகளின் மேல் ஆவேசக் கூத்து ஆடியது. இளவரசரும் மற்ற இருவரும் துடுப்புகளைப் பலங்கொண்ட மட்டும் வலித்தார்கள். சிறிது சிறிதாகப் படகு எரிகின்ற கப்பலை அணுகியது. இதற்குள் தீ உச்சியிலிருந்து பாதி பாய்மரம் வரையில் இறங்கி விட்டிருந்தது. ஆனால் வந்தியத் தேவனோ அங்கேயே நின்று கொண்டிருந்தான். அவன் தீயின் வெளிச்சத்தில் கப்பலைப் பார்த்தான்; கப்பலிலிருந்து இறக்கப்பட்டு வந்த படகையும் பார்த்தான். அந்த அதிசயத்தில் தன்னை மறந்திருந்தான். தான் ஏதேனும் செய்ய வேண்டும் என்றே அவனுக்குத் தோன்றவில்லை.

''குதி! கடலில் குதி!'' என்று கத்தினார் இளவரசர். அவன் காதில் அது விழவில்லை. செயலற்ற பதுமையைப் போல் நின்று கொண்டிருந்தான்.

ஆயிற்று; இன்னும் சிறிது நேரம் தாமதித்தால் கப்பல் அடித்தளத்துக்கு நெருப்பு வந்து விடும்; கப்பல் முழுகிவிடும். அப்புறம் அவனைக் காப்பாற்றுவது இயலாத காரியமாகிவிடும்.

என்ன செய்ய வேண்டும் என்பதை மறுபடியும் இளவரசர் ஒரு நொடியில் முடிவு செய்தார். இத்தகைய சந்தர்ப்பங்களுக்கென்றே அந்த அபாயப் படகில் சேர்த்துக் கட்டியிருந்த நீளக் கயிற்றின் இன்னொரு நுனியைத் தமது இடுப்பில் சுற்றி இறுக்கிக் கட்டிக்கொண்டார். மாலுமிகள் இருவருக்கும் எச்சரிக்கை செய்து விட்டுக் கடலில் குதித்தார்.

இத்தனை நேரம் படகுடன் விளையாடிய அலைகள் இப்போது இளவரசருடன் விளையாடின. ஒரு கணம் அவரை வானத்துக்கு உயர்த்தின; மறுகணம் பாதாளத்தில் தள்ளின எனினும் இளவரசர் திசையும் குறியும் தவறாமல் எரிகின்ற கப்பலை நோக்கி வேகமாகப் போய்க் கொண்டிருந்தார்.

ஒரு பெரிய, மிகப் பெரிய அலை வந்தது! இளவரசர் மேலே அது விழுந்திருந்தால் அவரை அமுக்கிக் கடலின் அடியில் கொண்டு போயிருக்கக் கூடும்! ஆனால் அது நல்ல அலை; இளவரசருக்கு ஏவல் செய்ய வந்தது. அவரைத் தன் உச்சியில் வைத்துத் தூக்கிக் கொண்டு போய் எரிகின்ற கப்பலின் மேல் தளத்தில் எறிந்தது.

ஏற்கனவே கட்டு அவிழ்த்துக் கொண்டிருந்த வந்தியத்தேவன் இளவரசரைப் பார்த்ததும் 'ஆ' என்று அலறி அவரை எடுப்பதற்காகத் தாவிக் குனிந்தான். இளவரசர் அவனுடைய கழுத்தை அப்படியே இறுக்கிக் கட்டிக் கொண்டார். அவன் காதுக்குள், ''என்னைப் பிடித்துக் கொண்டு வா! விட்டு விடாதே!'' என்றார். சொல்லி முடிந்த தட்சணமே இருவரும் மறுபடியும் கடலில் மிதந்து அலைகளினால் மொத்துண்டார்கள்.

மாலுமிகள் துடுப்புத் தள்ளுவதை நிறுத்திக் கயிற்றைப் பிடித்து இழுக்கலானார்கள்.

இளவரசரும் அவரை உடும்புப் பிடியாகப் பிடித்துக் கொண்டிருந்த வந்தியத்தேவனும் படகை அணுகினார்கள்.

படகைப் பிடித்து அதில் ஏறுவது எளிய காரியமில்லை. அலைகளுடன் போராடிக் கொண்டு வந்தியத்தேவனையும் தாங்கிக் கொண்டு படகில் ஏறுவதற்கு முயன்ற ஒவ்வொரு கணமும் ஒரு யுகமாக இருந்தது.

இதோ படகு கைக்கு அகப்படுவது போலிருக்கும்; அடுத்த கணம் எட்டாத தூரத்தில் போய் விடும்.

கடைசியாக, அதற்கும் ஒரு பெரிய அலை உதவி செய்தது. படகின் அருகில் உயரமாக எழுந்த அந்தப் பேரலையோடு அவர்களும் எழுந்தார்கள். மாலுமிகளின் உதவியுடன் படகில் குதித்தார்கள்.

''துடுப்பை வலியுங்கள்! வேகமாய் வலியுங்கள்!'' என்றார் இளவரசர்.

ஏனெனில், எரிகின்ற கப்பல் கடலில் முழுகும் நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது.

அப்படி முழுகும் போது ஏற்படும் கொந்தளிப்பில் படகு கவிழ்ந்தாலும் கவிழ்ந்து விடும். அது மட்டுமன்று; கப்பல் முழுகித் தீ அணைந்துவிட்டாலும் பிறகு மற்றொரு கப்பலை அவர்கள் பிடிப்பதும் அசாத்தியமாகி விடலாம்.

ஆகா! அதோ கப்பல் முழுகத் தொடங்கி விட்டது. கொழுந்து விட்டு எரிந்த பாய்மரங்களுடனே அது கடலில் மூழ்கிய காட்சிதான் என்ன பயங்கர சௌந்தரியமாயிருந்தது?

அதை அவர்களால் அதிக நேரம் அநுபவிக்க முடியவில்லை.

இளவரசர் எதிர்பார்த்தது போலவே கடலில் ஒரு பெரிய கொந்தளிப்பு. 'வானளாவி மேலெழுந்த அலைகள்.

படகு என்னமோ அலைகளைச் சமாளித்துக் கொண்டது. ஆனால் எரிந்த கப்பல் முழுகியதும் சுற்றிலும் சூழ்ந்த இருளில் மற்றொரு கப்பல் இருந்த இடமே தெரியாமல் போயிற்று. திக்குத் திசை ஒன்றுமே தெரியவில்லை.

படகும் கப்பலும் ஒன்றையொன்று நெருங்கிக் கொண்டிருக்கின்றனவோ, அகன்று போய்க்கொண்டிருக்கின்றனவோ, — அதைத் தெரிந்து கொள்ளவும் வழியில்லை.

இரண்டிலும் அபாயம் உண்டு.

இருட்டில் கப்பல் இருக்குமிடம் தெரியாமல் அதை நெருங்கிச் சென்று முட்டிக் கொண்டால் படகு துகள் துகளாகும்.

விலகிப் போய் விட்டால், கேட்பானேன்? நடுக் கடலில், காரிருளில் அந்தச் சின்னஞ் சிறு படகினால் என்ன செய்ய முடியும்?

சமுத்திர ராஜனே! உன் காதலி பொன்னிநதி தந்த அருமைச் செல்வனை நீதான் காப்பாற்ற வேண்டும்!

* * *

**வா**யு பகவானுடைய லீலைகள் வெகு வெகு அதிசயமானவை. அந்தப் பெரும் சுழிக் காற்று எவ்வளவு அவசரமாக வந்ததோ அவ்வளவு அவசரமாகவே போய் விட்டது. போகும் வழியிலெல்லாம் கடலைப் படாத பாடுபடுத்தி விட்டுப் போய் விட்டது.

சுழிக் காற்று போய் விட்டது சரிதான்; ஆனால் அதனால் கடலில் ஏற்பட்ட கொந்தளிப்பு இலேசில் அடங்கி விடாது. ஓர் இரவும் ஒரு பகலும் நீடித்திருந்தாலும் இருக்கும். அந்தக் கொந்தளிப்பின் வேகம் நெடுந் தூரம் பிரயாணம் செய்யும். கோடிக்கரையின் விஸ்தாரமான மணற் பிரதேசத்தையெல்லாம் கடல் ஏறி மூடிவிடும். நாகப்பட்டினத்தின் கடற்கரை மீது பேரலைகள் மோதி இடித்துத் தகர்க்கப் பார்க்கும். இன்னும் அக்கொந்தளிப்பு காங்கேசன் துறை திரிகோணமலை வரையில் பரவும். மாதோட்டத்தையும் இராமேசுவரத்தையும்கூட ஒரு கை பார்த்து விடும்.

இளவரசர் முதலியோர் ஏறியிருந்த படகு அலைகளால் மொத்துண்டு மிதந்து கொண்டேயிருந்தது. சிறிது நேரத்துக்கெல்லாம் துடுப்பு வலிப்பதையும் நிறுத்தி விட்டார்கள். திக்கும் திசையும் தெரியாத போது, கப்பல் எங்கே இருக்கிறதென்றும் தெரியாத போது, துடுப்பு வலித்து ஆவது என்ன?

காற்று ஓய்ந்து விட்டது; மழை ஓய்ந்து விட்டது; இடியும் மின்னலும் நின்று விட்டன.

ஆனால் அலைகளின் ஆங்காரம் மட்டும் சிறிதளவும் குன்றவில்லை.



படகு அந்த அலைகளில் தத்தளித்துக் கொண்டேயிருந்தது.

சற்றும் எதிர்பாராத ஓர் அபாயம் அதை நெருங்கி நெருங்கி வந்து கொண்டிருந்தது. இதோ வந்து விட்டது!

எரிந்த கப்பல் முழுகிற்றல்லவா? அப்போது முழுதும் எரியாத ஒரு பாய்மரம் அதிலிருந்து பிரிந்தது. கடலில் அது மிதந்து மிதந்து படகுக்கு அருகில் வந்தது. இருட்டின் காரணமாக வெகு சமீபத்தில் வரும் வரையில் அதை ஒருவரும் பார்க்கவில்லை.

பார்த்தவுடனே, "துடுப்பு வலியுங்கள்! துடுப்பு வலியுங்கள்!" என்று இளவரசர் கூவினார்.

அவர் கூவி வாய் மூடுவதற்குள் அந்தப் பாய்மரம் படகின் அடிப் பகுதியில் இடித்தது.

இடித்த வேகத்தில் படகு 'படார்' என்று பிளந்தது. முதலில் இரண்டு பகுதிகளாகப் பிளந்தது. பிறகு சிறிய சிறிய பலகைத் துண்டுகளாகப் பிளந்து சிதறியது.

"நண்பா! பயப்படாதே! இந்தப் படகைக் காட்டிலும் அந்தப் பாய்மரம் பத்திரமானது. தாவி அதைப் பற்றிக் கொள்!" என்றார் இளவரசர். **(தொடரும்)**



# ராமாயணம்

## ராஜாஜி

## 29. பெற்ற தாயின் துக்கம்

மூவருடைய உருவம் கண்ணுக்குத் தெரிந்து கொண்டிருக்கும் வரையில் சுமந்திரனும் குகனும் அவர்களைப் பார்த்துக் கொண்டே நின்றார்கள். கண்ணுக்கு மறைந்து போனதும் அவர்கள் இருவரும் துக்கத்தில் மூழ்கிக் குகனுடைய நகரம் சென்றார்கள். பிறகு அங்கிருந்து சுமந்திரன் குகனிடம் விடைபெற்றுக் கொண்டு அயோத்திக்குத் திரும்பினான்.

அயோத்தியா நகரத்தை அணுக அணுக வழக்கமாக நகரத்திலிருந்து கிளம்பி வரும் சப்தங்களுக்கும் காட்சிகளுக்கும் பதிலாக நகரம் பாழடைந்த ஊர்போல் தென்பட்டது. சுமந்திரனுடைய தேரானது கோட்டை வாயிலைக் கடந்து ஊருக்குள் பிரவேசித்ததும், ''ராமன் எங்கே? ராமன் எங்கே?'' என்று ஊரார் தேரைச் சுற்றிக் கொண்டார்கள்.

''அருமை ஜனங்களே! ராம லக்ஷ்மணர்கள் கங்கையைத் தாண்டி விட்டார்கள். என்னை ஊருக்குத் திரும்பு என்று சொல்லி விட்டு அவர்கள் வனத்தில் கால்நடையாகச் சென்றார்கள்'' என்று கூறினான்.

''ஐயோ!'' என்று கதறினார்கள். ''இந்த ஜன்மம் எடுத்தோமே, என்ன பாபம் செய்தோம்!'' என்று அழுதார்கள். ரதத்தைப் பார்த்து, ''இந்தத் தேர் பாழடைந்து கிடக்கிறதே! இந்தத் தேரில் ராமனும் சீதையும் லக்ஷ்மணனும் உட்கார்ந்து சென்றார்களே!'' என்று கடை வீதி, ராஜ வீதி இவைகளின் இருபுறத்தினின்றும் பெண்கள் அழுத சப்தத்தைச் சுமந்திரன் கேட்டுக் கொண்டே தன் முகத்தைத் துணியால் மறைத்துக் கொண்டு சென்றான். தசரதன் அரண்மனைக்கு முன் தேரை நிறுத்திவிட்டு இறங்கினான்.

அங்கேயும் அரண்மனை வாயிலில் ஒரே ஜனக் கூட்டமாயிருந்தது. ''ராமனை வனத்தில் விட்டு விட்டு வரும் இவர் கௌசல்யைக்கு என்ன சொல்லப் போகிறார்? அவள் எப்படி உயிரை வைத்துக் கொண்டிருப்பாள்?'' என்றெல்லாம் பெண்கள் பேசிக் கொண்டிருந்தார்கள். இதைக் கேட்கக் கேட்கச் சுமந்திரன் துக்கம் அதிகரித்தவனாக மெள்ள அந்தப்புரத்துக்குள்ளே சென்றான்.

அங்கே குற்றுயிராகக் கிடந்த அரசனைப் பார்த்தான். ராமன் அரசனிடம் கூறும்படி சொல்லியிருந்ததையெல்லாம் பக்கத்தில் நின்று மெதுவாகச் சொன்னான். தசரதன் ஒன்றும் பேசவில்லை.

அப்போது கௌசல்யா தேவி துக்கம் தாங்காமல் தசரதனைப் பார்த்துக் கடுமையாகப் பேசினாள்:

''மகா பாக்கியவானே! உலகம் வியக்கும்படியான விரதத்தை ஒப்புக் கொண்ட என் குழந்தையைக் காட்டில் விட்டு விட்டுத் திரும்பி வந்த தங்களுடைய அமாத்தியர் இதோ நிற்கிறார். ஏன் அவரிடம் ஒன்றும் பேசாமல் இருக்கிறீர்? கைகேயிக்கு வரம் தந்தது அப்போது எளிதாகவும் சந்தோஷமாகவும் இருந்தது. இப்போது ஏன் வெட்கப்படுகிறீர்? வரத்தின் பயன் இதுவாகும் என்று உமக்குத் தெரியாதோ? நீர் என்னவோ உம்முடைய சத்தியத்தைக் காப்பாற்றிக் கொண்டீர். உமக்கு என்ன குறை? என் துக்கத்தில் யார் பங்கு எடுத்துக் கொள்ள முடியும்? அதை நான்தான் அனுபவிக்க வேண்டும். நீர் துக்கப்படுவதைப் பார்த்து எனக்குத் திருப்தி ஏற்பட முடியுமா? துக்கப்பட வேண்டியது முறையாயிற்றே என்று நீர் துக்கப்பட வேண்டியதில்லை. ஏன் பேசாமல் இருக்கிறீர்? இங்கே கைகேயி

இல்லை. பயப்பட வேண்டாம். ராமனைப் பற்றி அவனை வனத்தில் விட்டுத் திரும்பிய சுமந்திரரை விசாரித்துக் கேட்பீராக. பயப்பட வேண்டாம். இயற்கையை ஏன் வழியடைக்கிறீர்? கைகேயி இல்லை.''

துக்கத்தைத் தாங்க முடியாமல் புருஷனை இவ்வாறு குறைகூறிப் பேசினாள் கௌசல்யை.

கோபமும் துக்கமும் பதிபக்தியும் எல்லாம் ஒன்று சேர்ந்து அவள் உள்ளத்தை வேதனை செய்தன. அந்த வேகத்தைத் தாங்காமல் மூர்ச்சையடைந்தாள். இதைக் கண்டு உயிர் போய் விட்டதோ என்று அந்தப்புரம் முழுதும் பயந்தார்கள். அலங்கோலமாயிற்று.

புத்திர சோகத்தினால் கௌசல்யா தேவி தன்னுடைய புருஷனின் உடல் நிலையையாவது மன நிலையையாவது சரியாக உணரவில்லை. அவனுடைய துக்கத்தைக் குறைப்பதற்குப் பதில் அதிகமாக்கினாள். தசரதன் மூர்ச்சை தெளிந்த பிறகு, சுமந்திரனை விசாரித்தான். சுமந்திரனும் இராமன் சொல்லி அனுப்பியவாறு எல்லாருக்கும் சொல்ல வேண்டியதைச் சொல்லித் தன் கடமையைச் செய்து முடித்தான்.

கௌசல்யா தேவியைச் சுமந்திரன் பலவாறாகத் தேற்றிச் சமாதானப்படுத்தப் பார்த்தான். ''ராமன் இருக்குமிடத்தில் என்னைக் கொண்டு போய்ச் சேர்த்து விடுங்கள். சீதையைக் காட்டுக்கு அனுப்பி விட்டோமே! என்னால் துக்கம் பொறுக்க முடியவில்லை. தண்டகாரண்யத்தில் சீதையுடன் நானும் இருப்பேன்'' என்று கௌசல்யை அழுது கொண்டே யிருந்தாள்.

''தேவி! இந்த மனக் குழப்பத்தை அகற்றி விட்டுத் தைரியமாக இருக்க வேண்டும். அயோத்தியில் இருப்பதைக் காட்டிலும் வனத்தில் ராமன் மிக ஆனந்தமாகக் காலம் கழித்து வருகிறான். துக்கப்படவே இல்லை. லக்ஷ்மணனும் ராமனுக்குப் பணிவிடை செய்து கொண்டு தரும வாழ்க்கையின் பயனை அடைந்து வருகிறான். அவனுக்கு ஒரு குறையுமில்லை. சீதையோ அரண்மனையில் இருந்தது போலவே வனத்திலும் தன் பிராணனை ராமனிடத்தில் நாட்டிப் பயம், விசனம் ஒன்றுமில்லாமல் மிகச் சந்தோஷமாகவே இருக்கிறாள். பிறந்தது முதல் காட்டில் வளர்ந்தவளைப் போலவே விளையாட்டாகக் காலங் கழிக்கிறாள். அயோத்தியையில் உத்தியான வனத்தில் ராமனுடன் விநோதமாகக் காலம் கழிப்பது போல் வனத்திலும் சந்தோஷமாகவே இருக்



கிருள். உதய சந்திரனைப் போன்ற அவனுடைய முகத்தின் அழகு கொஞ்சமும் குறையவில்லை. குழந்தையைப் போல் கவலையாவது பயமாவது கொஞ்சமும் இல்லாமல் விளையாடிக் கொண்டிருக்கிருள். ராமன் பக்கத்தில் இருப்பதால் அவனுக்கு வருத்தம் என்பது அணுவளவும் இல்லை. செல்லும் வழியில் கிராமங்கள், ஊர்கள், ஆறுகள் மரம், செடி, புஷ்பம் இவைகளைப் பற்றி யெல்லாம் விசாரித்தவாறு லக்ஷ்மணனேடும், ராமனேடும் சம்பாஷித்துக் கொண்டு உல்லாசமாக நடந்து போகிருள். வனவாசம் அவளுக்கு ஒரு தோட்டத்தில் விளையாடுவது போல் இருக்கிறது. எழில் எள்ளளவும் குன்றவில்லை. நடப்பதினுல் அவள் பாதங்கள் மருதோன்றி இட்டுக் கொள்ளாமலேயே சிவந்து தாமரையைப் போல் பொலிவு அடைந்து வருகின்றன. வனத்தில் ஆனந்த நர்த்தனம் செய்வது போலவே நடக்கிருள். கால்களில் சலங்கைகள் இல்லை என்பதுதான் வித்தியாசம்.

நான் சொல்லுவது எல்லாம் உண்மை. நீங்கள் விசனப்பட வேண்டாம். அவர்கள் மூவரும் உலகத்துக்கொரு பாடமாகத் தருமத்தை நடத்தி வருகிருர்கள். சக்கரவர்த்தியின் பிரதிக்ஞையை நிறைவேற்றி வருகிருர்கள். பித்ரு வாக்கிய பரிபாலனம் செய்கிருர்கள். அவர்களுடைய தவம் உலகத்தில் பெரும் புகழுடன் என்றென்றும் நிற்கும். துக்கப்படுவதற்குக் காரணமில்லை.''

இவ்வாறெல்லாம் பல சொல்லித் தேற்றிப் பார்த்தான் சுமந்திரன். ஆனுலும் கௌசல்யை கொஞ்ச நேரம் சமாதானப்படுவாள். பிறகு, ''ஐயோ, ராமா!'' ''ஐயோ, குழந்தாய்!'' என்று கதறுவாள். காட்டில் ராமனை விட்டு விட்டு வந்த சுமந்திரனைப் பார்த்த பிறகுஅவள் துக்கம் அதிகரித்தது.

(தொடரும்)



# சிலையைத் தேடி..



ரவியும் நீலாவும் பாரதப் பிரஜைகளானாலும் வளர்ந்தது என்னவோ வேற்று நாட்டில். அவர்கள் அப்பா ரொம்பப் பெரிய உத்தியோகத்தில் இருந்தார். சீனாவில் உள்ள பாரத நாட்டுத் தூதரகத்தில் அவருக்குப் பொறுப்பான பதவி. ரவிக்குப் பத்து வயது; நீலாவுக்குப் பன்னிரண்டு வயது. ரவிக்கு ஆறு வயது ஆகும்போது அவர்கள் தாயார் இறந்துவிட்டாள். அதன் பிறகு தந்தை கோபாலனே அவர்களுக்குத் தாயாகவும் இருந்து ரொம்பச் செல்லமாக வளர்த்து வந்தார். குழந்தைகள் இருவரும் உங்களைப் போலவே படுசுட்டிகள். கெட்டிக்காரர்கள். அதற்கும் மேலே ரொம்பத் துணிச்சல் உள்ளவர்கள். தன் குழந்தைகளால் ஏதோ ஒரு மகத்தான செயல் நடக்கப் போகிறது என்று கோபாலனின் உள் மனம் சொல்லிக் கொண்டிருக்கும். ரவி, நீலாவினால் ஒரு மகத்தான செயல் நடைபெறத்தான் செய்தது. அது என்ன? அதைத்தானே நீங்கள் படிக்கப் போகிறீர்கள்.

கபிலவாஸ்து — இந்தப் பெயரைக் கேட்டதும், 'புத்தர் பிரான் அவதரித்த இடமல்லவா?' என்று நீங்கள் கேட்பது காதில் விழுகிறது. அதன் அருகிலே உலும்பினி என்றோர் வனம். சித்தார்த்தரின் தாயாரான மாயா தேவியார் இந்த வனத்தில் இருக்கும்போது தான் புத்தர் பிரான் அவதரித்தார். அந்தப் பிரதேசத்தில் ஒரு புராதனமான பௌத்த விஹாரம் இருக்கிறது. அதில் ஒரு கல்வெட்டு. அதைப் படித்துப் புரிந்து கொள்ள முடிந்தவர்களுக்கு ஹர்ஷவர்த்தனர் பொன்னாலான



கதை
வாண்டுமாமா
சித்திரம்
ரமணி..

புத்தர் சிலை ஒன்றைச் செய்து அந்த விஹாரத்துக்கு அளித்திருந்தார் என்ற உண்மை தெரியவரும். பசும் பொற்சிலை. கௌதம புத்தரின் உடைகள் கோமேதகக் கற்களாலும் வைரங்களாலும் இழைக்கப் பட்டிருந்தனவாம். அப்படியானால் அது எத்தனை விலை மதிப்புடையதாக இருக்க வேணும்? ஆனால் அத்தகைய அற்புதச் சிலை இன்று அங்கு இல்லை. பின் எங்கே? சீனாவில் எங்கோ இருப்பதாக இன்னொரு கல்வெட்டுச் செய்தி கூறியது.

நம் புராதனப் பொக்கிஷங்களை நம் நாட்டு உடைமையாக்கி மகிழ வேண்டும் என்ற ஆசை கொண்டவர் ஆராய்ச்சியாளரான ஹரிசரண் வர்மா அவர்கள். ஹர்ஷருடைய அருமைச் சிலையை மறுபடி அந்த விஹாரத்திலே வைத்துப் பார்க்க வேண்டும் என்று திட்டமிட்டார். அதைச் செயல்படுத்த சீனாவுக்குச் செல்லும் துணிவுள்ள ஓர் இளைஞனையும் தேடிப் பிடித்தார். ஹரிசரண் வர்மாவின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர் நம் கோபாலன். சிலையைத் தேடி வரும் இளைஞன் இந்திரபாலுக்கு எல்லா உதவிகளும் அளிக்க வேண்டும் என்று கோபாலனைக் கேட்டுக் கொண்டிருந்தார் ஹரிசரண் வர்மா. இந்திரபாலின் முயற்சிகள் சீன அரசாங்கத்தின் கண்களில் அவனை ஒரு வேவுகாரனாக்கியது. சீனாவில் அப்போது உள்நாட்டுப் போர். தேசியவாதிகளுக்கும் கம்யூனிஸ்ட்களுக்கும் இடையில். கம்யூனிஸ ஆதிக்கம் வலுவடையத் தேசியவாதிகள் ஒளிந்து மறைந்து விடுதலைப்போர் நடத்தி வந்தனர். சீன நாடெங்கும் ராணுவ ஆட்சியும், அடக்கு முறையும் தலைவிரித்தாடின. சீன அரசாங்கமுமே கூட அந்தச் சிலையின் இருப்பிடம் பற்றி அறிய ரகசியமாக முயன்று கொண்டிருந்தது.

சீன ரகசியப் போலீசாரால் வேட்டையாடப்பட்ட இந்திரபால் தப்பி ஓடி வருகிறான் மரணக் காயத்துடன். அவனை எதிர்பாராத விதமாகச் சந்திக்கிறார்கள், நம் ரவியும் நீலாவும். இனி மேலே படியுங்கள்.




இதுதானா பிரமாதம்?
நீ நினைப்பது போல அது சுலபமல்ல.
நம் தாய் நாட்டின் பெருமையைக் காக்கும் செய்தி அதில் உள்ளது. தேசிய சீனர்கள் நமக்கு உதவுவார்கள்.
தேசிய சீனர்களைத் தான் கம்யூனிஸ்டுகள் வேட்டையாடுகிறார்களே. அவர்களை எங்கே எப்படித் தேடுவது மாமா?
இந்த விலாசத்துக்குப் போனால், சுங் சிங் என்பவர் உதவுவார். பாரதத்தின் நண்பர் அவர்.
சீனாவில் சுங் சிங் யார் என்று எங்களுக்கு எப்படித் தெரியும்? ரகசியம் கை மாறிப் போனால்?
'கபிலவஸ்து கை மாறிப் போயிற்று' என்று சொல்லுங்கள். இதைக் கேட்டதும் யார் வியப்புடன் 'நன்றா பிடிக்க முடிந்ததா?' என்று கேட்கிறாரோ அவரே சுங் சிங்..
மாமா.. இந்த ஆபத்தான நிலையில் நீங்கள்....
என்னைப் பற்றிய கவலை வேண்டாம். நான் உங்கள் அப்பாவிடம் தான் போகிறேன். இந்த நிலையில் எனக்கு உதவக் கூடியவர் அவர் தான்..
எங்களைக் காணாமல் அப்பா கவலைப்படுவாரே?
அவர் கவலையைப் போக்குவது என் கடமை. நீங்கள் விரைந்து செயல்படுங்கள். உங்கள் தந்தை பெருமைப்படுவார்.
பொம்மை பத்திரம். அதை யார் கையிலும் சிக்க விடாதீர்கள்..
என்னைத் தேடி வருகிறார்கள் கம்யூனிஸ்டுகள். எனக்கு நினைவு தப்பு முன் நான் கோபாலின் பாதுகாப்பில் போய் விட வேண்டும்.


இந்திரபாலின் வேண்டுகோளை நிறைவேற்றக் கிளம்பு கிறார்கள் துணிச்சல் மிக்க நம் குழந்தைகள்...
இந்த வண்டியில் இடம் கிடைத்தால் சீக்கிரம் போகலாம்.
இந்தக் கழுதை வண்டியிலா? இதை விட வேகமாக நம்மால் நடக்க முடியும். வா அத்தா...
நகரத்தை வெளியே வந்து விட்டார்கள். களைப்பும் கால் வலியும் வேகமாகச் செயல் பட வேறு வழியைப் பற்றிச் சிந்திக்கத் தூண்டியது. ஒரு குடிசை வாசலில் ஒரு சைக்கிள்.....
இந்தச் சைக்கிள் மட்டும் கிடைக்குமானால் இன்னும் வேகமாகப் போகலாமே.
அத்தா, ஆபத்துக்குத் தப்பில்லை வா... ஏறு சைக்கிளில்.
சைக்கிளில் ஏறிக் கிளம்பும் போது வண்டிக்குரியவன் பார்த்து விடுகிறான்.
ஏய்.. ஏய்! திருட்டுப் பசங்களா, இது என்ன வேலை?
ரவி, சைக்கிள் ரேஸில் 'எக்ஸ்பர்ட்' ஆயிற்றே. அந்த அபாயத்தினால் எத்தனை தூரம் ஓடி வர முடியும்....
ஆனால் அவன் ஊர்க்காவல் படையிடம் போய் முறையிட்டுக் கொண்டான்.....
தொடரும்...

# அன்பு மொழிகள்

## மு. வரதராசன்



காந்தியடிகள் உலகச் சான்றோர்களில் ஒருவர். அவர் இந்தியாவின் பழம் பண்பாட்டின் திருவுருவமாக விளங்கியவர். அவர் புதிதாக ஒன்றும் கூறவில்லை; முன்னோர்கள் சொன்ன அறவுரைகளையே புது முறையில் கூறினார். புதிய நெறி எதையும் வாழ்வில் கடைப்பிடிக்கவில்லை. பழைய நல்வழியையே புதிய நோக்கத்துக்காகக் கடைப்பிடித்து வாழ்ந்து காட்டினார். மகாவீரர், புத்தர், முனிவர்கள், திருவள்ளுவர் முதலானவர்கள் எடுத்துக் கூறிய அறவுரைகளையே காந்தியடிகள் விளக்கிக் கூறினார். அவற்றுள் ஒன்று மதுவிலக்கு.

பல இடங்களில் தீமையை விலக்குமாறு கூறும் திருவள்ளுவர் பாவம் என்றும், முத்தி நெறிக்கு இடையூறு என்றும் கூறி அறநெறியை வற்புறுத்துவது உண்டு. ஆனால் கள்ளுண்ணாமை பற்றிக் கூறும்போது, பத்துக் குறளிலும் அவ்வாறு மறுமை பற்றியோ, முத்தி பற்றியோ குறிப்பிடவில்லை. இந்த உலகத்தில் நன்றாக மகிழ்ச்சியாக வாழ்வதற்கே குடிப் பழக்கம் இடையூறாகுமே என்று எடுத்துரைக்கிறார். காந்தியடிகளும் குடும்ப நன்மையும் சமுதாய நன்மையும் கருதி மது கூடாது என்று அழுத்தம் திருத்தமாக எடுத்துக் கூறினார்.


திருவள்ளுவர் கூறும் காரணங்கள் வருமாறு: ''குடிகாரர் மதிப்பை இழந்து விடுவார்கள்; சான்றோர்களின் அன்பை இழந்து விடுவார்கள். பெற்ற தாயும் வெறுப்பது குடிப் பழக்கம். வாழ்க்கைக்குத் தேவையான நாணம் என்னும் பண்பு போய்விடும். வாழ்வுக்குத் துணையாக அமைந்த அறிவை இழந்து மயங்கிக் கிடப்பதற்காகப் பணம் கொடுத்துக் கள் வாங்கிக் குடிக்க வேண்டுமா? கள் குடிப்பது நஞ்சு குடிப்பது போன்றது; நஞ்சு குடிப்பவர்கள் சாகிறார்கள்; கள் குடிப்பவர்கள் அந்த நேரத்தில் அதே நிலை அடைகிறார்கள். குடிகாரர்களின் இரகசியங்கள் எளிதில் கண்டுபிடிக்கப்படும். அவர்கள் ஊராரால் இகழப்படுவார்கள். குடிப்பதில்லை என்று பொய் சொல்லிப் பயன் இல்லை; குடித்த நிலையில் மனத்தில் ஒளித்தவை யெல்லாம் வெளிப்பட்டு விடும். குடித்தவனிடம் காரணம் காட்டி விளக்குவது, நீரில் மூழ்கியவனைத் தீவட்டி எடுத்துத் தேடுவது போன்றது. குடிக்காத நேரத்தில் குடித்து மயங்கிய மற்றொருவனைக் காணும் போது குடியின் தீமையை உணர்ந்து கொள்ள முடியாதா?''

இவ்வாறு திருக்குறளில் அவர் கூறும் கருத்துக்கள் தெளிவாக நேராக அமைந்துள்ளவை. இந்த உலகத்தில் நன்றாக வாழ வேண்டும் என்ற ஆசை பற்றியாவது, மனிதன் குடிப்பழக்கத்தை விட்டு வாழக்கூடாதா என்ற இரக்கத்தோடு திருவள்ளுவர் கூறுவது போல் உள்ளது. ஒரு குறளில், ''கள் குடிக்க வேண்டா. குடிப்பதானால் குடிக்கலாம்; சான்றோர்கள் நல்லெண்ணம்பற்றிக் கவலைப்படாதவர்கள் குடிக்கலாம்'' என்றும் கூறுகிறார்.

**உண்ணற்க கள்ளை; உணில் உண்க சான்றோரான்**
**எண்ணப்பட வேண்டா தார்**

காந்தியடிகளும் இப்படிப்பட்ட இரக்க உணர்ச்சியோடு மதுவிலக்கைப் பற்றிப் பல கருத்துரைகளை எழுதியுள்ளார்.

''குடிகாரன் குடித்து மயங்கிய நிலையில் மனைவி, தாய், மகள் என்ற வேறுபாடுகளையும்



உணர முடியாதவனாகி விடுகிறான். மயங்கிய போது பல தவறுகளைச் செய்துவிட்டு, தெளிவடைந்தபோது வெட்கப்படுகிறான். தொழிலாளர்கள் குடி என்னும் பேய்க்கு ஆட்பட்டபோது என்ன நிலைமைக்குத் தாழ்ந்து விடுகிறார்கள் என்பது அவர்களோடு பழக்கம் உள்ளவர்களுக்குத் தெரியும். குடிப் பழக்கம் உள்ள வக்கீல்களும் சாக்கடையில் புரளும் நிலைமை அடைகிறார்கள்''

(யங் இந்தியா, 4–2–1926)

''மலேரியா முதலான நோய்களை விடக் குடிப்பழக்கம் பொல்லாதது. அந்த நோய்கள் உடலுக்கு மட்டும் தீமையானவை. மதுவோ உடல், உள்ளம் இரண்டின் உரத்தையும் உறிஞ்சி விடுகிறது.''

(யங் இந்தியா 3–3–1927)

''நம்மவர்களில் ஆயிரக்கணக்கானவர்கள் குடிகாரராக இருப்பதை விட, இந்திய நாடு பொருளாதாரம் அற்றுப் போவதே மேல். மதுவிலக்கால் நேரும் இழப்பினால் இந்தியாவில் கல்வி ஏற்பாட்டுக்கு இடம் இல்லாமற் போகுமானாலும் அதுவே மேல் என்று கொள்வேன்.'' (யங் இந்தியா 15–9–1927)

''மது, அந்தப் பழக்கம் உள்ளவர்களின் நல்ல ஒழுக்க வாழ்வைச் சீர்குலைத்து விடுகிறது. அமைதியாகவும் ஒழுங்காகவும் இருந்த குடும்பங்களுக்கு மதுப் பழக்கம் எவ்வளவு பெருங் கேட்டைச் செய்கிறது என்பது, குடிகாரரைக் கணவராய்ப் பெற்றுள்ள பெண்களுக்கே தெரியும்.''

(யங் இந்தியா 10–4–1930)

''பொதுத் தொண்டு செய்வோர்களில் குடிப் பழக்கத்தின் தீமையை உணரும் கொடிய அனுபவம் எண்ணளவுக்குப் பலருக்கு இருக்காது; சுருங்கச் சொன்னால், மது ஒருவனுடைய உடல் நிலை, ஒழுக்க நிலை, அறிவு நிலை, பொருளாதார நிலை எல்லாவற்றையும் கெடுத்துப் பாழாக்கி விடுகிறது.''

(ஆரோக்கிய வழி)

இவ்வாறு காந்தியடிகள் கூறும் அறிவுரைகள் இரக்கம் மிகுந்த நெஞ்சிலிருந்து பிறந்தவைகளாக உள்ளன. எப்படியாவது ஏழைக் குடும்பங்களைக் காப்பாற்ற வேண்டும், நாட்டைச் சீர்ப்படுத்த வேண்டும் என்ற ஆசையால் சொன்ன அறிவுரைகளாக உள்ளன.

மதுவிலக்கு வருவதற்குமுன் கிராமங்களிலும் தொழிலாளர் பகுதிகளிலும் அனுபவம் உள்ளவர்கள் கண்ட காட்சிகளை நினைவூட்டிக் கொண்டால், மதுவின் தீமை தெளிவாகப் புலப்படும். உழைத்துப் பாடுபட்டவர்கள், கிடைத்த கூலியை மதுக் கடைகளிலேயே செலவிட்டார்கள். வீட்டுக்குப் பணம் போய்ச் சேர்வது குறைவு. அந்த நேரத்தில் தோன்றும் குடியாசைக்கு அடிமையாகி, அப்போது அப்போதே குடிக்குச் செலவழித்தார்கள். மனைவி மக்கள் மேல் அன்பு இருந்த போதிலும், குடியாசையை வெல்ல முடியாமல் வருந்தினார்கள். மனைவி மக்கள் வயிறாரக் கஞ்சி குடிப்பதில்லை என்று தெரிந்த போதிலும், அந்தக் கவலையையும் வருத்தத்தையும் மறப்பதற்குக் குடித்தார்கள். கடன் வாங்கியும் நகை முதலியவற்றை விற்றும் குடித்தார்கள். கடன்காரரின் தொல்லை ஏற்பட்டபோது, கடன் தொல்லையை மறப்பதற்கும் குடித்தார்கள். ஊராரும் சுற்றத்தாரும் நண்பர்களும் பழித்தபோது அந்தப் பழியை மறப்பதற்கும் குடித்தார்கள். வீட்டில் உள்ளவர்கள் நோய்வாய்ப்பட்டபோது அந்தத் துன்பத்தை மறப்பதற்கும் குடித்தார்கள். குடிப் பழக்கத்தால் தங்கள் உடல் உரம் கெட்டுச் சோர்ந்த போதும், நோயுற்ற போதும், அவற்றை மறப்பதற்கும் குடித்தார்கள். சரியாகத் தொழில் செய்ய முடியாமல் தவறுகள் நேர்ந்தபோதும், அந்தத் தவறுகளின் விளைவுகளை மறப்பதற்கும் குடித்தார்கள். அவ்வாறு வாழ்க்கையே குற்றமும் குடியும், குடியும் குற்றமுமாக மாறி மாறித் தொடர்ந்து வரும் வட்டங்களாக இருந்து வந்தது.

மதுவிலக்கு சட்டமாக்கப்பட்ட பிறகும், குடிப் பழக்கம் மறைந்து விட்டது என்று சொல்வதற்கில்லை. ஆனால் குடிப்பவர்கள் பயந்து குடிக்கிறார்கள்; சாராயம் காய்ச்சுபவர்கள் அஞ்சி அஞ்சிச் செய்கிறார்கள். குடிக்கும் ஆசை உள்ளவர்கள் பலர்; அவர்களில் சட்டத்துக்கு அஞ்சிக் குற்றம் செய்யத் தயங்குகிறவர்கள் பலர் உண்டு. அவர்கள் அதிலிருந்து தப்பித்துக் கொண்டு குடிப் பழக்கத்தை வென்று விட்டார்கள். சட்டத்தை ஏமாற்றிக் குற்றம் செய்யும் துணிவு உள்ள சிலர் உண்டு. அவர்கள் மட்டுமே இப்போது காய்ச்சுகிறார்கள், குடிக்கிறார்கள். அவர்களின் எண்ணிக்கை குறைவே. பண வசதியும் வாய்ப்பும் உள்ளவர்கள் வெளியூர்களுக்குச் சென்றோ, மூலைமுடுக்குகளில் பதுங்கியோ குடிக்கிறார்கள். அவர்களின் நிலைமை வேறு. அவர்களின் செயலால் குடும்பங்கள் அவ்வளவாகக் கெடுவதில்லை. அவர்களுக்கும் சொத்து உள்ளது; அவர்களின் மனைவி மக்களுக்கும் தனித் தனியே சொத்து உண்டு. வீடும் நிலமும் பாங்கிக் கணக்கும் இல்லாத ஏழைக் குடும்பங்களை மட்டும் எண்ணிப் பார்த்தால், மதுவிலக்கு அவர்களை எவ்வளவோ காப்பாற்றியது என்றே சொல்ல வேண்டும். குடிப் பழக்கத்துக்கு ஆளாகாத ஏழைக் குடும்பங்களில், பெண்கள் சாயம் போன பருத்திப் புடவைகளையாவது இன்று உடுத்த முடிகிறது. வீடுகளில் வேளைக்கு உணவு கிடைக்கிறது. உணவுப் பொருளை வாங்க முடிகிறது. இட்டிலி தோசை முதலியவை செய்ய முடி

## 16. ராஜாஜியும் காந்திஜியும்

**1919** ஏப்ரல் 6ந் தேதி பஞ்சாப் படுகொலையைக் கண்டித்துத் தேசம் முழுவதும் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. அன்றே இந்தியாவின் அரசியல் தலைமையைக் காந்திஜி ஏற்றார் என்று சொல்லலாம். சென்னையில் மகாத்மாவின் தலைமைக்கு ஆதரவு தேடியவர்களில் முதன்மையானவர் ராஜாஜி. ஆனால் அதுவரையில் அவர் காந்தியைச் சந்தித்ததில்லை. காந்திஜியும் இவரைப் பற்றிக் கேள்விப்பட்டதில்லை.

இச்சமயத்தில்தான் காந்திஜி ஸ்ரீ கஸ்தூரிரங்க அய்யங்கார் அழைப்பின்பேரில் சென்னைக்கு வந்திருந்தார். ராஜாஜியின் விருந்தினராக அவர் வீட்டிலேயே தங்கினார். ஆயினும் அந்த வீட்டுக்காரர் யார் என்பது அவருக்குத் தெரியாது. ராஜாஜியும் பின்னணியிலேயே இருந்துகொண்டு வேண்டிய உதவிகளைச் செய்து வந்தார். ராஜாஜியை முதன் முதலில் இன்னார் என்று கண்டுபிடித்தவர் காந்திஜியின் காரியதரிசியான ஸ்ரீ மகாதேவ தேசாய்தான். அவர் மகாத்மாவிடம், 'இந்த வீட்டின் சொந்தக்காரர் யார் என்பதை நீங்கள் இன்னும் தெரிந்து கொள்ளவில்லையே? அவர் பெயர் ராஜ கோபாலாச்சாரியார். ஸி. ஆர். என்பது சுருக்கப் பெயர். ஒத்துழையாமை இயக்கத்துக்காக வக்கீல் வேலையை விட்டவர். (சென்னை மாகாணத்தில் இத் தியாகம் செய்த முதல் வக்கீல் இவர்தான்) சிறந்த அறிவாளியாகத் தோன்றுகிறார். நாங்கள் அவரை அவசியம் தெரிந்து கொள்ள வேண்டும்'' என்றார். பிற்பாடுதான் காந்திஜி ராஜாஜியைக் கூப்பிட்டு அவருடன் பேசிப் பழக்கம் செய்து கொண்டார்.



## முதல் சந்திப்பு

காந்திஜியின் சத்தியாக்கிரகத் திட்டத்தைப் பற்றிக் கேட்கப்பட்ட சில சந்தேகங்களுக்கு ராஜாஜி அளித்த விளக்கத்தைக் கேட்ட சேலம் விஜயராகவாச்சாரியார் ''மகாத்மாஜி சத்தியாக்கிரகத் தத்துவங்களைப் பற்றி ஏதாவது புத்தகம் எழுதியிருக்கிறீர்களா? ஸி. ஆர். அதைப் படித்திருப்பார் போல் தோன்றுகிறதே!'' என்றார்.

காந்திஜி சிரித்துக் கொண்டே, ''நான் புத்தகம் எதுவும் எழுதவில்லை. ஆனால் உங்கள் ஸி.ஆர். எப்படியோ என்னுடைய வழிகளையும் தத்துவங்களையும் நன்றாகத் தெரிந்து கொண்டிருக்கிறார். அது எனக்கே வியப்பாக இருக்கிறது'' என்றார். -''நஜன்''

---

கிறது. காப்பியும் தேநீரும் வீட்டில் வைத்துக் குடிக்க முடிகிறது. சிறுவர் சிறுமியர்க்கு உடுக்க உடை கிடைக்கிறது. மதுவிலக்கு வரும் முன் இருந்த நிலைமை இதற்கு மாறானது. பல குடும்பங்களில் பெண்களின் கையில் காசு இருந்ததில்லை. வீடுகளில் பண்டங்கள் இருந்ததில்லை. சிறுவர் சிறுமியருக்கு உடை இருந்ததில்லை. போதுமான உணவு கிடைத்ததில்லை. நாள் தவறாமல் அடியும் உதையும் கிடைத்து வந்தன. கண்ணீரும் கம்பலையும் இருந்து வந்தன. ஆகையால், இன்று சிலர் சாராயம் காய்ச்சுகிறார்களே, சிலர் திருட்டுத்தனமாய்க் குடிக்கிறார்களே என்று குறை கூறுவதில் பயன் இல்லை. அவர்கள் குடியாசை உள்ளவர்கள் என்பது மட்டும் அல்ல; சட்டத்துக்கு அடங்காதவர்களும் ஆவார்கள். இரு வகைக் குற்றம் உள்ள அவர்களைத் திருத்துவது அருமைதான்; சட்டம் இன்னும் இறுகியதாக அமைந்தால், சட்டத்தை அமுல் செய்வோர் இன்னும் கடுமையும் உண்மையும் உள்ளவர்களாக அமைந்தால், அவர்களிலும் முக்கால்வாசிப் பேரைத் திருத்த முடியும். மதுவிலக்கு, அந்த இரு குற்ற ஆட்களை இன்று உள்ள நிலையில் திருத்த முடியாவிட்டாலும், ஒரு குற்ற ஆட்களையாவது திருத்த முடிந்ததே என்று மகிழ வேண்டும்.

நூற்றுக்கு நூறு பேர் குடிக்காமல் எல்லோரையும் திருத்திவிட முடியும் என்று காந்தியடிகளும் சொல்லவில்லை. கடைசி வரையில் ஒருசிலர் — துணிந்து குற்றம் செய்யும் மனம் உள்ள சிலர் — சாராயம் காய்ச்சும் நிலைமை இருக்கும். சட்டத்தால் திருட்டுக் குற்றத்தை அடியோடு ஒழித்துவிட முடியாது; ஆனால் அதற்காகத் திருடர்களைத் தண்டிப்பதை விட்டு விட்டோமா, திருடர்களுக்குச் சட்ட உரிமை (லைசென்ஸ்) தருகிறோமா என்று காந்தியடிகள் கேட்டார். விபசாரக் குற்றத்தை அடியோடு ஒழிக்க முடியாத காரணத்தால், விபசார விடுதிகளுக்குக் கட்டணம் ஏற்படுத்தி லைசென்ஸ் தருகிறோமா என்று கேட்டார். மது குடிப்பதற்கு என்று கடைகள் ஏற்படுத்தி, அவற்றுக்குச் சட்டத்தின் பாதுகாப்பும் தருவது கூடாது என்றார். நோய்வாய்ப்பட்ட குழந்தையின் எதிரே இனிப்புப் பொட்டலத்தைப் பிரித்து வைத்துவிட்டு அதைத் தின்னாதே என்று சொல்வதில் பயனில்லை. லைசென்ஸ் பெற்ற மதுக் கடைகளை ஏற்படுத்திவைத்துவிட்டு, ஏழைக் குடும்பங்களைக் காப்பாற்ற விரும்புவது அது போன்றதே என்றார்.

காந்தியடிகள் மதுவிலக்கைப் பற்றி எழுதிய போதெல்லாம் தொழிலாளர் குடும்பங்களும் கிராமத்து உழவர் குடும்பங்களுமே அவர் மனக் கண் முன் நின்றன. (ஹரிஜன் இதழ், 14-8-1937). அந்தக் குடும்பங்களைக் காப்பாற்றுவதே, உண்மையாக நாட்டை முன்னேற்றுவது என்று அவர் நம்பினார். குடியாசை உள்ளவர்களின் மனங்களைக் கவர்ந்து, அவர்கள் உள்ளே நுழைவதற்கு லைசென்ஸ் பெற்ற மதுக் குகைகள் இடம் தரும் வரையில், சமுதாயப் பணி செய்கிறவர்கள் நன்றாகத் தொண்டு செய்ய வழி இல்லை என்பது தம் கருத்து என்றார் (ஹரிஜன் இதழ் 17-6-1939). சமுதாயப் பணியில் அவரைவிட அநுபவம் மிகுந்தவர்கள் வேறு யார் இருக்கிறார்கள்? ஆகவே, மதுவிலக்கைப் பற்றி அவர் சொன்னவை, அவருடைய தவ வாழ்க்கையை ஒட்டிய கடுமையான விதிகள் அல்ல; ஏழைகளின் தொண்டில் அவருக்கு இருந்த அநுபவத்தால் பிறந்த அன்பு மொழிகளே ஆகும்.





# பக்கத்து வீட்டுப் பிரமுகர்

[கிருபானந்தவாரியார் அவர்கள் சென்னைக்கு வரும்போது சிந்தாதிரிப்பேட்டையிலுள்ள அவர் இல்லத்தில் தங்குகிறார். அந்த இல்லத்தில் பல குடித்தனங்கள். அதே இல்லத்தில் ஒரு பகுதியில் வசிக்கும் த. சுகானந்தம் தம் பக்கத்து இடத்துவாசியான வாரியார் அவர்களை நெருங்கிக் கவனிக்கும் வாய்ப்புப் பெற்றவர்.]

நடுங்க வைக்கிற குளிர் காலமாகத்தான் இருக்கட்டுமே! வாரியார் சுவாமிகள் அதிகாலையில் எழுந்து ஸ்நானத்தை முடித்துக் கொள்ளக் கிளம்பி விடுவார். அப்புறம் நித்திய அநுஷ்டானங்கள். அதற்கு மேல் தான் மற்ற வேலைகள். ஸ்நானம் செய்யாமல் அவர் ஒரு வாய்த் தண்ணீர்கூட அருந்த மாட்டார். இமயமலைப் பகுதிகளில் யாத்திரை போகும் காலத்திலும் சரி, இதே சிந்தாதிரிப் பேட்டையில் தங்கியிருந்தாலும் சரி, இந்த வழக்கத்தை அவர் தளர்த்துவது இல்லை.

ஆகார விஷயங்களிலும் இவர் எளிய முறையைத்தான் கையாளுகிறார். இரவு வேளைகளில் அநேகமாகக் கஞ்சிதான். தித்திப்பு இவருக்கு அவ்வளவாகப் பிடிக்காது. 'அரச விருந்தாக இருந்தாலும் அங்கேயும் ஒரு பிடி குறைத்துத்தான் சாப்பிட வேண்டும்' என்ற கொள்கையிலிருந்து இதுவரையில் நழுவாதவர். இதனால் இவருக்கு அஜீர்ணம் என்றால் என்னவென்று இதுவரையில் தெரியாது. அஜீர்ணம் என்னவென்று தெரியாததால், இவருக்கு மருந்து சாப்பிட வேண்டிய அவசியமும் ஏற்பட்டதில்லை. அஜீர்ணம்தானே எல்லா நோய்களுக்கும் ஆரம்ப காரணம்.

மாதத்தில் முப்பது நாட்களிலும் இவருக்கு எங்காவது சொற்பொழிவு நிகழ்ச்சிகள் இருந்து கொண்டேயிருக்கும். சென்னையில் நிகழ்ச்சிகள் இருந்தால்தான் இங்கு வந்து தங்குவார். வேலை முடிந்தவுடன் அடுத்த ஊருக்குக் கிளம்பி விடுவார்.

இவர் சென்னையில் தங்கியிருக்கும் நாட்களில் வீடு கலகலவென்றிருக்கும். பல அன்பர்கள், நண்பர்கள், எல்லோருமே வந்து விடுவார்கள். ஒவ்வொருவருடனும் புன்சிரிப்புடன் பேசி, அவர்கள் க்ஷேம லாபம் விசாரித்து, விபூதிப் பிரசாதம் கொடுத்துப் பிறகு விடை கொடுத்து அனுப்புவார். வந்து அமர்பவர்களுக்குத் திரும்பிப்போக வேலையில் மனசு வராது.

வாரியார் சுவாமிகள் திரைப் படத்தில் தோன்றிய சம்பவம் ஒரு சுவாரசியமான கதை. முருகன் இப்படி ஒரு பணியும் செய்ய வைப்பான் என்று இவர் கனவிலும் நினைத்தவரில்லை.

ஒரு சமயம் திரைப்படத் தயாரிப்பாளர் தேவர் அவர்களை இவர் சந்திக்கச் சென்றிருந்தார். திருப்பராய்த் துறையில் உள்ள ராமகிருஷ்ண குடில் நிதி வளர்ச்சிக்காக சொற்பொழிவு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யத் தேவரின் செல்வாக்குத் தேவையாக இருந்தது. இது பற்றிப் பேசத்தான் வாரியார் சுவாமி அங்கே போனார்.

தேவர், இவரை வரவேற்று அமரச் செய்து இவர் பேச ஆரம்பிக்குமுன்பே, 'துணைவன்' படத்துக்கான கதையை உணர்ச்சி பொங்கச் சொல்லி முடித்தார். தொடர்ந்து அந்தப் படத்தில் வாரியார் பங்கெடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் வேண்டினார். இவருக்கு என்ன பதில் சொல்



கிருபானந்தவாரியார் – சுகானந்தம்

வது என்று தெரியவில்லை: மறுக்கவும் தயக்கம். ராமகிருஷ்ண குடில் விஷயமாக வந்திருந்த அவர், யோசிக்க அவகாசம் கிடைக்கட்டும் என்ற நினைப்பில் ''அதற்கென்ன பார்க்கலாம்'' என்று பதிலளித்தார். தாம் வந்த விஷயத்தையும் சொல்லி விட்டுக் கிளம்பினார். மறு நாளே, முதல் நாள் நிகழ்ச்சியை மறந்து விட்டு வெளியூருக்குக் கிளம்பி விட்டார்.

ஆனால் இரண்டொரு தினங்களில் 'துணைவன்' படத்துக்கான விளம்பரங்கள் பத்திரிகைகளில் வெளியானபோது அவைகளில் வாரியார் சுவாமி பெயரும் இருந்தது. அவர் கவனத்துக்கும் இந்த விளம்பரங்கள் கொண்டு வரப்பட்டன.

வாரியார் சுவாமிக்கு இந்தத் துறையில் லயிப்பு விழவில்லை. தேவருக்கு இது பற்றித் தகவல் கொடுத்தார்.

தேவரும் ஒரு முருக பக்தராயிற்றே! வாரியார் சுவாமி திரைப்படத்துக்குச் சென்று நடிக்க வேண்டி வராமல் கவனித்துக் கொள்வதாகவும், அவர் எங்கேயாவது பொது இடத்தில் பக்திச் சொற்பொழிவு ஆற்றும்போது சில நூறு அடிகள் படம் பிடித்துக் கொள்வதாகவும் சொல்லிச் சம்மதமும் பெற்று விட்டார். ஆள்வார்ப்பேட்டையிலுள்ள வீனஸ் காலனியில் சொற்பொழிவு நடக்கும்போது படப் பிடிப்பை வைத்துக் கொள்ளவும் ஏற்பாடாயிற்று.

ஆனால் ஒரு பொது நிகழ்ச்சி நடுவே படப் பிடிப்பு வைத்துக் கொள்வதில் பல சிரமங்கள் இருந்தன. அதே போன்ற ஒரு நிகழ்ச்சியை ஸ்டுடியோவில் ஏற்பாடு செய்கிறேன் என்று சொல்லி விட்டார் தேவர். ஸ்டுடியோ செட்டில்தான் வாரியார் சுவாமி பிரசங்கம் செய்ய வேண்டியதாயிற்று.

பிறகு பொள்ளாச்சியில் சொற்பொழிவுகள் நிகழ்த்த இவர் போய்ச் சேர்ந்தார். அங்கே மீண்டும் தேவர் ஆஜரானார். பழனிக் கோயிலில் ஒரு காட்சியைப் படமாக்கிக் கொள்ள வேண்டியிருப்பதாகவும் வாரியார் சுவாமி வந்தருள வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். பழனியாண்டவன் சந்நிதிக்கு ஒரு பக்தன் அழைக்கும்போது அதை மறுக்க இவருக்கு மனம் வருமா?

துணைவன் படம் வெளிவந்தது. வாரியார் சுவாமிக்குத் தினம் கட்டுக் கட்டாகத் தபால்கள் வரத் தொடங்கின. ஆஸ்திகப் பெருமக்களுக்கு ஒரே பரவசம். 'முருகன் என்னை இப்படியும் பயன்படுத்திக் கொண்டான் போலும்! குறும்புக்கார முருகனுக்கு இதுவும் ஒரு விளையாட்டா?' என்று மெய் சிலிர்க்கிறார்.

பத்திரிகைகளைத் தவறாது படிப்பார். அன்றாட உலக நிகழ்ச்சிகளை நன்கு கவனிப்பார். சந்தர்ப்பம் கிடைத்தால் அவைகளை நாசூக்காகவும் சுவைபடவும் சொற்பொழிவுகளில் நுழைத்து விடுவார். சில விஷயங்களைப் பாதியில் கேள்விக்குறியுடன் நிறுத்தியே சுவை கூட்டுவார்.

பதினைந்து வருடங்களுக்கு முன் காசி யாத்திரை போய்த் திரும்பியபோது மனத்தில் ஒரு சங்கல்பம் செய்து கொண்டார். அதற்கு முன் தாம் வருவாயில் ஒரு பகுதியைத் தேவாலயத் திருப்பணிகளுக்கு அர்ப்பணித்து வந்தவர் இனிமேல் தம் வருவாய் முழுவதையும் அத்திருப்பணிகள்பால் திருப்பி விட ஏற்பாடு செய்தார். அறப்பணிகளுடன் அறிவுப் பணியிலும் தம்மை ஐக்கியப்படுத்திக்கொண்டார். ஆண்டவர் கோயில்களைப் புதுப்பித்தார். அறிவை வளர்க்க உயர் நிலைப் பள்ளிகளைத் தோற்றுவித்தார்.

தெய்வாபிமானத்துக்கு இணையாக மனிதாபிமானமும் இவர் உள்ளத்தில் பெருக்கெடுத்தோடும்.

வெளியூரில் ஒரு சந்தர்ப்பம். ஒரு முதியவர் வாரியார் சுவாமிகளை அணுகினார். தம் குடும்பம் மிகுந்த நலிந்த நிலையில் இருப்பதாகவும் தமக்குத் தெரிந்த ஒரே தொழில் பிடில் வாசிப்பதுதானென்றும் அந்த ஊரில் வாரியார் பக்திச் சொற்பொழிவுகள் நிகழ்த்தும்போது தமக்கும் பக்க வாத்தியக் கோஷ்டியில் ஒரு வாய்ப்புக் கொடுத்துப் பண உதவி செய்யுமாறும் வேண்டினார்.

வாரியார் சுவாமிக்கு இளகிய மனசு. அவரைப் பிடில் வாசிக்கச் சொல்லிக் கேட்டார். வாசிப்பு ரொம்பச் சுமாராகத்தான் இருந்தது. ஆனாலும் அன்று மாலைச் சொற்பொழிவின்போது அந்தப் பிடில் முதியவருக்கு ஒரு வாய்ப்புக் கொடுத்தார் மேடையில். அவர் வாசிப்பைப் பொதுமக்கள் நையாண்டி செய்யாமல் இருக்க வேண்டுமே என்ற நோக்கத்தில் அன்றையச் சொற்பொழிவில் தாம் பாட வேண்டிய பல பாடல்களை ஒதுக்கி விட்டார். முதியவருக்குச் சன்மானமும் வழங்கப்பட்டது. வாரியார் சுவாமி முறைப்படி இசையும், வீணையும் பயின்றவர் என்று பலருக்குத் தெரியாது.

வயலூரில் ஆலயத் திருப்பணி செய்து முடித்தார். அந்தச் செய்தி பத்திரிகைகளில் வெளியாயிற்று. ஒரே ஒரு பத்திரிகையில் வயலூர் என்பதற்குப் பதிலாக வடலூர் என்று அச்சாகி யிருந்தது.

இந்தத் தவறுதல் வாரியார் சுவாமியின் கவனத்துக்கு வந்தது. ''சரி சரி!...இதிலே முருகன் கட்டளை மறைந்திருக்கிறது. வடலூரிலும் தெய்வத் திருப்பணி செய் என்ற ஆக்ஞை பிறப்பித்திருக்கிறான்'' என்று சொல்லி வடலூர்த் திருப்பணியில் இறங்கினார். தனிமனிதராக நின்று மூன்றரைலட்ச ரூபாய் வரை திரட்டி அந்தத் தொண்டையும் நிறைவேற்றினார்.

சொற்பொழிவுகளின் இடையே முன்னால் இருக்கும் சிறுவர்களைக் கேள்வி கேட்டுப் பதில் வாங்குவதில் இவருக்கு ஒரு மகிழ்ச்சி.

இவர் நகைச்சுவைக்கு ஓர் உதாரணம்:

'இந்தக் காலத்தில் பெயருக்குப் பின் 'ஜி' யைச் சேர்ப்பது மரியாதை. காந்தியை காந்திஜி என்கிறோம். நேருவை நேருஜி என்கிறோம். அதேபோல் வாழ்க்கை என்னும் நாடகத்துக்குத் தலைவரான சிவபெருமானை சிவாஜி என்று அழைக்கலாம் அல்லவா?'

அவையில் கலகலப்பு அடங்க வெகு நேரமாகும்தானே?

பள்ளிக்கூடத்தில் நுழைந்து இவர் கல்வி பயின்றதில்லை. ஆனால் இன்று வாரியார் சுவாமி ஒரு பல்கலைக் கழகமாகவே விளங்குகிறார். பேட்டி: **கோமதி சுவாமிநாதன்**

ஸார் வீட்டிலே உட்கார்ந்து பாடம் படிச்சுக்கிட்டிருந்தேன்.

கண்கெட்டபிறகு சூரிய நமஸ்காரம் என்பாங்களே, அதைப் போல் மூணு வாட்டி எட்டாவதிலே பெயிலான பிறகு, மாணிக்கம் ஸார்கிட்டே டியூஷன் படிக்க வந்துக்கிட்டிருக்கேன். இந்தத் தடவை நிச்சயமாய்ப் பாஸ் பண்ணிடுவேன். மாணிக்கம் ஸார் எவ்வளவு அருமையாய்ப் புரியும்படி பாடம் சொல்லித் தர்ராரு... நீங்களும் ஏதாவது பரீட்சையிலே பெயிலாயிட்டீங்கன்னு, எங்க ஸாரிடம் வந்து டியூஷன் படிங்கோ! நிச்சயம் பாஸ் பண்ணிடுவீங்க!

'அது சரி, அப்படீன்னு நீ ஏன் முன்னமேயே உங்க ஸாரிடம் டியூஷன் படிக்கலே?' அப்படின்னு கேக்கறீங்களா? எங்க ஸார் எதிலும் ரொம்பக் கண்டிப்பு, கறார். சட்டப்படி ஒவ்வொரு வாத்தியாரும் மூணு பையன்களுக்குத்தான் டியூஷன் சொல்லிக் கொடுக்கலாமாம். ஆனால் ரொம்ப வாத்தியாருங்க, தலைமை ஆசிரியருக்குத் தெரியாமல் பத்துப் பன்னிரண்டு பையன்களை வைச்சுக்கிட்டு, பாதிப் பள்ளிக்கூடம் மாதிரி வீட்டிலே நடத்துவாங்க; ஆனா எங்க ஸார் அப்படிப் பட்டவரில்லே. சட்டம்னா சட்டம்தான். அவர்கிட்டே டியூஷன் படிக்கிறதுக்குப் பையன்கள் போட்டா போட்டி போடுவானுங்க. ஆனால் அவர் மூணு பேருக்கு மேல் — எவ்வளவு ரூபாய் பீஸ் கொடுக்கிறவன்னாலும் எடுத்துக்க மாட்டார்.

''லக்ஷ்மி! பணம் பணம்னு நெறையச் சம்பாதிக்கிறதினாலே மட்டும் மனிதனுக்குச் சந்தோஷம் வந்துடாதுமா! பெரிய பெரிய பணக்காரங்களெல்லாம் ராத்திரியிலே தூக்கம் வராமக் கவலைப்பட்டுக்கிட்டிருப்பாங்க. போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து''னு அவர் சம்சாரத்துக்கிட்டே அடிக்கடி சொல்றதை நான் கேட்டிருக்கிறேன்.

நல்ல கணக்கு வாத்தியாரா யிருக்கிறதாலே அவர் நினைச்சா, நாற்பது ஐம்பது பேர்கூட டியூஷனுக்கு வருவாங்க. ஆனால் அவர் வருஷத்துக்கு மூணு பேருக்குத்தான் சொல்லிக் கொடுக்கச் சம்மதிப்பார். எனக்கு இந்த வருஷம்தான் அவருகிட்டே படிக்கிறதுக்கு வாய்ப்புக் கிடைச்சது. அதுவும் ஒரு நாள் எங்கப்பா, அவர் வீட்டுக்குப் போய், ''சாமி! நீங்கதான் என் பையனைக் கரையேத்தி விடணும். எங்க ஏழைக் குடும்பத்திலே இவன் படிச்சுத்தான் முன்னுக்கு வரணும். எங்க பரம்பரையிலே யாரும் மழைக்குக் கூடப் பள்ளிக்கூடத்திலே ஒண்டினதில்லே. இவன்தான் ஹைஸ்கூலுக்கு வந்திருக்கான். ஆனா முட்டாப் பயமகன் பரீட்சையிலே மூணுவாட்டி தோத்துப் போய்ட்டானுங்க. நீங்க பெரிய மனசு பண்ணி எப்படியாவது இவனைச் செயிக்க வைக்கணுங்க'' அப்படீன்னு கேட்டுக்கிட்ட பிறகுதான் எங்க ஸார் சம்மதிச்சார்.


அன்னிக்கு ஒரு நாள் வீட்டுக்குள்ளே நுழையறபோதே ஸார், ''லக்ஷ்மி! அந்த டப்பாவை எடுத்துக்கிட்டுவா''ன்னு சொல்லி வெறும் தரையிலே உட்கார்ந்தார்.

''இதோ வந்துட்டேன்''னு குரல் குடுத்துக்கிட்டே, ஒரு கையில் காப்பி டம்ளரும் இன்னொரு கையிலே பழைய பெருங்காய டப்பாவும் கொண்டு வந்தாங்க அம்மா.

சட்டைப் பையிலிருந்து ரூபாய் நோட்டுக்களை எடுத்து ஸார், பெருங்காய டப்பாவுக்குள் போட்டு மூடினார்.

''லக்ஷ்மி! டப்பா பத்திரம். அடுத்த மாசம் இந்தப் பணத்தைப் புத்தகக் கம்பெனிக்கு அனுப்பணும். நம்ம குடும்பச் செலவுக் கடலிலே இந்தப் பெருங்காயத்தைக் கரைச்சிடாதே'ன்னு சொல்லிச் சிரித்தார் அவர்.

எங்க ஊர் சின்ன ஊர்தான். அங்கே புத்தகக் கடை ஒன்றும் இல்லே. அதனாலே வகுப்பு வாத்தியாரே புத்தகக் கம்பெனிக்கு எழுதிப் புத்தகங்களை வரவழைத்து விற்றுப் பணத்தை அனுப்பறது வழக்கம். தினசரி புத்தகம் விக்கிற பணத்தை அப்படியே பழைய பெருங்காய டப்பாவுக்குள் போட்டு வைப்பார் ஸார். அந்தப் பணத்தில் ஒரு பைசாக் கூட வீட்டுச் செலவுக்கு எடுக்க மாட்டார். ''இருக்கிறபோது எடுத்துச் செலவழிச்சிட்டா, கொடுக்கிறபோது யார்கிட்டே போய்க் கடன் வாங்கறது?'' என்பார்.



# லட்சரூபாய்!

அய்க்கண்

காப்பி சாப்பிட்டதும் கணக்குப் புத்தகத்தை எடுத்துப் புரட்டினார்.

''சுந்தரம்! இந்தக் கணக்கை எழுதிக்கோ. 'ஏ' என்பவன் நான்கு லட்சத்து எண்பதாயிரம் ரூபாயை ஆறு சதவீத வட்டிக்கு ஒரு பாங்கில் பிக்ஸட் டிபாசிட்டாகப் போட்டு...''


நான் கணக்கை எழுதிக்கிட்டிருந்தேன். ஸார் நிமிர்ந்து பார்த்தார். அம்மா உள்ளே போகவில்லே. பக்கத்திலேயே நின்னுக்கிட்டிருந்தாங்க. அப்படி நின்னு, அவங்க ஏதோ சேதி சொல்லப் போறாங்கன்னு அர்த்தம்.

''என்ன லக்ஷ்மி?''

''ஒண்ணுமில்லீங்க... சர்க்கார் லாட்டரிச் சீட்டிலே முதல் பரிசு லட்ச ரூபாயாமே. எல்லாரும் நாலஞ்சு டிக்கெட் வாங்கி யிருக்காங்க. நாமும் வாங்கிப் பார்க்கலாமே, அதிர்ஷ்டம் இருக்கா இல்லையானு?'' என்று தயங்கித் தயங்கிச் சொன்னாங்க அம்மா.

இதைக் கேட்டு, ஸார் விழுந்து விழுந்து சிரிச்சார்.

''அடியே லக்ஷ்மி! ஒவ்வொரு சீரிஸிலும் பத்து லட்சம் டிக்கெட் விக்கிறாங்க இல்லியா? அந்தப் பத்து லட்சம் டிக்கெட்டிலும் ஒன்பது லட்சத்துத் தொண்ணூற்றெண்பதாயிரத்துத் தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றெண்பது பரிசு கொடுக்கிறாங்கன்னு வச்சுகோ, குலுக்கலிலே ஒவ்வொரு பரிசாகக் குலுக்கிக் குலுக்கிக் கடைசியிலே பரிசு கிடைக்காத நம்பர் ஒண்ணு இருக்கும் பார், அதுதான் நாம்ப வாங்கின டிக்கெட் நம்பரா யிருக்கும்! தெரிஞ்சுதா, என் அதிர்ஷ்டம் அப்படி. வீணாய் அதிருஷ்டத்தை நம்பி ஏதும் செய்யாதே! என் வாழ்க்கையிலே எனக்கு அடித்த ஒரே அதிருஷ்டம் என்ன தெரியுமா? நீ என் மனைவியாய்க் கிடைச்சதுதான்... ஏற்கனவே நம்ம வீட்டுக்கு நீ லக்ஷ்மியாய் வந்திட்டே. இனிமேல் இன்னொரு லக்ஷ்மி இங்கே எட்டிப் பார்க்க மாட்டா... டிக்கெட் வாங்குறதுக்கு ஒரு ரூபாய் கையிலே இருந்தால் அதுக்கு ஏதாவது மளிகைச் சாமான் வாங்கலாம்...



இப்போ என் கையிலே உள்ள இருப்பு எழுபத்தெட்டு பைசாதான்''ன்னு சிரிச்சுக்கிட்டே ஸார் சொன்னதைக் கேட்டு, அரை மனசோடே அம்மா உள்ளே போனாங்க.

''ம்ம்... என்ன எழுதியிருக்கே? 'ஏ' என்பவன் நான்கு லட்சத்து எண்பதாயிரம் ரூபாயை...''னு சொல்லும்போதே உள்ளே ரெண்டு பேர் நுழைஞ்சாங்க.

''சாமி! கும்பிடறோங்க''னு நமஸ்காரம் செஞ்சுட்டு மரியாதையா நின்னாங்க அவங்க.

''வாப்பா மாடசாமி!... வா ஆண்டி!... உட்காருங்க... ஏம்ப்பா ஆண்டி, போன மாசம் திருச்சியிலே உங்க அண்ணனைப் பார்க்கப் போறதாச் சொன்னியே, எப்போ வந்தே? அண்ணன் சுகமா யிருக்கிறானா? பெட்டிக்கடை நல்லா நடக்குதா?''ன்னு ஸார் விசாரிச்சுக்கிட்டு இருக்கிறபோதே உள்ளே யிருந்து அம்மா வந்தாங்க. ''அம்மா! நமஸ்காரமுங்க''னு மாடசாமியும் ஆண்டியும் கும்பிட்டாங்க.

''ஏப்பா ஆண்டி, உன் அண்ணி ராக்காயி சௌக்கியமா இருக்காளா? கல்யாணமாகி ஒரு வருஷத்துக்கு மேலே ஆகுதே! இன்னும் முழுகிக்கிட்டிருக்காளா?''னு சிரிச்சுக்கிட்டே அம்மா கேட்டாங்க.

''அண்ணனும் அண்ணியும் சௌக்கியமா யிருக்காங்க சாமி! அண்ணன் பெட்டிக்கடை நல்லா லாபத்திலே நடக்குது. கடையைப் பெரிசாக்கி யிருக்காங்க... அண்ணன் கடையிலே உங்க படத்தைத்தான் நடுவே மாட்டியிருக்குது. உங்களைப் பத்திப் பேசாத நாளே இல்லிங்க''னு ஆண்டி சொன்னதும், ஸார் கண்களிலே கண்ணீர் ததும்பிச்சு.

''என் படத்தையா உங்க அண்ணன் கடையிலே மாட்டியிருக்கான்? அவன் ஆயிரத்திலே ஒருத்தன் அப்பா! வேறொருத்தனா யிருந்தால் என் படத்தைக் கிழே போட்டு மிதிச்சு நொறுக்கி யிருப்பான்.''

''ஏன் சாமி, அப்படிச் சொல்றீங்க!''னு மாடசாமி பதறினாரு.

''அது ஒரு தனிக் கதையப்பா!''னு பெருமூச்சு விட்டார் ஸார்.

ஆண்டியின் அண்ணன் சுப்பு, படிப்பிலே ரொம்பச் சுமார். ஒவ்வொரு வருஷமும் தட்டுத் தடுமாறி எப்படியோ பத்தாவது வகுப்புக்கு வந்து விட்டான். பத்தாவது படிக்கும் போதுதான் அந்தச் சம்பவம் நடந்தது.

முழுப் பரீட்சை: தேர்வெல்லாம் முடிந்து பரீட்சைத் தாள்களைத் திருத்திக் கொண்டிருந்தார் மாணிக்கம். அப்பொழுது உள்ளே நுழைந்தான் சுப்பு.

''ஸார்! என்னை மன்னிச்சிடுங்க ஸார்! கணக்குப் பரீட்சையிலே மூன்றாம் கணக்கும் ஏழாம் கணக்கும் பத்தாம் கணக்கும் எனக்குப் பக்கத்திலே இருந்த பையனைப் பார்த்துக் காப்பியடிச்சேன் ஸார்! இவ்வளவு நாளாய் இதைச் சொல்றதா வேண்டாமான்னு யோசிச்சுக்கிட்டே யிருந்தேன். ஆனால் மனச்சாட்சி கேட்கலே; உங்ககிட்டே சொல்லிடலாமுனு வந்தேன் ஸார்!'' என்று தலைகுனிந்து நின்றான் சுப்பு.

இதைக் கேட்ட மாணிக்கம் திகைத்து விட்டார். இப்படியும் ஒரு மாணவனா?

அவனுடைய விடைத் தாளை எடுத்துப் பார்த்தார் மாணிக்கம். 42 மார்க் — பாஸ் மார்க்குக்கு மேலே — இருந்தது. ஆனால் அவன் காப்பியடித்த மூன்று கணக்குகளுக்குப் போட்டிருக்கும் மார்க்கைக் கழித்து விட்டால் பதினெட்டு மார்க்குதான் மீதியிருந்தது. பெயில் மார்க்!

மாணிக்கம் அவனைப் பார்த்தார். சில விநாடிகள் சிந்தித்தார்.

மார்க்கைக் குறைப்பதா?

அப்படியே விட்டு விடுவதா?

அவருக்கு ஒன்றும் புரியவில்லை. இதுதான் தர்மசங்கட நிலை என்பதோ? அவர் மனம் வேகமாகச் சிந்தித்துக் கொண்டிருந்தது.

சில விநாடிகள் நிசப்தத்தில் நகர்ந்து சென்றன. கார்இருளிலே ஒரு மின்னல் கீறுவது போல், உள்ளத்தில் ஒரு சிந்தனைப் பொறி தெறித்தது.

தழுதழுத்துப் போன தொண்டையைச் செருமிக் கொண்டார். குரல் தெளிவாக எழுந்தது. இப்போது குரல் கொடுப்பது நேர்மையின் தன்னேரில்லாச் சக்தியல்லவா?

''சுப்பு! உன்னுடைய நேர்மையைக் கண்டு நான் ரொம்பவும் மகிழ்ச்சி யடைகிறேன். உன்னை என்னுடைய மாணவன் என்று சொல்லிக் கொள்வதிலே நான் என்றும் பெருமை யடைவேன்... ஆனால் ஒரு மாணவனிடம் இருக்கும் நேர்மையும் சத்தியமும் அவனுடைய ஆசிரியரிடமும் இருக்க வேண்டுமல்லவா? நீ உண்மையைச் சொன்ன பிறகும் காப்பியடித்திருக்கிறாய் என்று தெரிந்த பிறகும் உனக்கு பாஸ் மார்க் போட எனக்கு மனம் வரலேப்பா... நீ... பெயில்தான்!''

சத்தியத்தின் உருவகத்துக்குச் சலனமாவது?

இதைக் கேட்டதும் சுப்பு திடுக்கிடவோ வருத்தப்படவோ இல்லாமல் அமைதியாக நின்றான். தான் செய்த தவறுக்கு இது குறைவான தண்டனைதான் என்று உணர்ந்தானோ?

அந்த இளம் பருவத்திலே எத்தகைய முதிர்ந்த அனுபவத் திண்மை அவனுக்கு!

இதைப் பார்த்துக்கிட்டிருந்த லக்ஷ்மி பரபரப்புடன் குறுக்கிட்டாள்:

''என்னங்க, பையன் காப்பியடிச்சதைச் சொல்லாமலிருந்தால், பாஸ் பண்ணியிருப்பானே? உண்மையைச் சொன்னதற்கு நீங்க கொடுக்கிற பரிசா இது? பையன் நேர்மையாக, செய்த குற்றத்தை ஒப்புக்கொண்டானே, அதுக்காகவாவது அவனுக்குக் கருணை காட்டக் கூடாதா?''

''லக்ஷ்மி! நேர்மையா யிருக்கிறதும், உண்மை சொல்றதும் மனிதத் தன்மை. ஒரு மனிதன் மனிதத் தன்மையுடன் இருக்கிறான் என்பதற்காகப் பரிசு கொடுக்கணுமா, என்ன? — இப்போ சுப்புவுக்குக் கருணை காட்டினால், எல்லாப் பையன்களும் இதே மாதிரி செய்ய ஆரம்பிச்சுட்டா?'' என்று தர்க்க ரீதியாகப் பேசி மனைவியின் வாயை அடக்கினார் மாணிக்கம்.

''சுப்பு! கவலைப்படாதே! படிப்பு மட்டும் ஒருவனுக்குச் சோறு போடுவதில்லை. நீ படிச்சாலும் படிக்கா விட்டாலும் உன்னுடைய நேர்மை உனக்கு எப்போதும் உயர்வு தரும். இதை மனப்பூர்வமாகச் சொல்கிறேன். இது சத்தியம்'' என்று


EVERY BITE THE CHILD'S DELIGHT-
SATHE
Maltex
BISCUITS
Oven-fresh and nourishing— full of the good things a child would need—enriched with pure, wholesome malt and flavour that children would relish, baked with care to a crisp brown for easy digestion. Sathe Maltex—the biscuit every child would fall in love at first bite.
SATHE BISCUIT & CHOCOLATE CO. LTD., POONA-2.
SBC
heros' SBC-11



உணர்ச்சி வசப்பட்டு அவனை ஆசீர்வதித்தார் மாணிக்கம்.

அந்த வருஷம் 'பெயிலா'ன பிறகு படிக்க விருப்பமில்லாமல் கிராமத்தை விட்டுத் திருச்சிக்குச் சென்று ஒரு பெட்டிக் கடை வைத்தான். அவன் தொட்டது துலங்கியது. மாணிக்கத்தின் ஆசீர்வாதமும் பலித்தது.

''சாமி! இப்பவும் நேர்மையும் நாணயமும்தான் அண்ணனுக்கு நல்ல பேர் குடுத்திருக்குங்க''னு ஆமோதித்தார் ஆண்டி.

''அது சரியப்பா! நீங்க ரெண்டு பேரும் எங்கே இப்படி வந்தீங்க!''னு விசாரித்தார் ஸார்.

''ஒண்ணுமில்லீங்க. எங்களுக்குள்ளே ஒரு தகராறு''னு ரெண்டு பேரும் தலையைச் சொறிஞ்சாங்க.

அடடே, உங்களுக்கு ஒண்ணு சொல்ல மறந்திட்டேனே? எங்க கிராமத்திலே யாருக்காவது தகராறு சண்டை ஏற்பட்டால் கேஸ், கோர்ட்டு, வக்கீல், வாய்தான்னு போக மாட்டாங்க. தலைமை ஆசிரியர் கிட்டேயாவது, மாணிக்கம் ஸாருகிட்டேயாவது தகராறைச் சொல்லி அவங்க சொல்ற தீர்ப்பை ஏத்துக்கிடுவாங்க. அவங்க தீர்ப்பு மீற முடியாதது இல்லேதான். ஆனாலும் இதுவரை யாரும் அதை மீறினதில்லே. அவங்க சொல்லுக்கு அப்படியொரு மதிப்பு.

''சாமி! நான் போன மாசம் திருச்சிக்குப் போறபோது கையிலேயிருந்த நூறு ரூபாயை மாடசாமிகிட்டே கொடுத்துப் பத்திரமா வைச்சுக்கன்னு சொல்லிட்டுப் போனேனுங்க. இவன் அந்தப் பணத்தை வைச்சுப் பக்கத்து ஊர்ச் சந்தையிலே கத்தரிக்காய், வாழைக்காய் வியாபாரம் பண்ணி எண்பது ரூபாய் சம்பாதிச்சிருக்கானுங்க. அந்த எண்பது ரூபாய் யாருக்குச் சேரணும்கிறதிலேதான் தகராறு சாமி!''னு ஆண்டி வழக்கை எடுத்துச் சொன்னாரு.

ரொம்ப வேடிக்கையான வழக்குத்தான்!

''சாமி, இவன் கொடுத்த நூறு ரூபாயைத்தான் நான் இப்பக் கொடுத்திட்டேனே. என் சாமர்த்தியத்தை வச்சுச் சம்பாதிச்சதை ஏன் சாமி இவனுக்குக் கொடுக்கணும்?''னு மாடசாமி வாதாடினாரு.

''சாமர்த்தியம் மட்டும் இருந்து என் பணம் இல்லேன்னா இவன் சம்பாதிச்சடுவானா?''

''லாபத்தை மட்டும் கேக்கிறேனே, வியாபாரத்திலே ஏதேனும் நஷ்டமாயிருந்தால், இவன் பணத்தைக் கேக்காம இருப்பானா? நீங்க சொல்லுங்கம்மா!''னு அம்மாவையும் சாட்சிக்குக் கூப்பிட்டார் மாடசாமி.

ஸார் கொஞ்ச நேரம் கண்ணை மூடி யோசிக்கப் பார்த்தார்.

''மாடசாமி! நீ ஆண்டிக்கிட்டே நூறு ரூபாய் கடன் வாங்கி வியாபாரம் செஞ்சிருந்தா, லாபமோ, நஷ்டமோ முழுக்க முழுக்க உனக்குத்தான் சேரும். ஆனால் அவனுடைய பணத்தை அவனுக்குத் தெரியாமல் வியாபாரத்துக்கு எடுத்தது தப்புத்தான்... ஆண்டி! நீயும் முழு லாபத்தையும் கேட்காதே! உன் பணத்தை வச்சு வியாபாரம் செய்து சம்பாதிச்சதுக்காக நீ அவனுக்கு லாபத்திலே ஒரு பகுதியைச் சம்பளம்



## கடைசிவரை விடுவதில்லை!

காந்திஜி புதிய கதராடையை வேஷ்டியாக உடுத்திக் கொள்வார். அது கிழிய ஆரம்பித்ததும் வாகாய்க் கிழித்து மேல் துண்டுகளாகப் பயன்படுத்திக் கொள்வார். சிறு கிழிசல்களை அவரே தைத்துக் கொண்டு விடுவார். மேல் துண்டுக்கும் லாயக்கில்லாமல் போனாலும் அதைத் தலையணைக்கு மேல் உறையாகப் பயன்படுத்தி விடுவார். அதிலிருந்தும் அந்தத் துணி ஓய்வெடுக்கத் தொடங்கினால், அது பிறகு கைக்குட்டையாக மாறும். மற்றவை வடிகட்டும் சிறு துணிகளாகிவிடும். அதிலிருந்தும் விலக்க வேண்டிய நிலை வந்ததும் அழுக்கு தூசு ஆடியை துடைக்கும் கந்தைகளாக அவை மாறிவிடும். அவையும் இறுதியிலே கத்தமாகிக் காகிதத் தயாரிப்புக்குக் குடிசைத் தொழில் கூடத்துக்கு மூலப் பொருள்களாகப் போய்ச் சேர்ந்து விடும்! ''இல்லஸ்டிரேட்டெட் வீக்லி''

-காழி ஜெயா

---

மாதிரி கொடுத்திட்டு மீதியை எடுத்துக்கோ. மாடசாமி! ஆண்டி நல்ல பையன். உனக்கு நல்ல சம்பளம் தருவான்.''

இருவரும் போன பிறகு, அம்மா, ''ரொம்ப நல்லா தீர்ப்புச் சொன்னீங்க''னு ஸாரைப் பாராட்டினார்கள்.

அந்தப் பாராட்டு, பிறகு அவங்களுக்கே கெடுதியாய் முடியும்னு யாருக்குத் தெரியும்?

சுந்தரமூர்த்தி ஓதுவாருக்கு முதல் மகனாகப் பிறந்தார் மாணிக்கம். அடுத்து அடுத்து ஐந்து பெண்களைப் பெற்றெடுத்தாள் பார்வதி. ஐந்து பெண் பிறந்தால் அரசனும் ஆண்டியாவான் என்பார்கள். ஓதுவார், ஆண்டியாகாமலே கண்ணை மூடிவிட்டார். ஒரு நாள் கோயில் சந்நிதியில் உணர்ச்சிவயப்பட்டு, பக்திப் பரவசத்தில் கண்ணை மூடி, தேவாரம் பாடிக் கொண்டிருக்கும்போதே இறைவனடி சேர்ந்து விட்டார்.

அப்பா இறந்தபோது, வட்டக் குடுமியும் காதில் கடுக்கனும் இடுப்பில் அரைத் துண்டுமாகப் பத்தாவது படித்துக் கொண்டிருந்தார் மாணிக்கம்.

பொறுப்பை உணர்ந்தாக வேண்டிய நிலை. ஆனால் உணர்ந்தும், உணர முடியாத—உணர்ந்தும் செயல் பட முடியாத வயது. இந்த நிலைமையில் தாயார் பார்வதியே குடும்பச் சுமையைத் தன் தலையிலே ஏற்றுக் கொண்டாள். எப்படியோ வாயைக் கட்டி வயிற்றைக் கட்டி மாணிக்கத்தை எஸ். எஸ். எல்.சி. படிக்க வைத்து, பயிற்சிப் பள்ளிக்கும் அனுப்பினாள். ஆசிரியப் பயிற்சியை முடித்து விட்டு, செகண்டரி கிரேடு ஆசிரியராக வாழ்க்கையைத் தொடங்கினார் மாணிக்கம்.

தங்கைகளுக்கெல்லாம் கல்யாணம் செய்து முடித்த பிறகுதான், தம் கல்யாணத்தைப் பற்றி யோசிக்க வேண்டும் என்று மனத்துக்குள்ளாகவே ஒரு வைராக்கியம் செய்து கொண்டார் மாணிக்கம். ஆனால் அந்த

வைராக்கியத்தை உடைத்தெறிவதற்கென்று வந்து சேர்ந்தாள் லக்ஷ்மி. மாணிக்கம் வேலை பார்த்த பள்ளியில் ஹையர்கிரேடு ஆசிரியையாகச் சேர்ந்தாள் அவள். அவளோடு பேசிப் பழகப் பழக, மாணிக்கத்தின் மனம் சலனமடைய ஆரம்பித்தது. வைராக்கியமா, லக்ஷ்மியா என்று அவர் ஊசலாடிக் கொண்டிருந்த போது, லக்ஷ்மியே அவருடைய குடும்பத்து நிலைமையைப் புரிந்து கொண்டு, அவருடைய லட்சியத்துக்குத் துணை நிற்பதாக வாக்குறுதி கொடுத்து, அவர் வீட்டுக்குள் வலது காலை எடுத்து வைத்து நுழைந்தாள்.

இருவர் சம்பாத்தியத்திலும் மிச்சம் பிடித்து, ஒவ்வொரு நாத்தனாராகக் கல்யாணம் செய்து கொடுத்து.... கடைக்குட்டி மீனாவை மாமியார் வீட்டுக்கு அனுப்புகிற வரை, லக்ஷ்மி, தன் தாய்மையை ஒத்திப் போட்டுக் கொண்டு வந்தாள்.

மீனாவின் கல்யாணம் முடிந்த மறுமாதம், தன் வேலை முடிந்து விட்டது என்பதுபோல், நிம்மதியாகக் கண்ணை மூடிவிட்டாள் பார்வதி. அதற்குப் பிறகும், செல்லமாக வளர்த்த தங்கைகள், பிறந்த வீட்டுக்கு வந்து சீராடிச் செல்வதைத் தடுக்கவில்லை மாணிக்கம். லக்ஷ்மி, அவர்களுக்கெல்லாம் அக்கா போல், சீரும் முறையும் சிறப்பாகச் செய்து வந்தாள்.

மூன்று குழந்தைகள் பிறந்ததும் லக்ஷ்மியை 'வேலை பார்க்க வேண்டாம்' என்று நிறுத்தி விட்டார் மாணிக்கம். பிள்ளை பெறுவதில் அண்ணியும் நாத்தனார்களும் போட்டி போட்டுக் கொண்டிருந்தார்கள்!

இவ்வளவு செலவையும் மாணிக்கம் எப்படிச் சமாளிக்கிறார் என்பது ஊராருக்கு ஒரு புதிர்தான். அவர்தான் கணக்கு ஆசிரியராயிற்றே! தம் வருமானத்தையும் செலவையும் முன்பாகவே 'பட்ஜெட்' போட்டு, திட்டமிட்டுச் செய்வார். எந்த மாதத்திலும் அநாவசியச் செலவு என்று ஒரு பைசா அதிகமாகச் செலவு செய்யமாட்டார். அவசியச் செலவு செய்வதில் ஒரு பைசாவும் குறைக்க மாட்டார். 'இல்லாள் அகத்திருக்க இல்லாதது ஒன்றில்லை' என்பது பொய்யாகுமா?

லக்ஷ்மி வந்த பிறகும் சரஸ்வதி கடாட்சம் போய் விடவில்லை. இத்தனை குடும்பப் பொறுப்புக்களிடையேயும் மாணிக்கம், — 'பிரைவேட்'டாகப் படித்து, பி. ஏ. பட்டமும், பி. டி. பயிற்சியும் பெற்று விட்டார். தம் அறிவுக் கூர்மையாலும், கற்பிக்கும் திறமையாலும் பண்பான நடத்தையாலும் அந்த ஊரிலே ஒரு நல்ல ஆசிரியராகப் பெயரெடுத்து விட்டார்.

அன்னிக்கு அம்மா ரொம்ப சந்தோஷமாயிருந்தாங்க. பள்ளிக்கூடத்திலேயிருந்து ஸார் வந்ததும் ஓடிப் போய், ''என்னங்க, ஒரு சந்தோஷ சமாசாரம். நமக்கு லாட்டரியிலே லட்ச ரூபாய் பரிசு விழுந்திருக்கு''னு துள்ளிக் குதிச்சாங்க.

ஸார் அமைதியாக நின்னாரு.

''என்ன லக்ஷ்மி, உளர்றே? நாம எப்போ டிக்கெட் வாங்கினோம்? வாங்கவேயில்லையே!''

''நீங்க டப்பாவிலே பணம் போட்டு வச்சிருந்தீங்கல்ல, அதிலே அஞ்சு ரூபாய் எடுத்து அஞ்சு டிக்கெட் வாங்கினேன்; அதிலே ஒரு டிக்கெட்டுக்கு லட்ச ரூபாய் விழுந்திருக்கு''னு லாட்டரிச் சீட்டுகளை அவரிடம் அம்மா கொடுத்தாங்க.

ஸார் கொஞ்ச நேரம் ஏதோ யோசிச்சுக்கிட்டே நின்னாரு. அம்மாவை வெறிச்சுப் பார்த்தாரு. அடேங்கப்பா! அந்தப் பார்வை அம்மாவை மட்டுமில்லே, என்னையும் பயமுறுத்திடுச்சு.

''லக்ஷ்மி! என்னைக் கேட்காம ஏன் அந்த அஞ்சு ரூபாயை எடுத்தே?''

ஸாருடைய குரலைக் கேட்டு அம்மா பயந்து நடுங்கிட்டாங்க. தலை குனிஞ்சுகிட்டே, ''தெரியாமல் செஞ்சுட்டேங்க.... மன்னிச்சுடுங்க....''னு அம்மா கெஞ்சினாங்க.

''மன்னிக்கிறது கிடக்கட்டும்! பள்ளிக்கூடத்துப் பையன்கள் பணத்திலே சீட்டு வாங்கிப் பரிசு விழுந்தால், அந்தப் பரிசு யாருக்குச் சொந்தம்? சொல், லக்ஷ்மி!''

உடனே எனக்கு, ஆண்டி—மாடசாமி வழக்கு நினைவு வந்திச்சு. அம்மாவுக்கும் ஞாபகம் வந்திருக்கும்!

அன்னிக்கு எவ்வளவு நல்லா தீர்ப்புச் சொன்னார் ஸார்!

இன்னிக்கும் அதே தீர்ப்புத்தானா?

''லக்ஷ்மி! இந்த டிக்கெட்டை தலைமை ஆசிரியரிடம் கொடுத்திடப் போறேன். லட்ச ரூபாய் பரிசை அவர்தான் பள்ளியின் சார்பாக வாங்கிக்கப் போகிறார். பரிசு பள்ளிக்கூடத்துக்குத்தான்.''

இதைக் கேட்டதும் அம்மா திடுக்கிட்டுப் போய்த் திரும்பிப் பார்த்தாங்க.

''உண்மையாகத்தான் சொல்றீங்களா?... ஒரு லட்சம் ரூபாய்....''னு பெருமூச்சு விட்டாங்க அம்மா.

''உண்மையாகத்தான் சொல்றேன். இத்தனை வருஷ வாழ்க்கையிலே என்னைக் கேட்காமல் முதல் தடவையாக ஒரு காரியம் செய்தாயல்லவா? அதற்குத் தண்டனை இதுதான். லட்ச ரூபாய் நஷ்டம். போ, உள்ளே''னு ஸார் தீர்மானமாகச் சொன்னதும் அம்மா உள்ளே திரும்பி நடந்தாங்க.

நான் திகைச்சுப் போயிட்டேன்!


'என்ன தம்பி, கதை விடுறே? லட்ச ரூபாய்னா சும்மாவா? லட்ச ரூபாயை எவனாவது இத்தனை சுலபமாக விட்டுடுவா?'ன்னு கேட்கிறீங்க இல்லியா? நீங்க இதை நம்ப மாட்டீங்க. ஏன்னா நீங்க யாருமே எங்க ஸாரைப் பார்த்திருக்க மாட்டீங்க. அவர் ஆயிரத்தில் ஒருத்தர்!

என்னமோ, லட்சம் லட்சம்னு வாயை 'ஆ'வுனு பிளக்கிறீங்களே, ஐயா, எங்க ஸாருக்கு லட்சம் ஒண்ணும் பிரமாதமில்லே; அவர் லட்சத்திலே சதா புழங்கிறவரு.

'ஏ. என்பவன் மூன்று லட்சத்து எழுபத்தையாயிரம் ரூபாயும், பி. என்பவன் நான்கு லட்சத்து அறுபதாயிரம் ரூபாயும், சி. என்பவன் ஆறு லட்ச ரூபாயும்....

கணக்கைச் சொல்லிக்கிட்டிருந்தார் ஸார். நான் எழுதிக்கிட்டிருந்தேன்.

எங்க ஸார் லட்சத்தில் ஒருவர்னு சொல்லலாமே!


அம்புலிக்கு அப்பால்...
கதை: புஷ்பா படம்: விஜயா






சுபம்



சென்னை, மெயில் பத்திரிகையின் ஸீனியர் ஸப் எடிட்டர் ஸ்ரீ எல். மீனாக்ஷி சுந்தரம் அவர்கள் குமாரத்தி சௌ. சுபத்ராவுக்கும், ஸ்ரீ. கே. ராமமூர்த்தி அவர்கள் குமாரர் சிரஞ்சீவி ஆர். விஸ்வநாதன் அவர்களுக்கும் சென்னை மயிலாப்பூரில் சமீபத்தில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

வாழ்க மணமக்கள்!

# பாலுஸேரி பெனிபிட் சிட் பண்டு

**பிரைவேட் லிமிடெட்**

( ஸ்தாபிதம் : 1947 )

**"வீணா விகார்" 17-A, ஃபிளாங்க் ரோடு**

ஷண்முகானந்தா ஹாலுக்கு அருகில்

**சயான் (கிழக்கு) பம்பாய் - 22 D. D.**

**டெலிபோன் : 471455 - தபால் பெட்டி : 6759 - தந்தி : GROWRICH**

**அக்டோபர் 1969க்குரிய கீழ்க்கண்ட புதிய குருப்புகள் ஆரம்பிக்கப்படுகின்றன**

ஏலம் கேட்ட பிறகு டிவிடெண்டு அடையும் வசதியுள்ள கீழ்க்கண்ட குருப்புகள்

| குறுகிய காலம் : 25 மாதங்கள் | | | நீண்ட காலம் : 40 மாதங்கள் | | |
|---|---|---|---|---|---|
| சேருவதற்கு கடைசி தேதி : 11-10-1969 | | | சேருவதற்கு கடைசி தேதி : 25-10-1969 | | |
| முதல் ஏலத் தேதி : 12-10-1969 | | | முதல் ஏலத் தேதி : 26-10-1969 | | |
| வகுப்பு | மாதச் சந்தா | சீட்டுத் தொகை | வகுப்பு | மாதச் சந்தா | சீட்டுத் தொகை |
| | ரூ. | ரூ. | | ரூ. | ரூ. |
| B | 100/- | 2,500/- | E | 500/- | 20,000/- |
| C | 50/- | 1,250/- | F | 250/- | 10,000/- |
| F | 25/- | 625/- | G | 125/- | 5,000/- |
| G | 20/- | 500/- | | | |

**நீண்ட காலம் : 50 மாதங்கள் — ஏலம் எடுக்காத சீட்டுதாரர்களுக்கு மட்டும் டிவிடெண்டு உண்டு.**

**சேருவதற்கு கடைசி தேதி: 18-10-1969 - முதல் ஏலத் தேதி: 19-10-1969**

| வகுப்பு | தவணை | சீட்டுத் தொகை |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| LTA | 100/- | 5,000/- |
| LTB | 50/- | 2,500/- |
| LTD | 20/- | 1,000/- |

வேலை நேரம் : காலை 8 மணி முதல் 10-30 மணி வரை
மாலை 4 மணி முதல் 7-30 மணி வரை

**வார விடுமுறை : திங்கட்கிழமை**

தலைமை அலுவலகம் & பதிவு செய்யப்பட்ட அலுவலகம் :

"பாலுஸேரி பில்டிங்ஸ்"

3, சிங்கராச்சாரி தெரு, திருவல்லிக்கேணி, தபால் பெட்டி 414, சென்னை-5

கிளைகள் : பெங்களூர் - கல்கத்தா - புது டில்லி

தெளிவான விலாசதாரர்களுக்கு விதிகள் அடங்கிய புத்தகம் இலவசமாக அனுப்பப்படும்

சீட்டுகள் ஒதுக்குதல் கம்பெனியின் உரிமையைப் பொறுத்தது

எங்கள் சேவை உங்களுக்குத் தேவை

# 17. காந்திஜியும் சத்தியமூர்த்தியும்



## முதல் சந்திப்பு

1919ம் ஆண்டிலேயே கஸ்தூரிரங்க அய்யங்கார் அழைப்பின் பேரில் காந்திஜி சென்னை வந்தபோது சத்தியமூர்த்தி அவரைச் சந்தித்தார் என்றாலும் ஒருவரையொருவர் நன்றாகப் புரிந்துகொள்ள 1924ல்தான் சந்தர்ப்பம் ஏற்பட்டது.

காந்திஜி எஸ். ஸ்ரீனிவாச அய்யங்காரின் அம்ஜத் மாளிகையில் தங்கியிருந்தார். மத்திய ஹாலில் ராட்டையில் நூற்றுக் கொண்டிருந்தார். காந்திஜியின் அருகில் சுத்தானந்தபாரதி அமர்ந்து கீதை படித்துக் கொண்டிருந்தார். வராந்தாவில் சத்தியமூர்த்தி, சுத்தே ரங்கைய நாயுடு, சாமி வெங்கடாசலம், புலுசு சாம்பமூர்த்தி ஆகியவர்கள் காரசாரமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். விஷயம்: சர்ச்சில் காந்திஜியைக் குறைகூறி வெளியிட்ட அறிக்கை அன்று பத்திரிகையில் வெளிவந்திருந்தது.

காந்திஜி நூற்று முடித்து விட்டார் என்று தெரிந்ததும் வராந்தாவிலிருந்த தலைவர்கள் ஹாலுக்குள் வந்தனர். சத்தியமூர்த்தியைப் பார்த்துச் சிரித்துக் கொண்டே ''இவ்வளவு சத்தம் போட்டுப் பேசினால்தானா சுதந்திரம் வரும்? பாரதிஜி படித்த கீதையைக் கூட உங்கள் குரல் அமுத்தி விட்டதே'' என்றார் காந்திஜி.

''நானும் கீதையைத் தினம் பாராயணம் செய்கிறேன்'' என்றார் சத்தியமூர்த்தி.

''கீதை என்ன சொல்கிறது தெரியுமா?''

''எங்களுக்குப் படிக்கத் தெரியும். உங்களுக்கு அதன்படி நடக்கத் தெரியும். அதன் சாரத்தைச் சுருக்கமாக உங்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.''

காந்திஜி: போலோ ராம்! கரோ ராம்! அவ்வளவுதான் தெரியுமா? (தமிழிலேயே கூறினார்).

சத்தியமூர்த்தியின் பேச்சு வன்மையை அன்று மாலை கடற்கரைக் கூட்டத்தில் தம் பிரசங்கத்தை அவர் தமிழில் மொழிபெயர்க்கும்போது காந்திஜி கண்டறிந்தார்.

1934ல் கல்கத்தாவில் சத்தியமூர்த்தி மீண்டும் காந்திஜியைச் சந்தித்தார். சட்டசபை ஸ்தானங்களைக் கைப்பற்ற வேண்டும் என்பது குறித்துச் சுவாரசியமாக சம்பாஷணை நடந்து கொண்டிருந்தது. காந்திஜி சத்தியமூர்த்தியைச் சுட்டிக்காட்டி ''இவர் ஒருவரை மட்டும் காங்கிரஸ் சார்பில் சட்டசபைக்கு அனுப்பினால் போதுமே'' என்றார். சத்தியமூர்த்தியின் நாவன்மையை அவர் அவ்வளவுக்கு அறிந்திருந்தார்.

---

# 18. வைக்கம் வீரரும் காந்தி அடிகளும்

ஒத்துழையாமைக் கிளர்ச்சி நடைபெற்ற சமயம். கள்ளுக்கடை மறியல் பல முக்கிய நடவடிக்கைகளில் ஒன்று. 1922ல் காந்திஜி தமிழ் நாட்டுக்கு வந்தபோது ஈரோட்டில் பெரியார் வீட்டில் தங்கினார். இந்த இடத்தில்தான் கள்ளுக்கடை மறியல் பற்றி முடிவு செய்யப்பட்டது. அக்காலத்தில் பெரியாருக்குத் தாடி கிடையாது. மீசை மட்டுமே வைத்திருந்தார்!

ஒத்துழையாமை இயக்கத்தை நிறுத்த மாளவியாவும் சர் சங்கரன் நாயரும் கூடிப் பேசி காந்திஜியிடம் மறியலை நிறுத்த வேண்டுமாய்க் கேட்டுக் கொண்டார்கள். ''மறியலை நிறுத்துவது என் கையில் இல்லை. ஈரோட்டில் உள்ள நாகம்மை (ஈ.வே.ரா. மனைவி) யிடமும் கண்ணம்மாளிடமும் தான் (ஈ.வே.ரா. சகோதரி) இருக்கிறது'' என்று மகாத்மா அவர்களுக்குத் தெரிவித்துவிட்டார்.

வைக்கம் சத்தியாக்கிரகத்தின்போது மகாத்மா, பெரியாரை இரண்டாம் முறையாக வைக்கத்தில் சந்தித்தார். ஈ.வே.ராவைப் பார்த்துச் சிரித்துக் கொண்டே, ''எனக்குத் தெரியும். தமிழர்கள் இம்மாதிரி சத்தியாக்கிரக இயக்கங்களில் துணிந்து ஈடுபடுவர் என்று. தீண்டாமை ஒழிப்புக்காக ஒரு தமிழர் முன்வந்து இதை நடத்துவது பெருமைப் படவேண்டிய விஷயம்'' என்றார்.

1927ல் மூன்றாவது முறையாக பங்களூரில் ஈ.வே.ரா. காந்தியைச் சந்தித்துப் பேசினார். அப்பொழுது திரு எஸ். ராமநாதன் (முன்னாள் மந்திரி) அவர்களும் கூட இருந்தார். காங்கிரஸ், இந்து மதம், பிராமணர்கள் இம்மூன்றையும் ஒழித்துக் கட்டவேண்டும் என்று பெரியார் காந்திஜியிடம் வற்புறுத்தினார். காந்திஜி கூறிய சமாதானங்கள் இவர் மனத்தை மாற்றுவதாக இல்லை. இதன் பின் இவர்கள் இருவரும் சந்திக்கவே இல்லை.

- 'நஜன்'



# தீராத விளையாட்டு

கு. அழகிரிசாமி

## அத்தியாயம் 12

**ப**த்தாம் நாள் காரியங்கள் முடிந்து சில தினங்களுக்குள்ளாகவே, ரங்கராஜனைத் தங்களோடு அழைத்துக் கொண்டு போய்ச் சில நாட்களாவது வைத்துக் கொள்ள வேண்டும் என்று அருணாசல முதலியார் தம்பதிகளும் விரும்பினார்கள்; சுந்தரியும் அவள் கணவனும் விரும்பினார்கள். ஆனால் ராமலிங்கம் பிள்ளையின் நிழலை விட்டு விலகி வெளியே ஓர் அடிகூட எடுத்து வைக்க ரங்கராஜனுக்குத் தைரியமில்லை. அந்த நிழலில்தான் பிராணவாயு இருப்பது போன்று அவனுக்குத் தோன்றியது. சித்தப்பாவையும் சுந்தரியையும் பார்த்து, ''நான் சாவகாசமாகச் சாத்தூருக்கும் வர்றேன்; திருச்சிக்கும் வர்றேன். இப்போ நான் அம்மா பக்கத்திலேதான் இருக்கணும்'' என்றான். தொடர்ந்து, ''சித்தப்பா! இத்தனைக்கும் பிறகு நீங்களும் சுந்தரியும் என்னிடம் இத்தனை பிரியமாக இருக்கிங்களே, மீனாட்சி அம்மன் கிருபைதான். ஆனால், சித்தப்பா, நான் மதுரையை விட்டு இப்போ வெளியே போறதாகச் சொன்னால், ராமலிங்கம்பிள்ளைக்குமே இஷ்டம் இராது. அவரை நேரிலே இப்போ பார்த்துவிட்ட உங்களுக்கு நான் அதிகம் சொல்லத் தேவை இல்லை'' என்றான்.

இந்த வார்த்தைகளைக் கேட்டதுமே முதலியாரின் முகத்தில் ஒரு கனிவு ஏற்பட்டது. ''ராஜா, அவர் ஆயிரத்திலே ஒரு மனுஷன்.... உன்கிட்டே என்னென்னமோ பேசியிருக்கிறேன், அவரைப் பத்தி. அந்தப் பாவம்தான் இவ்வளவு ஆட்டமும் ஆடிட்டுப் போயிருக்கோன்னுகூட நினைக்கிறேன். போச்சு போ. எல்லாத்தையும் மறப்போம்'' என்று சொல்லி விட்டு, சுந்தரியைப் பார்த்து, ''பார்த்தாயாம்மா, அவங்க யாரு? நாம்ப யாரு? அந்தக் குபேரனுக்கு நாம்ப எம்மாத்திரம்? ஒட்டா? உறவா? பெண்சாதி பிள்ளைகளோடே வந்து உசிரையே பகிர்ந்து குடுக்கிறானே...உம், என்னமோ?'' என்று சொல்லி விட்டுப் பரவசத்திலேயே ஆழ்ந்து விட்டார்.

எல்லோரும் அவரவர்கள் ஊர்களுக்குப் போய்ச் சேர்ந்தபின், ரங்கராஜனுக்கு ஓர் உண்மை ஈடு செய்ய முடியாத பெரு நஷ்டமாகத் தோன்றியது: 'இந்த வீட்டில் இரண்டு உயிர்களுக்கு அடைக்கலம் கொடுத்தோம். மூளை குழம்பிய அந்தப் பிச்சைக்காரனை ஒரு பிள்ளையாகப் பாவித்து அம்மா காப்பாற்றினாள்; நிர்மலாவுக்கு நான் அடைக்கலம் கொடுத்தேன். அதுவும் எத்தனையோ பேர் தடுத்தும் கேளாமல் அவளுக்கு வாழ்வு கொடுத்தேன். கடைசியில் அடைக்கலம் புகுந்த இரண்டு உயிர்களுமே ஏறக்குறைய ஒரே சமயத்தில் போய் விட்டன.

இந்த நஷ்டத்தைத் தாயாரிடமும் அவன் வாய் விட்டுச் சொன்னான். சில நாட்களுக்குப் பிறகு முத்துக் குமாரிடமும், அப்புறம் ராமலிங்கம் பிள்ளையிடமுமே சொன்னான். அவருடன் பேசிக் கொண்டிருந்த போது, பல வருஷங்களுக்குமுன் அவனுடைய சித்தப்பா சொன்ன ஒரு விஷயம் ஞாபகத்துக்கு வந்தது. அப்போது அருணாசல முதலியார் சொன்னார்: ''சில பயல்கள் கஷ்டப்படுறான்கள்னா, அதுக்கு அவங்க தலைவிதிதான் காரணம். ஆண்டவனே அவங்க தலையிலே அப்படி எழுதியிருக்கிறதனாலேதான் நாம்ப என்ன உதவி செஞ்சாலும் அவங்க கஷ்டம் தீர்றதில்லை. சில சமயங்களிலே அந்தப் பயல்கள் நமக்கே துரோகம் பண்ணவும் செய்யறாங்க. குடுத்தவன்தானே பொல்லாதவன்; விரோதி — இந்த உலகத்திலே !.... அதனாலேதான், நாம்ப உதவி செய்ற போது எச்சரிக்கையாயிருக்கணும். இல்லே, உதவியே செய்யாமல் இருந்துடலாம். வம்பில்லை. இரக்கப்பட்டு எதுவும் செஞ்சால் நமக்குத்தான் ஆபத்து. 'நான் பார்த்து அவன் தலையிலே அப்படி எழுதியிருக்கிறப்போ, நீ என்னடா என்னை மீறி அவனுக்கு உதவி பண்ணறது? இதோடு நிறுத்துறியா, இல்லே, உன்னை ஒரு பார்வை பார்க்கணுமா ?'ன்னு ஆண்டவனே நம்பளைத் தண்டிக்க ஆரம்பிச்சுடுவான், ராஜா.''

இவ்வாறு முதலியார் அன்று சொன்னது நினைவுக்கு வந்தது. அவர் சொன்னதைக் கேட்டு அப்போது ரங்கராஜன் விழுந்து விழுந்து சிரித்தான். ஆனால் இப்போதோ, அவர் சொன்ன அந்தப் பைத்தியக்காரத்தனமான தத்துவமும் மெய்யாகி விட்டதே என்று வருந்தினான். சித்தப்பா அன்று சொன்னதை ராமலிங்கம் பிள்ளையிடம் அவன் இன்று கூறினான்.

அருணாசல முதலியாரின் கருத்தை ஒப்புக் கொள்ள மறுக்கும் பாவனையில் தலையசைத்து விட்டு ராமலிங்கம் பிள்ளை சொன்னார்:

''ஸார்! நீங்க ஒரு ஏழைப் பெண்ணைக் காப்பாத்தினீங்க. இல்லையா? நம்ப தேசத்து மகான்கள் இதைத் தாண்டியும் போயிருக்கிறாங்க. 'பகைவனுக்கு அருள்வாய்'ன்னு பாரதியார் பாடியிருக்கிறது உங்களுக்குத் தெரியும். அப்படியிருக்கிறப்போ, உங்க சித்தப்பா சொன்ன மாதிரி, நம்ப உதவியிலே வாழ்றவங்க, நமக்குத் துரோகமே செஞ்சாலும்தான் என்ன, நம்ப கொள்கையை ஏன் கைவிடணும்னு கேட்கிறேன்? விஜயாவோட அம்மாகிட்டே நான் எத்தனையோ தடவை சொல்லியிருக்கிறேன், கெட்டவங்க செய்யற துரோகத்தையும், அக்கிரமத்தையும் பார்த்து நம்ப கொள்கையை மாத்திக்கிறது, தர்மத்துக்கு நாம்பளே தோல்வியைத் தேடிக் குடுக்கிற காரியம்னு...''

ரங்கராஜன் ஆச்சரியத்தோடு அவரை விழித்துப் பார்த்தான்.

''இதை யெல்லாம் விதியோடே கொடுமைன்னு நினைச்சிட்டால் அப்புறம் மனுஷனுக்கு விரக்திதான் மிஞ்சும். அப்படி நினைக்கிறதுக்குப் பதிலாக விளையாட்டுன்னே நினைச்சிக்கலாமே. விதி நம்மோட விளையாடட்டும்; நாம்ப விதியோட விளையாடுவோம்! பார்க்கப் போனால் இது யுகம் யுகமா நடந்து வர்ற ஒரு தீராத விளையாட்டு. எத்தனையோ மகான்கள் இப்படி விதியோடு விளையாடியே ஆயுளைக் கழிச்சிருக்கிறாங்க. ஆண்டவனுமே ஒரு விளையாட்டுப் பிரியன்! இந்த ஒரு ஊரிலேயே அவன் அறுபத்து நாலு விளையாட்டு விளையாடி யிருக்கிறான்னு புராணமும் சொல்லுது...!''

அவருடைய பேச்சு, அவனுடைய அப்போதைய மன நிலையை ஒவ்வொரு நிமிஷமும் நாடி பிடித்து உணர்ந்து அந்தந்த நிமிஷத்துக்குத் தேவையான கருத்துக்களை ஒன்றன் பின் ஒன்றாக வெளியிடும் முறையில் அமைந்திருந்தது.

அவன் வேதனையோடு மறைத்து வைத்திருந்த ரகசியத்துக்கு அவருடைய பேச்சில் எதிரொலி கேட்டுக் கொண்டே யிருந்தது; அதே சமயத்தில் அவனுடைய வேதனை சிறுகச் சிறுகக் குறைந்து கொண்டு வந்தது. விடை பெற்று





வெளியே வந்த போது ஒரு பெரிய பனி மூட்டம் கலைந்தது போலவும் இழந்த நம்பிக்கைகளை யெல்லாம் மீட்டுக் கொண்டு தான் நிமிர்ந்து நடப்பது போலவும் அவனுக்குத் தோன்றியது.

## அத்தியாயம் 13

ரங்கராஜனின் வாழ்க்கையில் ஒரு பெரிய மாறுதல் ஏற்படவும், பெரிய மாறுதலை ஏற்படுத்தவும் சம்பிரதாயப்படி ஒரு வருஷம் கழிய வேண்டியிருந்தது.

சொந்தமாக ஒரு தொழிலைத் தொடங்கும் நோக்கத்துடன் அவன் ராமலிங்கம் பிள்ளையின் நிலையத்தில் சம்பளமில்லாமலே பயிற்சி பெற விரும்புவதை அவரிடமே தெரிவித்து, அப்படியே சேர்ந்து கொள்ளவும் செய்தான். இந்த மாறுதல் அவனுக்கு இதமாக இருந்தது. ஒவ்வொரு சிறு காரியத்தையும் உலக நன்மைக்காகச் செய்யும் கைங்கரியம் போல் ஆசையோடும் பக்தி சிரத்தையோடும் செய்தான். அப்போது பரம சாதுவான விஜயாவின் கணவன் ரகுவுடன் அவன் நெருங்கிப் பழகவும் முடிந்தது. ரகுவும் அவனைப் போலவே ராமலிங்கத்தின் கம்பெனியில் தான் பயிற்சி பெற்று வந்தான். ஆனால் ஒரு நாள்கூட அவனோடு அவன் வீட்டுக்கு ரங்கராஜன் போகவில்லை. விஜயாவை அப்போதைக்குச் சந்திக்கவே கூடாது என்று வைராக்கியமாக இருந்தான். அவனுடைய இல்லறத்தில் மானசிகமாகக்கூட ஒரு கரகரப்பு ஏற்பட்டு விடக் கூடாது என்பதில் அவன் அளவுக்கு மிஞ்சி ஜாக்கிரதையோடு இருந்ததுதான் காரணம்.

ரகு எத்தனையோ முறை அழைத்து விட்டான். தன் மனைவியுமே அழைக்கிறாள் என்று சொல்லிப் பார்த்தான். அவன், ''இன்னொரு நாள் வருகிறேன்'' என்று சொல்லியே ஒவ்வொரு தடவையும் மறுத்துக் கொண்டு வந்தான். ரங்கராஜன் மறுப்பதை அவனும் புரிந்து கொண்டான். அதனால், அவன் தன் வீட்டில் இல்லாத சமயம் பார்த்து, ஜானகியம்மாளைப் போய்ப் பல தடவை பார்த்து விட்டு வந்தான். சில நாட்களில் கலாவையும் அழைத்துக் கொண்டு போனான். விஜயா வந்து சென்றதைக் கேள்விப் பட்டதிலிருந்து அவன் தன் வீட்டுக்குத் திரும்பும்போதெல்லாம் விஜயாவின் கார் வெளியே நிற்கிறதா என்று பார்த்து விட்டுத்தான் உள்ளே நுழைவான். அவள் வந்திருந்தால், அப்படியே வெளியில் திரும்பிப் போய் விடவே அவன் விரும்பினான்.

'' என்னையும் உன்னையும் ஒரு நாளைக்கு வீட்டுக்கு வரச் சொல்லி விஜயா கூப்பிடுகிறாள், ராஜா. வர்ற போதெல்லாம் அவள் கட்டாயப்படுத்துகிறாள்'' என்று அவனிடம் சொன்னாள் ஜானகியம்மாள்.

''போகலாம். அதுக்கு ஒரு நாள் வரும். இப்போ வேண்டாம்'' என்று அவன் சொன்னான்.

அதை அந்த ஜானகி அம்மாளும் ஆமோதித்தாள்.

அவன் விஜயாவைச் சந்திக்காவிட்டாலும் கலாவை நாலைந்து தடவை சந்தித்து விட்டான். அவள் சில நாட்களில் தந்தையோடு ஆபீசுக்கு வந்து அவரைக் காரிலிருந்து இறக்கி விட்டு விட்டுக் கல்லூரிக்குப் போவாள். அப்பொழுதுதான் அவன் அவளைப் பார்த்தான். அப்படி அங்கே பார்த்த முதல் தடவையில் அவன், அவள் கண்களில் திரண்டிருந்த கண்ணீரையும் பார்த்தான்.

''கலா! நீ இப்படி அழுகிறதாக இருந்தால், நான் இனிமேல் உன்னைப் பார்க்கவே மாட்டேன்'' என்று அவன் சொன்னான். அதற்குப் பிறகு அவள் அழவில்லை. புன்னகைதான் செய்தாள். தந்தை அருகில் நிற்க, அவளும் அவனுக்கு அழைப்பு விடுத்தாள்: '' எங்க வீட்டுக்கு உங்களை அப்பா ஏன் அழைக்காமல் இருக்கிறார்? அவர் அழைக்க வேண்டாம். நான் அழைக்கிறேன்; எங்க அம்மாவும் அழைக்கிறாள். நீங்க வருவீங்களா, மாட்டீங்களா?'' என்று ஏக்கத்துடனேயே கேட்டாள் கலா.

''நீங்க யாருமே அழைக்காவிட்டாலும் நான் வருவேன்! இது உனக்குத் தெரியாது. வர்ற ஞாயிற்றுக் கிழமை கட்டாயம் வர்றேன்'' என்றான் ரங்கராஜன்.

சொன்னபடியே அவன் ஞாயிற்றுக் கிழமையன்று ராமலிங்கம்பிள்ளையின் மணல் ரோடு பங்களாவுக்குச் சென்றான். விஜயாவும் அவள் கணவனும் அங்கே வந்திருப்பார்களோ என்ற பயத்துடனேயே உள்ளே அடியெடுத்து வைத்தான். அப்புறம் அவர்கள் வராததைக் கண்டு ஆசுவாசத்துடன் உள்ளே போய் அமர்ந்தான்.

அன்று, சொல்லி வைத்தாற்போல், யாருமே அவன் நிலைக்கு இரங்கி, அனுதாப வார்த்தைகளைக் கூறவில்லை. அரசடி விநாயகர் கோயில் தெருவில் இருந்த போது அவர்கள் அவனிடம்

எப்படி நடந்து கொண்டார்களோ, அப்படியே இப்போதும் நடந்து கொண்டார்கள். சாப்பிட்டு விட்டுப் பேசிக் கொண்டிருக்கும்போது, கலா பேச்சில் கவனம் செலுத்த முடியாமல் எதையோ நினைத்துப் பரபரப்பு அடைந்து கொண்டிருந்தது அவளுடைய முக பாவத்திலேயே தெரிந்தது. சிறிது நேரம் கழித்து அவள் உள்ளே போய் ஒரு புகைப்பட ஆல்பத்தை எடுத்துக்கொண்டு வெளியே வந்தாள். தந்தையின் முன்னிலையில் அதை ரங்கராஜனின் கையில் கொடுத்தாள். அவன் அதை வாங்கிப் பிரித்ததும், முதல் பக்கத்திலேயே அவனுடைய படம் இருந்தது.

திருப்பரங்குன்றம் மலையில் விஜயா தன்னைப் பல தடவை படம் பிடித்தது அவன் நினைவுக்கு வந்தது. மற்றப் படங்கள் உள்ளே இருக்குமோ என்று பக்கங்களைப் புரட்டிப் பார்த்தான். அவற்றில் ஒரு படம்கூட அங்கே இல்லை. ராமலிங்கம் பிள்ளையின் குடும்பப் படங்கள் மட்டுமே இருந்தன. 'அவை எங்கே?' என்று கேட்க நினைத்த அவன் கேட்கவில்லை. ஆல்பத்தைத் திருப்பிக் கொடுத்து விட்டுப் பேச்சை மாற்றினான்.

''நானும் போட்டோ எடுக்கப் பழகலாம்னு இருக்கிறேன்.... உனக்குப் போட்டோ எடுக்கத் தெரியுமா?''

''தெரியும். ஆனால், விஜயாவைப் போல் நான் 'எக்ஸ்பர்ட்' இல்லை...''

''எனக்கு வாத்தியாராக இருக்க 'எக்ஸ்பர்ட்' தேவையில்லை. ஏ.பி.சி.டி. கத்துக் குடுக்கிறதுக்கு ஷேக்ஸ்பியரா வரணும்? எலிமெண்டரி ஸ்கூல் வாத்தியாரே போதுமே !''

மூவருமே சிரித்தார்கள்.

''ஒரு நாளைக்கு நானே உங்களைப் படம் பிடிக்கிறேன். அதுக்கு முன்னாலே உங்க அம்மா படத்தை எடுத்துடறதா இருக்கிறேன்....''

'' சந்தோஷம் ! எங்க அம்மா படத்தை நன்னா எடுத்துட்டா, உனக்கு எங்க அம்மா கையாலேயே ஒரு 'பரிசு' தரச் சொல்றேன். அது என்ன தெரியுமா ? அவளுடைய சின்ன வயசிலே — இருபது வயசா இருக்கிறப்போ — எடுத்த ஒரு படம் இருக்கு. அந்த ஒரே படத்தை உனக்குக் கொடுக்கச் சொல்றேன்!''

கலாவுக்கு அப்பொழுதே போய் அந்தப் படத்தை வாங்கிக் கொள்ள வேண்டும் போல் ஆசை துடித்தது.

''அம்மாவை அந்தப் படத்திலே கையெழுத்துப் போடச் சொல்லியும் கேட்பேன்..... அது இருக்கட்டும், இந்தப் படத்திலே நீங்க கையெழுத்துப் போடுங்க'' என்று சொல்லி ஆல்பத்தை அவனிடம் திரும்பவும் கொடுத்தாள் கலா.

ஏறக்குறைய இந்த அளவுடன் அன்றையச் சந்திப்பு முடிந்தது.

அதன்பின், இரண்டு மாதங்கள் கழிந்து அவன் ஒரு நாள் தன் வீட்டுக்குத் திரும்பிய போது, ஜானகியம்மாள் அவனிடம் ஒரு செய்தியைச் சொன்னாள்:

''விஜயா கர்ப்பமாயிருக்கிறாள். உனக்குத் தெரியுமா? நாலு மாசங்கள்'' என்றாள்.

அந்தச் செய்தியைக் கேட்டதும் அவனுக்கு விவரிக்க முடியாத பேரானந்தம் பொங்கி எழுந்தது. அந்த அம்மாளோ, அவனை இன்னும் பெரிய பேரானந்த வெள்ளத்தில் மூழ்கடிப்பது போல், ''பிறக்கிறது பெண்ணாகஇருந்தால் என் பெயர்தான் வைக்கப் போகிறாளாம்!'' என்றாள்.

அவனை நீராட்டிய ஆனந்த வெள்ளம் அவன் உடம்பில் புகுந்து, கண் வழியாக ஆனந்தக் கண்ணீராகவும் துளித்தது.

''அது ஒரு தெய்வப் பிறவி ராஜா'' என்று சொல்லி ஜானகியம்மாள் முத்தாய்ப்பு வைத்தாள்.

''அம்மா! இவ்வளவுதானே? இதுக்கு மேலே இன்னொரு சந்தோஷச் சமாசாரம் இருந்தால், அதை இப்போ சொல்லாதே. என்னால் தாங்கவே முடியாது'' என்றான்.

அதற்குப் பின் பத்து நாட்களுக்குள்ளாகவே அவன் மற்றொரு சந்தோஷச் செய்தியையும் கேள்விப்பட்டான் — அதுவும் எதிர்பாராத இடத்திலிருந்து.

சன்னாசிபுதூர் கிராமத்தில் அந்த விதவை நிர்மலாவை அவர்களுடைய பூர்விக வீட்டிலேயே காலியாக இருந்த பகுதியில் குடியிருக்கச் செய்துவிட்டதாக அருணாசல முதலியாரே மதுரைக்கு வந்திருந்தபோது அவனிடம் சொன்னார்.

''ராஜா! ஊர்க்காரன் என்ன வேணுமானாலும் பேசிட்டுப் போறான். அவங்களுக்கு வேறே வேலை என்ன? கிடக்கிறான்கள்! நானே ஆள் விட்டு அவளைக் கூப்பிட்டனுப்பி, 'உனக்குப் பிரியமிருந்தால் எங்க வீட்டிலேயே இருக்கிறவரையிலும் இரு'ன்னு சொல்லிட்டேன். அவளுக்கு என்ன கசக்குதா? சட்டி பெட்டியைத் தூக்கிக்கிட்டு மறுநாளே நம்ப வீட்டுக்கு வந்துட்டாளாம். அப்போ அவளுக்கு ஒத்தாசை பண்ணினது யார் தெரியுமோ? நம்ப மாடசாமிப் பயல் தான்! அவன் கையிலேயும் ஒரு அஞ்சு ரூபாயைத் திணிச்சேன். போனான்....''

ரங்கராஜன் வியப்போடு அவரைப் பார்த்து, ''ஏன் இப்படிச் செய்தீங்க,

சித்தப்பா?'' என்று சிரித்துக்கொண்டே கேட்டான்.

''பார்த்தியா? கடைசியிலே என்னைப் பைத்தியக்காரனுக்கப் பார்க்கிறியே!''

''தெரியாமல்தான் கேட்கிறேன்!''

''என்ன தெரியாமல் கேட்கிறே? நீதானே அவனுக்குக் குடியிருக்க இடம் தர்றதாச் சொன்னவன்? நீ சொல்லிட்டயே என்கிறதுக்காக நான் அவனுக்கு இடம் கொடுத்தேன். இப்போ நீ என்னையே கோமாளியாக்கறே?''

ரங்கராஜன் சிரித்துக் கொண்டே, ''சித்தப்பா மனசு யாருக்கு வரும்?'' என்றான்.

இதைக் கேட்டு அவர் அப்படியே பூரித்துப் போய் விட்டார்.

''ராஜா! உன் வாயிலேருந்து இப்படி தினமும் ஒரு சொல் வந்துக்கிட்டே யிருந்தால் போதும், எனக்குச் சாப்பாடு கூட வேண்டாம்'' என்றார் அருணாசல முதலியார்.

பிறகு ஒரு தடவை அவர் மதுரைக்கு வந்திருந்தபோது அவரையும் அவன் ராமலிங்கம் பிள்ளையின் காரியாலயத்துக்கு அழைத்துச் சென்று அவரோடு அரை மணி நேரம் உட்கார்ந்து பேசும்படி செய்து விட்டான்.

விஜயாவின் கர்ப்பம், விதவை நிர்மலாவின் புனர் வாழ்வு — இந்த இரண்டு நற்செய்திகளில் அவன் மிதந்து கொண்டிருந்தபோதே, கலா ஒரு நாள் காமிரா சகிதம் வந்து, ஜானகியம்மாளை மாடியில் நிறுத்திப் படம் பிடித்தாள். அப்புறம் அவனையும் நடராஜ முதலியாரையும், அந்த அம்மாளையும் சேர்த்து வைத்து ஒரு படம் எடுத்தாள். ரங்கராஜன் முன்பு சொன்னபடியே நடந்துகொண்டான். தாயாரின் பழைய படத்தைப் பெட்டியிலிருந்து எடுத்துக் கொண்டு வந்து, அவளிடமே அதைக் கொடுத்து, ''உன் கையாலேயே கலாவுக்குக் குடு. நீ கையெழுத்துப் போட்டும் குடுக்கணுமாம்'' என்றான்.

''நான் பேனாவைத் தொட்டு முப்பது வருஷங்கள் இருக்குமே ராஜா! என் எழுத்தைப் பார்த்து, காலேஜிலே படிக்கிற கலா சிரிக்கவா?'' என்று அவள் கேட்டாள்.

''உங்க கையெழுத்து எப்படி இருந்தாலும் இணையில்லாத அழகோடுதான் இருக்கும். உங்க படத்தைப் பார்த்துட்டு, அந்தக் கண்ணோடுதானே உங்க கையெழுத்தைப் பார்ப்போம். அப்போ அது எப்படி அழகா யில்லாமல் இருக்க முடியும்?'' என்று கேட்டாள் கலா.

ஜானகியம்மாளின் கையெழுத்தோடு கலா படத்தை வணங்கி வாங்கிக் கொண்டபோது, ''என்னுடைய சொந்தச் சொத்தாக வைத்திருந்த ஒரு பொருளை இன்று கலாவுக்குத் தூக்கிக் கொடுத்திருக்கிறேன்.''

''இவளுக்குக் கொடுக்கலாம்'' என்று சொல்லிக் கொண்டான் ரங்கராஜன்.

## அத்தியாயம் 14

விஜயாவுக்கு 'ஜானகி' என்ற பெயருடனேயே பெண் குழந்தை பிறந்தது.

ரங்கராஜன் தன் தாயாரையும், தகப்பனாரையும் அழைத்துக் கொண்டு தானும் முதல் தடவையாக அவளைப் பார்க்கப் போனான். குழந்தைக்குப் பட்டுத் துணிகளும், தங்க டாலரோடு கூடிய ஒரு சங்கிலியும் வாங்கிக் கொண்டு சென்றார்கள். குழந்தையை ஜானகியம்மாள் தன் மடியில் வைத்துக் கொண்டிருந்தபோது, விஜயா படுத்திருந்த நிலையிலேயே சந்தோஷம் தாங்காமல், ஜானகி யம்மாளின் வலது கரத்தை எட்டிப் பிடித்துக்கொண்டாள். அந்த அம்மாளின் பொன் வளையல்கள் குலுங்க, மணிக்கட்டையும் புறங்கையையும், விரல்களையும் தடவிக் கொடுத்தாள்.

இந்தக் காட்சி அங்கே நின்றவர்களுக்கெல்லாம் இரண்டு புண்ணிய நதிகளின்

சங்கமம் போல், சாந்நித்தியம் பெற்ற ஒரு காட்சியாகத் தோன்றியது.

ஜானகியம்மாள் விஜயாவைத் திரும்பிப் பார்த்தபோது, ''அம்மா! இப்படி ஒரு நாள் உங்க வீட்டிலே ஒரு குழந்தையை என் மடியிலே படுக்க வைத்து நான் பார்த்துக்கிட்டே இருக்கணும். என் கையையும் ஒரு கை தடவிக் குடுக்கணும். அதுக்குச் சீக்கிரமா வழி பண்ணுங்க அம்மா'' என்றாள் விஜயா.

விஜயாவை மகளாகப் பெற்றதற்காக ராமலிங்கம் பிள்ளை அன்று அடைந்தது போன்ற மகிழ்ச்சியையும் பெருமிதத்தையும் அதற்கு முன்னால் என்றுமே அடைந்ததில்லை. மௌனமாக எல்லாவற்றையும் அவர் பார்த்துக்கொண்டே நின்றார். அப்போது ரங்கராஜன் ரகுவைத் திரும்பிப் பார்த்து அவனுடைய பாக்கியத்துக்காக அவனை மானசிகமாக வாழ்த்தினான்.

விஜயாவின் கனவு நனவாக மாறுவதற்கு, எங்கே எந்தக் கணத்தில் யாரால் தோற்றுவாய் செய்யப்படும் என்று அப்பொழுது யாருக்குமே தெரியாதுதான். ஆனால், அது அப்படி ஒன்றும் சிரமமான காரியமல்ல என்றே எல்லோரும் கருதினார்கள்.

குழந்தையை விஜயாவின் அருகில் தொட்டிலில் படுக்கப் போடப் போகும் போது, கலா எதிரே வந்து, ''அம்மா, குழந்தையை நீங்க பெயர் சொல்லிக் கூப்பிடலையே! உங்க வாயாலேயே மூணு தடவை சொல்லிக் கூப்பிடணும்'' என்றாள்.

''ஜானகி!''

''ஜானகி!''

''ஜானகி!''

அந்த அம்மாள் அவ்வளவோடு நிறுத்தாமல், மேலும் தொடர்ந்து, ''என் ராஜாத்தி பெற்ற ராஜாத்தி!'' என்று சொல்லிக் குழந்தையை உச்சி மோந்தாள். பிறகு தொட்டிலில் படுக்க வைத்தாள்.

இந்த இன்பகரமான நாள் கழிந்து இருபது நாட்கள் ஆகியிருக்கும். அன்று ஞாயிற்றுக்கிழமை விடுமுறை. முத்துக்குமாரைப் பார்த்து வெகு நாட்களாகி விட்டது என்று எண்ணி அவன் வீட்டுக்குப் போய்வரலாம் என்று முதல் நாளே திட்டம் செய்திருந்தான் ரங்கராஜன். அதன்படி காலையில் பலகாரம் சாப்பிட்டு விட்டு அவன் கிளம்பச் சட்டையை மாட்டிக் கொள்ளப் போகும் சமயத்தில் அவனுக்கு எதிரே இருந்த கண்ணாடியில் கலாவின் பிரதி பிம்பம் தெரிந்தது. காலடி ஓசை கேட்காமல் அவள் நடந்து வந்து அவனுக்குப் பின்பக்கமாக நின்றாள்.

அவன் ஆச்சரியப்பட்டுத் திரும்பிப் பார்த்தான்.

கையிலிருந்த சட்டை நழுவி விழுந்தது. அவனுடைய மேனி வனப்பு அவளுடைய கண் கொள்ளாமல் நிறைந்தது. கண்ணாடியில் தெரியும் நிழலும் சேர்ந்து அந்த அறை முழுவதுமே அவன் அழகுதான் வியாபித்து இருந்தது.

''கலா! ஏன் இப்படிச் சத்தமில்லாமல் வந்து நிற்கிறே?''

''உங்களை ஆச்சரியத்திலே மூழ்கடிக்கிறதுக்காகன்னு நினைக்கிறீங்க.. அதுதான் இல்லே! நீங்க ஏதாவது வேலையாயிருந்தால் இடைஞ்சல் பண்ணக் கூடாது என்கிறதுக்காகத்தான் சத்தமில்லாமல் வந்தேன். எங்கேயோ புறப்பட்டுக்கிட்டு இருக்கிறீங்க....''

''கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்ததுன்னு சொல்லுவாங்க. ஆனால், நான் வேறு யாரையோ பார்க்கப் போக, நீ எதிரே வந்து நிற்கிறே! நான் கும்பிடப் போகாமலே என்னைத் தேடி வந்து தெய்வம் நிற்கிற மாதிரி நிற்கிறே. எப்போ வந்தே கலா? நீ மட்டும்தான் வந்திருக்கிறயா?''

''எங்க டிரைவரும் வந்திருக்கிறார்! விஜயாவைப் போல எனக்குக் கார் ஓட்டத் தெரியாது.... அதனாலே திருப்பரங்குன்றத்துக்கு உங்களைக் காரிலே கூட்டிக்கிட்டுப் போகவும் முடியாது!''

அவள் சிரித்தாள்.

அவனால் நம்பவே முடியவில்லை. இப்பொழுது மட்டுமல்ல. சில நாட்களாகவே அவன் ஆச்சரியப்பட்டுக்கொண்டுதான் இருந்தான். அதை அவளிடமும் கேட்டும் விட்டான்.

''இப்படியெல்லாம் பேச முடிகிற உனக்கு முன்னாலே அந்த மாதிரி வெட்கப்பட எப்படித் தெரிஞ்சுது கலா? நீ மகா சங்கோசின்னு உங்க அக்காகிட்டே எத்தனையோ தடவை சொல்லியிருக்கிறேன். அவளும் சொல்லியிருக்கிறாள். நான் டைரியிலே கூட அந்த மாதிரிதான் எழுதி வச்சிருக்கிறேன்!'' என்றான் ரங்கராஜன்.

முன்பு அவள் சங்கோசப்பட்டதற்கு சங்கோச சுபாவம் எதுவும் காரணமல்ல என்று அவள் சொல்ல நினைத்தாள். ஆனால் சொல்ல வாய் வரவில்லை. அசட்டுத்தனமான சங்கோச சுபாவமே தனக்குக் கிடையாது என்று அவனுக்குத் தெரியும். அப்படியிருந்தும் முன்பு அவள் அவ்வாறு நடந்து கொண்டதற்குக் காரணம் 'இருந்தது. விஜயாவையும் அவனையும் ஜோடி

## ராஜாங்கக் கைதி



எரவாடாவில் காந்திஜியை ராஜாங்கக் கைதியாகச் சிறை வைத்திருந்ததால், அவருடைய மாதாந்திரச் செலவுக்காக மாதம் 150 ரூபாய்களை வழங்கச் சர்க்கார் தீர்மானித்தது. சிறை அதிகாரிக்கு உத்தரவு அனுப்பினார்கள். சிறை அதிகாரி உடனே, காந்திஜியின் அறைக்குத் தேவையான மேஜை நாற்காலி முதலியவற்றை அனுப்பினார். அதைப் பார்த்ததும் காந்திஜி, "இவை எதற்கு, எடுத்துச் செல்லுங்கள்" என்று சிறை அதிகாரியிடம் கூறினார்.

"உங்களுடைய வசதிக்காக" என்று தயக்கத்துடன் சிறை அதிகாரி கூறினார்.

"என்னுடைய வசதிக்காகச் செலவிடும் தொகை இந்திய சர்க்கார் கஜானாவிலிருந்துதானே வருகிறது? அது இந்திய மக்களுடைய பணம்தானே? அதை விரயமாக்க நான் விரும்பவில்லை. என்னைச் சாதாரணக் கைதியைப் போல் நடத்துங்கள். அதற்காக மாதம் முப்பத்தைந்து ரூபாய் செலவழிக்கலாம் என்று நினைக்கிறேன்" என்றார் காந்திஜி.

சிறை அதிகாரி கெஞ்சிக் கேட்டுக் கொண்டார். தம்முடைய வசதியை அதிகரித்துக் கொள்ள காந்திஜி விரும்பவில்லை. அதனால், அவருடைய விருப்பப்படியே, பித்தளைச் செம்பு, தட்டு முதலியவற்றைக் காந்திஜியின் அறைக்கு அனுப்ப அவர் ஏற்பாடு செய்தார்.

சேர்த்து அவன் கற்பனை செய்யும் போதெல்லாம் அவனுக்குச் சந்தோஷமும், கூடவே ஒருவித வெட்கமும் ஏற்பட்டுக் கொண்டிருந்தன. அது எதற்கு என்று அவனுக்கு இப்பொழுதும் கூடப் புரியவில்லை. கடைசியில், விஜயாவுக்கு வேறிடத்தில் கல்யாணமான பிறகு அந்தச் சந்தோஷமும் போய்விட்டது. சங்கோசமும் போய் விட்டது. இதற்கும் என்ன காரணம் என்று அவனுக்குத் தெரியவில்லை.

"நீங்க வெளியிலே புறப்பட்டுக் கிட்டிருக்கீங்க..." என்று சொல்லிக் கொண்டே அவன் தலையைப் பார்த்தவள், "இன்னும் கொஞ்சம் படிய வாரிக்கலாமே!" என்றாள்.

ஒன்றிலிருந்து ஒன்றுக்குத் தாவிக் கொண்டு எதையாவது பேசிக்கொண்டு அவள் நிற்பதைப் பார்த்த அவனுக்குத் தலை வாரிக் கொள்வதைப்பற்றி அவள் இவ்வாறு சொன்ன மாத்திரத்தில் விஜயாவின் ஞாபகம்தான் வந்தது. ஒரு சமயம் அவளும் ஏறக்குறைய இதே மாதிரிதான் அவனுக்கு யோசனை சொன்னாள்.

விஜயாவின் ஞாபகம் வந்த நிமிஷத்திலேயே அவள் எடுத்த படத்தைத்தான் ஆல்பத்தில் பார்த்ததும், அவள் தனக்கு எழுதிய கடிதம் தன் மேஜைக்குள் இருப்பதும் அவன் நினைவுக்கு வந்து விட்டன.

"கலா! ஆல்பத்திலே ஒரு படம் தானே இருக்கு? விஜயா எத்தனையோ படம் எடுத்தாளே?" என்று கேட்டான்.

"எல்லாமே அவள் கிட்டேதான் இருக்கு. இந்த ஒரு படத்தைத்தான் அவள் எனக்குக் கொடுத்தாள். அதுவும் எவ்வளவோ கெஞ்சிக் கேட்டதுக்கு அப்புறம்..."

"கெஞ்சிக் கேட்பானேன்?... அது போகட்டும், அந்தப் படங்களெல்லாம் இப்பவும் விஜயாகிட்டேதான் இருக்கா?"

"வேறு யார் கிட்டே இருக்கும்?"

"தப்பு. அவள் இன்னும் அதை வச்சிக்கிறது ரொம்பத் தப்பு. எனக்காக நீயே ஒரு நாள் அவள் கிட்டப் போய், அத்தனையையும் 'நெகடி'வோடே கேட்டு வாங்கிக்கிட்டு வந்து என்கிட்டே குடுக்கணும். இல்லே, உங்க அப்பாகிட்ட வேணும்னாலும் குடு. இந்த ரெண்டும் செய்யாமல், நீ குப்பையிலே போட்டுட்டால் எனக்கு இன்னும் சந்தோஷம்."

"அவள் குடுக்கணுமே? அப்புறமில்லே அதை உங்ககிட்டக் குடுக்க முடியும்?"

"குடுப்பாள். அதுக்கு நானே ஒரு வழி பண்ணறேன். உன்கிட்ட ஒரு கடிதாசியைத் தரேன். அது அவளே எழுதியதுதான். அதைக் கொண்டு போய், அவள் தனியா இருக்கிறப்போ குடு. 'இதை உன்கிட்ட குடுக்கச் சொன்னார். நீ இதைக் கிழிச்சுப் போட்டுட்டு, அவருடைய படங்களைத் திருப்பிக் குடுப்பாயாம். அவைகளை அவர் கிழிச்சுப் போடணுமாம்' — இப்படி விஜயா கிட்டே சொல்லு!"

"இப்பவே வேணும்னாலும் நான் கொண்டு போறேன்—நீங்க குடுத்தால்!"

என்று கலா சொன்னதும், அவன் மேஜையைத் திறந்தான். பத்திரமாக வைத்திருந்த அந்தக் கடிதாசியைக் கவரோடு எடுத்து அவள் கையில் கொடுத்தான். அவள் உடனே ''நான் படிச்சுப் பார்க்கலாமோ?'' என்று கேட்டாள்.

''அவசியம்னு படிச்சுப் பார்.''

''பார்க்கிறேன்'' என்று சொல்லி விட்டு, அவள் கடிதத்தை வெளியே எடுத்துப் பிரித்துப் பார்த்தாள். மனசுக்குள்ளேயே வாசித்தாள்:

''பால் வடியும் வதனமே!

உனக்குக் கோடி நமஸ்காரம். நீ இல்லாமல் என் மனம் மட்டுமல்ல, இந்த ஊரே வறண்டு கிடக்கிறது. நான் எப்படிப் பொறுமையோடு காத்திருக்க முடியும்? என் 'பாப்பா'க்கள் (கண்ணின் கருமணிகள்) பாலில்லாத குழந்தைகளைப் போல் தாங்க முடியாத பசியால் வாடிப்போய்விட்டன; ஒளி இழந்து உயிர்க் களையும் இழந்து கிடக்கின்றன. உன்னை எப்பொழுது திரும்பவும் காண்பேன்? உன் தரிசனம் மட்டும் எனக்குத் தினம் தவறாமல் கிடைத்துக் கொண்டிருக்கும் என்றால் 'மற்ற எதற்கும்' நான் எத்தனை யுகங்கள் வேண்டுமானாலும் காத்திருப்பேன்.

கிராமத்து வெயிலில் திரிய வேண்டாம். என் கண்களைப் போல் நீயும் வறண்டுவிடக் கூடாது. வாடிக் கறுத்துப் போய்விடாதே. எனக்காகக் கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிக்கு உன் (நான் யாரோ ஓர் ஏழை என்று வைத்துக் கொள்)

விஜயா.''

கடிதத்தைப் படித்து முடித்ததும் கலா ஒரு பெருமூச்சு விட்டாள்.

''இதையா கிழிச்சுப் போடச் சொன்னீங்க? ஐயோ, எப்படி எழுதியிருக்கிறான்! இப்படி எழுதுகிறதுக்கு மட்டுமல்ல, இப்படி நினைக்கிறதுக்கே இன்னொரு பெண்ணாலே முடியாது. அவள் கிழிச்சுப் போட நினைச்சாலும் நான் விடமாட்டேன்'' என்றாள் கலா.

''இதை வச்சி நீ என்ன செய்யப் போறே?''

''நீங்க இன்னொரு தடவை கிராமத்துக்குப் போங்க. அப்போ தெரியும்!''

அவள் சொன்னது அவனுக்குப் புரியவில்லை.

அவள் எழுந்து அவன் மேஜையின்மேல் இருந்த பேனாவைக் கையில் எடுத்தாள். கடிதத்தின் அடியில் இருந்த விஜயாவின் கையெழுத்தை மட்டும் அடித்தாள்.

''என்ன செய்யறே கலா?'' என்று அவன் திகைத்துப் போய்க் கேட்டான்.

அவள் ஒரு பதிலும் சொல்லாமல் ''இதை இன்னொரு சமயம் உங்களுக்குத் தபாலிலே அனுப்ப நினைச்சேன். அது வேண்டாம்'' என்று சொல்லிக் கொண்டே அடிக்கப்பட்ட விஜயா என்ற வார்த்தைக்குக் கீழே ''கலா'' என்று கையெழுத்திட்டு அவனிடமே திருப்பிக் கொடுத்தாள்.

அதைப் பார்த்துவிட்டு அவளுடைய முகத்தைப் பார்த்தான் அவன். அவளும் அவன் முகத்தைப் பார்த்தாள். அப்போது கண்களும் கூடப் பேசவில்லை; மனசோடு மனசும் கூடப் பேசவில்லை. பேசாமலே பார்வைகள் ஒன்றோடு ஒன்று இழைந்தன; இதயங்கள் இரண்டறக் கலந்தன. நீ, நான் என்ற இரண்டு நிலைகளும், இரண்டு பேரையுமே விட்டுப் போய்விட்டன. அந்த ஒருசில நிமிஷங்களில் ஆதியந்தமற்ற நித்தியத்துவமே குடிகொண்டிருந்தது.

அவன் எழுந்து நின்றான்.

அவள் எழுந்து நிற்கவில்லை. அவளுக்கு அப்படிச் செய்ய வேண்டுமென்று தோன்றவில்லை.

அவளை அவனே தூக்கி நிறுத்தினான். நிற்பதும் ஒரு செயல்தான்; ஒரு பிரக்ஞைதான். செயலற்று இருந்த அவளுக்கு அப்போது எதுவுமே சாத்தியமில்லாமல் போய், சரிந்து அவனுடைய திறந்த மார்பில் சாய்ந்து கொண்டாள். அவளைக் கட்டிப்பிடிக்காவிட்டால் கீழே விழுந்து விடுவாளோ என்று அவனுக்குத் தோன்றியது.

அவளை அணைத்துக் கொண்டு, ''இப்போ நான் உன்னைத் தாங்கி நிறுத்தறதா நான் நினைக்கல்லே, கலா. உன் பலத்திலேதான் நான் நிற்கிறேன். குத்துவிளக்கிலே திரி வெளிச்சம் குடுக்கிறதா கண்ணுக்குத் தெரியுது. ஆனா, வெளிச்சம் குடுக்கிறது திரியில்லே; எண்ணெய்தான்... என் வீட்டிலே விளக்கேத்தி வைக்கத் தீப லட்சுமியே வந்துவிட்டாள்'' என்று ரங்கராஜன் சொன்னபோது அவளுடைய கைகள் அவன் முகத்தை இருபுறமும் அணைத்துக்கொண்டன.

''பால் வடியும் வதனம்!'' — சிறு குழந்தையின் பேதைமைக் குரலோடு இந்த வார்த்தைகளை மட்டும் சொன்னாள் கலா. அந்தப் பரவசத்தில் அவளை அறியாமலேயே அவன் கண்களையும் தடவிக் கொடுத்தாள்.

(முற்றும்)



ஏமாற்றங்கள் அளித்த வட்டமேஜை மகாநாடும்.........

# இந்திய–பிரிட்டிஷ் நட்புறவு

## ஹரால்ட் வில்ஸன்



பிரிட்டனின் பிரதமரான கட்டுரை ஆசிரியர்

**1888**ம் ஆண்டு செப்டம்பர் மாத இறுதியில் ஒரு சனிக்கிழமை யன்று ஸவுத்ஹாம்ப்டன் நகருக்குப் பத்தொன்பது வயதான ஓர் இந்திய மாணவன் வந்து சேர்ந்தான். பிரிட்டனுக்கு அவன் வருவது அதுவே முதல் தடவை. கடலைக் கடந்து நெடுந் தூரம் அவன் பிரயாணம் செய்ய வேண்டி யிருந்தது குறித்து அவன் சொந்த ஊரான ராஜ்கோட்டில் பலவிதமான சந்தேகங்களும் ஆட்சேபணைகளும் எழுந்திருந்தன. எனினும் அவனைப் பொறுத்தவரை ஒரு வழக்கறிஞன் என்ற தகுதியைப் பெறுவதிலும் இங்கிலாந்தை முடிந்த மட்டில் சுற்றிப் பார்ப்பதிலும் மிகவும் ஆர்வமுடையவனாக இருந்தான்.

திரு எம். கே. காந்தி இங்கு கழித்த முதல் சில வாரங்களில் சில கஷ்டங்களை அனுபவிக்க நேர்ந்தது இயல்பே. இவற்றுள் சதா உடனிருந்த சிரமம், அவர் சைவ உணவைமட்டுமே அருந்துவது என்பதில் அசைக்க முடியாத உறுதியுடன் இருந்ததன் விளைவாக எழுந்தது. கொஞ்ச காலத்துக்கு அவருக்குப் போதிய அளவு ஆகாரமே கிடைக்கவில்லை. நீண்ட நாட்கள் தேடிய பிறகு, கடைசியில் லண்டன் நகரில் ஒரு சைவ உணவு விடுதியைக் கண்டுபிடித்ததுடன் மரக்கறி உணவின் சிறப்பு பற்றிய ஒரு நூலையும் விலைக்கு வாங்கினார் அவர். இதன் பிறகு அவர் ஓரளவு தம் வீட்டில் இருப்பது போலவே உணரத் தொடங்கினார். நகரை வலம் வருகிற நவநாகரிக வாலிபர்களில் ஒருவராகவும் சிறிது காலம் விளங்கினார்.

ஆனால் வெகு சீக்கிரமே காந்தி எளிய வாழ்க்கையை மேற்கொள்ளத் தீர்மானித்தார். நீண்ட தூரமாயினும் நகரின் பல இடங்களுக்கு நடந்தே போனார்; தாமே சமையல் செய்து சாப்பிட்டார். பிரிட்டனில் அவர் தங்கியிருந்த நாட்களில் அவர் ஒருபோதும் மது அருந்தவில்லை; மாமிசத்தைத் தொடவும் இல்லை. பிற்காலத்தில் அவர் தாமாகவே மேற்கொண்ட கடினமான தவ ஒழுக்க வாழ்க்கையின் ஆரம்ப கட்டம் இங்கு அவர் கடைப்பிடித்த கட்டுப்பாடான வாழ்முறையே என்பதை உணர்வதில் சிரமம் இல்லை.

அவருக்குச் சட்டப் பரீட்சைக்குப் படிப்பது ஒன்றும் கஷ்டமான காரியமாக இருக்கவில்லை; பிரயாணங்கள் பல மேற்கொண்டார். பகவத்கீதை, பைபிள் ஆகியவற்றை ஊன்றிப் படித்தார். இவை அவர் மனத்தைப் பக்குவப்படுத்தின. பின்னொரு நாள் அவரே சொன்னார், சத்யாக்கிரக தத்துவத்தைத் தாம் உருவாக்க ஏசுபிரான் 'மலைமீதிருந்தபடி வழங்கிய அறிவுரைகள்' (சேர்மன் ஆன் தி மவுண்ட்) பெரிதும் உதவின என்று.

அவர் கூச்சம் மிகுந்தவராக இருந்தார். பலரிடம் பேசிப் பழகும் சுபாவம் உடையவராக இருந்திருந்தால் அவரது நண்பர் குழாம் இன்னும் பெருகியிருக்கும். எனினும் பிரிட்டனில் அவர் தங்கியிருந்த இந்த மூன்று ஆண்டுகளில் அவர் தனித்திருந்து, கல்வி பயிலக் கற்றது மட்டுமல்ல, மதம், ஒழுக்கம் சம்பந்தப்பட்ட பிரச்னைகளில் தமக்குத் தாமே நன்கு ஆராய்ந்து தீர்மானமான முடிவுகளுக்கு வரப் பயின்றது மட்டுமல்ல, இதே சமயத்தில் இந்நாட்டின் சாமானிய மக்களைப் பற்றியும் அவர் நிரம்பவே அறிந்துகொண் டிருக்க வேண்டும். அன்றாட வாழ்க்கையை அவர்கள் எப்படி

நடத்தினார்கள். அவர்கள் எதை எதை ஏன் அகாரணமாய் வெறுத்தார்கள், அவர்கள் எதையெல்லாம் மிக சுவாரசியமான விஷயங்களாகக் கருதினார்கள், அவர்களுடைய மனங்கள் எப்படிச் செயல்பட்டன என்பன போன்ற விஷயங்களைக் காந்தி அறிந்து கொண்டிருக்க வேண்டும்.

இந்த அனுபவம் அவருக்குப் பிற்காலத்தில் — பிரிட்டிஷ் அரசாங்கத்துடனும் இந்திய (பிரிட்டிஷ்) அரசுடனும் நீண்ட தொடர்பு கொண்டிருந்தபோது — மிகுந்த மதிப்பு வாய்ந்ததாக இருந்திருக்கும். அரசாங்க ரீதியான சம்பிரதாயத் திரைக்குப் பின்னால் அவர், தாம் அனுபவ பூர்வமாக நன்கு உணர்ந்திருந்த சாதாரண பிரிட்டனை —இல்லங்கள்தோறும் நிலவும் இயல்பான பிரிட்டனைப் பார்த்துக் கொண்டே இருந்திருப்பார்.

எங்களுடைய நோக்கில் அவருக்கு இந்த அனுபவம் ஏற்பட்டிருந்தது எங்கள் பேரதிர்ஷ்டமே. ஏனெனில் அரசியல் எப்படிப் போனாலும் எத்தனையோ ஏற்றத் தாழ்வுகளுக்கு இடையிலும் அவர் பிரிட்டிஷ் மக்களிடம் வைத்திருந்த அன்பைச் சிறிதும் இழக்கவே இல்லை என நம்புகிறேன்.

**ம**காத்மா காந்தி 1931ம் ஆண்டு லண்டனுக்கு இரண்டாவது வட்டமேஜை மகாநாடு நிமித்தம் காங்கிரஸின் ஒரே பிரதிநிதியாக விஜயம் செய்தார். இந்த விஜயம் இந்தியாவிலும் பிரிட்டனிலும் அனைவரிடத்திலும் மிகுந்த ஆர்வத்தை ஏற்படுத்தியது. பன்னிரண்டு ஆண்டுகளாக இந்திய மக்களின் சுதந்திர இயக்கத்துக்குத் தலைமை தாங்கி வருபவர், பலமுறை சிறை சென்றவர், தேசத் தந்தையாகப் போற்றப்படுகிறவர் — இத்தனை புகழோடு வந்தார் அவர். மகாநாடு நடக்கையில் 'பௌ' (Bow) என்ற இடத்தில் இருக்கும் கிங்ஸ்லி ஹாலில் தங்க வேண்டும் என்ற அழைப்பை ஏற்றுக் கொண்டார். அப்போது கிழக்கு லண்டன் வீதிகளில் அதிகாலை நேரங்களில் நீண்ட தூரம் நடை பயிலுவார். குழந்தைகளுக்கு மிகவும் பிரியமானவரானார். லண்டன் நகராட்சி மன்றம் பின்னால், அவர் தங்கியிருந்த நினைவைப் போற்றும் முகமாக அந்தக் கட்டிடத்தில் வாசகங்களுடன் கூடிய ஒரு செப்புத் தகட்டைப் பதித்தது. அவரது எடுப்பான உருவப் படம் ஒன்று கிங்ஸ்லி ஹாலில் மாட்டப்பட்டிருக்கிறது.

வட்ட மேஜை மகாநாடு அவருக்குப் பெரிய ஏமாற்றத்தையே அளித்தது. ஆனால், ''உண்மையான வட்ட மேஜை வேலை செய்கிறேன்'' என்று கூறி அவர் மகாநாடு நடந்த செயின்ட் ஜேம்ஸ் அரண்மனைக்கு வெளியிலேயே நீண்ட நேரத்தைச் செலவழித்தார். நண்பர்களைச் சம்பாதித்துக் கொண்டார். இந்தியாவுக்குச் சுயாட்சி என்ற தமது கட்சியைப் பொறுமையுடன் எடுத்துரைத்தார்.

அவர் அடைந்த குறிப்பிடத் தக்க வெற்றி லங்காஷயருக்குப் போய் அங்கிருந்த பஞ்சாலைத் தொழிலாளர்களிடம் பேசியதுதான். காங்கிரஸ் கட்சி பிரிட்டிஷ் துணியைப் பகிஷ்கரித்ததன் பயனாக, லங்காஷயர் பஞ்சாலைத் தொழிலாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருந்தார்கள். அவர்களுக்கு மத்தியில் காந்திஜி இந்தியாவின் ஏழைமையான நிலைமையின் பின்னணியைத் தெளிவாக எடுத்துரைத்தார். ஈட்டன் பள்ளி மாணவர்களிடையே சொற்பொழிவாற்றினார். ஆக்ஸ்போர்டு, கேம்பிரிஜ் சர்வகலாசாலைகளுக்கு விஜயம் செய்தார். அரசியல் தலைவர்களுடன் பேசினார். ஐந்தாம் ஜார்ஜ் மன்னருடன் பக்கிங்ஹாம் அரண்மனையில் தேநீர் அருந்தினார்.

''பிரிட்டிஷ் அரசரின் கிரீடத்தில் உள்ள வைர மணிகளுள் மிகப் பிரகாசமான''தாக இந்தியாவைக் கருதியவர் இருவாளர் வின்ஸ்டன் சர்ச்சில். அந்த மணிக்கு இப்போது ஆபத்து வருவதுபோல் தோன்றியது. மகாத்மாவின்

.......உண்மையான வட்டமேஜை வேலையும். - லங்காஷயர் தொழிலாளருக்கிடையில்



செல்வாக்கு படிப்படியாக அதிகரிப்பது கண்டு கோபம் (கவலை கலந்த பயமும்?) அடைந்து அவரைப் பார்க்கக் கண்டிப்பாக மறுத்து விட்டார் சர்ச்சில். இந்த இரண்டு மகத்தான சக்திகளும் நேருக்கு நேராகச் சந்தித்திருந்தால் அது மிக முக்கியமான ஒரு சரித்திர நிகழ்ச்சியாக இருந்திருக்கும். அவர்கள் சந்திக்காதது பிரிட்டனுக்கும் இந்தியாவுக்கும் பெரிய நஷ்டமே.

வட்டமேஜை மகாநாட்டில் தமது நோக்கத்துக்கும் கொள்கைகளுக்கும் ஏமாற்றங்கள் ஏற்பட்ட போதிலும் மகாத்மா காந்தி பிரிட்டனில் கழித்த மூன்று மாதங்களும் மிகுந்த உற்சாகத்துடன் இருந்தார். அவரது தோற்றத்தாலும் குணத்தாலும் பிரிட்டிஷ் பத்திரிகை உலகம் கவர்ந்திழுக்கப்பட்டது. இதனால் இந்தியாவின் பிரச்னைகள் பலவற்றை பிரிட்டிஷ் மக்களுக்கு விளக்குவதில் கணிசமான வெற்றி கண்டார். தம்மைக் கேட்கக் குழுமியவர்களில் ஒருவர் தொடுத்த கேள்விக்குப் பதிலாக, அவர் இந்தியா வேறு பல நாடுகளைப் போல் சம அந்தஸ்துடன் பிரிட்டிஷ் டொமினியனாக விளங்குவதைத் தாம் விரும்புவதாகத் தெரிவித்தார். இதன் பொருள் என்னவென்றால், சுய ஆட்சி பெற்ற இந்தியா, காமன்வெல்த் அமைப்பில் சுதந்திர அங்கத்தினராக விளங்கும் என்பதுதான். இன்று நாம் எல்லாருமே சர்வ சாதாரணமாக ஒப்புக்கொள்ளும் ஒரு கருத்தல்லவா அது?



''நகரை வலம் வருகிற நவநாகரிக வாலிபர்களுள் ஒருவர்.....''

மகாத்மா காந்தியின் தலைமையில் நடந்த நீண்ட இந்திய சுதந்திரப் போராட்டத்தின் மையமான ஒரு கட்டத்தில் 1930, 31ஆம் ஆண்டுகளில் இரு வட்ட மேஜை மகாநாடுகள் நடந்தன. பிரிட்டன் — இந்தியா உறவுகளில் பல ஏமாற்றங்களையும் விரக்திகளையும் ஏற்படுத்திய ஆண்டுகள் இவை. அன்றைய பிரிட்டிஷ் அரசாங்கங்கள் சில சலுகைகளைக் காட்டத் தயாராக இருந்தன. இந்தியா எதிர்காலத்தில் ஒரு நாள் டொமினியன் அந்தஸ்து அடைவது பற்றியோ அல்லது அதற்கு நிகரான ஒரு நிலையை அடைவது குறித்தோ சிந்திக்கத் தயாராக இருந்தன. ஆனால் மிகவும் நிதானமாகத்தான் இந்த இறுதி லட்சியத்தை நோக்கி அடியெடுத்து வைக்கப்பட்டது. இந்தியர்களுடைய கண்களுக்கு இது மிக மிக மெதுவாக நடப்பதாகத் தோன்றியது. ஒன்றாக நடைபோட்ட காங்கிரஸும் பிரிட்டிஷ் அரசும் அடிக்கடி கதிமாறிப் போயின. இருந்தாலும் சந்தோஷமான சில சமயங்களும் இல்லாமல் போகவில்லை. உப்பு சத்தியாக்கிரகத்தைத் தொடங்குமுன்னர் மகாத்மா வைஸ்ராய் லார்ட் இர்வினுக்கு எழுதிய ஒரு கடிதத்தில் எங்களைப் பற்றி அவர் நினைப்பதை நண்பருக்கு உரிய முறையில் பட்டவர்த்தனமாகக் கூறினார்:

**''இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி என்பதை நான் ஒரு சாபக்கேடாகக் கருதுகிறேன். ஆயினும் இதனாலேயே ஆங்கிலேயர் உலகில் உள்ள மற்ற மனிதர்களைக் காட்டிலும் மோசமானவர்கள் என்பதாக நான் நினைக்கவில்லை. பல ஆங்கிலேயர்களை எனது ஆத்மார்த்தமான நண்பர்கள் என்று சொல்லிக் கொள்வதில் பெருமை அடைகிறேன்.''**

அடுத்த ஆண்டில் தொழிற் கட்சியைச் சேர்ந்த திருவாளர் ராம்ஸே மக்டனால்டு இரண்டாவது தடவையாகப் பிரிட்டிஷ் பிரதமரானபோது லார்ட் இர்வினுக்கும் மகாத்மாவுக்கும் இடையே டில்லி ஒப்பந்தம் ஏற்பட்டது. தனிப்பட்ட முறையில் தமக்கு மகாத்மா காந்தியிடம் இருந்த பெருமதிப்பை வைஸ்ராய் ரகசியமாக வைத்திருக்கவில்லை. இதனால் கருத்துப் பரிமாற்றங்கள் மிகுந்தன. நீண்ட நாளாக நிலவி வந்த தப்பபிப்பிராயங்களுக்கு வரவேற்கத்தக்க முறிவு ஏற்பட்டது.

1935ல் ''கவர்ன்மெண்ட் ஆப் இந்தியா'' சட்டம் நிறைவேறியதைத் தொடர்ந்து இந்தியாவில் பொதுத் தேர்தல்கள் நடந்தன. 1937—39 ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் மகாத்மாவின் முழு ஆதரவுடன் ஆறு மாகாணங்களில் காங்கிரஸ் ஆட்சி நடைபெற்றது. மத்திய ஆட்சியில் பிரிட்டிஷ் அரசு முழு ஆதிக்கம் செலுத்த, மாகாணங்களில் காங்கிரஸ் ஆட்சி நடக்க, இந்தப் புதிய ஒத்துழைப்புப் பரிசோதனை நடைமுறையில் எந்த அளவுக்கு வெற்றி பெறும் என்பதில் இரு தரப்பிலும் சந்தேகங்கள் இருந்தன. ஆனால் நல்ல புத்தியும் பரந்த மனப்பான்மையும் நீடித்தன. மகாத்மாவின் உற்சாகத் தூண்டுதலுடன் காங்கிரஸ் மந்திரிகள் உபயோகமான சமூகப் பணி ஆற்ற இருந்த வாய்ப்புக்களில் தங்களை மறந்து ஈடுபட்டார்கள். அதே சமயத்தில் மாகாண பிரிட்டிஷ் கவர்னர்கள், வைஸ்ராய் காட்டிய வழியில் சென்று அநாவசியமான கொள்கை மோதல்களைத் தவிர்ப்பதிலும் புதிய அரசியல் சட்டம் இயன்ற வரையில் இலகுவாக இயங்குவதிலும் சிரத்தை காட்டினார்கள்.

மகாத்மா காந்தி மூன்று முறை அஹிம்சா மார்க்கத்தில் ஒத்துழையாமை இயக்கத்தை நடத்தினார். சத்தியாக்கிரகம் என்ற தத்துவத்தை உள்ளடக்கிய இயக்கம் இது. எடுக்

## உடனுழைப்பு



அகில இந்தியக் கிராமக் கைத்தொழில் சங்கம் ஆரம்பமான புதிதில் காந்திஜி மகன்வாடியில் தங்கியிருந்தார். சங்கத்தின் தலைவர் காந்திஜி, குமரப்பா காரியதரிசி. மகன்வாடியிலிருந்த ஒவ்வொருவரும் தினசரி வேலைகளைப் பங்கிட்டுக் கொண்டு முறை வைத்து வேலை செய்து வந்தார்கள். ஒருநாள் பாத்திரங்களைத் தேய்க்கும் வேலை முறை காந்திஜிக்கும் குமரப்பாவுக்கும் கிடைத்தது. குமரப்பா பல வருஷங்கள் அமெரிக்காவில் வாழ்ந்த 'நாசூக்' மனிதர். முரட்டு வேலையைச் செய்தறியாதவர். இருந்தாலும் காந்திஜியுடன் அவரும் தேங்காய் நாரைச் சுருட்டி வைத்துக் கொண்டு பாத்திரங்களைத் தேய்க்கலானார். கையிலும் காலிலும் கரி பட்டதுதான் மிச்சமே தவிர பாத்திரங்களிலிருந்த கரி சுலபமாக விலகவில்லை. அந்தச் சமயம் கஸ்தூரிபா அங்கு வந்து சேர்ந்தார்.

''இது என்ன வேலை? உங்களுக்குச் செய்யத் தெரியுமா? முறை போட்டீர்களே என்று நானும் சும்மா இருந்தேன்'' என்று கடிந்து கொண்டு காந்திஜியின் கையிலிருந்த சுருணையைத் தட்டிவிட்டார்.

காந்திஜி சிரித்துக் கொண்டே, ''குமரப்பா! பார்த்தீர்களா, இவளுடைய அதிகாரத்தை? நீங்கள்தான் பாக்கியசாலி. இந்த மாதிரி அமுல் நடத்த உங்களுக்கு ஒரு மனைவி யில்லை. ஆனாலும் இதில் ஒரு லாபமும் இருக்கிறது. என்னுடைய பகுதி வேலையைச் செய்ய ஓர் ஆள் கிடைத்து விட்டது. நீங்கள் என்ன செய்வீர்கள்? பெண்களுடைய அதிகார எல்லையில் நம்முடைய வேலை அட்டவணைத் திட்டம் பலிக்காது. முரண்டிக் கொண்டால் அமைதியின்மைதான் ஏற்படும்'' என்றார். அன்று முதல் வேலைத் திட்ட அட்டவணையே மாற்றி யமைக்கப்பட்டது. குமரப்பா போன்றவர்களுக்குச் சமையலறையிலிருந்து விடுதலை கிடைத்தது.

—ஜம்பு

---

கப்பட்ட நடவடிக்கைகள் — உப்பு தயாரித்தல், அன்னியத் துணி பகிஷ்காரம் போன்றவை — அஹிம்சா முறையில் நடந்தன. இந்த நடவடிக்கைகளை அதிகாரிகள் அடக்கினும் அதை எதிர்த்துப் பலப் பிரயோகம் பண்ணக் கூடாது என்று மகாத்மா வற்புறுத்தியிருந்தார். இதற்கு மிகப் பெரிய அளவில் உடல் பலமும் மனோ திடமும் வேண்டும் என்பதைச் சொல்லத் தேவையில்லை. போலீசாருடன் கைகலப்புக் கூடாது; ஒத்துழையாமை இயக்கத்தில் ஈடுபட்டோர் தடை ஏதுமின்றித் தாங்கள் சிறைக்குக் கொண்டு செல்லப்பட அனுமதிக்க வேண்டும். இதன் நோக்கம் எதிராளியின் மனமாற்றத்துக்கு முயலுவதே. பிரிட்டனைத் தர்ம நியாய வற்புறுத்தலின் மூலம் காங்கிரஸின் சுதந்திரக்கோரிக்கைக்கு இணங்கச் செய்வதே.

1920இல் மகாத்மா எழுதினார்:

**''புறச் சூழ்நிலைகள் சாதகமாக இல்லாமல் போனால்கூட ஆங்கிலேயர்கள் நியாயமான தர்க்கத்துக்கும் வற்புறுத்தலுக்கும் மசிந்து விடுவார்கள் எனக் கண்டிருக்கிறேன். அவர்கள் எப்போதுமே நியாயமாகத் தோற்றமளிக்க விரும்புகிறவர்கள். இதனால் மற்றவர்களைக் காட்டிலும் ஆங்கிலேயர்களை எளிதாக வெட்கத்தில் ஆழ்த்திச் சரியான காரியங்களைச் செய்ய வைத்து விடலாம்.''**

1945ஆம் ஆண்டில் நடந்த பிரிட்டிஷ் பொதுத் தேர்தலுக்குப் பிறகு திருவாளர் கிளெமெண்ட் அட்லி, யுத்த காலத்துக்குப் பின் அமைந்த முதல் தொழிற் கட்சி அரசாங்கத்தின் தலைவரானார். பிரதமர் அட்லி, ''சரியான காரியத்தை'' இனியும் காலதாமதமில்லாமல் செய்துவிட வேண்டும் என்று தீர்மானித்தார். 1947 ஆகஸ்டில் மகாத்மா காந்தி எந்தச் சுதந்திரத்துக்காக நீண்ட காலமாகப் போராடினாரோ அது கிடைத்து விட்டது. அதிகார மாற்றம் முழுமை பெற்றது. சத்தியாக்கிரகம் நிறைவெய்தியது. இதற்கு இத்தனை காலதாமதம் ஆகி இருக்க வேண்டுமா? இந்தியாவில் மட்டுமின்றி பிரிட்டனிலும் பலர் இவ்வாறு நினைத்தார்கள்.

ஆனால் —

ஒத்துழையாமை இயக்கம் ஆரம்பத்திலிருந்தே பலாத்கார முறையில் ரத்தம் சிந்தி நிகழ்ந்திருந்தால் — மகாத்மா விரும்பியிருந்தால் இத்தகைய இயக்கத்திலும் மக்களைச் சுலபமாக ஈடுபடுத்தி இருக்கலாம் அல்லவா? — அதன் விளைவு என்னவாக இருந்திருக்கும்? பிரிட்டனுக்கும் இந்தியாவுக்கும் உள்ள உறவை மனக் கசப்பும் வெறுப்பும் விஷ மயமாக்கிப் பல தலைமுறைகளுக்கும் இந்நிலையே நீடிக்கும். மகாத்மா காந்தி அஹிம்சா முறையை வற்புறுத்தியதால்தான், இந்தியாவுக்குச் சுதந்திரம் இருதரப்பினரின் ஒப்புதலுடன் கிடைத்தது. இதனால் வெற்றி தோல்வி என்பது போன்ற எண்ணங்களுக்கு இடமில்லாமல் போயிற்று. இந்த முடிவான ஏற்பாட்டில் பிரிட்டனும் மிகவும் மகிழ்ச்சி அடைந்து காமன்வெல்த் அமைப்பில் இந்தப் புதிய மகத்தான தோழனை வரவேற்க ஆர்வம் காட்டியது.

இவை யெல்லாம் 1888ஆம் ஆண்டில் முதல் தடவையாக எங்கள் நாட்டுக்கு வந்து எங்களை நன்கு புரிந்து கொண்ட இந்திய தேசப் பிதாவால் சாதிக்கப்பட்டன. இந்திய — பிரிட்டிஷ் நட்புறவுக்கு அவர் அமைத்த உண்மையான, பலமான அஸ்திவாரத்துக்காக எங்கள் நாட்டில் நாங்கள் அவருக்கு மிகப் பெரிய அளவில் நன்றிக் கடன்பட்டிருக்கிறோம்.

தமிழாக்கம் : **குட்டி கிருஷ்ணன்**

---

காந்தி சமாதான நிறுவனம் சார்பில் வெளியிடப்பட்டுள்ள '' நூறு ஆண்டுகள் '' என்ற புத்தகத்திலிருந்து.
பிரசுரம் : ஓரியண்ட் லாங்மன்ஸ், மவுண்ட் ரோடு, சென்னை - 2



**தண்டி கடற்கரையில்....**

காந்தி: இந்தாருங்கள் உப்பு !

லார்ட் இர்வின் (தமக்குள்): இப்போ 'இந்தாருங்கள் மிளகு' என்று நான் கொடுத்தாக வேண்டுமோ ?


(உலகப் புகழ்பெற்ற 'லோ' வரைந்த கார்ட்டூன்)

□

பல வாரங்கள்] கஷ்டப்பட்டு முயன்று தாம் லார்ட் இர்வினுல் கைது செய்யப்படுவதில் வெற்றி பெற்று விட்டார் காந்தி !

('லோ' வரைந்த மற்ருெரு கார்ட்டூன்)





"காந்தி யுத்தத்துக்குப் போகிருர்"

(செக்கோஸ்லாவேகியா நாட்டுக் கார்ட்டூன்.)


கென்னடி என்பவர் வரைந்த சித்திரம்.

(காந்திஜி கையில் இருப்பது உணவில் உப்பு தூவும் பாட்டில் .)




"கஸ்டம்ஸ் பரிசோதனை"

(அமெரிக்க லைஃப் சஞ்சிகையில் வெளியான கார்ட்டூன்)





# கார்ட்டூனில்



ரேனல்ட்ஸ் எழுதிய கார்ட்டூன்.
வட்டமேஜை மகாநாட்டுக்கு ஒரு யோசனை :
பரஸ்பரம் மரியாதை காட்டலாமே ?

பக்கிங்ஹாம் அரண்மனையில் ஐந்தாம் ஜார்ஜ் மன்னருடன் தேநீர் அருந்த அழைக்கப்பட்டார் காந்தி.





(ஜே. ஸி. ஹில் வரைந்த கார்ட்டூன்)

நீலச் சட்டை, கறுப்புச் சட்டை (முஸோலினி), பழுப்புச் சட்டை (ஹிட்லர்), ஆயிரம் மிலியன் டாலர் சட்டை (ரூஸ்வெல்ட்), பச்சைச் சட்டை, சிவப்புச் சட்டை (ஸ்டாலின்), பொருளாதார சீர்குலைவுச் சட்டை எல்லாருமாகச் சேர்ந்து : ''இவன் எந்தச் சட்டையும் அணியவில்லையே!''

உலகம் புகழ்பெற்ற லோலன் வரைந்த காந்திஜி சித்திரம்.



## காந்தி!

# காந்தியக் கண்காட்சி




"சுதந்திரம் கிடைத்த பின் உங்கள் நிலை என்ன?"


எத்தனைதான் இடையிடையே ஊறுகள் நிகழ்ந்தாலும், கருகத் திருவுள்ளம் கொள்ளாமல் கண்ணீரால் சுதந்திரப் பயிரைக் காத்து வந்த காந்தியடிகளைப் பார்த்து ஒரு சமயம் ஒரு பத்திரிகைநிருபர் கேட்டார்.

"இத்தனை நாட்களும் நான் விடுமுறையே எடுக்கவில்லை. என் விடுமுறை நாட்கள் ஏராளமாகச் சேர்ந்திருக்கும். நான் விடுதலை பெற்று ஆனந்தமாக வாழ நினைக்கிறேன். எனது இந்த உரிமைக்கு ஊறு நினைக்க ஒன்றாலும் ஆகாது; மற்றொராலும் ஆகாது!" என்றார் காந்தியடிகள்.

எந்த முகூர்த்தத்தில் அவர் இப்படி வாய் திறந்து கூறினாரோ, சுதந்திரம் கிடைத்த அடுத்த ஆண்டு விழாவைக் காண அவர்

1. காந்தி தர்சன் ரயில். அருகில் நிற்பவர் ஸ்ரீமதி மனுகாந்தி.
2. காந்தியின் தமிழ்க் கையெழுத்து.
3. காந்தி ஆசிரமத்தின் மாதிரித் தோற்றம்.




இவ்வுலகிலேயே இல்லை. நூற்றிருபத்தைந்து ஆண்டுகள் வாழப் போகிறேன் என்று கூறியவர், இப்படி அவசரப்பட்டுச் சென்றதற்குக் காரணம்? நீரில் எழுத்தாகும் யாக்கையோ?

1947ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15ந் தேதி 'ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோம்' என்று பள்ளுப் பாடிய மகா கவி பாரதியின் வாக்கை மெய்ப்பித்துக்கொண்டு, பாரத நாடு விடுதலை பெற்றது என்னவோ உண்மைதான். 'சுதந்திரம் நமது பிறப்புரிமை' என்று எத்தனையோ பெரியோர்கள் கூறி, அவ்வுணர்வுக்கு வித்திட்டு, அதன் வளர்ச்சியிலே நாட்டம் கொண்டு அது கிடைக்கப் பாடுபட்டதும் மெய்தான். மகாத்மா காந்தியோ ஒரு மூச்சாக நின்று நாட்டுக்கு விடுதலையே வாங்கித் தந்தார். அந்த நாளைப் பாரதம் என்ன, உலகமே மகிழ்ந்து கொண்டாடியது. ஆடலும், பாடலும், வெடிகளும் வாணங்களும் அமர்க்களப்பட்டன! ஒரே தேர்த் திருவிழாக் கோலாகலந்தான்!

ஆனால் மகாத்மா காந்தி அந்த வேளையில் என்ன செய்து கொண்டிருந்தார்? வங்காளத்து மக்களிடையே வெறி நடனம் புரிந்து கொண்டிருந்த இன வெறியைச் சமனப்படுத்தத் தம் உயிரையே பொருட்படுத்தாமல் முயன்று கொண்டிருந்தார். அமைதியை நிலைநாட்ட இரவு பகல் பாராமல் அரும்பாடு பட்டுக் கொண்டிருந்தார்! ஏறக் குறைய

கால் நூற்றாண்டுக்கு முன் நிகழ்ந்த இந்த நிகழ்ச்சியை, இந்தக் காலத்து மக்களுக்குப் புரிய வைக்க வேண்டும்; அந்தக் காலத்தவர்களுக்கு மறந்ததை நினைவுபடுத்த வேண்டும் என்பதற்காகக் காந்தி நினைவுக் குழு ரயில்வேயின் ஒத்துழைப்புடன் ஒரு புதிய கண்காட்சிக்கு ஏற்பாடு செய்திருக்கிறது.

மீட்டர்கேஜில் ஒரு வண்டி; பிராட்கேஜில் ஒரு வண்டி. ஒவ்வொன்றிலும் பத்துப் பெட்டிகள் காந்திக் கண்காட்சிக்கென்றே ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன.

மீட்டர்கேஜ் வண்டி சென்ற மாதம் 6ந் தேதி முதல் ராமேசுவரத்தில் தொடங்கி ஊர் ஊராக ஓடி வருகிறது. சென்னைக்கு இம்மாதம் 10ந் தேதி வருகிறது; பதினாறும் தேதிவரை சென்னை வாசிகள் காந்திக் கண்காட்சியைக் கண்டு களிக்கலாம். பிராட்கேஜ் வண்டி இம்மாதம் 2ந் தேதி அமிருத சரஸில் தொடங்கிப் பல ஊர்களுக்கும் செல்லவிருக்கிறது. இவ்விரு வண்டிகளும் ஏறக்குறைய ஆறு மாதங்கள் நாட்டின் பல பாகங்களுக்கும் சென்று காந்தியத்தை நினைவு படுத்தப் போகின்றன.

முதல் பெட்டியில் ஏறியதும் சுதந்திர தினத்தன்று காந்தியடிகள் என்ன செய்து கொண்டிருந்தார் என்பதைப் பெரிய கேள்விக் குறியாக்கி,–நம் தமிழகத்தில் இப்போது நிலவும் கேள்விக் குறியல்ல — அவர் ஈடுபட்டிருந்த அமைதிப் பணியை நயம்படச் சித்திரித்திருப்பதைக் காணலாம்.

அடுத்த பெட்டியில் அவரது இளமைப் பருவத்தையும் வாழ்க்கை உருப்பெற்ற கதையைய்ம் காணலாம்.

அப்புறம்?....

தென் ஆப்பிரிக்கப் பணி, பாரதப் பணி, வட்டமேஜை மகாநாடு, அவர் நடத்திய சாத்துவிக மறுப்பு — இப்படியாக அவரது வாழ்க்கை நிகழ்ச்சிகள் அனைத்துமே படம் பிடித்துக் காட்டப் படுகின்றன. கூடவே, ஆங்காங்கே அவரது பொன் மொழிகளும் இடம் பெற்றிருக்கின்றன.

இன்னும்....

அவர் நிறுவிய போனிக்ஸ், சாபர்மதி ஆசிரமங்கள் ஆகியவற்றின் மாடல்கள்...

சுருங்கச்- சொல்லப் போனால் காந்தியடிகளின் வாழ்க்கை வரலாறு முழுவதையுமே கலைஞர்களின் கைவண்ணமாகவும், கிடைத்தற்கரிய புகைப்படங்களாகவும் காணலாம்.

கண்ணுக்கு இப்படி விருந்தளிக்கும் கண்காட்சி காதுக்கும் இனிய விருந்து அளிக்கிறது. காந்தியடிகளுக்குப் பிடித்தமான பக்திப் பாடல்களையும் அவரது பேச்சுக்களையும் செவியாரக் கேட்டு மகிழலாம்.

அவருடைய அரிய சாதனைகளையும் சத்திய சோதனைகளையும் பார்த்தவாறே கடைசிப் பெட்டிக்கு வந்தோமானால், பெரிய உருவில் அவருடைய ஆசிரம 'மாடலை'க் காணலாம். சுழன்றிடும் ராட்டையின் உதவி கொண்டு சுதந்திரம் வாங்கித் தந்தாரே, அந்த ராட்டையை மெய்யாகவே இயக்கி நூல் நூற்றுக் கொண்டு சாந்தமே உருவாக அமர்ந்திருக்கும் அவரது பேத்தின்யையும் காணலாம்.

அதோடு குடிசையின் வாசற் கதவு திறந்திருப்பதையும், அவ்வாசலில் ஆஜானுபாகுவாக, காந்தி போவது போன்ற காட்சியையும் காணலாம். உலகத்தாரின் கண்களில் மகாத்மாவாகத் திகழும் தூய ஆத்மா இப்படி உயர்வு பெற்றதற்குக் காரணம் ஒழுக்கமும் உயரிய நெறியும் தானே?

'என்னை நெறிதவறாத வாழ்க்கை நடத்தத் தூண்டிய சமூகம் தன்னையும் அந்தக் கட்டுப்பாட்டுக்கு உட்படுத்திக் கொள்ளவில்லையே!' என்று எண்ணித்தான் அவர் அப்படி வெளியேறுகிறாரோ? — இப்படிச் சிந்தனையைத் தூண்டி விடுகிறது கடைசிப் பெட்டிக் காட்சி!

சத்தியத்தைக கடவுளாகக், சொல்லும் செயலும் ஒன்றாக இருக்க வேண்டும் என்று கூறி, அதன்படியே இம்மிகூடப் பிசகாமல் ஒழுகி வாழ்ந்து காட்டிய காந்தியடிகளின் நாட்டிலே இப்போது சொல்லும் செயலும் வேறாகிக் கொண்டிருப்பதைக் காண யாருக்குத்தான் சகிக்கும்? அதனால்தானோ என்னவோ, காந்தியடிகளின் உருவத்தைச் சுற்றிப் பிரபையெனத் தோன்றும் ஒளி சமைத்து, அவர் காட்டும் வழியிலே நடந்தால் உய்வு பெறலாம் என்று கூறாமல் கூறுவது போலவும் அமைத்திருக்கிறார்கள்!

காந்தியக் காட்சியை விளக்கிக் கூறவென்று ஏறக்குறைய நாற்பது தொண்டர்கள் இவ்வண்டியில் வருகிறார்கள். இவர்கள் பல்வேறு பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள்; பல்வேறு மொழி பேசுபவர்கள். ஆயினும் காந்தி மொழியை நன்கு கற்றறிந்தவர்கள். பத்துப் பேர் தவிர மற்றவர்களெல்லாரும் ஆண்கள். பெண்கள் குழுவில் பின்னைப் பிராயத்திலிருந்தே காந்தியடிகளோடு கூட இருந்து காந்திய நெறிகளை நன்கு உணர்ந்து கடைப்பிடித்து வரும் மனு காந்தியும் வருகிறார்.

'நமது குழு சம்பந்தப்பட்ட வேலையாகப் பெண்களை அனுப்ப நேர்ந்தால், துணைக்கு ஒரு பெண்ணுடன் இரு ஆண்களை அனுப்பாதீர்கள்; மாறாக இரு பெண்களுடன் ஓர் ஆணை அனுப்புங்கள். காந்தியடிகளின் பெயரைச் சொல்லிக் கொண்டு நடத்தும் இக்கண்காட்சி மூலம் நமக்கு நல்ல பெயர் கிட்டாவிட்டாலும் பரவாயில்லை. கெட்ட பெயர் வந்துவிடக் கூடாது. பாருங்கள்!' என்று குழுவைச் சேர்ந்த திரு வோரா அவர்களிடம் மனு காந்தி கூறியதைக் கேட்க நேர்ந்தபொழுது, 'தாத்தாவுக்குத் தகுந்த பேத்திதான்' என்ற எண்ணம் தோன்றியது. அதோடு, 'ஒரு பெண் எந்த நேரத்திலும் எங்கு வேண்டுமானாலும் தனியாகப் போய் வரும் துணிவைப் பெற வேண்டும்' என்று அடிகள் அடிக்கடி சொல்லுவாரே, அந்த நாளை நாம் இன்னும் எட்டிப் பிடிக்கவில்லை என்பதைச் சூசகமாகச் சொல்வது போலவும் தோன்றியது.

எளிய வாழ்க்கை வாழ்ந்து உலகத்துக்கு ஓர் ஆதரிசமாக விளங்கிய காந்தியடிகளுக்கு, ஏராளமான பொருட் செலவில் கண்காட்சி நிறுவி இருப்புப் பாதையில் உலவ விட்டிருக்கிறார்களே! இதைக் கண்டு மக்கள் மட்டுமின்றி, மக்களை ஆளும் ஆட்சிக் குழுவினரும் மனம் திருந்திப் பாரதத்தின் பெருமையைக் காக்க முன் வருவார்களானால், காந்திஜியின் ஆத்மா மகிழ்ச்சியுறும்; செய்த பொருட் செலவும் பயனுடையதாக ஆகும். —ரா.வீ

உங்களுக்கு முதன் முதலில் பிளாஸ்டிக் பக்கெட்
அளித்த 'ஸில்', இப்பொழுது பெருமையுடன் வழங்குகிறது...

# அன்றாட உபயோகத்துக்கான அருமையான பிளாஸ்டிக் பொருள்கள்



உங்கள் குளியலறையின் வசதியையும் வனப்பையும் பெருக்க—அழகான குவளைகள், வாளிகள் மற்றும் டாய்லெட் சாமான்களை வைக்கும் பொருள்கள்; சமையலறையின் சிறப்பை அதிகரிக்க—கவர்ச்சியான கிண்ணங்கள், பேசின்கள், சிப்பல்கள்; உங்கள் மேசைக்கு அழகூட்ட—வண்ணமய ஜக்குகள், தம்ப்ளர்கள், மற்றும் தட்டுகள்; உங்கள் இல்லம் சோபையுடன் மிளிர—சாமான்கள் கொண்டு வருவதற்கான கூடைப் பைகள், லாம்ப் ஷேடுகள் இவை அனைத்தும் அழகு சொட்டுபவை; துப்புரவுடன் வைத்துக்கொள்ள எளிதானவை; வசதியானவை; இலேசானவை; உடையாதவை; கண்ணைக் கவரும் எண்ணற்ற வண்ணங்களிலே வருபவை. இவற்றையெல்லாம் தயாரித்தவர்கள் 'ஸில்'—உங்களுக்கு முதன் முதலில் பிளாஸ்டிக் பக்கெட்டை அளித்த அதே பிரபல 'ஸில்'.
ஸில் பிளாஸ்டிக் பொருள்கள் அனைத்தும் உறுதியானவை; நீண்டகாலம் உழைப்பவை; ஏனெனில் ஆண்டாண்டு அனுபவம் மற்றும் ஆராய்ச்சியின் விளைவாக உருவானவை அவை. **நவீனமாக வாழுங்கள்—பிளாஸ்டிக்கை நாடுங்கள்—'ஸில்' வாங்குங்கள்.**

SIL

**சுப்ரீம் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்.**
பழைய லட்சுமி மில்ஸ் காம்பவுண்டு,
வடாலா, பம்பாய்-31.



FDSB-SI-28TM


விநியோகஸ்தர்கள்: சென்னை மாநிலத்துக்கு மெஸர்ஸ் **பிளாஸ்டோ ஏஜன்ஸீஸ்,** 10, ஸ்ட்ராட்டன் முத்தையா முதலி தெரு, சென்னை-1. பிளாஸ்டிக் லாம்ப் ஷேடுகளுக்கு, கேரளா, சென்னை, மைசூர் & ஆந்திர பிரதேஷ் முதலிய மாநிலங்களுக்கு: மெஸர்ஸ் **ரேவதி ஏஜன்ஸீஸ்,** 4, ஸ்டிரிங்கர் தெரு, சென்னை-1



துல்லியமான பல்வகை
வண்ணங்கள், ஒளிர்விடும்
மென்மை, அசைவுக்கு அசைவு
அலேபோலத் தவழ்ந்துபடியும்
லாவகம். அனைத்தும்
ஒருங்கிணைந்து பின்னியின்
ஜார்ஜெட்டுகள், சிஃபான்ஸ்,
ஷாட்சில்க் அணிவோரை மறக்க
முடியாத ஒரு எழிலோவிய
மாக மாற்றிவிடுகின்றன.

# தனி அழகு வாய்ந்த பின்னி-தூயப் பட்டு புடவை

BM-5122





# ஒற்றுமையே பலம்

சுசீலா நய்யார்



காந்தி ரயில் கண்காட்சியை ஸ்ரீமதி சுசிலா நய்யார் பார்வையிடுகிறார்

**நூ**ற்றுக்கு மேற்பட்ட நாடுகள் மகாத்மா காந்தியின் நூற்றாண்டைக் கொண்டாடுகின்றன. இந்தியாவில் நாம் அண்ணல் காந்தியின் நூற்றாண்டோடு அன்னை கஸ்தூரி பாவின் நூற்றாண்டையும் கொண்டாடுகிறோம். இருவருமே 1869ல் பிறந்தவர்கள்தாம். ஆனால் அன்னை பிறந்த தேதி தெரியவில்லை. அவர் மறைந்தது 1944 பிப்ரவரி 22ந் தேதி. ஆகாகான் அரண்மனையில் கைதாகி இருக்கையில் மகாசிவராத்திரியன்று கணவனின் மடியில் தலைவைத்தபடி உயிர் நீத்தார் கஸ்தூரி பா. எனவே காந்தி நூற்றாண்டு விழாவை அடுத்த பிப்ரவரி 22 வரை கொண்டாடுகிறோம்.

அன்னை கஸ்தூரியை நாம் போற்றுவதற்குக் காரணம், காந்திஜி தேச பிதாவாகி 'பாபு' என்று அழைக்கப்பட்டார் எனில், அவருக்கும் அவரது ஏராளமான திட்டங்களுக்கும் தொண்டு புரிந்த அனைவருக்கும் கஸ்தூரியே அன்னையாயிருந்ததுதான். அவர் 'பா' (அன்னை) என்றே அழைக்கப்பட்டார். இளம் மோகனதாஸ் முதிர்ந்த மகாத்மா காந்தியாகப் பரிணமித்ததில் கஸ்தூரிபாவுக்குக் குறிப்பிடத் தக்க பங்கு உண்டு. கஸ்தூரி பாவையே தமது சத்தியாக்கிரக குருவாகக் காந்தி குறிப்பிட்டிருக்கிறார். கஸ்தூரி பா அன்பும் விசுவாசமும் உள்ள ஒரு ஹிந்துப் பத்தினியாக வாழ்ந்தவர்; அதே போதில் தமக்கென்று ஒரு சங்கற்ப உறுதிபடைத்தவர். கல்வி யறிவு பெற்ற கணவர் சொல்கிறார் என்பதற்காக மட்டும் அவர் எதையும் ஒப்பத் தயாராக இல்லை. நல்லது கெட்டதைச் சீர்தூக்கிப் பார்ப்பதில் தமக்குள்ள சக்தியைப் பிரயோகித்து, தமது அறிவும், இதயமும் ஒப்புதல் தந்தாலே, அதன் பின் கணவனின் கருத்தை ஏற்றவர் கஸ்தூரி பா. கஸ்தூரி பா சுயமாக மனமொப்பி உடன்பட காந்திஜி முயற்சிசெய்யவேண்டியிருந்தது. இவ்வாறு செய்து வந்ததன் காரணமாக, பரஸ்பரம் மதிப்பும் நல்லெண்ணமும் இருக்குமேயாகில் — எதிராளியைப் புண்படுத்தவும் சிறுமைப்படுத்தவும் விழைவு இல்லாமல் இருக்குமேயாகில் — எத்தகைய தீவிர அபிப்பிராய பேதத்தையும் போக்கிக் கொண்டு விடலாம் என்று பாபு கண்டார். இதைத்தான் அவர் சாமானியமான குடும்ப அநுபவத்திலிருந்து சத்தியாக்கிரகம் என்ற மகத்தான ஆயுதம் கிடைத்ததாகச் சொல்கிறார். உண்மையை அறிய எந்தச் சூழ்நிலையிலும் தயாராக இருப்பவர்களுக்கே இயற்கை உதவி புரியும் என்று விஞ்ஞான உலகில் சொல்வார்கள். உலகில் எல்லா இடங்களிலும் என்றென்றுமே பழுத்த பழங்கள் மரத்தி

விருந்து விழுந்துதான் இருக்கின்றன. ஆயினும் இதைப் பார்த்து இதிலிருந்து ஆகர்ஷண விதியைக் கண்டுபிடிக்க ஒரு நியூடன் தேவைப்பட்டார்! இதே போல் தேச வாழ்வில் — சர்வதேச வாழ்வில் — அநீதியையும் அடக்குமுறையையும் அஹிம்சையால் வெல்வதற்குச் சத்தியாக்கிரகத்தைக் கருவியாக உபயோகிக்கலாம் என்று காண ஒரு காந்திஜி தேவைப்பட்டார்.

மகாத்மாவின் இதிகாச சரித்திரத்தை நாம் அனைவரும் அறிவோம். சாமானிய வாலிபனாக இருந்தவர் தரும மாவீரனாகி, உறங்கிக் கிடந்த கோடானு கோடியரைத் தம் சக்தியால் உசுப்பி எழுப்பினார். நானாவிதப் பிரிவுகளாகக் கிடந்த நம் சமுதாயத்தை இசைவுள்ள ஒரே மக்கட் குலமாக — இலட்சியமுள்ள ஒரு தேசமாக—ஒன்றுபடுத்தினார். இந்தியத் துணைக் கண்டத்துக்குச் சுதந்திரம் பெறுவதே அந்த இலட்சியமாயிற்று. அந்த இலட்சியத்துக்குச் சாதனம் வன்முறைப் போர் அல்ல. இன்னொரு நாட்டை அடிமைப்படுத்தி வைத்திருப்பது பாபம் என்று அந்நிய ஆட்சியாளரே உணருமாறு அவர்களது மனச்சாட்சியைக் கிளறுவதுதான் காந்திஜி கைக்கொண்ட சாதனம். இவ்விதம் எதிராளியின் மனச்சாட்சியைக் கிளறுமுன் நமது மனச்சாட்சியைச் செம்மையாகச் செயல்படுத்த வேண்டியிருந்தது. இதனால்தான் அவர் நம்முடைய சகோதரர்களில் சிலரைத் தீண்டாதாராக நடத்தும் பாபத்தை நாம் உணருவதற்கு முயற்சி மேற்கொண்டார். 'பலம் படைத்தவர்கள் பலவீனமானவரை அடக்கி ஒடுக்கிப் பயன் பெறுவது பாபம்; எனவே பிரிட்டிஷார் நம்மை அடக்கி ஆள்வது நிற்கவேண்டும்' என்று நாம் விரும்பியபோது, தீண்டாதாரை அடக்கி நாம் பயன் பெறுவதை நிறுத்த மகாத்மா முன்நின்றார். தீண்டாதாரை இறைவனின் குழந்தைகள், ஹரிஜனங்கள் என்று அழைத்தார்.

சுயராஜ்ய மாளிகையின் நான்கு தூண்களாக அவர் பின் வருபவற்றைக் கருதினார்:

(1) மதுவிலக்கு: இது மக்களின் சிந்தனையைத் தெளிவு செய்வது; மனச்சாட்சியை விழிப்புடனும், செயல் துடிப்புடனும் இருக்கச் செய்வது; எதற்கு முக்கியத்துவம் தர வேண்டும் என்ற நல்லுணர்வை ஊட்டுவது.

(2) தீண்டாமை ஒழிப்பு: நமது சகோதரரேயான பலவீனமான சமூகத்தினரைச் சுரண்டி வாழும் பாபத்திலிருந்து இது நம்மை விடுவிக்கும்.

(3) கதர் உடுத்துவது: மக்கள் சோம்பியிராமல் தங்கள் சக்தியை நூற்பதில் செலவழிப்பர். கையால் நூற்கிற தொழிலாளி உழைப்பின் பலனில் பெரும் பகுதியை இன்னொரு முதலாளியிடம் பறிகொடுக்காமல், தானே உழைப்பின் பயனைப் பெறுகிறார். முதலாளிகளும், தொழில் நுணுக்கப் படிப்புப் படித்தவர்களும் பெரிய அளவில் அமைத்த உற்பத்தியைத் தங்கள் ஆதிக்கத்தில் வைத்துக் கொண்டிருக்கும் போது, கதர், நெசவு முதலிய குடிசைத் தொழில்களைச் சாதாரணக் குடிமகனுக்காக காந்திஜி ஆதரித்தார்.

(4) சமூகங்களிடையே ஒற்றுமை: அனைவரும் ஆண்டவனை நம்பி, எல்லா மதங்களையும், மதஸ்தரையும் மதித்து ஒற்றுமையாக ஒழுக வேண்டும் என காந்திஜி கருதினார். மதத் தத்துவங்களைப் பற்றிப் பூசலிடாமல் அவரவரும் தம் மத உண்மைகளைப் பின்பற்ற வேண்டும் என்றார். ஒற்றுமையே பலம் என்ற மூதுரையின் மதிப்பைச் சுதந்திர இயக்கத்தில் நம் அனைவரையும் ஒரே இலட்சியத்தில் ஒன்றுபடுத்தியதன் மூலம் நிரூபித்துக் காட்டினார்.

இந்தச் சுதந்திர இலட்சியத்துக்கு நம்மை அழைத்துச் சென்ற பின், அதாவது இருபத்திரண்டு ஆண்டுகளுக்கு முன், காந்திஜி நம்மிடமிருந்து பிரிந்து சென்றார். பிரிட்டிஷார் வெளியேறியபோது தில்லியில் ஆனந்தக் கொண்டாட்டமாக இருந்தது. ஆனால் நம் விதியை நிர்ணயித்த அன்றைய தினம் 'தேச பிதா'வோ கல்கத்தாவில் ஓர் இடிந்த வீட்டில் பிரார்த்தனையுடனும் உபவாசத்துடனும் சிந்தாகுலராக இருந்தார். நம்முடைய அஹிம்சையானது தீரர்களின் அஹிம்சை அல்ல என்று உணர்ந்து வருந்தினார் அவர். பலசாலி மேற்கொள்ளும் அஹிம்சையில் தோல்விகிடையாது. பிரிட்டிஷாரிடம் நாம் வன்முறை காட்டாமல் அஹிம்சை வழியில் போராடியதற்குக் காரணம் நமக்கு வேறு கருவி இல்லாததே. பிரிட்டிஷாரின் பிடி தளர்ந்து நமக்குச் சக்தி வந்தவுடன் ஹிம்சை முறையை மேற்கொண்டு, சகோதரர்களைக் கொல்வதில் இறங்கி விட்டோம். இப்படித்தான் காந்திஜி கருதினார். சுதந்திரப் போராட்டம் பலவீனர்களின் அஹிம்சையாகவே ஆகிவிட்டது என எண்ணினார். இனி சுதந்திர இந்தியாவில் சமயம், மொழி, ஜாதி, சமூகம் பிரதேசம் என்ற அடிப்படைகளில் வன்முறை தலைதூக்கியபடி இருக்கும் என்று அன்றே தீர்க்க திருஷ்டியுடன் கண்டார் காந்திஜி.

ஒளி விளக்கை நமக்குள்ளேயே திருப்பிக் கொண்டு நமக்கும், நம் நாட்டுக்கும் நமது மரபுக்கும் சத்தியமாக வாழ்வதற்கு இந்த நூற்றாண்டு உரிய தருணமாகும்.

காந்தி நூற்றாண்டில் கருத்தரங்குகளும், வாசகர் வட்டங்களும், ஆராய்ச்சி உரைகளும், நாடகங்களும், கண்காட்சிகளும் நடத்த ஏற்பாடாகியுள்ளது. தேச பிதாவின் வாழ்க்கை, உபதேசம் இவற்றைக் கண்ணுக்கு முன் காட்டவும் ஏற்பாடுகள் செய்துள்ளோம். செப்டம்பர் 6ந் தேதியன்று ராமேசுவரத்திலிருந்து 'காந்தி தரிசனம்' என்ற மீட்டர்கேஜ் ரயில் வண்டி விடப்பட்டது. இதேபோல் பிராட்கேஜ் வண்டியொன்று அக்டோபரில் அமிருதசரஸிலிருந்து விடப்படுகிறது. வன்முறைக்குப் பெயரெடுத்த பட்டாணியரை அஹிம்சை இயக்கத்தில் திருப்பி, எல்லை காந்தி என்று பெயர் கொண்ட கான் அப்துல் கபார் கான் புது தில்லியில் காந்தி தரிசனக் கண்காட்சியைத் திறந்து வைக்கிறார்.

இவற்றையெல்லாம் செய்வதற்குக் காரணம், இதன் விளைவாக நம் தலைமுறையிலும் இளம் தலைமுறையிலும் ஒருசிலரேனும் காந்தி மார்க்கத்தில் திரும்பிச் செயல்பட ஊக்கம் பெறுவர் என்ற நம்பிக்கைதான். காந்தி மார்க்கம்தான் நம்மை அரசியல் சுதந்திரத்துக்கு இட்டுச் சென்றது. அதுவே நம்மைப் பொருளாதார — சமூக சுதந்திரத்துக்கும் இட்டுச் செல்லும்.

முன்னெப்போதையும் விட இன்றே இந்தியாவுக்கு மகாத்மாவின் உபதேசம் மிகவும் தேவைப்படுகிறது. பல சாலைகள் கூடும் சந்திப்பில் நிற்கிறோம். எந்தப் பாதையை இனி பின்பற்றப் போகிறோம் என்பது கேள்வி. ஒருபுறம் சுதந்திர ஜனநாயகம்; மறுபுறம் ஏதோ ஒரு ரூபத்தில் அமைந்த சர்வாதிகாரம். இந்தியாவுக்கு இன்று சர்வாதிகாரமே தேவை என்று சிலர் எளிதாகச் சொல்கிறார்கள். நாம் ஜனநாயகத்துக்குத் தகுதி பெறவில்லை என்கிறார்கள். அவர்களிடமிருந்து நான் மரியாதையுடன் மாறுபடுகிறேன். மகாத்மா அன்பினால் எல்லாரையும் ஆட்கொண்டதை வேண்டுமாயின் 'ஏற்கத்தக்க சர்வாதிகாரம்' எனலாம். அது மனிதர்களின் சிறப்புப் பண்புகளை வெளிப்படுத்த உதவிய 'சர்வாதிகாரம்'. மனிதர்களின் இதயத்தைத் தொட்டு அவர்கள் தாமாகவே நேர்மை வழியில் நடக்கச் செய்தவர் காந்திஜி. அன்பின் பிணிப்பு சுதந்திரத்தை வளர்க்குமே யன்றி நெரிக்காது. அது ஜனநாயகத்துக்கு உண்மையான வெற்றியை ஈட்டித் தருவது. மற்ற எல்லா விதச் சர்வாதிகாரங்களும் நம்மை நாசத்துக்குத்தான் இட்டுச் செல்லும். காந்தி மார்க்கத்துக்கு நாம் திரும்ப வேண்டும் எனில், இன்று நம் நடத்தையில் காணும் நெருக்கடி நிலைமையைக் கடக்க வேண்டும். நன்னடத்தைக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியே சுதந்திரத்தை வளர்க்கவும், பொது மக்களை உயர்த்தவும் செய்கின்ற முயற்சிகளை நிஷ்பலனாக்குகிறது.

உண்மையான மனிதனாக ஆனாலொழிய நாம் உற்பத்தியைப் பெருக்க முடியாது. அப்படியே பெருக்கினாலும் அதைச் சமநீதிப்படி பகிர்ந்து தர முடியாது. எனவே தனக்கென ஒருவர் எப்படி உழைப்பாரோ, அதே போலத் தேசத்துக்காகவும் கடுமையாக, நேர்மையாக உழைக்கும்படி மக்களின் சிந்தனையை மாற்ற வேண்டும். தனி முதலாளிகள் தங்களது தொழிலகங்களுக்குச் சொந்தக்காரர்களாக இருக்கும்போதே, தர்மகர்த்தர்போல் தேச நலனுக்காகச் செல்வத்தைப் பயன்படுத்த வேண்டும்என உணருமாறு செய்ய வேண்டும். தொழிலாளியும் ஒரு மூலதனமே என்பார் காந்திஜி. முதலாளி பணம் போடலாம்; ஆனால் உழைப்பைப் போடுவது தொழிலாளியே. இருவருமாகச் சேர்ந்து உற்பத்தி செய்ய வேண்டும். அப்படி உற்பத்தி செய்த செல்வத்தைத் தேசத்தின் மேம்பாட்டுக்குப் பயனாக்க வேண்டும். இதுதான் உண்மையான சோஷலிஸம்—அல்லது சர்வோதயம். இதுவே சர்க்கார் துறை தொழிலகங்களுக்கும் பிற நிர்மாணத் திட்டங்களுக்கும் பொருந்தும். நேர்மையும் ஒழுக்கமும் உள்ள மனிதர்களே இவற்றின் வெற்றியை உறுதிப்படுத்த முடியும்.

ராமேசுவரத்திலிருந்து காந்திதரிசன ரயில் விடப்பட்டதில் மிகவும் பொருள் பொதிந்துள்ளது. வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு ஆகிய எல்லாத் திசை யாத்திரிகர்களையும் ஒன்று சேர்த்துத்தேச ஒருமைப்பாட்டுக்கு முக்கியமான பணி புரியும் பதி ராமேசுவரம். ராமேசுவரத்தில்தான் சுவாமி விவேகானந்தர், 'ஏழைகளுக்கும் பலவீனர்களுக்கும் பிணியாளருக்கும் சேவை செய்வதும் மனித குலத்திடம் அன்பு புரிவதுமே உண்மை மதம்' என்று இலக்கணம் கூறினார். அங்குள்ள புகழ்பெற்ற ஆலய வாயிலில் இவ்வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது. இந்தத் தத்துவத்தையே காந்தி மகான் தம் வாழ்நாள் முழுவதும் செயலாக்கினார்.

தெற்கேயிருந்து தோன்றிய சங்கரர்தான் அத்வைத உபதேசத்தை அகில பாரதத்துக்கும், அகில உலகத்துக்குமே பரப்பினார். இந்தியாவின் மற்றப் பகுதிகளை விடச் சிறப்பாக நமது மரபையும், வாழ்க்கைச் சிறப்புகளையும் காத்து வருவது தட்சிணமே. பரத நாட்டியம், சாஸ்திரீய சங்கீதம், சம்ஸ்கிருதக் கல்வி, சாஸ்திர ஞானம், எளிய உடை—இப்படி இந்தியப் பண்பின் அம்சங்கள் எல்லாவற்றிலும் தமிழ் நாடு சிறந்து விளங்குகிறது. இதை யெல்லாம் காணும்போது, ராமேசுவரத்திலிருந்து தற்போது காந்தி தரிசன ரயில் கிளம்பி யிருப்பதால், அங்கிருந்தே காந்தியத் தத்துவங்களின் மறுமலர்ச்சியும் தொடங்கலாம் என நம்புகிறேன். எளிய வாழ்க்கை — சீரிய சிந்தனை; உரிமைகளை விடக் கடமைகளைப் பெரிதாக மதிப்பது; உபதேசிப்பதை விடக் காரியத்தில் செய்து காட்டுவதை முதலாவதாகக் கருதுவது; பிறர் நம்மிடம் எப்படி நடக்க வேண்டும் என்று எண்ணுகிறோமோ அவ்வாறே பிறருக்கும் நாம் செய்வது — இவையே காந்தீயத் தத்துவங்கள். இவை ராமேசுவரத்திலிருந்து நாடெங்கும் பரவிப் புதியதொரு சுபிட்ச யுகத்துக்குக் கட்டியம் கூறுமாக!

காந்திஜியும், கஸ்தூரி பாவும், அவர்களுக்கு முன்னரே பல மகான்களும் நமக்கு விட்டுச் சென்றுள்ள மகத்தான பாரம்பரியச் செல்வத்தின் மதிப்பை நாம் உணர்ந்து, அதன் வாரிசுகளாக இருக்கும் தகுதியைப் பெறுவதற்கு ஆண்டவன் நமக்குச் சக்தி அளிப்பாராக!

- தமிழாக்கம்: 'ராகபதி'

## மகாத்மா மணிமொழி

பயங்கொள்ளித்தனம் அல்லது பலாத்காரம் இந்த இரண்டில் ஒன்றுதான் என்ற நிலை உருவாகுமானால் அப்போது பலாத்காரமே மேல் என்று நான் சொல்வேன்.



ஆனால் அஹிம்சை என்பது பலாத்காரத்தைவிட மிக மேலானது என்று நம்புகிறேன். அதாவது அஹிம்சா மார்க்கத்தைப் பின்பற்றும் ஒருவனிடம் உள்ள சக்தி பலாத்காரத்தைப் பிரயோகிக்கும் ஒருவனிடம் உள்ள சக்தியை விட உயர்வானது.

மன்னிப்பது என்பது தண்டிப்பதைவிட அதிக பௌருஷமுடையதாகும். மன்னிப்பு என்ற குணம் வீரனுக்கு அணிகலன். ஆனால் தண்டிக்கக்கூடிய சக்தி இருக்கும்போது தண்டிக்காமல் இருப்பதுதான் மன்னிப்பதாகும். கையாலாகாத ஐந்து தான் மன்னிப்பதாகச் சொல்வதில் பொருள் இல்லை. எலி தன்னைக் கிழித்துப் போட பூனையை அனுமதிக்கும் போது பூனையை மன்னித்து விட்டதாகச் சொல்வதில் என்ன அர்த்தம்?


ஸ்படிகம்
"மகரிஷி"

சில சமயத்திலே நான் செஞ்சது தப்பா இருக்குமோன்னு வியாகூலப்படறேன். அந்த வியாகூலம் விசுவோட மூஞ்சியைப் பார்க்கறச்சே ஜாஸ்தியாகிறது.

பெரியவா அடிக்கடி சொல்லுவா பாத்திரமறிஞ்சு பிச்சை இடுன்னு. நான் அதை முதல்லே கவனிக்காம விட்டுட்டேனோன்னு எனக்குள்ளே நானே நெனைச்சுப் பாத்துக்கறேன். சில சமயம் தப்பாத் தோணற அதே விஷயம் சில சமயம் குழப்பமாத் தோணறது. சில சமயம் மலைப்பா வந்து உடம்பை அப்படியே ஜில்லிட வைச்சுடறது.

என்னோட வயசுக்கு எனக்கு இந்தக் கொடுமையான தண்டனை ரொம்ப அதிகம் தான் ! அதிகம்தான் !

இதைப் போய் நான் யார்கிட்டே சொல்லிக்க முடியும்? யார் கேக்கத் தயாரா இருக்கா ! நானே சொல்லிண்டாத்தான். இல்லேன்னு இருட்டிலே சில சமயம், கர்ப்பக்கிருக விளக்கிலே ஒளிஞ்சுண்டு கண்ணு மூச்சி காட்டற மாதிரி தானும் வெளிச்சத்துக்கு வராமே மத்தவாளையும் வர விடாமே காபந்து செஞ்சுண்டு நிக்கறானே ஆண்டவன் அவன்கிட்டேதான் மானசிகமாச் சொல்லிப் புலம்பறேன். வாயிருந்து பேசறவாளைவிட, கண் இருந்து பார்க்கறவாளைவிட, காது இருந்து கேக்கறவாளைவிட, அசைவே இல்லாமே ஏதோ ஒரு அபூத சக்தியைப் பிரபஞ்சம் முழுதும் புகையாட்டமா பறக்க விட்டுட்டு நிக்கறானே அவன்கிட்டே சொல்றதிலே ஒரு திருப்தி. ஒரு மன சந்துஷ்டி.

அவன் வருவானோ !

அவன் வருவானோன்னு யார்கிட்டேயும் போய் நான் கேட்கிறதில்லே. இந்தக் கேள்வியையும் அந்த 'அவன்'கிட்டேதான் போய்க் கேக்கறேன். மன ஆறுதலுக்காக எனக்கு நானேகூட அவன் என்னிக்கானும் ஒரு நாள் வருவான்னு சொல்லிக்கத் தைரியம் வரமாட்டேங்கிறதே! அவன் நிச்சயமா வருவான்னு உள்ளுக்குள்ளேயே நினைக்கக் கூடத் திராணியில்லையே ! அது ஏன்?

அஞ்சு வயசு விசு அதோ கண்ணை மட்டும் மூடிண்டு படுத்துண்டு இருக்கான். அவன் இன்னும் தூங்கலே. வெளியே கொட்டிண்டு இருக்கிற மழையோட சத்தத்தை ரசிச்சுண்டு இருக்கான். அவனுக்கு வாழ்க்கையோட ஏத்த இறக்கம் பத்தியோ, மனசோட தன்மை பத்தியோ ஒண்ணும் தெரியாது. நித்தியம் ராத்திரியிலே தூக்கம் வரலேன்னு ஏதாவது கதையொண்ணு சொல்லு பாட்டிங்கிறச்சே நான் சொல்லுவேனே ஒரு ராஜா ராணிக் கதை, அதுவே தான் வாழ்க்கைன்னு நெனைச்சுண்டு பிரமிக்கப் போற வயசு. மனசோட விகசிப்பே இல்லாத சின்ன மொட்டாட்டமா அவன்.

அம்மாப் பொண்ணை பாக்கறச்சேயெல்லாம் என்னோட அடி வயத்திலே முட்டி மோதி அடக்க முடியாமல் ஒரு வேதனை கிளம்பறதே அதுகூட அவனுக்குத் தெரியாது. விசுவையும் அம்மாப் பொண்ணையும் பார்த்து மனம் கசந்து இப்படி ஒரு பந்தமில்லையேன்னு நான் எந்தத் தெய்வத்துக் கிட்டே போயும் கையேந்தி நிக்கலேயேடி பாவி, உன்னைப் பாக்காம இருக்கறச்சே உன்னைத் திட்டற இதே மனசு உன்னை நேரே பாக்கறபோது அப்படியே இளகிப் போய் விடறதே! உன் மூஞ்சிலே அப்படியென்ன தான் மாயம் வச்சு இருப்பே !

அவன் வருவானோ !....

கடவுளே! அவன் வருவானோ!

வெளியிலே மழை நன்னு பளிச்சுனு விட்டுடுத்து. தெருவோரத்திலே அரிச்சிண்டு ஓடற மழைத் தண்ணியோட சத்தம் மட்டும் கேக்கறது. அப்பப்போ அடிக்கற காத்திலே மரம் அசஞ்சு தண்ணி உதிர்கிற சத்தமும் கேக்கறது. இதைத் தவிர வேறே சத்தமே இல்லே. எட்டு மணிக்கு மேலே என்னிக்கானும் அக்கிரகாரத்திலே சத்தம் கேக்குமா ?

எதிர்த்தாத்துக் கோபாலாச்சாரி வெத்தலையைப் போட்டுண்டு காரி காரித் திண்ணையோரத்திலே துப்பற சத்தமும், ரெண்டு விடு தள்ளி இருக்கற அஜிப்பாட்டி வெத்தலையை இரும்பு உரல்லே போட்டு இடிக்கற சத்தமும், கோடிலே இருக்கும் கக்கரை கர்ணம் வெங்கிட்டுவாத்து வாசல் குறட்டிலே அரிக்கேன் விளக்கை வச்சுண்டு சீட்டு வெளையாடறானே, அவா நடு நடுவிலே திடீர் திடீர்னு ஏதானும் சத்தம் போடுவா. அதுவும் சில நாளைக்குத்தான் கேக்கும். அதுவும் இல்லாத நாளிலே இப்படித்தான் நிசப்தமாகவே இருக்கும்.

மழை நின்னு காத்து வீச ஆரம்பிச்சுடுத்து. வாசக் கதவைத் தெறந்தால் தூரல் காத்து வீசறது. ஆத்து வாசலை ஒட்டினாப் போல் முனிசுபாலிடி சிமெண்ணெய் விளக்குக் கம்பம் நிக்கறது. இந்தக் காத்துலேயும் மழையிலேயும் அது இன்னுமா எரியும் ? ஒருக்களிச்சாப் போல் கதவைத் தெறந்துண்டு வெளியே எட்டிப் பார்க்கறேன். பெரிய திண்ணை காலியா வெறிச்சோடித் தெரியறது. மனசும்கூட. சூனியப்பட்டாப் போல அலையறதே. அவன் இங்கேதானே படுத்துண்டு கெடப்பான். தலையிலேருந்து கால் வரையிலே ஒரு சோமனை இழுத்துப் போத்திண்டு உருவம் தெரியாத மூட்டை மாதிரி.

'யக்ஞம்... யக்ஞம்... தூங்கிட்டியாடா!'- அப்படின்னு கேப்பேன். அவன் பதில் சொல்லாமத்தான் இருப்பான். 'தூங்கிட்டான் போல இருக்கு'ன்னு சொல்லிட்டு உள்ளே வருவேனே. இப்போ அவன் இல்லே! அவன் இல்லே!

அக்கிரஹாரம் இருட்டிலே மிதக்கறது. தெருவிலே யார் யாரோவெல்லாம் மெதுவாவும் வேகமாவும் போறா. யாருன்னு தெரிஞ்சுக்க முடியலே. வண்ணாரத் தெரு திடல்லே போட்டு இருக்கற சாரதா டூரிங் டாக்கீஸிலேருந்து சினிமாப் பாட்டு சத்தம், காத்திலே கிட்டே வந்து கேக்கறது. திடீர்னு பாட்டுச் சத்தம், அழற சத்தம், கத்தற சத்தம், குழந்தை அழற சத்தம், இப்படி என்னென்னமோ !

மனசு மெதுவாப் பின்னால் திரும்பறது. எப்பவோ எத்தனையோ வருஷத்துக்கு முந்தி உண்டான ஏதோ ஒரு சூழ்நிலையோட ஒத்துமையாட்டமா இருக்கு. இதே போல ராத்திரி இதுக்கு முன்னாலே வந்த மாதிரி

தோணறது: ஆமாம்... அதே ராத்திரிதான்......

''இங்கே படுத்துக்கக் கொஞ்சம் எடம் தருவேளா?'' சின்னக் குரலா கேக்கறது. முகம் சரியாத் தெரியலே. யாரோ அறிஞ்சிங்கற முடிவோட சம்மதம் தந்துட்டுக் கதவைச் சாத்திண்டு உள்ளே வந்துட்டேன்.

விடிஞ்சு கதவைத் தெறக்கறச்சே வாசல் திண்ணையிலே அவன் இல்லே!

யாரோ வழிப்போக்கன் போல இருக்குன்னுதான் நெனைச்சுண்டு சும்மா இருந்தேன்.

மொதல் நாள் ஏகாதசி. அன்னிக்கு துவாதசி. சாப்பிடப் போறப்போ அவன் கோல வாசல்லே வந்து நின்னான்.

தலையிலே தெறய முடி! எதுத்தாத்துச் சுப்புணி யாட்டமான்னு வச்சுக்கோங்களேன். நல்ல ஒசரம். கண்ணெல்லாம் இடுங்கிப் போயிருந்தது. அழுக்கான வேஷ்டி கட்டிண்டு கிழிஞ்சு போன துண்டு ஒண்ணை மேலே போட்டுண்டிருந்தான். பாக்கறதுக்கு, புழுதி படிஞ்ச மைல் கல்லு தெருவோரத்திலே நிக்குமே அதுபோல. இருந்தாலும் முகத்திலே நல்ல தேஜஸா இருந்தது.

'ராத்திரி இருட்டிலே முகம் தெரியாம வந்து நின்னு படுத்துக்க இடம் கேட்டவனா இவன்' அப்படின்னு நெனச்சேன்.



## அவர் அச்சம்!

காந்தியடிகளைப் பத்திரிகை நிருபர்கள் சூழாத நாள் கிடையாது. அவர்களுக்குப் பதில் சொல்லிச் சொல்லி அலுக்கிற சில சமயம் அலுப்புத் தட்டி விடும். ஆனால் அந்த அலுப்பையும் கேலிச் சுவை ததும்பவே வெளியிடுவார்.

ஒரு சமயம் பகுத்தறிவு வாதத்தில் ஊறிய நிருபர் ஒருவர் காந்திஜியைப் பேட்டி கண்டார். ''பாபுஜி! தங்களுக்குச் சொர்க்கத்தில் நம்பிக்கை உண்டா? இறந்த பிறகு தாங்கள் சொர்க்கத்துக்குத் தானே போவீர்கள்?'' என்று பேச்சுவாக்கில் ஒரு கேள்வியைப் போட்டார்.

காந்தியடிகளுக்கு அவர் கேள்வியில் உள்ள குத்தல் தெரியாமல் இருக்குமா? சட்டென்று பதில் சொன்னார்: ''நான் சொர்க்கத்துக்குப் போவேனோ, நரகத்துக்குப் போவேனோ தெரியாது. ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். நான் சொர்க்கத்துக்குப் போனாலும், அதை நரகமாக்க உங்களைப் போன்ற பத்திரிகையாளர்கள் கையில் டயரியுடன் அங்கே காத்திருப்பீர்களோ என்றுதான் அச்சமாயிருக்கிறது.''

-- விஷ்ணு

கோலம் போடற வாசல்லே வந்து நின்னவன் என்னையே பார்த்துண்டு இருந்தான்.

''என்னப்பா, வேணும் ஒனக்கு? ஏன் இப்படிக் கூர்ச்சமா நிக்கறே?'' அப்படின்னு அதட்டலாகத்தான் கேட்டேன். பேசறதுக்குக்கூடத் திராணியில்லே அவன்கிட்டே. வாயையும் வயித்தையும் காண்பிச்சான்.

அன்னிக்குத் துவாதசி வேறயா? அதிதிக்குப் போட்டுட்டுப் பாரணை பண்ணினால் புண்ணியமுண்டு. அவனைப் பார்க்கறதுக்குப் பிராமணனாத் தோணித்து. மனசு ரொம்ப வேகமா இளகிண்டு வந்துடுத்து. கொல்லையிலே இருந்த வாழைக் கன்னுலேருந்து எலையை அறுத்துண்டு வந்து அவனை ரேழியிலே ஒக்காத்தி வச்சுச் சாதம் போட்டேன்.

நான் என்னிக்குமே கொஞ்சம் கடுமையானவதான். அக்கிரகாரத்திலே இருக்கிறவா அதிகமா என்கிட்டே எதுவும் வச்சுக்க மாட்டா. நானும் அவாகிட்டேயெல்லாம் ஒண்ணும் வச்சுக்கறதில்லே. என்னைக் கருமி, முசுடு, சிடு சிடுப்பும்பா! எல்லாம் எனக்குத் தெரியும். அதுக்கெல்லாம் நான் என்னைப் பொறுத்த வரையிலே பெரிசா நெனைச்சுண்டு வருத்தப் படறதில்லே! எனக்கு யாராலேயும் ஏதும் ஆகணும்கறது மில்லே. சாலிய மங்கலத்திலே பாண்டிக்கோட்டாட்டமா கொஞ்சம் நெலம் உண்டு. வருஷமானா முப்பது நாப்பது கலம் நெல்லை அதைப் பாத்துக்கற உத்தாண்டி ரெண்டு வண்டியிலே கொண்டு வந்து குதிரிலே கொட்டி மூடிட்டுப் போயிடுவான். ரெண்டு அங்கண மண் வீடு. பூர்வீகமஞ்சக்காணி கொல்லைக் கோடியிலே ரெண்டு பெரிய புளிய மரம். மாசி, பங்குனியிலே சடை சடையாப் பழுத்துத் தொங்கும். அந்த வழியாப் போற பள்ளிக்கூடத்துப் பசங்க கல்லை விட்டெறிஞ்சு சோட்டான்களைக் கொலை கொலையா அடிச்சு உலுக்காமப் பாத்துண்டா, ரெண்டு மரத்துலேயுமா ரெண்டு 'போர்' புளியம் பழம் 'வேன்' எடுக்கலாம். அதை அப்படியே சுப்பிரமணிய குருசான்கிட்டே சாக்கிலே மூட்டை மூட்டையாக் கட்டச் சொன்னா ஒவ்வொரு குலுக்கலுக்கும் ரெண்டு மூணு சாக்கு தேறும். அப்படி நாலைஞ்சு தரம். கைச் செலவுக்குப் பணம் போக மீதி இருக்கும். நான் யாருக்கும் கை மாத்துத் தரதில்லே! வாங்கிண்டு போனா எங்கே திருப்பித் தரா? கேட்டால் பொல்லாப்பு! இதுக்கோசரமே நான் யாருக்கும் கொடுக்கறதில்லே! கொடுத்தா உறவு. கேட்டா பகை. இதென்ன ஜனமோ. விவஸ்தை கெட்டதுகள். விதரணையில்லாத ஜென்மங்கள். அதுக்காகத்தான் அவா உறவும் வேண்டாம். அவா பகையும் வேண்டாம்னு விட்டேத்தியா இருக்கேன். எதையோ சொல்லிண்டு வந்தவ எங்கேயோ போறேன் போல் இருக்கே. விஷயத்துக்கு வரேன்.

மொதல் நாள் திண்ணேலே படுக்க இடம் கேட்டான். அடுத்த நாள் வயத்துக்குச் சாப்பிடக் கேட்டான். இந்த ரெண்டு நாள் பரிச்சயத்திலே அவனைப் பத்தி என்ன தெரிஞ்சுண்டுட முடியும்? தெருவோட போற பரதேசி மேலே இருக்கற அக்கறைகூட

அவன் மேலே உண்டாக வழியில்லேதான். ஆனா அந்த மூணாவது நாள்தான் முக்கியம். சோர்ந்து போய்த் தெருவோரமா குருக்களாத்துத் திண்ணையிலே ஒக்காந்து இருந்த வனை நான் ஏன் வலுவிலே கூப்பிடணும்? ஆண்டவனோட மாயக் கயித்தோட இழை எங்க ரெண்டு பேரையும் இட்டப் பிடிச்சு இழுத்துக் கட்டத்தான் காத்துண்டு இருக்கே! அதெங்கே இந்த ஊனை ஜென்மத்துக்குப் புரியுது.

நான் வெளியே வந்து நின்னு திண்ணையடியிலே ஒக்காந்துண்டு இருக்கிற அவனைப் பார்த்தேன். அதைத்தான் அவன் எதிர் பார்த்துண்டு இருந்த மாதிரி எழுந்திருந்துட்டான். தயங்கி நின்னவனைக் கையை அசைச்சுக் கூப்பிட்டேன். சிரிச்சுண்டே வந்தான். பலகாயிக்கு அடியிலே பாரமா வச்சு இருந்த சர்க்கிளுலே தெச்ச வாதா இலையில் சாம் பார் ரஸம், கூட்டு எல்லாத்தையுமா போட்டுப் பெசஞ்சு ஒரு பெரிய சாத உருண்டையை வச்சேன்.

''இதான் இருக்கு. சாப்பிட்டுட்டு, ரெண்டு கரிப் பாத்திரம் இருக்கு. தேச்சு வச்சுட்டுப் போ....'' தலையை மட்டும் ஆகட்டும் செய்யறேன்ங்கிற மாதிரி ஆட்டிக் காட்டிண்டே அவரி அவரின்னு சாப்பிட்டான். அந்த வேகம் அவனோட பசியைக் காட்டித்து.

இந்த மூணாவது நாள் ரொம்ப முக்கியம்னுதானே சொன்னேன். ஆமாம்! ரொம்ப முக்கியம்தான்.

நான் கரியேறின பாத்திரத்தை மட்டும்தான் தேச்சுக் குடுக்கணும்னேன். அவனோ கிணத்தடியிலே இருந்த கங்காளத்திலே மடமடன்னு ஜலம் இறைக்கக் கொட்டிட்டான்.

'வேறே ஏதானும் வேலை இருந்தா சொல்லுங்கோ, செஞ்சு தரேன்'னுன். என்னோட இந்தத் தள்ளாத நாளிலே இப்படியொரு வார்த்தையைக் கேக்கறத்துக்கே நாதியில்லாமப் போயிட்ட எனக்கு அவனோட வார்த்தை ஏதோ புதுசா ஒரு தெம்பு உண்டாக்கற மாதிரி தோணித்து.

குதிர்லேருந்து ரெண்டு கலம் நெல் எடுத்து வச்சுப் புதனோட புதன் எட்டு நாளாகப் போறது. பச்சைக் குளக்கரை மிஷின்லே கொண்டு போய் அரைச்சுக் குடுக்கறேன்னு சொல்லிட்டுப் போன மாரியம்மாளை நாலு நாளாக் கண்ணிலேயே காணலே. தலையா மங்கலத்துலே யாரோ பங்காளிக்காரி செத்துப் போயிட்டான்னு



எழவுக்குப் போறளாம். அவ வர மட்டும் நான் காத்துண்டு இருக்கணுமா ?

வேறே ஏதானும் வேலை இருந்தால் சொல்லுங்கோன்னு அக்கறையோட கேக்கறானே, கூடக் கூட்டிண்டு போய் நானே பக்கத்திலே இருந்து அரைச்சண்டு வந்துட்டா என்னன்னு யோசிச்சேன். அதுதான் சரின்னு பட்டுது.

அவன்கிட்டே எப்படிக் கேக்கறதுன்னே பயமா இருந்தாலும் கேட்டுட்டேன்.

வாயே பேசாமல் சரின்னுட்டான்.


ரெண்டு நடையா கோபாலாச்சாரியாத்து கொல்லைப் புறச் சந்து வழியாகத் திரும்பிச் சிவன் கோயில் மதிலோரமாப் போனா மிஷினுக்குச் சீக்கிரமா போயிடலாம்னு வழியைச் சொல்லித் தந்தேன். அதான் மிஷினோட சத்தம் 'ஜங்..... ஜங்....'னு எட்டு ஊருக்குக் கேக்கறதே. வழி காட்டிண்டு போகணுமா என்ன?

அவன் செஞ்ச இந்த ஒத்தாசை நல்ல சமயத்துக்கு உதவினது. மனுஷா மேலே ஒரு அன்பும் அபிமானமும் விழணும்னா இந்த மாதிரி சமய சந்தர்ப்பத்திலேதானே 'விழும்?

மனசுக்கும் செய்கைக்கும் சம்பந்தப்படற மாதிரி பொருந்தி வந்தாத்தானே ஒரு மனுஷாளைப் பத்தி நாம எடுத்துக்கற முடிவு சரியா யிருக்கும்?

அவனோட அடக்கமான குணம் உதவி செய்யறேன்னு கேட்டுட்டுத் தேவையானதைப் பதவிசா செஞ்சு குடுத்த அழகு அவன் மேலே எனக்கொரு தனி வாஞ்சையை உண்டாக்கிக்க இதுவே போறும்னு தோணித்து.

அவனுக்காக நான் எதுவும் சமைக்கிற தில்லேதான். அது நாலு நாளைக்கு முந்தி வரை அப்படி. இப்போ நாலாவது



நாலுக்கப்புறம் ஒலையிலே அரிசியைக் களைஞ்சு போடறபோது எனக்குள்ளே ஒரு சின்னத் தயக்கம் தட்டறது. எப்போதும் போல அரிசி போடறேனே! அவனுக்கும் போறும் படியா இருக்குமா?

ரெண்டு பிடிக்கப் பிடி அரிசி ஜாஸ்தி போடறேன். சாதம் எப்போதும் போல வெங்கலப் பானைக்கு உள்ளே இல்லாமே கழுத்துக்கு மேலே வருது.

அவனுக்கும் சேர்த்து நான் ஏன் சாதம் வடிக்கணும்....?

ஏன் வடிக்கணும்?

யார்கிட்டே போய்க் கேக்கறது? எனக்கு நானே கேட்டுண்டாத்தான் உண்டு.

அவனே ராத்திரியிலே திண்ணையிலே வந்து சுவாதீனமாப் படுத்துக்கறான்.

கார்த்தாலே இருட்டோட எழுந்திருந்து வாசலுக்குச் சாணி தெளிக்கறான். மண் திண்ணையைச் சாணம் போட்டு மெழுகிட றான். ரேழியையும் சேர்த்து மெழுகறான். வாய்க்கால்லே போய்க் குளிக்கறான். ஈரச் சோமனைப் பிழிஞ்சு கட்டிண்டு அப்படியே சிவன் கோயில் பிராகாரத்துக்குப் போறான். அரையிலே . கோமணத்தோட தின்னு. சோமனையும் துண்டையும் பிராகாரத்திலே அடிக்கற காத்திலே உலத்திக்கறான். மட மடன்னு காஞ்ச சோமனை உடுத்திண்டு நந்த வனத்திலே பூத்திருக்கும் நந்தியாவட்டை, மஞ்சரளிப் பூ, செவ்வரளி எல்லாத்தையும் துண்டுலே பறிச்சிண்டு வந்து கோபுர வாசல்லே போட்டுண்டு தொடுக்கறான். ஒரு நாளைக்குப் பிள்ளையாருக்குப் போடறான். ஒரு நாளைக்குச் சுப்பிரமணியருக்குப் போட றான். ஒரு நாளைக்கு நந்தியோட கழுத்திலே போடறான்.

அவனைப் பார்த்துட்டு வரவா ரெண் டொருத்தர் சொல்லிட்டுப் போறா. அவன் அதிகமா ஆரோடேயும் பேசறதில்லையாம்.

"ஒம் பேரென்ன?"

தெச்ச வாதா இலையிலே சாதத்தைப் போட்டுட்டுக் கேட்டேன். நாலஞ்சு நாளுக் கப்புறம்தான்.

"யக்ஞம்."—குனிஞ்சு இலையிலே போட்ட சாதத்தைப் பரிசேஷணம் செஞ்சுண்டே சொன்னான்.

ஆறு பருக்கையை விரல் இடுக்கிலே எடுத்து வாயில் போட்டுண்டு பரிசேஷணத்தை முடிச்சப்போ மறுபடியும் கேக்கறேன்:

"நீ எங்கிருந்து வறே?"

"கும்மோணத்திலேருந்து."

"ஒனக்கு ஆருமில்லயா?"

இல்லேங்கற மாதிரி தலையை ஆட்டுகிறான்.

"எனக்குப் புரியலே, நீ தலையை ஆட்டு றது."

"எனக்கு ஆருமில்லே பாட்டி, நான் அனாதை...அப்பாவுக்கு நடு ரோட்டிலே காக்கா வலிப்பு வந்து கிடக்கறச்சே கார் ஏறிடுத்து. அம்மா அதுக்கு முன்னாலேயே போயிட்டா."

"ஐயோ, பாவம்.... ஆமா, நீ கும் மோணத்திலேருந்து ஏன் வந்துட்டே? அங்கே எப்படிக் காலம் தள்ளினே?"

"என்னோட பூர்வீகம் மாயவரம்? நான் கும்மோணத்திலே ஒரு சாஸ்திரிகளாத்திலே வளர்ந்தேன்."

"வளர்ந்தியா?"

"அப்பா போனப்புறம் அங்கே வந்தேன்."

அதுக்கு மேலே அவன்கிட்டே ஒண்ணும் கேக்கலே. இப்ப இது போறும்னு இருந் துட்டேன்.

போட்டதைச் சாப்பிட்டுட்டுச் சாப்பிட்ட இலையைக் கையிலே சுருட்டி எடுத்துண்டு எழுந்தான்.

சமர்த்துப் பிள்ளையாண்டான். ரொம்ப சுசிதமா நடந்துக்கறான். எப்போதும் நெத்திலே பளிச்சினு விபூதி. நடுவிலே குங்குமப் பொட்டு. தலையிலே அடர்த்தியா குடுமி. அதை அழகாக் கோதி முடிஞ்சிண்டு நிக்கறச்சே பார்க்க அழகாத் தெரியறான்.

சாயரட்சையானு கோயிலுக்குப் போய்க் குருக்களுக்கு ஒத்தாசையா, சன்னதியிலே இருக்கிற வெளக்கையெல்லாம் நன்னு தொடச்சு இலுப்பெண்ணெய் விட்டு ஏத்தித் தரான். அதோட இல்லாம சன்னதியிலே நின் னுண்டு தீபாராதனை நடக்கறச்சே விளக்கு ஸ்தோத்தரம் சொல்றானாம். ஒவ்வொரு நாளும் அவனைப் பத்தி ஒவ்வொரு சாதாரண சமாசாரமெல்லாம் காதுலே விழற போது, மத்தவாளுக்குச் சாதாரணமாப் படற அது எனக்குப் பெரிசாப் படறது. அவனைப் பத்தி ஒருத்தொருத்தர் வாயிலேருந்து ஒண் ணொண்ணு கேட்கறப்போ, அது என் மனசுக்குப் பூரண திருப்தியைக் கொடுக்கிறது. திண்ணையிலே படுத்துக்கறவன்தான். ரொம்ப அதிக உறவு சொல்றத்துக்கு ஒண்ணுமே யில்லே. ஆனா அவனைப் பத்தி மத்தவா பேசறதைக் கேக்கறபோது மனசு சந்தோ ஷப்படறது.

"கும்மோணம் சாஸ்த்ரிகிட்டே எவ்வளவு நாள் இருந்தே?"

"ஒரு அஞ்சாறு வருஷம் இருக்கும்."

"என்ன செஞ்சுண்டு இருந்தே?"

"அவாத்திலே சாப்டுண்டு திண்ணையிலே படுத்துண்டு காவேரியிலே குளிச்சுண்டு இருந் தேன். அவரோட சேர்ந்து பிராமணார்த்தம் பண்ணி வைக்கப் போவேன். மத்த பித்ரு காரியங்களுக்கும் அமாவாசை நாள் கிழமை எல்லாத்துக்கும் கூடப் போவேன். மந்தி ரங்கள் கத்துண்டேன். அவராக் கொஞ்சம் கத்துத் தந்தார். வேதாத்யனத்திலே பரிச்சயம் உண்டாக்கித் தந்தார். நாலு வைதிகாளோட சேர்ந்து சொல்லுவேன். அது ஒரு பெரிய பாக்கியமில்லையா! இந்தச் சாதாரண ஜென்மத்துக்கு அந்த ஸ்ரேயஸ் கிட்டினதே பெரிய அனுக்கிரகமா பாவிக்க கறேன். வேத பாடசாலையிலே கொஞ்ச நாள் சேர்ந்து படிச்சேன். அதுலே விருப்பத்தோட சேர்ந்து படிச்சேன்னு சொல்றது பாவம். வயித்றுப் பாட்டுக்கு அந்த இடம் சொகமா இருந்துது. வேதம் வாயிலே நுழையலே. சாப்பிட்டேன். தொரத்திட்டா! அப்புறம் தான் சாஸ்த்ரியாத்துக்கு வந்தேன். அப் போக்கூட ரொம்ப நாள் அங்கே நெலச்சு இருப்பேன்கற நினைப்பு இல்லே. நாலாங் கிளாஸ் வரைக்கும் படிச்சவனை லோகத்திலே




லிண்டாஸ்-INC-4-149 TM

# கால்கேட் மூலம், வாய்நாற்றத்தைத் தடுத்து நாள்முழுதும் பற்சிதைவை எதிர்த்திடுங்கள்!



**ஏனெனில்:** ஒரே தேய்ப்பில் கால்கேட் டென்டல்க்ரீம் வாய் நாற்றத்தையும் பற்சிதைவை விளைவிக்கும் கிருமிகளையும் 85 சத விகிதம் வரை அகற்றுகிறது.

கால்கேட் 10க்கு 7 பேர்களில் வாய்நாற்றத்தை உடனடியாக அகற்றுகிறதென்றும் உணவு உட்கொண்டஉடனேயே கால்கேட் முறையில் பற்களைத் துலக்குவதால் இது வரை பற்பசை வரலாற்றிலேயே கண்டிராத பேரளவில் ஏராளமானவர்களுக்கு பற்சிதைவு தடுக்கப்படுகிறது என்றும் விஞ்ஞான சோதனைகள் நிரூபித்துள்ளன. கால்கேட் மட்டுமே இந்த நிரூபணம் பெற்றது!

அதன் விந்தைமிக்க பெப்பர்மிண்ட் சுவையே தனி. கால்கேட் டென்டல் க்ரீம் கொண்டு குழந்தைகள்தவறாது பல் துலக்க விரும்புவதில் வியப்பென்ன!




நீங்கள் பற்பொடியை விரும்பினால், இப்பலன்கள் அனைத்தையும் கால்கேட் டூத் பவுடர் மூலம் அடையலாம். ஒரு டப்பா பல மாதங்களுக்கு வரும்.

இன்றே! வாங்குங்கள் ஸுபர் சைஸ்... அது சிக்கனமானது!

தூய்மையான இன் மூச்சோடு வெண்மையான பற்களும் பெறவே... மற்றெந்தப் பற்பசையையும் விட உலகிலே அதிக மக்கள் கால்கேட் பற்பசையையே வாங்குகிறார்கள்.

DC.G.38 TAM

யார் மதிப்பா? எங்கே போனு என்ன கெடைக்கும் ? சவுண்டி சாப்பிடத்தான் லாயக்கு.

''ஆனு ஒரு விசேஷம். கும்மோணம் சாஸ்த்ரிகிட்டே மனசு இலேசா ஒட்ட ஆரம்பிச்சுது. மனசோட கூட ஒரு பிடிப்பும் உண்டான மாதிரி ஒரு பிரமை! அவரோட பெண் கோமளி என் மேலே தனிப் பிரியத்தோட பழகினுள். இந்தப் பிரமைக்கு அங்கே அப்படி என்ன பெரிய அற்புதம் சம்பவிச்சதுன்னு அவரும் என்னை மெல்ல மெல்ல அவரோட தேரிடை சிஷ்யனுட்டமா பாவிக்க ஆரம்பிச்சார்.''

அவனோட கதையைக் கேக்கற நேரம் அவன் சாப்பிட ஒக்கார வரப்பதான்.

அன்னிக்கு ஒரு கேள்வியைக் கேக்கருன்.

''நித்தியம் இப்படி எனக்குக் கூப்பிட்டுக் கூப்பிட்டுச் சாதம் போடறேளே, இதுக்கெல்லாம் உங்களுக்கு நான் என்ன செய்யப் போறேன்னு தெரியலேயே! என்னைக் கொஞ்சம் கொஞ்சமா பெரிய கடனாளியாக்கிண்டு வரேளே''ன்னு கேட்டுட்டான். நான் விச நாழி தடுமாறித்தான் போய்ட்டேன். எனக்கே புரியாத கேள்வியென்னு கேட்டுட்டான். பதிலே இல்லாத, கேள்வியாச்சே அது? அவன் மேலே நான் ஏன் இத்தனை கரிசனம் வெக்கணும்? ஊர்லேகூட சில பேர் என்னென்னமோ மாதிரியெல்லாம் பேசறுளே! அதையெல்லாம் நான் ஏன் பொறுத்துக்கணும்? 'இந்தக் கெழத்தோட ஆசையைப் பார்த்திரா ஓய்! எவனே தெருவிலே போறவனைக் கூப்பிட்டு வச்சுண்டு உபசாரம் செய்யறதை. காலம் போன காலத்திலே இந்தக் கெழடுக்கு இதென்ன வேண்டிக் கெடக்கு?'ன்னு சொல்லிட்டு ஒண்ணரைக் கண்ணை விஷமத்தோட சிமிட்டறுளே கோபாலாச்சாரி. அவனுக்கு எப்பவுமே திமிரு ஜாஸ்தி. குறும்பும் ஜாஸ்தி. இருந்தாலும் மனசுலே கவடில்லாதவன். வம்பு கொஞ்சம் அதிகம். அவ்வளவுதான்.

யக்ஞும் கேட்டானே அந்தக் கேள்விக்கு நான் என்ன பதில் சொன்னேன் தெரியுமா?

''நீ யாராயிருந்தால் எனக்கென்னடா? உன்னோட தன்மை எனக்குப் பிடிச்சு இருக்கு. என் மனசைப் புரிஞ்சுண்டு நீ நடக்கறே. எனக்கு ஒத்தாசையா இருக்கே! எனக்கொரு பிள்ளையாண்டான் இருந்தாத்தான் இதுக்கு மேலே என்ன செஞ்சுடப் போறுன்?''

அவனோட கண்ணுலேருந்து ஜலம் வர்றது.

''நான் ரொம்ப பாக்கியம் செஞ்சவன் பாட்டி. கும்மோணத்தை விட்டு நான் புறப்பட்டு ஒரு மாசத்துக்கு மேலே ஆகப் போறது. கால் நடையாத்தான் அங்கேருந்து வரேன். கால் வலிச்சாக்கூட பரவாயில்லே. மனசோட வலிதான் தாங்க முடியல்லேன்னுன்.

''என்னடாப்பா சொல்லறே ?''

''மனசைச் சொல்றேன் பாட்டி. மனசைச் சொல்றேன். அதை முறிச்சு அனுப்பிட்டா.'' அவன் அழுமாட்டாக் குறையாகச் சொன்னுன். பாவம் என்ன வேதனையோ ! யார் என்ன சொன்னுளோ! எது என்ன செஞ்சுதுகளோ! அனுதைதானே! என்ன செஞ்சா என்ன? யார் கேக்கப் போறு?

கோமளின்னு ஒரு பொண்ணைப் பத்திச் சொன்னுனே! அதாலே உண்டான கிலேசமா

## வழிகாட்டி



சென்னையில் 1938ம் ஆண்டு இறுதியில் நடந்த கிறிஸ்துவ மதபோதகர்கள் மகாநாட்டில் கலந்து கொண்ட வெளி நாட்டுப் பிரதிநிதிகளில் சிலர் வர்தாவில் காந்திஜியைச் சந்தித்து அஹிம்சைத் தத்துவம் பற்றி உரையாடினார்கள்: ''உங்களுடைய பணியின் அடிப்படை நோக்கம் என்ன? தார்மீகமா, சமுதாய வளர்ச்சியா? அல்லது அரசியல் விடுதலையா?'' என்று ஒருவர் கேட்டதற்கு காந்திஜி பின்வருமாறு விடையளித்தார்: ''தார்மீக அடிப்படையில்தான் நான் பணியாற்றுகிறேன். அஹிம்ஸை தான் ஆற்றல் மிக்க சக்தி... விமானத்திலிருந்து குண்டுகளை வீசிப் போர் நடத்தும்போது அஹிம்சை முறையில் எப்படி எதிர்க்க முடியும் என்று நீங்கள் கேட்கலாம். விமானத்திலிருந்து குண்டுகளை வீசுகிறவன் மனிதன். அவனுக்கும் உள்ளம் உண்டு. சரியான முறையில் அஹிம்ஸை வழியில் செயலாற்றினால் அவனுடைய மனசை மாற்ற முடியும்... நான் பூனையும் எலியும் விளையாடுவதைக் கவனித்திருக்கிறேன். எலியைப் பிடித்ததும் அதைத் தின்னப் பூனை முயலுவதில்லை. எலியைத் தாவிப் பிடிக்கும். பிறகு விட்டுவிடும். எலி தப்பிக்க முயலும் போது மீண்டும் தாவிப் பிடிக்கும். தப்பித்து ஓட முயலும் எலி, அச்சத்தால் மரணமடைந்து விடுகிறது. பூனை பிடித்துக் கொண்டதும் எலி தப்ப முயலுவதால், பூனை மீண்டும் மீண்டும் அதன் மீது பாய்கிறது. எலி தப்பிக்க முயலாமல் இருந்தால் பூனை பிரமிப்படைந்து செயலற்று விடும். அஹிம்ஸைத் தத்துவத்துக்கு விளக்கத்தை என்னுடைய மனைவியிடமிருந்துதான் கற்றுக் கொண்டேன். கணவனுடைய ஆதிக்கத்தை உறுதியுடன் எதிர்த்தாலும் கணவனே தெய்வம் என்ற மனப்பான்மையுடன், அவள் என்னுடைய ஆணவத்துக்கும் செயல்களுக்கும் அடிபணிந்து கஷ்டங்களைப் பொறுமையுடன் ஏற்றுச் செயலாற்றினுள். ஆணுக்குப் பெண் அடிமை என்ற ஆணவத்துடன் செயலாற்றுவது தவறு என்பதை நாளாவட்டத்தில் உணர்ந்து வெட்கம் அடைந்தேன். அவளுடைய சகிப்புத் தன்மைதான் எனக்கு விழிப்பு அளித்தது. அஹிம்ஸைத் தத்துவத்தைக் கடைப்பிடிப்பதற்கு அவள் தான் எனக்கு வழிகாட்டி.'' —ஜம்பு

யிருக்குமோ? பார்த்தால் அப்படியொன்னும் பொல்லாதவனு தோணலியே! சாதுப்பிள்ளை யாட்டமாத்தானே தெரியரான்...! இருக்கும், இவனுலே அவனுக்கோ, அவளாலே இவ னுக்கோ ஏதோ ஒரு இடஞ்சல் உண்டாகியிருக் கும்ங்கிற மட்டும் யூகிக்க முடியறது. அதையும் கேட்டுடுவோம்னு மனசைத் திடம் பண் ணிண்டு ஒரு தடவை கேக்கறேன்.

''உன் மனசை ஒடிச்சு அனுப்பருப்போல் அங்கே என்ன நடந்தது? கோமளின்னு ஒரு பொண்ணைப் பத்திச் சொல்லிட்டு அப்படியே நிறுத்திட்டயே!... அவளாலே வந்ததுதானு இந்த விவகாரமெல்லாம்?''

பளிச்சுனு எந்தவிதமான ஒளிவுமறைவுமில் லாமல் ''ஆமாம் பாட்டி''ன்னுட்டான். எனக் குள்ளே நானே பெருமைப்பட்டுண்டேன்... என்னோட யூகம் சரியாய்ப் போச்சேன்னு.

''என் மேலே தப்பில்லே பாட்டி. நான் என்னோட தகுதி அந்தஸ்து எனக்கு இருக்கற யோக்கியதை எல்லாத்தையும் நன்னுவே புரிஞ் சுண்டவன்தான். என்னோட தகுதிக்கு மேலே ஓர் இம்மி அளவுகூட நான் ஆசைப்பட்ட தில்லே. அடி கண்டத்துலேருந்து மந்திரத்தை வேதியர்களோட சேர்ந்து சொன்னுத்தான் அவா மத்தியிலே மதிப்புங்கறது எனக்குத்தெரி யும். அமாவாசை தர்ப்பணம் பண்ணி வைக் கறேன்னுட்டு வாயை வெறுமனே முணு முணுத்தா மட்டும் போருது. அட்சர சுத்தமா செஞ்சு வைக்கணும். அப்பத்தான் 'சம்பா வனை'யிலே மரியாதை அளவைப் பார்க்க முடியும். இல்லேன்னு ரெண்டணுவைத் தந் துட்டு எழுந்துடுவா.

''கூடப்போறச்சே நம்மோட மேதாவிலா சத்தை அதிகப்படியா வெளிக் காட்டிக்காம வாயை மூடிண்டு போனுத்தான் ஏதாவது பங்கு கெடைக்கும். எதைக் கொடுத்தாலும் சந்தோஷமா வாங்கிக்கற மாதிரி பாவனை செஞ்சாத்தான் அடுத்த தடவை போறச்சே கூப்பிட்டுண்டு போவா! என்னோட தகுதி யும் வேதாத் தியயன பாடமும் அவ்வளவுக் குத்தான் என்கிட்டேயிருந்ததுங்கறதையும் நான் சொல்லிக்கணுமோன்னே? மத்தவா ளாட்டமா ஒரு முழுப் புரோகிதனுக்கு இருக்க வேண்டிய முழுத் தகுதியோட நான் இல்லேங் கிறதும் எனக்குத் தெரியுமே! அப்படியிருக் கறச்சே நான் எப்படி என் யோக்கியதைக்கு மேலே ஆசைப்பட முடியும்? எல்லா விதத் திலேயும் தான் சொல்றேன். என்னோட நிலே மையை நன்னு புரிஞ்சுண்ட நான் என்னைவிட பெரிய அந்தஸ்திலே இருக்கற ஒருத்தியோட விருப்பத்தை எப்படி ஏத்துக்க முடியும்?''

நான் யக்ஞத்தையே பார்த்துண்டு இருக் கேன். அவன் பேசறதுகூட ஏதோ மந்திர உச்சாடணம் மாதிரி இருக்கு. உள்ளே எதையுமே வச்சுக்காம எல்லாத்தையும் சொல்லிண்டு வரான்.

''கோமளி கும்மோணம் கல்லூரியிலே படிக்கறு பாட்டி. நன்னு அழகா இருப்பா, கும்மோணம் சாஸ்த்ரி தம்மோட பூர்வீகத் தாலே உபாத்யாயம்னுலும் அவர் காலத் திலே அவர் கொஞ்சம் சூடிகையான மனுஷர். வேற குழந்தை குட்டி இல்லே. கோமளி தான் ஒரே பொண்ணு. ஆசையா வேற வளர்ற பொண்ணு. மகா புத்திசாலி. கொள்ளை அழகு.'' அப்படின்னு அவன் தன்னை மறந்துதான் சொல்றான்.

''உனக்கென்னடா கொறைச்சல்? நீயும் ராஜாவாட்டமாத்தானே இருக்கே! அந்தஸ்து இந்தஸ்து யோக்யதை, கிக்யதைன்னு பாக் காம இருந்தா உன்னைப் போல் கண்ணுக்கு அழகா, லட்சணமா ஒரு பிள்ளையாண் டானைத் தேடித்தான் கண்டுபிடிக்கணும். உ.....ம் விடு... மேலே சொல்லு.''

''ஆரம்பத்திலே அவ கண்ணுலே தெரி யற ஏதோ ஒரு பார்வையை நான் பரிவுன்னு நெனைச்சுண்டுட்டேன். என்னோட தகுதிக் குறைவுக்காகப் படற இரக்கம்னு இருந்துட் டேன். ஆனுல் நான் நெனைக்கிறபடி அது இல்லேங்கறதை ரொம்ப நாள் கழிச்சு ஒரு சந்தர்ப்பத்திலேதான் பாட்டி தெரிஞ்சுண் டேன்.

''மழையிலே தெப்பமா நனைஞ்சு ஒடம்புக்கு வந்து ஜலதோஷமும் பிடிச்சுண்டுடுத்து. சாமி மலையிலே ஒரு வக்கீலாத்துலே கல்யாணம். சாஸ்த்ரிகளோட என்னுல போக முடியலே. நல்ல நேரம் பாத்து ஒடம்புக்கு வரவனுமச் சுண்டு நிக்கறுன். உருப்படாத கழுதைன்னு சத்தம் போட்டுட்டு ஆத்தைப் பாத்துக்கோ. நான் வர நாலு நாள் ஆகும். நாலு நாள் கல்யாணம். எல்லாத்துக்கும் கொடுத்து வச்சிருக்கணும்டா. பெரிய இடம். சம்பா வனையைப் பெத்துக்க அதிர்ஷ்டமில்லேன்னு சத்தம் போட்டுட்டு உதவிக்கு வேற சில பேரைக் கூட்டிண்டு போயிட்டார்.

''நான் மட்டும்தான் ஆத்துலே இருந்தேன்!

''பெரிய இடம். பின்னுலே நிறைய இடம். தென்னை மரம் அம்பதுக்கு மேலே உண்டு; அந்த அளவுக்குப் பாக்கு மரமும் இருக்கு. 'உடம்புக்கு உடம்புக்குன்னு சொல்லி இழுத் துப் போத்திண்டு படுத்திண்டே இருக்காதே. கொட்டப் பாக்கைச் சொத்தைப் பாக்கு இல் லாம நல்லதா பொறுக்கி வை'ன்னு ஆக்ஞை யிட்டுப் போயிருந்தார்.

''அவர் போய் ரெண்டு நாள் ஆயிடுத்து. மூணுவது நாள் சாயரட்சை. பின்னுலே தோப்புலே அங்கங்கே விழுந்து கிடக்கற பாக்குக் காயைப் பொறுக்கிண்டிருந்தேன்.

''கோமளி வந்து நின்னதை நான் பாக்கலே; அவ கல்லூரியிலேருந்து நாலு மணிக்கே வந் தாச்சு. கொஞ்ச நாளாவே அவளோட பார்வையிலேயும், சில ஜாடையிலேயும் எனக்குப் புரியாத ஏதோ ஒரு ஜால வித்தை யிருந்தது. எதைப்பத்தியெல்லாம் நான் நெனைச்சுக்கூடப் பார்க்க முடியாதோ, எதைப் பத்தியெல்லாம் நான் சொப்பனம்கூடக் காண முடியாதோ, எதெல்லாம் என் வரையிலே தடுத்துக்கப்பட வேண்டிய விஷயமோ, அதை யெல்லாம் அவ தன்னோட ஜாடையிலே எனக் குப் புரிய வைக்க முயற்சி பண்ணிண்டிருந் தாள்! நான் எத்தனைக்கெத்தனை அதைப் பார்த்துக்காமப் போனேனே, அத்தனைக்கத் தனை அவளோட வீம்பும் அதிகமாயிடுத்து. கை நெறையக் கொட்டைப் பாக்கை எடுத்துண்டு வரச்சே அதை அப்படியே தன்னோட கையிலே வாங்கிக்கறுப்பலே பாவனை பண்ணி என் கையை வலுக் கட்டாயமாத் தொடறு. பாக்

# GRASIM

## STAPLE FIBRE A SUPPLEMENT TO COTTON AND OTHER FIBRES



**Among Indian technological achievements Gwalior Rayon's success in producing Rayon Grade Pulp from indigenous raw materials without any foreign aid or collaboration has, perhaps, been the most remarkable.** The staple fibre produced from the pulp has been a boon to the hard-pressed textile industry which was deprived of valuable raw materials when vast areas of cotton-growing land were lost to Pakistan as a result of Partition.

Grasim Staple Fibre is unique in many respects, and is, in effect, a supplement to all natural fibres including cotton, wool, silk, jute, as well as to synthetic fibres. When blended or mixed with other fibres, it increases the usefulness of the resultant fabrics, making them cooler, softer, and more comfortable while at the same time helping to lower costs.

Today Gwalior Rayon contributes substantially to the national economy. It keeps hundreds of textile mills busy, gives employment to thousands of people, helps clothe lakhs more, saves crores of rupees in foreign exchange, contributes handsomely and in ever-increasing amounts to the national exchequer—these are just a few of the calculable benefits.

Besides Rayon Grade Pulp and Staple Fibre, Gwalior Rayon also produces high quality fabrics and fabricates its own machinery and equipment.

As the needs of the nation for the basic necessities of life are constantly growing, Gwalior Rayon, conscious of its responsibilities, has already made plans to expand its production. It is the constant endeavour of the Company to serve the country to its utmost ability.

**THE GWALIOR RAYON SILK MANUFACTURING (WVG.) CO. LTD.**

Birlagram, Nagda.



கெல்லாம் கிரே கொட்டிச் சிதறி ஓடறது. நான் கோவிச்சுக்கறேன். அவ சிரிக்கறு.

'என்ன இதெல்லாம்'ங்கறேன்? அவளோட செய்கையை.....

'இதெல்லாம் பாக்குங்கறு.' கிரே சிதறி ஓடற பாக்குகளைக் காண்பிச்சு.

நன்னு இருட்டி விட்டது.

''கொல்லேப்புறத்திலே நானும் அவளும் மட்டுமே நிக்கறோம். காத்து 'ஹோ'ன்னு வீசறது. நான் அவளோட அருகுலே லயிச்சுப் போய் நிக்கறேன். அவ என்கிட்ட என்ன லயிப்பைக் கண்டாளோ, தெரியலே. என்னோட மனசுக்கு என் எண்ணம் அதிகம்னு தோணறது. அதனுலே மனசைக் கட்டுப் படுத்திண்டு நினைநின்டே நிக்கறேன். ஆனு அவளோ என்னைக் கட்டிப் பிடிச்சுண்டு ஹோன்னு அழறு. விவரம் சொல்லத் தெரியலே. எனக்கும் புரியலே. நான் திமிறிண்டு அவகிட்டேருந்து விடுபட்டுண்டு உள்ளே ஓடறேன். கொஞ்சம் விடற மாதிரி இருந்த ஜொரம் ஜாஸ்தியான மாதிரி உடம்பெல்லாம் அதிகமாச் சூடு ஏறிடுத்து. தப்பு செஞ்ச மாதிரி படபடப்பு. அவளோட பார்வைக்கும் அவளோட ஜாடைக்கும் அவளோட பெருமூச்சுக்கும் இப்படி ஒரு அர்த்தம் இருக்கும்னு நெனைச்சுக்கூடப் பார்க்க எனக்குத் தெரியலே.

'''என்னை உங்களுக்குப் பிடிக்கலியா?'ன்னு கேட்டுண்டே நான் படபடப்பு அடங்காமல் உட்கார்ந்துண்டு இருக்கறச்சே பக்கத்திலே வந்து நின்னுள். எனக்கு எதுவுமே பேசத் தெரியலே. ஆனு பளிச்சுனு ஒரு கேள்வியைக் கேக்க மட்டும் புரிஞ்சுது.

''என்னைப் போய் உனக்கு எப்படிப் பிடிச்சுதுன்னுதான் எனக்குப் புரியலே?'' அப்படின்னேன்.

''மனசுங்கறது மொதல்லே கண் பார்வையினுலேதான் ஒரு வஸ்துவின் பேரிலே பிரியப் படவும் வைக்கறது. பார்வையோட தன்மையைப் பொறுத்துத்தான் அதனோட ஸ்திதி உள்ளே அதாவது மனசுக்குள்ளே மாறிண்டு வரது. எப்போ ஒரு வஸ்து மேலே பட்ட பார்வையிலே ஒரு திருப்தியும் ஒரு தீர்மானமும் விழுந்தாச்சோ, மற்ற பலவீனங்களைப் பத்தி மனம் தயங்கறதில்லே'' — அப்படின்னு வியாக்யானம் பேசறு. எனக்கு முழுசாப் புரியாட்டாலும் கொஞ்சம் கொஞ்சம் புரியறது.

''கண் பார்வையிலே படற விஷயத்தையெல்லாம், நல்லது கெட்டதுங்கற பேதம்

தெரியாம நியாய அநியாயம் புரியாம, வர்ஜ்யா வர்ஜ்யம் இல்லாம, அப்படியே மனசும் ஏத்துண்டுடறதுன்னு போயிட்டா மனசு ஒரு குப்பைக் கூடையாயிடும் கோமளி. மனசு இருக்க வேண்டிய இடத்திலே கண்ணும், கண்ணு இருக்க வேண்டிய இடத்துலே மனசும் வைக்க வேண்டியதுதான்''னேன். அந்த நேரம் பாத்து என்னையறியாமல் எனக்குள்ளேயிருந்து இன்னொரு யக்ஞம் பேசற மாதிரியே தோணித்து. இப்படிப் பேச வரும்னு எனக்கேகூடத் தெரியாது.

''பார்வைக்கு மனசோட தூண்டுதலும் பாதி உண்டு. மீதிப் பாதியைத்தான் ரெண்டுமா பகிர்ந்துக்கறது. முடிவெடுக்க வேண்டியது மனசுதானே. ஒரு வஸ்துவைக் கண் பாத்துட்டதனாலே அதை மனசு அப்படியே ஏத்துண்டுடறதுங்கறத்துக்கு இடமே இல்லே இங்கே. நீங்க சொல்ற மாதிரி கண் பார்வையிலே பட்டதையெல்லாம் நல்லது கெட்டதுங்கற பேதம் தெரியாம ஏத்துக்கற மனசு எதுன்னு சொன்னு பேதலிக்கற மனசுதான்.'' அப்படின்னு.

''அதுனாலே?''

''என்னோட ஆசைக்கு என்னோட கண்ணு மட்டும் காரணமில்லே. மனசும்கூடத்தான்''ங்கறு.

''அவ பேசறதைப் புரிஞ்சுக்கவே பயமா இருந்தது. நான் பேசாம சிரிச்சேன். அலட்சியத்தோட சிரிக்கலே, எல்லாத்தையும் புரிஞ்சுண்ட மாதிரியான சிரிப்புமில்லே அது.... எனக்கு என்ன புரிஞ்சது? அவ பேசப் பேச எனக்குக் குழப்பம்தான் அதிகமாச்சு. ஆனா ஒண்ணே மட்டும் தீர்மானமா முடிவு செஞ்சு வச்சுண்டுட்டேன். கோமளியோட இந்த ஆசைக்குக் கொஞ்சம்கூட இடம் தரப்படாது. அதை ஆசைங்கறதைக் காட்டிலும் 'விபரீதம்'னுதான் சொல்லணும். அந்த விபரீதம் அவகிட்டே விசுவரூபம் எடுக்கறத்துக்குள்ளே இங்கேயிருந்து கழண்டுக்கணும். நெருப்பிலே நிக்கற மாதிரி இங்கே இனிமே இருக்க முடியாது. சுத்தி முனையாட்டமா நெனைச்சுண்டு இருக்கற காலத்தைக் கவுரவமா ஓட்டிட்டு மரியாதையோட பிச்சுக்கப் பாக்கணும்.

''கோமளி! உனக்கு நிறைய எதிர்காலமிருக்கு. நீ கண்ணெரஞ்ச அகமுடையானே அடஞ்சு சௌபாக்கியங்களோட வாழணும். நீ படிச்ச பொண்ணு. உன்னோட வித்யா பலத்தை அனுசரிச்சு அதுக்கு ஏத்த மாதிரி ஆம்படையானே வரிச்சுக்கறதுதான் அழகு. தர்மம். நான் ரொம்ப சாதாரணம். பரம ஏழை. அநாதை. உன்னோட அப்பாவாலே ஆதரிக்கப்படறவன். என்னோட வாழ்க்கையிலே எனக்கு 'வேர்' — இன்னும் சரியாக்கூட மண்ணிலே பிடிப்பில்லாமே சல்லி வேரா பட்டிண்டு இருக்கு. என்னிக்காவது ஊர்க் குருவி பருந்தாக முடியுமா சொல்லு. என்னோட வாசஸ்தலம் எது தெரியுமா? உங்காத்துத் திண்ணை. நான் சாப்பிடறது எது தெரியுமா? உங்கப்பாவோட ஆக்ஞைக்கு உட்பட்டு நீ அன்போடு போடற உங்காத்துச் சாப்பாடு. நான் உடுத்திக்கற வேஷ்டி எது தெரியுமா ? உங்கப்பாவோட போய் அங்கங்கே வைதிகக் காரியங்கள் பண்ணி வைக்கற இடத்திலே சம்பாவனையிலே வச்சுக் கொடுக்கறானே — அதைக்கூட நானு எடுத்துக்கறதில்லே. 'எடுத்துக்கோயேண்டா'ன்னு உங்கப்பா கண்ஜாடை காட்டுவார். அதுதான் நான் மானமா கட்டிக்கற வேஷ்டி. இந்த மூணையும் விட்டா என்னோட நித்திய வாழ்க்கையே சூனியம். இந்தச் சூனியத்தின் மேலே போய் நீ வச்சு இருக்கற பரிவை நெனைச்சுக்கறச்சே உலகம் எவ்வளவு மடமையோட இருக்குங்கறதைப் புரிஞ்சுக்க முடியறது.

''கோமளி அழுதுண்டே இருந்தாள். நான் சந்தியா கால ஜபம் பண்ணறதுக்கு அனுமார் படித்துறைக்குப் போயிட்டேன். ஜுர உடம் போட போக முடியலேதான். ஆனா அந்த நேரத்துலே அவகிட்டேருந்து தப்பிச்சுண்டா போறும்னு இருந்தது.''

''பாட்டி.... பாட்டி....'' விசு கூப்பிடறான்.

சுவாரசியமான இடத்திலே பாகவதர் கதா காலட்சேபத்தை முடிக்கறாப் போல் இருக்கு எனக்கு. இருண்டு கெடக்கற அக்கிரஹாரத்தை இன்னும் கொஞ்ச நேரம் பாத்துண்டே நிக்கணும் போல ஒரு ஆசை உண்டாறது.

யக்ஞம் சொன்னது, அப்புறம் நான் சொல்ல வேண்டியது எல்லாம் நெறைய இருக்கே!

இப்போ பாட்டின்னு கூப்பிட்டானே விசு, அவன் இந்த ரெண்டையும் முடிச்சு வைக்கற கயிறு. அவன் அந்த ரெண்டு பெரிய விஷயத்தோட ஞாபகம்.

உள்ளே போறேன். ரேழி ஓரமா ஈசானிய மூலையிலே ஏந்தரக்கல் தரையில் பதிச்சிருக்கு. அது மேலே சிம்னி விளக்கு எரிஞ்சுண்டு இருக்கு. அதைச் சுத்தி ஈசலோ விட்டிலோ நாலஞ்சு இறக்கையைக் கருக்கிண்டு செத்துக் கிடக்கு.

''நீ இன்னும் தூங்கலையாடா ?''

''பயமா இருக்கு பாட்டி.''

''என்னடா பயம், படவா... ஆம்பளைப் பையன். தூங்கு. நான் இங்கேதான் இருக்கேன்.'' விசு கண்ணை இறுக்கமா மூடிக்கறான். நான் அவன்கிட்டே போய் உக்காந்துக்கறேன். என்னை ஒரு கையிலே தொட்டுண்டு, ஒரு கை கட்ட விரல் சப்பிண்டு படுத்துண்டு இருக்கான். அஞ்சு வயசு ஆகியும் அவனுக்கு இன்னும் சரியாப் பேச்சு வரலே. ''ர''ங்கற எழுத்து நாக்கிலே படியலே. வரேன் பாட்டின்னு சொல்லத் தெரியலே. 'வதேன் பாட்டி'ங்கறான். எதுக்கு எடுத்தாலும் 'தா'ங்கற எழுத்துத்தான் அதிகமா வரது. வரண்டாங்கிறதுக்கு வதேண்டா-போறேன்ங்கறதுக்கு போதேன்னு பேசறான்.

இப்போ அடிக்கடி அப்பாவோட நெனப்பு வரது. கோயிலுக்குப் போகலாம். அப்பா அங்கே இருப்பா... வா பாட்டி போகலாம்— அப்படின்னு நச்சரான். அவனோட தொந்தரை பொறுக்காம அழைச்சிண்டு போறேன். அம்மன் சன்னதியிலே நுழையறபோது அப்பா அப்பா.... எங்கேயப்பா.... இதுக்கே..ன்னு அம்மனைப் பார்த்துக் கத்தறச்சே மனசுக்குக் கஷ்டமா இருக்கு. கூப்பிட்டுப் பாத்துட்டு

# உங்களுக்கு விருப்பமான
# ஹார்வி துணியைத் தேர்ந்தெடுங்கள்



ஹார்வி

## டுவின் டஸ்கர்

அதிநேர்த்தியான தரமுள்ள துணிகள் — பாப்ளின்கள், டிரில் வகைகள், லாங் கிளாத் முதலியன — விலையில் நயமானவை. உறுதியானவை. நீடித்து உழைப்பவை. பல சலவைகளுக்குப் பிறகும் அவைகளின் மிருதுவான அமைப்பும் 'புதுத் தன்மையும்' குன்றிருக்க வேண்டி சிறந்த முறையில் தயாரிக்கப்பட்டவை.

ஹார்வி

## ஸாராடோகா

'டெரீன்' காட்டன் ஷர்டு துணிகள்

மாசற்ற நெசவும், பகட்டான தோற்றமுமுள்ள இந்த ஷர்டு துணிகள் மனதுக்குப் பிடித்த பற்பல வண்ணங்களில் அளிக்கப் படுகின்றன.





ஹார்வி

## ஸாராபாண்ட்

'டெரீன்' இணைந்த ஸூட்டிங் துணிகள்

ஆடவர்களின் சீருடைக்கு என்றைக்கும் ஏற்றவை. தேர்ந்தெடுக்க வசதியாக, நேர்த்தியான வெள்ளை நிறத்திலும் மற்றும் லேசான க்ரே முதலிய பல நிறங்களிலும் இவை வழங்கப்படுகின்றன.

Bensons-1086 | ITAM

தயாரிப்போர்:
மதுரை மில்ஸ் கம்பெனி லிமிடெட்,
மதுரை

மதுரையைச் சேர்ந்த ஹார்வீஸ்

அப்பாவைக் காணும்னு அவனுக்குள் ளேயே முணுமுணுத்துக்கறான்.

''யக்ஞத்தைப் பத்தி ஏதாவும் கேள்விப் பட்டேளா?'' – ராஜா ஐயர் மடத்தைத் தாண்டிண்டு போறச்சே ஆளோடி ஓரத் திலே விசிறிக் காம்பாலே முதுகைச் சொறிஞ் சுண்டு உக்காந்துண்டு இருக்கற ராஜா ஐயர் கேக்கறார்.

''இல்லே.''

''அப்புறம்?''

''அப்புறம் என்ன? அவன் என்ன சின்னக் கொழந்தையா? இந்த வயசிலே இதை என் தலையிலே கட்டிட்டுப் போயிருக்கானே. அவ னுக்கே நன்னா இருந்தால் சரி. இதெல்லாம் அவா அவாளாப் புரிஞ்சுக்கணும்....அம்மா! பொண்ணைப் பாக்கறச்சே எல்லாம் மனசும் கடந்து அடிச்சுக்கறது. என்னோட விதி. இப்படிக் கொஞ்ச நாள் பந்தப்பட்டுக் கிடக்கணும்னு ஈசுவரன் எழுதியிருப் பான் போல இருக்கு. எது யாரை விட்டது?''

விசுவை அழைச்சுண்டு அக்கி ரஹாரத்திலே நடந்து வரேன். காதுல விழுற மாதிரியும் விழாத மாதிரியும் பலபேர் பலவிதமாப் பேசறா. உலகத்துக்கு வேலி கட் டவும் ஊர் வாயை மூடவும் யாராலே ஆகும்....

ராஜா ஐயர்கிட்டே பேசிட்டு வரச்சே என்னோட ஞாபகம் கொஞ்சம் பின்னாலே திரும்ப றது. அந்த ஞாபகம் யக்ஞத் தோட சம்பந்தப்பட்ட ஞாப கம். எதையோ கிளறி விடற ஞாபகம். ஆத்திலே தண்ணி வத்திப் போன காலத்திலே ஊத்துக் குழி வெட்டுவாளே அது மாதிரி. அவர்கிட்டே பேசிட்டு வரவர அந்த மனனுக்குள்ளே யிருந்து தண்ணி பொங்க ஆரம் பிக்கிறது.

விசுவுக்குச் சாதத்தைப் போட றேன். ராத்திரி பலகாரமா மோர் அவலைச் சாப்பிடறேன். உள்ளே அம்மாப் பொண்ணா மௌனமாக் காரியங் களைச் செஞ்சுண்டு இருக்கா!

**ய**க்ஞம் நம்மாத்து மனுஷனாட்டமா ஆயிட்டான். அவன் மேலே அலாதிப் பிரியம் விழுந்துட்டுது. எது செஞ்சாலும் அவனுக் கும் ஒரு பங்குங்கிற மாதிரி நிரந்தரமா இடத் தைப் பிடிச்சுண்டுட்டான், படவாப் பய!

''**இ**வன் பேர் யக்ஞம்.''

''ஓஹோ !''

ராஜாஅய்யர் அவனை நிமிர்ந்து பார்க்கிறார். அவன் அவர் முன் 'அபிவாதயே' பண்ணி சர்மனைச் சொல்லித் தன்னை அறிமுகப் படுத்திக்கறான்.

''கும்மோணத்திலே நீ யார்கிட்டே இருந்தே?''

''சேஷகிரி சாஸ்திரிகிட்டே.''

''என்ன தெரியும்?''

''ஏதோ பெரியவாளோட கூடக் கூடப் போய்க் கொஞ்சம்கத்துண்டேன். முறைப்படி இன்னும் தீட்சை பெறலே.... இயர்ன்னு மனசுக்குக் கஷ்டம் ஏற்படும்படியா நேர்ந் துட்டது. அங்கே இருக்கப் பிடிக்கலே. வந் துட்டேன்.''

''மனஸ்தாபமா ?''

''ஓரளவு அதுதான் உண்மை. மனசோட தாபத்தினாலே உண்டான மனஸ்தாபம். சில அநாவசியக் கோப தாபங்களுக்கு ஆளாகும் படியா வந்துடுத்து.''

ராஜா அய்யர் என்னைப் பார்க்கிறார். ''என்ன செய்யணும்கறே இவனை?''–என்கிற மாதிரி இருக்கு அவரோட பார்வை.

''இவனுக்கு ஏதாவும் கை காண்பிச்சு விடணும். ராமநாதக் குருக்கள்கிட்டே கேட் டேன். ராஜா அய்யர்கிட்டே சொல்லுங்கோ அவர் பெரியவர் என்ன சொல்றார் பார்க்க லாம். அவர் சொல்லாம நான் எதுவும் சொல்றதுக்கு இல்லேன்னுட்டார்.''

நான் ராஜா அய்யரோட பேசிண்டிருக் கறச்சே ராமநாதக் குருக்கள் வெளியே வந் தார். எதுக்தாந்தானே! இங்கே யிருந்து கூப்பிட்டால் கேக்குமே!

''ராமநாதா! செத்த இங்கே வந்துட்டுப் போறயா ?''

ராமநாதன் வரார்.

''என்னடா இவனை வைச்சுக்க றயா?...... உருப்படியாவானா?''

பெரியவர் ராஜா அய்யர் தர்ஜினி போட்டுண்ட வலது

சமையல் அறையில் சுத்தம்



ஆள்காட்டி விரலால் யக்ஞத் தைக் காண்பிச்சுக் கேட்கிறார்.

''மடப்பள்ளியிலே செஞ்சுண்டு இருக்கான். நீப மந்திரங்கள் நன்னாச் சொல்றான். அஷ்டோத் தரம், நாமாவளி யெல்லாம் சுத்தமா தொனிக்கறது. ருத்ரம் தெரியுங்கறான். கேட்க அவகாச மில்லே. சில ஆகமங்கள் தெரி யுங்கறான். இருந்த இடம் பெரிசோல் லியோ, உக்கூர் பிரணதார்த்தியோட பரம் பரை கும்மோணம் சாஸ்த்ரி. அங்கேயிருந்து பிரிஞ்ச உபநதி. கேட்கணுமா ! பெரியவா சொன்னா ஆட்சேபணையில்லே...''

யக்ஞம் மேல் உத்தரீயத்தை மார்பு வரை யிலே சுத்திக் கட்டிண்டு கையை ரெண்டை யும் குறுக்கா நெடுக்காகக் கட்டிண்டு ஓர் ஓரமா மரியாதையோட நிக்கறான்.

வேத வித்து ராஜா அய்யர், எனக்கும் அவனுக்குமா சில சம்பிரதாயங்களைப் பத்திக் கோடி காட்டுகிறார். கேள்விகள் கேட்கிறார். சிலதுக்குப் பவ்யமா பதில் சொல்றான். சிலது தெரியாதுங்கறான். சில மந்திரங்களைச் சொல் லச் சொல்லிக் கேக்கறார். சொல்றான். நடு நடுவிலே தடங்கல் உண்டாறது. அடி யெடுத்துத் தரார். உடனே மேலே தடங்கல் இல்லாமல் சொல்றான்.

கொஞ்ச நேரம் வெறுமனே இருக்கான். ராஜா அய்யர் யோஜனை பண்றார். மறுபடி யும் யக்ஞத்தைப் பாக்கறார்.

''சாஸ்திரபாடம் என்ன மனனம் உண்டு?''

''கொஞ்சம் பத்ததிகள் தெரியும். ஏகு வம்சம் பழக்கம் உண்டு. மகன்யாசபூர்வாங் கம் சூக்தாதிகள் எல்லாம் தெரியும்.''

''சில சங்கற்பங்களைச் சொல்லி மந்திரம் சொல்லு பார்க்கலாம். மொதல்லே கிருகஸ்த னுக்குச் சொல்லு. அப்பறமா ஸ்திரீக்குச் சொல்லு. சந்நியாசிக்குச் சொல்லு.''

அவன் ஒவ்வொரு சங்கற்பமாகச் சொல்லிக் கிருகஸ்தனுக்கு, ஸ்திரீக்கு, சந்நியாசிக்குன்னு அழகாகப் பிரிக்கறான்.

ராஜா அய்யர் சந்தோஷப்படறார். இருந் தாலும் அவர்கிட்டே ஒரு தயக்கம் தெரிய றது. அதை ரொம்ப யோசனைக்கப்புறமா சிவ தீட்சைங்கறது பூதசுத்தி. உடம்பை அமிர்தமயமாக்கி உபதேசம் வாங்கிக்கறது.

ராஜா அய்யர் விளக்கமா சொல்றார்: அவன் சிஷ்யபாவத்தோட கேட்டுக்கறான்.

தீபாராதனையின்போது மூலஸ்தானத்தில் நின்னுண்டு இருக்கிற குருக்களுக்கு அர்த்த மண்டபத்திலேருந்து ஒவ்வொரு தீபமா எடுத்துக் கொடுக்கிற யக்ஞம் ராஜா அய்யர் கருணையினாலே மூலஸ்தானம் வரையிலே போற பாக்கியம் அடையறான். அவனோட சந்தோஷம் பொங்கிப் பிரவாகமா ஓடறது. பெரிய பாக்கியம் செஞ்சுட்ட மாதிரி பெரு மிதப்படறான். அவன் நெனைக்கிற மாதிரி அது

ஆசிரம சமையலறை எப் போதும் சுத்தமாக இருக்கும். சிறு தவறு நேர்ந்தால்கூட கண் டிப்பார் காந்திஜி. ஒரு சமயம் புகைவெளியில் பரவாத அடுப்பு ஒன்றை அங்கு பரிட்சித்துப் பார்த் தார்கள். காந்திஜி அங்கு அடிக் கடி வருவது வழக்கம். ஒரு நாள் சமையலறையில் பணியாற்றும் ஓர் அன்பர் உருளைக் கிழங்குகளை வேக வைத்துத் தோலுரித்துக் கொள்ளலாம் என்ற நோக்கத் துடன் அவற்றைக் கழுவாமல், வெட்டிக் கொண்டிருந்தார். ''கழுவாமல் உருளைக் கிழங்குகளை வெட்டலாமா? அவற்றின் மீதுள்ள மண்ணையும் சேர்த்து வேக விட வேண்டுமா? நன்றாகக் கழுவி, வேக வைப்பது நல்லதல்லவா?'' என்று கேட்டார் காந்திஜி.

அந்த அன்பர் தம்முடைய தவறுக்கு வருந்தினார். காந்திஜி சமையலறையைச் சுற்றிப் பார்த் தார். எரவாணத்தில் ஒரு மூலை யில் நூலாம்படை இருப்பதைப் பார்த்து, ''இப்படிச் சமைய லறையை வைத்துக் கொண்டிருப் பது வெட்கப்படக்கூடிய செயல்'' என்று கடிந்து கொண்டார். தானே ஒட்டடையடித்தார். நிர் வாகி திடுக்கிட்டார். பிறகு அறை யைச் சுத்தம் செய்யும் பணியை யும் தாமே ஏற்றுக் கொண்டார்.

சமையலறை சுத்தமாக இருக்க வேண்டும் என்பதில் காந்திஜியை விடக்கஸ்தூரிபா கண்டிப்பானவர். தம்முடைய பார்வையில் படும் குறைபாடுகளைக் கண்டு கோபப் படுவார். சில சமயங்களில் அவர் ஊழியர்களைக் கடிந்து கொள்வது முண்டு. தாமே முன் வந்து அவற்றை அகற்றுவதுமுண்டு.

கஸ்தூரி பாவின் கண்டிப்பைப் பற்றி அன்பர் ஒருவர் காந்திஜி யிடம் முறையிட்டுக் கொண்டார். காந்திஜி சிரித்துக் கொண்டே, ''பாவின் சொற்கள் கடுமையாக இருக்கலாம். ஆனால் அவளுடைய உள்ளம் மென்மையானது. எதைச் செய்தாலும் சுத்தமாகவும் நன் றாகவும் செய்ய வேண்டும் என் பதே அவளுடைய ஆசை. அன்பு காரணமாக உன்னைக் கடிந்து கொண்டால் அதைப் பாராட்ட லாமா? உன்னுடைய நன்மைக் காகவே கண்டிக்கிறாள் என்பதைப் புரிந்து கொள். ஆண்டவன் நமக் குப் பல சோதனைகளை அளித்து விட்டுத்தான் அபயம் அளிக்கிறான் என்று கபீர் பாடியிருப்பதை நினைத்துப் பார்'' என்றார்.

— ஜம்பு

என்னைப் பார்த்துண்டே சொல்கிறார். கோயில்கள்ளே வைதிக பிரதிஷ்டை ஆகம பிரதிஷ்டைன்னு இரண்டு விதம் உண்டு. ஆகம பிரதிஷ்டை அதிகம் இருக்கற இடத் திலே ஆதி சைவான் ஒருத்தருக்குத்தான் அர்சகனாகிற தகுதியுண்டு. மூர்த்தங்களைத் தொட்டு அபிஷேகம் செய்யவும் பரார்த்த பூஜைகள் செய்யவும் அனுமதிக்கப்படலாம். வைதிக பிரதிஷ்டை அதிகம் உள்ள இடத்துக் கும் இதுதான் சட்டம். இருந்தாலும்கூட கொஞ்சம் அனுமதிக்கலாம். ஆனாலும்கூட லிங்கத்தைத் தொட எங்கேயும் அனுமதி யில்லே. ஆனா மத்த காரியங்களுக்கு உதவியாக இருக்க முடியும். அதுக்கும் சிவ தீட்சை முக்யம். பஞ்சாட்சர உபதேசம் முக்கியம். பெரிய பாக்கியம்தானே! ஈசுவர சேவை என்ன சாதாரணமானதா! உலகத்திலே எல்லாருக்கும் எது வேணுமானாலும் கிடைக்கும். இல்லேன்னா தேடிக்கலாம். ஆனால் ஈசுவர சேவை எத்தனை தபஸ் இருந்தாலும் கிடைக் காது. வேலை என்னமோ உண்டைக்கட்டி உத்தியோகம்தான். பெரிய தாசில் உத்தி யோகமில்லே. ஆனால் அரசன் நெனைச்சாக் கூட இதுக்கு வர முடியாது. ஆண்டவனோட சேவைக்கு ஏழைகளை அவன் என்னமா வடி கட்டி எடுத்துக்கறான், பாருங்க. நெனைக்க நெனைக்க உடம்பெல்லாம் புல்லரிக்கிறது.

யக்ஞம் ரொம்பச் சொன்னப்பறம் இப்ப ரேழிலே படுத்துக்கறான். அவனோட பழக

ஆரம்பிச்சப்புறமும், அவன் சௌஜன்யமா மாறின பின்னலேயும்தான் தெரியறது அவன் ஒரு சங்கோசிங்கறது.

கார்த்தாலே இருட்டோடே எழுந்துண்டு ஆத்தையெல்லாம் நன்னாச் சாணம் போட்டு மெழுகறான். சில நாளிலே கோலம் கூடப் போடறான். அவனுக்கு எல்லாமே தெரியும் போல இருக்கு!

வாய்க்கால்லே போய்க் குளிக்கறான். வாய்க்கால்லே தண்ணி நின்னு போச்சன்னா அப்படியே நேரே வண்ணான் குளம். கருங்குழி போயிடறான்.

எப்பவுமே ரொம்பப் பளிச்சுனு இருக்கான். கொஞ்சம் செவந்த உடம்பு. கரவை கரவையா நிதானப்பட்ட வளத்தி. காதிலே ஒத்தை சிவப்புக் கல் கடுக்கன் உண்டு. மூக்கு ரொம்ப நன்னா இருக்கும். பால் வடியற கொழந்தை முகம். அதிகமா எதுக்கும் சிரிக்கறதில்லே.

ராமநாதக் குருக்கள் அவன்மேலே அன்பை அமிர்தமாப் பொழியறார்.

ராஜா அய்யரைப் பார்த்துட்டு வந்ததிலே இப்போ வேறே ஏதோ ஞாபகம் வந்துட்டுது. நடுவிலே வேறே எதையோ சொல்லப் புகுந்துவிட்டேன். போகட்டும். கோமளி விஷயத்துக்கு வரேன் இப்ப.

''அப்புறம் சொல்லேன். கோமளி அழுதுண்டே நின்னு....!''

''அவ காலேஜிலே படிக்கிறாளே தவிர மனசு குழந்தை மனசு பாட்டி. எதையும் ஒரு நிர்மானத்துக்கப்பறமோ, தகுதியை மனசிலே வாங்கிண்டோ முடிவு செஞ்சுக்கத் தெரியாத மனசு. அவகிட்டே இருக்க வேண்டிய நியாயமான தன்மையை எடுத்துச் சொல்லி அவளோட விபரீத ஆசையிலேருந்து மீட்டுடலாம்னு நெனெச்சேன். அதுக்கு அவ இடம் கொடுக்கறதாலே காணும். விவேகமே இல்லாத இவளோட தீர்மானத்துக்கு நான் எப்படிச் சம்மதம் தர முடியும்?

''சாயரட்சைகளில் அனுமார் படித்துறையிலே சந்தி ஜபம் செய்வேன். நதிப் பிரவாகம் சாயங்கால வேளையிலே ரொம்ப ரம்மியமா இருக்கும். தெய்வ சன்னதிங்கறதே அழகு சங்கமிக்கற இடந்தான் இல்லையா! அந்த நதிப்பிரவாக அழகு அப்படித் தோணும். கரையிலே அரச மரம் சதா சப்திச்சிண்டே இருக்கும். வௌவால் இலைகளாட்டமா தலை கீழே தொங்கும். பட்சிகளோடு பேரிரைச்சல், காத்து வாங்க ஆத்தங்கரை. ஆத்தங்கரையோரமா நடக்கறவா. பெரிசா நீட்டமா இருக்கற கல் பாவின கரையிலே துண்டை மடிச்சுப் போட்டு அதிலே உட்கார்ந்துண்டு சந்தடியில்லாம காயத்ரி ஜபம் பண்றவா, பிரவாகத்தையே பாத்துண்டு சிந்தை மறக்கறவா, இப்படி எத்தனையோ காட்சி, ஊடே குரங்கு அட்டகாசம், ரொம்ப சுவாரசியமா இருக்கும்.

''நான் அங்கேதான் போய் ரெண்டு வேளை சந்தி ஜபங்களை செய்யற வழக்கம். அங்கே வந்து தனியா என்னோட தீர்மானத்தைப் பல வழியிலே எடுத்துச் சொல்லியும் அவ கேக்கலை. அவ இப்படி என்னை அகாலங்களிலே தனிமையிலே தேடிண்டு வரது எனக்குக் கொஞ்சங்கூடப் பிடிக்கலை. இதுனாலே சாஸ்திரிகளோட கோபத்துக்கு ஆளாயிடுவோமோ, இது ஏதானும் பெரிய விபரீதத்திலே போய் முடிஞ்சுடுமோ, பல பேர் பார்த்துச் சிரிக்கறாப்பல ஆயிடுமோ அப்படிங்கற பயம் அதிகமாயிண்டு வந்தது. அவகிட்டே நான் பார்த்த தைரியம், என்னோட பயத்தை யெல்லாம் புரிஞ்சுண்டு தன்னை 'மாத்திக்கறவளாத் தோணலை; இத்தனைக்கும் அவளை நான் வெறுக்கலை. அவ நன்னா அழகா இருப்பா! ரொம்ப லாவண்யமான ரூபம். சாஸ்திரிகளாட்டமாவே நீளமா மூக்கு. தாயில்லாதவ. அவளைச் சாஸ்திரிகள் கண்ணுக்குக் கண்ணா வளக்கறார். அவளைப் பத்தி அவர் வச்சு இருக்கற எதிர்கால அபிமானம் யாராலேயும் எட்ட முடியாதது: அவளை பி.ஏ. வரையிலே படிக்க வச்சுப் பெரிய உத்தியோகஸ்தனா ஒருத்தனைத் தேடி அவனை ஒப்படைக்கணும்னு சொல்லிண்டு இருக்கார். ''என் பொண்ணைக் கலெக்டருக்குக் கொடுக்கப் போறேன் ஓய்! சும்மா வெறும் பயல்கள் ஜாதகத்தை யெல்லாம் கொண்டு வந்து காட்டிச் சிரமப்படாதேயும். 'எஸ்டிமெட்' எல்லாம் ரொம்பப் பெரிசு. ரூபாய் என்ன செலவானாலும் பாதகமில்லே. அதுக்காகக் கைவல்லியமான இடங்களெல்லாத்தியும் கொண்டு வராதேயும்'' — என்று தம் சகபாடிகளிடம் தைரியமாகக் கொஞ்சம் பெருமையோட அகங்காரத்தோட சொல்லிண்டு இருக்கறத்தையும் நான் கேட்டிருக்கேன். அப்படி இருக்கறச்சே கோமளியோட சிறுபிள்ளைத்தனமான பேதலிப்புக்கு நான் இடம் கொடுத்துண்டு இருக்க முடியுமா? சொல்லுங்கோ?

''என்னோட நிலை அங்கே ரொம்பத் தர்ம சங்கடத்துக்கு ஆளாயிண்டிருந்தது. அன்னிக்கு நான் பயந்து பயந்துண்டு இருந்த விபரீதம் நடந்துட்டுது பாட்டி.''

இதைச் சொல்லிட்டு யக்ஞம் கொஞ்ச நேரம் நிறுத்தினான். அவனோட மூஞ்சி ரொம்ப வாடிப் போயிருந்தது. அடுத்த படியாச் சொல்ல வேண்டியதுக்காக மனசை நிதானப்படுத்திக்கிற மாதிரி ஒரு பெருமூச்சு விடறான். மறுபடியும் அவன் அதைத் தொடங்கறச்சே கொஞ்ச நாழியாயிடுத்து.

''வாழ்க்கையிலே நாம படற உதாசீனத்தைக்கூட ஒரு அனுபவமா ஏத்துக்கறத்துக்கு'மனசோட நிலை பரிபக்குவம் கண்டுடுத்துன்னு அதைவிட வேற முதிர்ச்சி ஒண்ணுமே இல்லேன்னுதான் நான் சொல்லுவேன்''— கொஞ்ச நேரம் வெறுமனே ஒக்காந்து இருந்துட்டு இப்படி ஆரம்பிக்கறான்.

''மனுஷாகிட்டே இருக்கிற பலஹீனங்களைச் சொல்லணும்னு ஆரம்பிச்சா எத்தனையோ நிலையிலேருந்து சொல்லலாம். எங்கிட்டேயும் உண்டு. உங்ககிட்டேயும் உண்டு. இப்போ உங்ககிட்ட என்னோட வாழ்க்கை கும்மோணத்திலே எப்படிச் சீரழிஞ்சுதுன்னு சொல்லிண்டு இருக்கிறபோது அதோ அந்த ஆத்தைத் தாண்டித் தெருவிலே போறாரே மிராசுதார் ஒருத்தர். அந்தப் பெரிய மனுஷன் கிட்டேயும் இருக்கு. இல்லேங்க முடியாது. அதே மாதிரிதான் கும்மோணம் சாஸ்திரி கிட்டேயும் பலஹீனம் இருந்தது. அன்னிக்கு அவருக்கு வந்த கோபத்திலே அவர் கூட இப்படி ரொம்பச் சாதாரண பாமரனாட்டமா ஆங்காரப் படறாரேன்னு வருத்தப்பட்டேன்.

என்னோட வருத்தத்துக்கு அவரோட ஆங்காரம் ஒருபட்சமாயிருக்கேங்கறதுனுலே மட்டுமில்லே. உண்மை கேக்கறதுக்குக்கூட நிதானப்படமாட்டேங்கறுரேங்கறதும் ஒரு காரணம்.

''அவர் ரொம்ப அல்பமானவர்னு சொல்ல மாட்டேன். அது குரு நிந்தனைக்குச் சமம். அவரைப் பத்தி வியாக்கியானம் பண்ற அளவுக்கு என்கிட்டே தகுதி கிடையாது. ஆயிரம் தான் என் விஷயத்திலே ஒரு பட்சமா அவர் நடந்துண்டிருந்தாலும் கூட என் வரையிலே என் வாழ்க்கைக்கு அவர் ஒரு அச்சாணி மாதிரி. தைரியமா பகவான் சந்நிதியிலே நின்னுண்டு இன்னு மந்திரம் சொல்றேன்னு அது அவர் கற்பித்த பாடம்தான். நாலு பிராமணனுக்கு நடுவிலே உக்காந்துண்டு தைரியமா வேதங்களைச் சொல்ல அவர்தான் காரணம். பதினொரு வேதப்பிராமணனுக்கு மத்தியிலே இருந்துண்டு ஏகாதச ருத்ர ஜபம், யாகம் நடக்கறச்சே மேல் ஸ்தாயி கண்டத்திலேருந்து சப்தார்த்தங்கள் பிசகாமல் தைரியமா மந்திரங்களைச் சொல்றபோது அவரைத்தான் கண் முன்னால் நெனச்சுண்டு ஆரம்பிக்கறேன் !

''அப்படிப்பட்டவர் என்னைத் தப்பாப் புரிஞ்சுண்டுட்டார்.

எப்படியோ அவர் காதுக்கு விஷயம் போயிருக்கணும். இல்லேன்னு அவர் ஆத்திரப்படறமாதிரி கோமளி ஏதானும் உளறியிருக்கணும். அதனோட எதிரொலிதான், என்னைக் கழுத்தைப் பிடிக்க வெளியே தள்ளிட்டு, என்னோட பொம்பு மடிசஞ்சி, கிழிஞ்ச பாய் ஒன்னு, காவிக் கறையேறித் திண்ணைக் கொடியில் மடிச்சுப் போட்டிருந்த வேஷ்டி எல்லாத்தையும் கோல வாசல்லே விட்டெறிஞ்சுட்டார்.

'''போடா அயோக்கியா! குருத் துரோகம் பண்ணப் பாக்கறே. அன்னக்காவடிப் பய நீ. ஒனக்கு இவ்வளவு திமிரா? இவ்வளவு நீசப்பட்ட மனசோட இருக்கியேடா.



# வசீகரத்தையும், பெருமிதத்தையும் கொடுக்கும் நறுமணம் உங்களுககு பாமாலிவ் லவண்டர் டால்க் உபயோகிப்பதால்.

**உங்களுக்கு மிகவும் பிடித்தமான சென்டுகள்—உங்களுக்காகவே மீண்டும் உருவாக்கப்பட்டிருக்கின்றன!**

ஒரு காலத்தில் உலக அழகுக் கேந்திரங்களிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டவையும், உங்களுக்கு மிகவும் பிடித்தமானவையுமான சென்டுகளின்றி இனி நீங்கள் தவிக்கவேண்டாம்... இன்று பாமாலிவ் லவண்டர் டால்க் மட்டுமே அளிக்கும் வசீகர நறுமணத்தினாலும், பெருமிதத்தினாலும் உங்கள் உடலைச் சொகுசாகப் பராமரிக்க முடியும். பாமாலிவ் லவண்டரை உங்கள் உடம்பு முழுவதும் தூவிக் கொண்டு, சூழ்ந்து நிற்கும் அதன் இனிய வசீகர நறுமணத்தினுல் களிப்படையுங்கள்.

**எப்பொழுதும் புத்துணர்ச்சியுடனும் நறுமணம் சூழ்ந்த அழகுடனுமிருக்க பாமாலிவ் லவண்டர் டால்க்.**









மற்றும் பாமாலிவ் டால்க் டீலக்ஸ் —
மயக்கும் 17 சென்டுகளின் அற்புதமான கலவை

PT.G.8 TAM.

உன் நாக்கிலே வேதாத்யயனம் எப்படிடா நுழையும்... குருவாட்டமா இருக்கறவாளுக்குத் துரோகம் நினைக்காதே உருப்பட மாட்டே...'''

''சாஸ்த்ரி உள்ளே போயிட்டார். உள்ளே கோமளி அடி வாங்குகிற சத்தம் கேட்டது. நான் அதுக்கு மேலே அங்கே இல்லே. வந்து விட்டேன்.

''அதுக்கப்புறம் அனுமார் கோயில் படித்துறையும் கரையோரத்திலே இருக்கிற சத்திரத்துத் திண்ணையும்தான் என் வாசஸ்தலம்.

''சக்கரப் படித்துறையின் கிழக்கே ஒரு சாதாரணப் படித்துறை உண்டு. ரொம்ப ஒதுக்கலான இடம். அங்கே யாரும் குளிக்க வரமாட்டா. சமக்கடன் செஞ்சுட்டு வரவாதான் அங்கே ஒதுங்கிக் குளிப்பா. இதுக்கும் கிழக்கேதான் அனுமார் கோயில் படித்துறை. ரெட்டியார் அக்கிரகாரம் ஆரம்பம் இங்கேதான். வரிசையா ரெண்டு சாரியிலேயும் இருபது முப்பது வீடு உண்டு. தெருவோட வடகோடிலே ஆஞ்சநேயர் கோயில் தெற்குப் பார்த்து இருக்கு. கோயில் சுத்தி மணற் பரப்பு. அரசு, வேம்பு, நெல்லி எல்லா மரங்களும் உண்டு. அங்கே உட்கார்ந்துண்டா பெருமாண்டிங்கற சுடுகாடு தெரியும். திமுர் திமுர்னு பாடை போறது தெரியும். கொஞ்ச நேரத்திலே புகை தெரியும். அந்தப் புகை கிளம்பறதுக்குள்ளே வந்தவா கூட்டமா திரும்பிண்டு இருக்கிறது தெரியும். அடுத்தாப்பல வாழைத் தோட்டம். நாணற் காடு. அப்புறம் ஒரு சூனியம். நடுவிலே நதிப் பிரவாகம். எல்லாம் வாழ்க்கைத் தத்துவ மாட்டமாத் தோணும். இங்கேதான் சதா காலமும் நான் உட்கார்ந்திண்டு இருப்பேன்.

''நாலு இடங்களுக்கு நாலு வைதிகாளோட போக வேண்டியது. வர்றதை வச்சுண்டு ஆத்தோரப் படித்துறையிலே மூணு செங்கல்லே வைச்சுப் பொங்கிக்க வேண்டியது. குரங்குகளுக்குப் பறிகொடுத்தது போக மிச்சம் இருக்கிறதைச் சாப்பிடறது. கொஞ்ச காலம் இப்படி.

''அனுமார் கோயில் படித்துறையிலே ஒரு நாள் சாயரட்சை சந்தி ஜபம் பண்ணிண்டு நிக்கறேன். கோமளி வந்துட்டா. என்னைப் பார்த்து அழுதுண்டே நிக்கறா. நான்தான் நிதானமாப் பேசினேன்.

''மனசை மாத்திக்கோ கோமளி. ஒனக்கு நான் தகுதியே இல்லாதவன். அதுவுமில்லாமே உன்னோட ஆசையிலே நியாயமே இல்லே. என்மேலே தப்பே கிடையாது. ஆரம்பத்திலேயிருந்து நான் உன்னிடம் சொல்லிண்டே வந்திருக்கேன். அப்படி இருந்தும் கூட நான் பயந்த மாதிரியே நடந்துட்டது. உன் அப்பாவோட அநாவசியக் கோபத்துக்கு ஆளாயிட்டேன். என் மனசு ரொம்ப வேதனைப்பட்டுண்டு இருக்கு. என்னைச் சேர்ந்த வைதிகர்கள் எத்தனை பேர் என்னைக் கேலி செய்யறா தெரியுமா? சில பேர் என்னைக் கண்டாலே தூர விலகுகிற மாதிரி போறா. அதையும் பொறுத்துண்டு இங்கே காலம் தள்ளிண்டு இருக்கேன். இருந்தாலும் உன் மேலே நான் வச்சிருக்கிற அன்பு ஒரு பெரிய மரியாதைங்கறதை மறந்துடாதே. நீ எங்கே இருந்தாலும் நன்னா இருக்கணும். மறுபடியும் இங்கேயெல்லாம் என்னைத் தேடிண்டு வந்து என்னைத் துன்பப்படுத்தாதே.'''

இதைச் சொல்றபோது யக்ஞத்தோட கண்ணிலேருந்து தண்ணி வந்துண்டு இருந்தது. கொஞ்ச நேரம் சொல்றதை நிறுத்தினான். தலையைக் குனிஞ்சுண்டு சிறிது நேரம் சும்மா இருந்துட்டு ஆரம்பிச்சான்.

''நான் கோமளிகிட்டே பேசிண்டே இருந்தேன். அவ அழுதுண்டே இருந்தா!

'''நீ போயிடு கோமளி. யாராவது தேடிண்டு வந்துடப்போறா.'''

''அவன் அழுதுண்டே பேசினான்.

''நான் போக மாட்டேன். நான் உங்க கூடவே வரேன். நாம எங்காவது போயிடலாம்.''

''எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. நதிப் பிரவாகத்திலே அடிச்சுண்டு போற மாதிரி இருந்தது.

''எங்காவது போயிடலாமா, எங்கே போவது?''

''எங்கே வேணாப் போகலாம்.''

''எனக்குச் சிரிப்பு வந்துவிட்டது. சிரிச்சேன். 'நீ ஒரு பைத்தியம் கோமளி. கல்லூரியிலே படிக்கிறயே தவிர விவரணமே புரியாத அசடு. வாழ்க்கையோட அர்த்தமே புரிஞ்சுக்காதவள். வாழ்க்கை என்ன நீ காணற வெறும் பச்சைக் கனவுன்னு நினைச்சயா? அந்தக் கனவு மயக்கத்திலேயே, இரு கண்ணை மட்டும் விழிச்சுண்டா போறாது. கோமளி மனசையும் விழிச்சுக்கப் பண்ணிக்கோ! சொப்பனம் கண் விழிச்சவுடனே போயிடும். ஆனா நிஜ வாழ்க்கையிலே செஞ்சுடற தப்பு அப்படியில்லே. வினையை விதைச்சுட்டுக் கரும்பை எதிர்பார்க்க முடியாது. அதுவும் கல்யாணம்கறது நீ நெனைக்கிற மாதிரி மரப்பாச்சிப் பொம்மைகளுக்குச் சின்னப் பசங்க செஞ்சு வக்கற கல்யாணம்னு நெனச்சுண்டுட்டயா? விளையாட்டு முடிஞ்சவுடனே அவா, அவா மரப்பாச்சியை அவா அவா தூக்கிண்டு போயிடுவா! அதுபோல இது இல்லே தெரியுமா? உடனே மாறிடு. அந்த மாறுதல் உன்னோட பிற்காலத்துக்கு ஆரோக்கியம் தரும். என்னை மறந்துடு. நான் ஒரு சத்திரத்து ஆண்டி. வெளியிலே வேகமாகக் காத்து அடிச்சா பொங்கித் தின்னக் கூட இடம் இல்லாதவன். யாசகனாவது நாலு பேர்கிட்ட கை நீட்டி வாங்கிப் பொழப்பை நடத்தறான். அவன் வாழ்க்கையிலே கூட ஒரு நம்பிக்கை இருக்கு. நான் அந்த அளவு நம்பிக்கை கொள்ளக்கூட ஆதார மில்லாதவன்' —என்று சொல்லிட்டுக் கீழ்ப்படிக்குப் போயிட்டேன். அப்புறம் நான் பேசவேயில்லே. சந்தி ஜபம் பண்ணறதிலே கவனம் செலுத்தினேன்.

''அப்படியே என்னை ஓடற நதியிலே ஆத்திரத்தோட தள்ளி 'நீ செத்துப் போ...'ன்னு சொல்லிட்டு விறுவிறுன்னு மேலே போயிட்டா. அப்பவும் கூட அவள் மேலே எனக்குக் கோபமில்லே.''

**ய**க்ஞத்தோட முதல் கதை இதோட முடியறது. கும்மோணம் சாஸ்திரி வாயால் குருத் துரோகிங்கற பேரை வாங்கிச் சுமந்துண்டு மனசொடிஞ்சி போய் எங்கே யெல்

லாமோ கத்திண்டிருந்துட்டு ஒரத்தநாடு வந்தான். இதுக்கப்புறம் நடந்தது எனக்குத் தெரியும்.

ராஜா அய்யர்கிட்டே பஞ்சாட்சரமும் சிவதீட்சையும் வாங்கிண்டு ஒரத்தநாடு காசி விசுவநாதர் கோவில்லே சேவை செய்ய ஆரம்பிக்கிறான்.

யக்ஞும், யச்ஞும்னு அவன் கிட்டே எல்லாருமே அன்பா இருக்கா. கோவில்லே கணீரென்று மந்திரம் சொல்றான். வெளி உபாத்தியாயங்களுக்கும் மெதுவாகப் போக ஆரம்பிக்கிறான். புதுசா பூணல் போட்டுண்ட பசங்களுக்குக் கோவில் பிராகாரத்தில் உக்காந்துண்டு சந்தியா வந்தன மந்திரம்சொல் லித் தரான். அபிஷேகத்துக்குக் கொடம் கொடமாத் தண்ணி கொண்டுவந்து தரான். பூஜை நடக்கறபோது கருதி சுத்தமா கம்பீரமா சப்தார்த்தங்கள் தொனிக்க மந்திரங்களைச் சொல்றான். சந்நிதியிலே பாதிப்பேர் அவனையே பார்ப்பா. அத்தனை பளிச்சுனு தெரியறான்.

இப்ப அவன் இங்கே இல்லே. அங்கேயும் இல்லே; இங்கேயுமில்லே.

குழந்தை விசு நித்தியம் கேட்டுட்டு அழறான். "அவ"-வெளியே சொல்லத் தெரியாமல் என் முகத்தைப் பார்த்துட்டு அழறா. அவளோட அன்பு, ஆசை, எல்லாத்துக்கும் கண்தான் பேசும்.

அம்மாப் பொண்ணுக்கு அப்பா கிடையாது. அம்மா மட்டும் தான். அன்னு ஒருத்தன் உண்டு. அவன் உருப்படாமப் போயிட்டான். யாரையோ இழுத்துண்டு ஓடிட்டான். ரொம்ப நாளா அவனைக் கண்ணிலே காணலே.

அம்மாப் பொண்ணு ஓர் ஊமை.

வாய்தான் பேசவராதே தவிர மத்தவா முக ஜாடையிலேருந்து எல்லாத்தையும் புரிஞ்சுண்டு செஞ்சுடறகுட்டி!

பெரிய கண்ணு: பால் வடியற முகம். சின்னப் பொண்ணா அக்கிரகாரத்திலே குறுக்கும் நெடுக்கும் ஓடிண்டிருந்தவ இப்போ திமுதிமுன்னு வளர்ந்துட்டா.

இதுக்கு முன்னலே சைவ மடத் தெருவிலே ஜாகை. அங்கேருந்து அவா சட்டிப் பானையை ரோட்டிலே விட்டெறிஞ்சு துரட்டிட்டா! ராஜா அய்யர் கால்லே வந்து விழுந்தாள் அம்மாப் பொண்ணோட அம்மா.

இந்த ஊமைப் பொண்ணை வச்சுண்டு எங்கே போவேன்னு கதறினள். ராஜா அய்யர் தம்மோட இடத்திலே குடிசை யொன்றைப் போட்டுத் தந்து குடி வைச்சுட்டார்.

வாய் பேசாத அம்மாப்பொண்ணு நாலு வீட்டிலே வேலை செய்வாள். ரொம்பக் கஷ்ட ஜீவனம்தான். என் உடம்பு தள்ளாமை

அம்மாப்பொண்ணு அழகான பொண்ணு. கவடு சூது தெரியாதவள்.

அக்கிரகாரத்துக் கோடியிலே ஆறுமுது அகத்துக்குப் பக்கத்திலே பூவரசு மரம் நெறைய மண்டிக் கிடக்கோல்லியோ! அங்கே ஒரு பெரிய குப்பைக் குழியுண்டு. அதுக்கு அடுத்தாப்பலே சின்னக் குடிசையிலே அவ இருக்கா. அவ இருந்த குடிசைக்கு எதுத்தாப்பல மாங்குடி விசுவநாத அய்யர் வீடு. ஆவாத்துப் பொண்ணு வேதவல்லி. இன்னொருத்தி பேர் சட்னு ஞாபகத்துக்கு வரமாட்டேங்கறது. அவா எல்லாம் அம்மாப்பொண்ணோட சிநேகிதிகள்.

யினல் கஷ்டப்படறபோது அவ ஒத்தாசைக்கு வருவா. புறாவோட சிறகு படபடன்னு அடிச்சுக்குமே அந்த மாதிரி யக்ஞத்தைப் பாக்கறபோது அவ கண்ணிமை துடிக்கும். அவனைக் கண்டால் அப்படியொரு வெட்கம் அதுக்கு.

பூக்குடலையைக் கையிலே மாட்டிண்டு அவன் அவ குடிசையைத் தாண்டிப் போறபோது மல்லியும் பூவைச் சரமாக் கோத்து அவளிடம் தெருவிலே கொடுப்பாள். சாமிக்குச் சாத்தணும்கறதை நாமதான் புரிஞ்சுக்கணும். மாலையைத் தந்துட்டு விசு நாழி அவனைப் பார்த்துண்டு நிற்பா. அவனை நெருக்கமாப் பார்க்க இப்படி ஒரு பிரமேயத்தை சாதுர்யமா

## உகந்த பணி



புகழ்பெற்ற எழுத்தாளர் அவர். காந்தியடிகளின் 'ஹரிஜன்' பத்திரிகைக்குத் தாமும் ஏதாவது எழுத வேண்டும் என்று ஆசைப்பட்டார். ஆனால், காந்தியடிகளிடம் நேரிடையாகக் கேட்பதற்கு அவருடைய தன்மானம் குறுக்கிட்டது. காந்திஜியே தம்மிடம் சொல்ல மாட்டாரா என்று எண்ணினர். ஆனால், சந்தித்தபொழுதெல்லாம் காந்திஜி அவரிடம் ஏதும் கூறவில்லை. பொறுமை இழந்த அவர் ஒரு நாள், "பாபுஜி! எனக்கு உகந்த பணி ஏதாவது இருந்தால் சொல்லுங்களேன். செய்யச் சித்தமாயிருக்கிறேன்!" என்றார். ஆம், சூசகமாகத் தம் ஆசையைக் காட்டாமல் காட்டிக் கொண்டார்.

காந்திஜி அவர் கருத்தைப் புரிந்து கொண்டார். "நிரம்ப சந்தோஷம்; நங்களுக்கும் வேலை செய்யப் பொழுது கிடைத்திருக்கிறது என்பதை அறிய!" என்றார்.

"இதென்ன, அப்படிச் சொல்லி விட்டீர்கள்? தாங்கள் உத்தரவிடுங்கள், பாபுஜி! நான் நிறைவேற்றி வைக்கத் தயாராயிருக்கிறேன்!"

"அப்படியா, ஆனால் ஒரு காரியம் செய்யுங்கள். ஆசிரமத்தில் நிறையக் கோதுமை இருக்கிறது. அதை மாவாக்கித் தர உங்களால் உதவி புரிய முடியும் அல்லவா? இயந்திரம் கூட அதோ அந்த மூலையில்தான் இருக்கிறது!" என்றார் காந்திஜி.

எழுத்தாளருக்கு வியர்த்து விறுவிறுத்து விட்டது, காந்தியடிகள் கூறிய பணியைக் கேட்டதுமே.

— விஷ்ணு


டாக்டர்கள், வக்கீல்கள், என்ஜினியர்கள் மற்றும்
தனிநபர்கள் ஆகியோர்
15-வருட
பொதுமக்கள்
பிராவிடண்ட்
நிதி
திட்டம்
மூலம் சேமித்து வரலாம்
ரூ. 15,000
தேசிய சேமிப்பு நிறுவனம்

கண்டுபிடிச்சு வச்சுண்டு இருந்தா கழுதை! எனக்கு இதெல்லாம் தெரியாதுங்கற நெனப்பு அவனுக்கு.

ஊமைதான். குறுகுறுன்னு விழி. தினம் சாயரட்சையிலே என்னெய்க் கின்னத் தோட கோவில்லே பாக்கலாம். ஆள் உயரத்துக்கு நிக்கற வெங்கலப் பாவை விளக்குப் பக்கத்திலே நின்னுண்டு என்ன தான் செய்வாளோ! அம்மனேயே கண் கலங்கப் பார்க்கறதுலே அப்படியொரு லயிப்பு. அந்த ஏழை மனசிலே என்ன இருக்குங்கறதை நான் தெரிஞ்சுண்டுட்டேன். அவன் கூட அவளை ஒரு மாதிரியாப் பாக்கறதும் கோவில்லே ராத்திரி விசேஷம் முடிஞ்சு அகத்துக்கு வரச்சே அம்மாப் பொண்ணோட அம்மா குடிசை வாசல்லே உட்கார்ந்துண்டு இருப்பான். அவன் கையிலே பிரசாதம்னு சுண்டல், தயிர் சாதம், வடை, நாலஞ்சு வாழைப்பழம் எல்லாத்தையும் தந்துட்டு வர்றதும் எனக்குத் தெரியாதா, என்ன?

'நல்ல பொண்ணுடா. ஆனா ஏழை. நல்ல குடும்பம். என்ன சொல்றேன்னு' கேட்கறேன்.

யக்ஞுத்துக்கு வெட்கம் வந்துவிட்டது. ராஜா அய்யர் கிட்டப் போய் விஷயத்தைச் சொன்னேன். அவருக்குப் பரம திருப்தி.

அம்மாப்பொண்ணோட குடும்பத்திலே எல்லாரையும் எனக்குத் தெரியும். அவளோட தாத்தா வடுஊர்லே வாகினியா வாழ்ந்தார். உபாத்தியாயம்தான். அவருக்குத் தம்பி ஒருத்தர் உண்டு. எல்லாத்தையும் ஆடிக் கெடுத்துட்டான். அவருக்கப்புறம் அவா குடும்பத்தோட ஸ்திதி ரொம்ப க்ஷீண மடைஞ்சு போயிட்டது. சின்ன வயசிலேயே அம்மாப்பொண்ணோட அப்பன் பரகதி அடைஞ்சுட்டான். அவனுக்கப்புறம் இவளைப் பராமரிக்கப் பந்துக்கள் யாரும் முன்வரலே. அனுதையா விட்டுட்டா. குடும்பம் சுத்த மான மன்னார்குடி பிருகச்சரணம்.

எனக்குப் பரம திருப்தி. ராஜா அய்யர் முன்னுலேயே அம்மாப் பொண்ணோட அம் மாவைக் கூப்பிட்டு அபிப்பிராயம் கேட்டேன்.

'ஈசுவர சங்கற்பம் அப்படி இருந்தால் அவளை ரொம்ப அதிருஷ்டக்காரின்னுதான் சொல்லணும்'னு சொல்லிட்டா. யக்ஞுத்தைக் கூப்பிட்டு ஒரு வார்த்தை கேட்டுடுங்கோன்னு அவர்கிட்டச் சொன்னேன். அவர் அவனைக் கூப்பிட்டுக் கேட்டப்ப ஒண்ணுமே சொல்லலே. எத்தனை நன்னு அதைச் சமப்படுத்தி வச்சு இருக்கான் பாருங்கோன்னேன். அவர் கூப்பிட் டுக் கேட்டப்ப என்ன சொன்னுன், தெரியுமா?

'என்னோட தகுதி எனக்குத் தெரியும். இன்னிக்கு நான் ஒதுங்கியிருக்கிற நாத்தநாடு காசி விசாலாட்சியோட நிழல் பாட்டி எனக் குத் தேடித் தந்த ஐசுவரியம். என்னோட வாழ்க்கைக்கு ஒரு உருவம் கொடுத்த விசுவ கர்மாவாட்டமா உங்களைப் பாவிக்கிறேன். அப்படி இருக்கறச்சே நான் ஏன் இதுக்கு மாட்டேங்கணும்? அவ வாய் பேசாத ஊமை தான். இருந்தா என்ன? எனக்கு அவள் போறும். அவள் கெடைக்கிறதே என் நிலைக் குச் சரியானு பொறுத்தம்னு நினைக்கிறேன்.



''உண்மையான ஜனநாயகவாதி யார்?'' என்று கேட்டார் ஒருவர், காந்தியடிகளைப் பார்த்து!

''ஆண்டவன்!''

''ஆண்டவனு? வேடிக்கையாக இருக்கிறதே!''

''இதில் வேடிக்கை என்ன இருக் கிறது? உன்னையும் என்னையும்போல் எத்தனையோ மக்களைப் படைத்தவன், நன்மை—தீமை, பாவம்—புண்ணியம் ஆகியவற்றையும் படைத்தான். அவ ரவர்களுக்கு வேண்டியதைத் தேர்ந் தெடுத்துக்கொள்ளும் பொறுப்பைத் தன்னிடம் வைத்துக் கொள்ளவில்லை; தன் மக்களிடமே ஒப்படைத்து விட் டான்! பகுத்தறிந்து செயலாற்றும் பெரிய பொறுப்பை அவன் ஜனநாயக வாதியாக இல்லா விட்டால், மக்க ளிடம் ஒப்படைத்திருப்பானு?'' என்று கேட்டார் காந்திஜி. — விஷ்ணு

இதுக்கு மேலே நான் எதுக்கும் ஆசைப் படலே. படவும் மாட்டேன்' — அப்படின்னு ஆணி அடிச்சமாதிரி சொல்லிட்டான்.''

ஊருலிலே பல பேர் பல விதமாப் பேசிக் கறு. 'யாரோ அனுதையை வீட்டிலே கூட்டி என்னமோ சொந்தம் கொண்டாடறு. கல் யாணம் வேறே செஞ்சு வைக்கப் போறு ளாம். இந்தக் கெழம் செவெனென்னு கிருஷ்ணு, ராமான்னு சொல்லிண்டு கெடக் காதோ? காலம் போன காலத்திலே இது என்ன புது உறவு வேண்டியிருக்கு?' இப்படி என்னென்னமோ. இதையெல்லாம் யார் காதிலே போட்டுக்கறு?

ஊரிலே கல்யாணம். கோவில்லே கொட்டு மோளம், அவா அவா ஆத்துலே சாப்பாடுன்னு கேலி பண்ணுவா. அந்த மாதிரிதான் யக் ஞுத்துக்கும் அம்மாப் பொண்ணுக்கும் கல் யாணம் நடந்தது.

என்னோட மடியிலே தலையை வச்சுப் படுத்துண்டு இருந்த விசுவை உள்ளேயிருந்து வந்த அம்மாப்பொண்ணு எடுத்துத் தோளிலே சாத்துண்டு காமிரா உள்ளே போகிறுள்!

அம்மாப் பொண்ணு... அது ரொம்பச் சமர்த்து. அவ விழி பேசற விழி. எல்லாத்திலும் கண் வழியாலே காண்பிக்க அழகாக் கத்துண்டு இருக்கா.

யக்ஞும் ஊரை விட்டு யார்கிட்டேயும் சொல்லிக்காமப் போன சோகம் ரெண்டு பேருக்கும் பொதுவானதுதான். சில நேரங்களிலே என்னோட எண்ணம் என்னையும் மீறி அலைமோதறபோது கண்ணு பின்னுன்னு ஏதானும் நெனச்சுண்டுடறேன். அவனை எதிர் பார்த்து ஒவ்வொரு நாளும் ஏமாந்து போறச்சே என் மனசு ஆறமாட்டேங்கறது.

ராஜா அய்யர், கோபாலாச்சாரி, கக்கரை கர்ணம், இந்தண்டை இருக்கிற ஹோட்டல் பஞ்சு இவாளைப் போல் யக்ஞுத்துக்கு மேல் அக்கறை உள்ளவா அவனைப் பத்திக் கேக்கறச்சே மனசு கெடந்து துடிக்கிறது. ஆருடம் கேக்கறேன். அவன் வந்துடுவான்னு தான் வாக்கு வரது. பிரச்னமும் அப்படியேதான். வெத்தலையிலே மை தடவிப் பார்க்கறேன். அவன் தெரியறான். மேற்கே போயிண்டு இருக்கான். வடக்கே போயிட்டுத் தான் வருவான்னு சொல்றது. எல்லா வாக்கும் அவன் வருவான். அவன் வருவான்னுதான் சொல்றது.

அம்மாப்பொண்ணோட அம்மா பரகதி அடைஞ்சுட்டா. அதுக்கும் அவனைக் காணவில்லை.

**பெ**ரிய பள்ளிக்கூடத்திலே "ஆப்" அடிக்க ஆரம்பிச்சுட்டா. பள்ளிக்கூடம் ஆரம்பிக்க அரை மணி முன்னே அடிக்கற மணி அது. எண்ணி நூறு அடிச்சாகணும்.

தபால்காரப் பூமாலை தபால் பட்டுவாடா செஞ்சுண்டு போறான். வீட்டு வாசல்லே நின்னு பேரைச் சொல்லிக் கத்தறான்.

அடுத்தாப்லே இருக்கற தியாகராஜ அய்யர் மரவாடியிலே ரெண்டு பெரிய அருப்புக்குழியிலே மரமறுக்கற சத்தம் கேக்கறது. அவர் பேரன் நாகசுப்புவும் மகன் சிவகணேசனும் ஸ்கூலுக்குக் கிளம்பிட்டான்கள். திக்குவாய் வெங்கிட்டு வேகமாத் தெருவிலே ஓடறான். கக்கரை கர்ணமாத்து வாசல்லே வில் வண்டி நின்னுண்டு இருக்கு. தமிழ் பண்டிட் மகள் சாவித்ரி குளிச்சுட்டு, நீளமாத் தொங்கற தலை மயிரைக் கோதி விட்டுண்டு வாசத் தாவாரத்திலே நிற்கிறாள்.

"பாட்டி! சாப்பிட்டாச்சா?"

"ஓ... நீயா? வாம்மா..... இன்னும் சாப்பிடலை."

"மடியோட செஞ்சேன். பாட்டி நீங்க கட்டாயம் போட்டுக்கணும்."

கோமளி ஒரு பெரிய பாத்திரத்திலே அவியலோடு உள்ளே வரா.

"எதுக்கம்மா இதெல்லாம்?"

"பரவாயில்லே பாட்டி. எங்க ஆத்துக்காரர் இதுன்னு ரொம்பப் பிரியமாப் போட்டுப்பார். பண்ணினேன்."

அம்மாப் பொண்ணு கையிலே கொடுத்துட்டு அவளோட கன்னத்தைப் பிடிச்சுக்கிண்ணு. 'உன்னைப் பார்த்தாத்தாண்டி குழந்தை மாதிரி இருக்கு' அப்படின்னு கொஞ்சறு.

"நான் போயிட்டு வரேன் பாட்டி. ஆத்திலே கொஞ்சம் வேலை இருக்கு."

கோமளி போய் விட்டாள்.

**ம**னசு அடங்காதவாளுக்கு ஆத்மபோதமில்லே; ஆத்ம பாவனையுமில்லே. ஆத்மத்தியானமில்லாதவாளுக்குச் சாந்தி கிடையாது. சாந்தி இல்லாதவாளுக்குச் சுகம் ஏது?

இப்படி கீதை கேக்கறது சாங்க்ய யோகத்திலே.

யக்ஞுத்தைப் பார்க்கறச்சே எனக்கு இந்த சுலோகம் ஞாபகத்துக்கு வரும். அவன் தன்னோட தகுதிக்கு ஏத்தாப்பலே ஆசைப்பட்டவன். மனசை அடக்கினவன். ஆத்மாவோட தியான நிலை கலையாம வச்சுண்டவன். தன்னோட ஸ்திதிக்கு ஏத்தமாதிரி ஆசைப்பட்டு நியாயமானதை அடையறதுதான் பாமர மக்கள் ஆத்ம சம்பத்தாப் பாவிக்க வேண்டிய விஷயம். அப்பத்தான் சாந்தியும் சுகமும் தன்னாலே கிட்டும்.

வாழ்க்கையிலே தன்னோட நிலைக்கு மீறித் தென்பட்ட கோமளியை ஒதுக்கிட்டு அம்மாப்பொண்ணை வரிச்சுண்ட வரையிலே யக்ஞும் மகா புத்திசாலிங்கறதைக் காண்பிச்சுண்டுட்டான்.

கோமளி வந்தாள். கோழிகள் சாம்பல் மேட்டைக் கிளறிச் சாம்பலைப் பறக்க விட்டுட்டுப் போற மாதிரி போயிட்டா. சில இடத்திலே பழைய சாம்பல் கெடக்கும். அது மேலே யாரேனும் சின்னச் சின்ன நெருப்புக் கட்டிகளோட புதுச் சாம்பலைக் கொட்டிட்டுப் போயிருப்பா. அது கொஞ்ச நேரம் பொகைஞ்சுண்டு கெடக்கும். சாம்பலைக் கிளற வற கோழி சில சமயம் புதுச் சாம்பலை மிதிச்சுட்டுக் கிரீச்னு கத்திண்டே ஆள் உயரத்துக்கு எம்பிப் பறக்கும்.

கோமளி இப்ப வந்துட்டுப் போறது புது விஷயத்தைக் கௌறி விட்டுட்டுப் போற மாதிரி மட்டுமில்லே. சங்கடப்படவும் வைச்சுட்டுப் போற மாதிரி தோணறது.

**தி**டீர்னு ஒரு நாள் யக்ஞும் காணாமல் போய் விட்டான். அவனைக் காணோம்ங்கற விஷயமே ரெண்டு நாளைக்கப்புறம்தான் தெரிய வந்தது.

ராமநாதக் குருக்கள் அடிக்கடி ஆத்து வாசல்லே நின்னு கூப்டுட்டுப் போகிறார்.

யாரெல்லாமோ வந்து அவனைக் கேட்கிறா.

யக்ஞும் எங்கே?


யக்ஞும் எங்கே?

எல்லாரும் எங்கிட்டக் கேக்கறா. நான் யார் கிட்டப் போய்க் கேக்கறது? ஊமை அம்மாப்பொண்ணு கண்ணிலே தாரை தாரையாக் கண்ணீர் வழிய என்னைப் பாக்கறா. அவளோட பார்வையிலே மத்தவா கேக்கற கேள்வி இருக்கு.

ஏக்கம் பிடிச்சு ரெண்டு மூணு நாளா வாயிலே வச்ச விரலை வெளியிலே எடுக்காமல் மூலைக்கு மூலை உக்காந்து கெடக்கறாளே விசு, அவனோட மனசிலேயும் இதே கேள்விதானே இருக்கும்?

திடீர்னு அவன் காணாமப் போனது, அவன் மேலே பிரியமா இருக்கிறவாளுக்கெல்லாம் எப்படிப் புரியாம இருக்கோ, அதே மாதிரிதான் எனக்கும். ஆனா இப்பத்தான் ஞாபகத்துக்கு வர்றது. அவன் இந்த

# ஃபாஸ்ஃபோமின்



# சக்தியை அதிகரிக்கிறது.

# பசியைத் தூண்டுகிறது.



# வலிவைப் பெருக்குகிறது.



# நோய்களை எதிர்க்கும் சக்தியை கூட்டுகிறது.

**சுருங்கச் சொன்னால்—
குடும்பத்தில் அனைவரும் திட
ஆரோக்கியத்துடன் திகழ
உதவுகிறது ஃபாஸ்ஃபோமின்**




**ஃபாஸ்ஃபோமின்... 'பி' காம்ப்ளெக்ஸ் வைட்டமின்களும், பலவகை கிளிஸரோஃபாஸ்பேட்டுகளும் அடங்கிய, பழரஸ மணம் கமழும் பச்சைசிற டானிக்.**

SQUIBB® ® இ. ஆர். ஸ்க்விப் அண்டு ஸன்ஸ் இன்கார்பொரேடெட்டின் ரிஜிஸ்டர்ட் டிரேட் மார்க்காகும். காரம்சந்த் ப்ரேம்சந்த் ப்ரைவேட் லிமிடெட் இதை உபயோகிக்க உரிமை பெற்றவர்கள்.

**SARABHAI CHEMICALS** Shilpi SC 50 A /67 Tam


அழகிய
கரங்களின் மீது
அருவருப்பான ரோமமா ?
அருவருப்பான ரோமம் உங்கள் அழகை ஏன் கெடுக்க வேண்டும்? இப்போது அதை ஒழிப்பது மிகவும் எளிது. ரேஸர் தேவையில்லை. அது ஆண்களுக்கு மட்டும் தான். தவிர க்ஷவரம் செய்தால், உரோமம் வேகமாக வளருகிறது... மென்மையற்றும்கூட. ஒப்பனைசெய்துமறைக்கவா? ஒருவரையும் ஏமாற்ற முடியாது. ஆனால் இப்பிரச்னைக்கு எளிதான, அபாயமற்ற ஒரு பெண்மை வழி இருக்கிறது. அதுவே மென் மணம் கொண்ட ஆன் பிரெஞ்சு ஹேர் ரிமூவர். சற்றே தடவுங்கள். சில நிமிஷங்களுக்குப் பிறகு வழித்தெறியுங்கள்...பட்டுப்போன்ற மென்மை வாரக்கணக்கில் நிலைக்கும்.
Anne French
ஆன் பிரெஞ்சு
ஹேர் ரிமூவர்
அழகிய முறையில் உரோமத்தை அகற்றுகிறது.
57 HR-172-Tam
ரெஜிஸ்டர்டு யூஸர்: ஜெப்ரி மேனர்ஸ் அண்டு கம்பெனி லிமிடெட்

ஒரு வாரமா சரியாவே இல்லே. சரியாச் சாப்பிடறதில்லே. யார் கூடவும் கலகலப்பா இருக்கல்லே. அவன் காஞ்சிபுரம் போறதுக்கு ரெண்டு மூணு நாள் முன்னாடி ஒரு நாள் கண்கூடக் கலங்கியிருந்தது. பாவம்! பழசை யெல்லாம் ஞாபகப்படுத்திண்டான் போல இருக்கு. அப்படின்னு நான் பார்த்தும் பார்க்காத மாதிரி இருந்துட்டேன். அது இத்தனை பெரிய விஷயத்திலே கொண்டு போய் விடுமின்னு நெனைக்கக் கூடப் பாக்கத் தோணலே.

அம்மாப்பொண்ணு என்னெய்க் கிண்ணத் தோட கோவிலுக்குக் கௌம்பிட்டா! விசு அவகூடப் போகாம எங்கிட்ட இருக்கான்.

வாசப்படிலே ஓரமா ஒக்காந்துண்டு இருக்கேன்.

''யக்ஞங்கிறவர் இங்கேதானே இருக்கார்?'' கேட்டுண்டே வந்து நின்னவளைப் பார்க்கறேன்.

''ஆராத்துப் பொண்ணுடியம்மா நீ?... உள்ளே வா!''

''இந்த ஊருக்குப் புதுசா மாற்றலாகி வந்திருக்கிற ஓவர்சீயரோட ஆத்துக்காரி.''

''நீ எதுக்கு யக்ஞத்தைக் கேக்கறே?''

''அவரை நான் உடனே பார்க்கணும். சில விஷயங்கள் அவர்கிட்டப் பேசணும்.''

விச நாழிலே நான் அவளைப் புரிஞ்சுண்டுட்டேன். பளிச்சுன்னு கேக்கறேன்.

''நீ அந்தக் கும்மோணம் சாஸ்திரியோட பொண்ணுதானேடி?''

அவளுக்குச் சந்தோஷம் ஒரு பக்கம், ஆச்சரியம் ஒரு பக்கம்.

''ஆமாம்''ங்கறா.

உள் மித்தத்திலே நானும் அவளும் எதிரெதிரே ஒக்காந்துக்கறோம்.

அவள் அவனைப் பத்திக் கேக்கறச்சே என் மனசு ஆற்றாமையிலே கெடந்து அடிச்சுக்கறது.

''நீ யக்ஞத்தைப் பாக்கணும்னுதானே வந்தே? ஆனா அவன் இப்போ இங்கே இல்லே. எங்கே போனான்னே தெரியலே. புதனோட புதன் எட்டு வியாழன் ஒன்பது வெள்ளி பத்து நாள் ஆறது.''

''நெஜமாவா?''

''பொய்யில்லே. ... ஆமாம்... நீ எதுக்கு அவனைக் கேக்கறே. உன்னைப் பத்தியும் உன்னோட அப்பாவைப் பத்தியும் நிறையச் சொல்லியிருக்கான். நீ ஆயிரந்தான் சொல்லு. நீயும் ஒந் தோப்பனாரும் சேர்ந்து அவனை ரொம்ப நோக அடிச்சுட்டேள். அவன் ஒரு அப்பாவிப் பிள்ளையாண்டான்.''

அவ பலமா அழறா!

அவ அழறது என்னை லவலேசம் கூட அவ மேலே இரக்கப்பட வைக்கலே. கொஞ்சம் ஆத்திரம் கூட வரது.

''அழுது என்ன செய்யறது? அவனோட விதி அது. மனசு ரொம்ப ஒடைஞ்சு போய்த்தான் இங்கே அனாதையா வந்தான். அவனோட குணத்தைப் பார்த்து நான்தான் ஆதரவு தந்தேன். எதையும் ஒளிக்காமல் தன்னோட கதை பூராவும் சொன்னான். அவன் இப்படி சின்னப்பட யார் யாரோட கைங்கர்யம் எத்தனை எத்தனைங்கறதும் எனக்குத் தெரியும். அதெல்லாம் பழங் கதை. இப்போ யக்ஞம் இந்தாத்துப் பையன். காசி விசாலாக்ஷி கண் தொறந்தா. கல்யாணமாச்சு.''

''கல்யாணமாயிடுத்தா?''

கோமளி ரொம்ப ஆச்சரியத்தோட இந்தக் கேள்வியைக் கேக்கறச்சே நான் பெருமையோட அவ வெட்கப்படற மாதிரி, பொறுமைப்படற மாதிரி ''ஆமாம்! ஆயிடுத்து. நான்தான் செஞ்சு வச்சேன். இதோ இவன் அவனோட பிள்ளை''ன்னு விசுவைக் காட்டிண்டு இருக்கறச்சே கோவிலுக்குப் போயிருந்தஅம்மாப்பொண்ணு உள்ளே வரா.

''அதோ வராளே அவதான்...''

அம்மாப்பொண்ணை அத்தனை ஆர்வமாப் பார்க்கறா.

கோமளி மூஞ்சி பிரகாசமாயிண்டு வரது.

''நீ ரொம்ப அதிருஷ்டக்காரி. நல்ல அகமுடையானை அடைஞ்சிருக்கே. நீ சகல சௌபாக்கியங்களுடன் வாழணும்'' — அப்படின்னு அம்மாப்பொண்ணுகிட்ட கூப்பிட்டுச் சொல்றா. கொஞ்ச நேரம் சும்மா இருந்துட்டு என் பக்கம் திரும்பி, ''பாட்டி! அவர் உங்ககிட்ட என்னைப் பத்தியும் என்னுடைய அப்பாவைப் பத்தியும் சொன்னார் இல்லையா? அதெல்லாம் வாஸ்தவம்தான். எல்லாத்துக்கும் நான்தான் காரணம். அவரை நான் ரொம்ப நோக அடிச்சுட்டேன். ரொம்பக் காலமா அவரைப் பார்க்கணும்னு நெனைச்சுண்டு இருக்கேன். எனக்கு மூணு வருஷத்துக்கு முன்னாலேயே கல்யாணமாயிடுத்து. அப்பா என்னை எப்படிப்பட்டவனுக்குக் கொடுக்கணும்னு நெனைச்சாரோ, அப்படித்தான் கொடுத்தார். நானும் ரொம்பச் சீக்கிரமா என்னை நானே உணர்ந்து கொண்டு விட்டேன். என்னை நான் உணர எனக்கு வழி காட்டியது யக்ஞம்தான் பாட்டி. உணர்ச்சி வசப்பட்ட ஒரு கால கட்டத்திலே வெறும் மோகம் மட்டும்தான் வாழ்க்கைன்னு தப்பாக் கணக்குப் போட்டுண்டிருந்துட்டேன். நான் போடற கணக்கு தப்புங்கறதை எனக்கு எடுத்துச் சொன்னவரே யக்ஞம்தான். முழிச்சுண்டவுடனே மறந்து போயிட, வாழ்க்கைங்கறது வெறும் கனவு இல்லே. விவாகம் எல்லாரோட வாழ்க்கையிலேயும் வர ஒரு முக்கியமான கணக்கு. அதற்கு ஒரே ஒரு விடைதான் உண்டு. அந்தக் கணக்கை மட்டும் ரொம்ப நிதானமா, உணர்ச்சி வசப்படாமே, பேதலிக்காமப் போடணும். ஒரு தரம் தப்பு ஏற்பட்டுப் போயிட்டா அந்தத் தப்பை மறுபடியும் போட்டு மாத்திக்க முடியாதுங்கறதை உணர்த்தாம உணர்த்தினவர் அவர். உண்மையில் சொல்லப் போனா நான் வாழ்க்கையிலே செய்யவிருந்த மிகப் பெரிய தவற்றிலிருந்து என்னைக் காப்பாற்றி, தன்னையும் காப்பாற்றிக் கொண்டவர்.''

கோமளி என்னமோ பேசறா. நான் கேட்டுண்டிருக்கேன்.

''என் கணவர் நிறையப் படிச்சவர். என் மேலே ரொம்பப் பிரியமா இருக்கார். அவரோட சந்தோஷமா வாழ்க்கை நடத்தறேன். மனசும் சந்துஷ்டியோட இருக்கு. இப்படி இருக்கிற ஒவ்வொரு நிமிஷத்திலேயும் நான் யக்ஞத்தை நினைக்கிறேன். எனக்குக் கிடைத்திருக்கிற வாழ்க்கைப் பிரசாதமே

அவராலே எனக்குக் கிடைத்ததுங்கற எண்ணம்தான் அடிக்கடி உண்டாகிறது. இந்த எண்ணம் உண்டாகிற ஒவ்வொரு நிமிஷத்திலேயும் நான் யக்ஞுத்துக்கு நிறைய கடமைப் பட்டவளாட்டமா உணர்கிறேன். என் கண் களைத் திறந்து விட்டு உலகின் தரிசனத்தை உணர்த்திய வருக்கு நான் நன்றி சொல்ல வேண்டாமா பாட்டி? அதுக் குத்தான் அவரை எங்கெல்லாமோ தேடறேன். ரொம்ப சந்தோஷத்தோட அவர்கிட்ட நாலு வார்த்தை பேச ணும். மனசிலே உள்ளதை வெளிப்படுத்தி என் நன்றி யைச் சொல்லணும். ஆனா அது நிறைவேறாது போல இருக்கு. அவர் ஆத்தை விட்டுப் போய்ப் பத்து நான் ஆகிவிட்டதுங்கறேனே.''

அவ கண்களைத் தொடச்சிண்டே எழுந்திருக்கிறாள்.

அம்மாப்பொண்ணு கோமளியையே பாத்துண்டு நிக்கறா.

''அன்னிக்கு ரொம்ப எதேச்சையாக் கோவிலிலே பார்த்தேன். கூட்ட நெரிசலிலே அர்ச்சனைத் தட்டைக் கைநீட்டி வாங்கறபோது அவரைப் பார்த்தேன்.

'''என்ன சௌக்கியமா? இங்கேதான் இருக்கேளான்னு கேட்டேன். நான் ரொம்ப சாதாரணமா முன் அறிமுகத் துக்கு ஒரு நினைவு உண்டாக்கிக்கிற மாதிரிதான் கேட் டேன். அவர் அம்பாளைத் திரும்பிப் பார்த்துட்டு, 'அவ புண்யத்திலே இருக்கேன்'னு — சிரிச்சண்டே பதில் சொல் லிட்டு மற்றவர்கள் கொடுத்த அர்ச்சனைத் தட்டுகளுடன் சந்நிதிக்குள்ளே போயிட்டார். நான் வெளியே வந் துட்டேன்.

''அதுக்குப் பின்னாலே அவரை எப்படியாவது சந்திச் சுக் கொஞ்ச நேரம் பேசணும்னு ஆசைப்பட்டேன். என் ஆசை நிறைவேறவே யில்லை. அதுக்கு அவர் இடந் தரவு மில்லே. கூடவே எனக்குள் ஒரு நடுக்கமும் இருந்தது. இலை மறைவு, காய் மறைவா, நான் அவரைச் சந்திக்க எடுத்துண்ட ரெண்டொரு பிரயத்தனங்களும் பயனற்றுப் போய் விட்டன. அதோட விட்டுட்டேன். அப்புறம்தான் அவர் இருக்கிற இடம் தேடிச் சந்திக்கணும்னு முடிவு செஞ்சுண்டேன்.

''நான் பி.ஏ. படிச்சவ. யக்ஞும், தான் நாலாங் கிளாஸ் கூடப் படிக்கலேன்னு சொல்லுவார். ஆனா ஒரு சமயத்திலே, படிச்சவளான எனக்கு இருக்க வேண்டிய விவேகத்தை உணர்த்தி, என்னைச் சரியான வழியிலே போகச் சொல்லி விட்டுப் பெரிய அபவாதத்தோட போனவர் அவர். அப்பா அவரை ரொம்ப மோசமாத் திட்டி விரட்டிட்டார். எல்லாத்துக்குமா நான் அவரிடம் மன்னிப்புக் கேட்கணும்னு காத்துண்டிருக்கேன். கண் ணிலே பட்டவரைக் காண முடியாம நழுவ விட் டுட்டேன்.''

அம்மாப்பொண்ணோட முகத்தைப் பாக்கறா. ''உன் பேரென்னம்மா?''

''அவளுக்குப் பேச வராது. அவ பேரு அம்மாப் பொண்ணு.''

''பேச வராது?''

''ஊமை!''

அவளை அப்படியே கட்டிக்கறா. ''அடடா! எவ்வளவு உயர்ந்தவர் அவர்!... நான் வரேன் பாட்டி.. நாங்க சைவ மடத் தெருவிலே குடி வந்திருக்கோம். தாசில் தாராத்துக்குப் பக்கத்து அகம்...''

கோமளி போறா!

நான் போயிண்டே இருக்கு. எதை யெல்லாமோ எதிர்பார்க்கறேன். எதுவுமே நடக்கலே. எல்லாமே அதனதன் உண்மையான நிலையை விட்டுட்டுத் தாறுமாறா நடக்கறமாதிரி தோணறது. மனசு இப்படி ஒவ்வொண்ணு மேலேயும் இரும்பி அலைமோதி நிதானமிழக்கற போதெல் லாம் கோமளி சிரிச்சண்டே வரா. பேசறா. போயிடறா.

அவளைப் பார்க்கற போதெல்லாம் பாவமா இருக்கு. இப்பல்லாம் அவ பாசத்தோட தாத்பர்யங்களைப் பத்தி நிறையப் பேசறா. அதே சமயத்திலே அவள் மனசு நோகும்படியா நடந்துட்ட அசம்பாவிதங்கள் பற்றியும் வருத்தப்படறா. அவ இப்படி வந்து போயிண்டு இருக் கிறது மனசுக்கு இதமா இருக்கு. ஆனா அந்த இதம் ரொம்ப நாள் நீடிக்கக் கடவுள் கிருபை பண்ணலே.

ஒரு நாள் காலமே எட்டு மணி இருக்கும். கோமளி வேகமா வந்தாள். கண்ணெல்லாம் அழுத மாதிரி இருந்தது. விசுவைக் கூப் பிட்டு இழுத்துக் கட்டிண்டா. அம்மாப்பொண்ணு முகத்தைத் தன்னோட ரெண்டு கைக்கு நடுவே வச்சுண்டு கொஞ்சற மாதிரி 'அழகுப் பொண்ணு என்னோட அம்மாப்பொண்ணு. உன்னையும் என்னாலே மறக்க முடியாதடா' அப்படின்னு அவ ளுடைய ரெண்டு கன்னத்திலே யும் முத்தமிடறா. பிறகு என் பக்கம் திரும்பி, ''நான் போயிட்டு வரேன் பாட்டி. அவ ருக்குத் திருச்சிக்கு அந்தண்டை மாற்றலாயிடுத்து. ஒரு வாரம்

## ஆசிரம வாழ்க்கை



சபர்மதி ஆசிரமத்தில், கஸ்தூரி பா, அன்றாடம் இரவில் காந்திஜிக்கு எண் ணெய் தடவி உடம்பைப் பிடித்து விடுவது வழக்கம். 1924 ஆம் ஆண்டில் ஒரு நாள் இரவு, கஸ்தூரி பா, காலந் தாழ்ந்து, காந்திஜியின் அறைக்கு வந்தார். கால தாம தத்துக்குக் காரணம் என்ன என்று காந்திஜி கேட்ட போது, அன்றிரவு வெளி யூருக்குப் புறப்படும் ராமதாஸ் காந்திக்கு, வழிச் செலவுக் காக உணவு தயாரித்துக் கொண்டிருந்ததால் சிறிது நேரமாகி விட்டது என்று கஸ்தூரிபா பதில் அளித்தார்.

''உனக்கோ வேலைப் பளு அதிகம். மேலும் மேலும்

கழிச்சுப் போனாப் போறும்னு சொல்லிண்டு இருந்தார். ஆனா நேத்திக்கு சாயரட்சை வந்து உடனே புறப்படணும்னு சொல்லிட்டார். சாமான்களை யெல்லாம் ஒரு வாரமா கட்டி அனுப்பியாச்சு. உங்களிடம் சொல்லிண்டு போகலாம்னு வந்தேன். நான் போயிட்டு வரேன்' என்று சொல்லிட்டு என்னை நமஸ்காரம் பண்ணினாள்.

''அவரை எப்படியானும் இங்கே பார்த்துடுவேன்கற நம்பிக்கையோட இருந்தேன். அது நடக்கலை. அவரைப் பார்த்தும் மனம் விட்டுப் பேச முடியாம சந்தர்ப்பத்தை நழுவ விட்டுட்டுப் போறேன். வாழ்க்கை பூரா நான் என் தவறுக்கு, ஒரு நல்ல இதயத்தை நோக அடிச்ச தவறுக்கு மன்னிப்புப் பெற முடியாமலே போயிடுமோன்னு நினைக்கறேன். ஆனா அந்த அளவுக்கு நடக்காது. எங்கே போனாலும் எங்கே இருந்தாலும் நான் அவரைச் சந்திப்பேன். என் நன்றியைச் சொல்லி நான் முன்பு செய்த தவறுகளுக்கும் என்னால் அவருக்கு உண்டான அவமானங்களுக்கும் மன்னிப்புக் கேட்பேன். இதை நான் ஒரு சாதாரண விஷயமா நினைக்கல்லே. ரொம்ப முக்கியமானதா நினைக்கறேன். போயிட்டு வரேன் பாட்டி. நான் போன பின்பு அவர் இங்கே வந்துவிடுவார் என்கிற நம்பிக்கை எனக்கு இருக்கு. வந்தால் கோமளி எந்த விதத் தவறான எண்ணமுடனும் உன்னைப் பார்க்க முயற்சி செய்யலேயாம் என்பதைத் தயவுசெய்து சொல்லுங்கள். ஒருவேளை நான் அவரை மீண்டும் சந்திக்க முயன்றது அவர் மனத்தில் என்னைப் பத்தினதொரு தவறான எண்ணத்தைக் கூட உண்டாக்கி யிருக்கலாம்.''

கோமளி அழுதுண்டே போனா. என்னோட மனசு கெடந்து அடிச்சுக்கறது.

ரொம்பப் பெரிய விஷயங்களைப் பத்தியெல்லாம் மனசுக்குள்ளே சம்வாதம் பண்ண எனக்கு அதிகமா லோகாயதம் தெரியாது. என் மனசு பழைய மனசு.

மறுபடியும் ராத்ரி வரது. பகல் வரது.

இதோ இப்பக்கூட ராத்திரிதான். கோவில்லே அர்த்தஜாம மணியோசை கேக்கறது. ஒரு மணி நேரம் போனப்பறம் அக்ரஹாரத்து நிசப்தத்திலே ராமனாதக் குருக்கள் அவாத்து வாசக் கதவைத் தட்டற சப்தமும் கேக்கறது.

இப்போ மனசிலே யக்ஞத்தைப் பத்தி நினைப்பு. என்னென்னமோ யோசனை. 'அவன் வருவானா அவன் வருவானா'ன்னு மனசு ஏங்கறது. என்னை இப்படியே இந்தத் தனியிலே சிக்க வச்சுட்டுப் போயிடுவானோன்னு பயமா இருக்கு. கோமளி வந்து சொன்னப்பறம்தான் அவன் ஏன் திடீர்னு காணாமப் போனான்கறத்துக்குக் காரணம் கொஞ்சம் புரியற மாதிரி இருக்கு.

இப்போ ?

இப்போதான் அவ போயிட்டாளே. இனிமே வரலாமோல்லியோ?

---

வேலை செய்தால் உடல் நலிவு ஏற்படாதா? இன்று ராமதாஸுக்குக் கட்டிக் கொடுப்பதற்காக உணவு தயாரித்திருக்கிறாய். நாளைக்குத் தில்லிக்குப் போகும் சுரேந்திராவுக்கோ வேறு ஒருவருக்கோ கொடுத்தனுப்புவதற்காக உணவு தயாரிக்கலாம். இப்படி மேலும் மேலும் வேலையை இழுத்துப் போட்டுக் கொண்டால், இதற்கு முடிவு ஏது? இந்த வேலையை வேறு யாராவது செய்ய மாட்டார்களா ?'' என்று காந்திஜி கேட்டார்.

''சொன்னால் செய்வார்கள். ராமதாஸ் என்னுடைய மகன். ஆதலால், உங்களுக்குப் பணிவிடை செய்வதற்குச் சிறிது காலதாமதமானாலும் பரவாயில்லை என்று கருதி, அவனுக்குக் கொடுத்து அனுப்புவதற்காக உணவு தயாரிப்பதில் ஈடுபட்டேன். இதே போல, ஒவ்வொருவருக்கும் செய்வதற்கு என்னால் முடியுமா? நீங்கள் மகாத்மா. உங்களுக்கு எல்லோரும் குழந்தைகள். நான் அனைவரையும் நேசிக்கிறேன். ஆனால் என்னுடைய புதல்வர்களிடம் எனக்குப் பாசம் தணியாது. ராமதாஸுக்குக் கட்டிக் கொடுப்பதற்காக என்றோ ஒரு நாள்தானே உழைக்கிறேன்'' என்றார் கஸ்தூரி பா.

''நல்லது. இதைப் பற்றி நாம் சிறிது சிந்திப்பதும் அவசியம். இப்போது நாம் எங்கு வசிக்கிறோம்'' என்று கேட்டார் காந்திஜி.

''சத்தியாக்கிரக ஆசிரமத்தில்.''

''ராஜ்கோட்டில் உள்ள நம்முடைய வீட்டை விற்றுவிட்டு இங்கு ஏன் வசிக்கிறோம்''

''நாட்டுப் பணிக்காக.''

''நாட்டுப் பணிக்காகத் தியாக வாழ்க்கையை ஏற்றுக் கொண்டு இங்கு தங்கியுள்ள இளைஞர்கள் நம்மையே தங்களுடைய பெற்றோர்களாகக் கருதி நம்மிடம் மரியாதை செலுத்த வில்லையா?''

''அவர்களும் மரியாதை செலுத்துகிறார்கள். நாமும் அன்புடன் பழகுகிறோம்.''

'' அப்படியானால் அவர்களிடம் நமக்குள்ள கடமையைப் பற்றிச் சிறிது சிந்தித்துப் பார். ராமதாஸ் உன்னுடைய மகன். அவனிடம் தாயன்பு செலுத்துவதில் தவறில்லை. ஆனால் தங்களுடைய உறவினர்களை விட்டு விட்டு, நம்மையே தங்களுடைய உறவினர்களாக ஏற்றுக் கொண்டு இங்கு வசிக்கும் இளைஞர்களிடமும் நீ தாயன்பு காட்ட வேண்டாமா? ஆசிரம வாழ்க்கையில் மற்ற இளைஞர்களைப் போலவே ராமதாஸும் ஒருவன்தான். அவனிடம்மட்டும் தனிப் பரிவு காட்டலாமா ?''

கஸ்தூரி பா மௌனமாக இருந்தார். பாசத் திரை விலகிற்று. நம்மை பா (அம்மா) என்று அழைக்கும் அனைவரிடமும் அவர் தாயன்பு செலுத்தினார்.

- கே. எஸ். ஜே.

அவ இந்த ஊரை விட்டுப் போய் எத்தனை நாள் ஆறது?

இவன் ஏன் இன்னும் வரலே ?

ஒரு வேளை வரவே மாட்டானோ ? கிழக்கு மூலையில் கௌளி சொல்றதே. அவன் வர மாட்டானோ !

ஈசுவரா !

அம்மாப் பொண்ணு புரண்டு புரண்டு படுத்துக்கறா. விசு தூக்கத்திலே வெறும்னே முனகிண்டே இருக்கான்.

''பாட்டி.''

''ஆரது?''

''நான்தான் பாட்டி.''

''யக்ஞம் குரலாட்டமா இருக்கே !''

''யக்ஞம்தான் வந்திருக்கேன் !''

குரல் கேட்டு விசு விழிச்சுண்டு ஓடி வரான். தன்கிட்டேருந்து, பிச்சுண்டு விசு ஓடின அதிர்ச்சிலே அம்மாப்பொண்ணு முழிச்சுக்கறா.

அவளும் ரேழிக்கு வரா.

தீட்சை மண்டின மூஞ்சியோட யக்ஞம் ரேழிலே வந்து நிக்கறான். மூக்கும் கன்னத்திலே கொஞ்சம் நெத்தியும் மட்டும் செகப்பாத் தெரியறது. பாதி கழுத்து வரையிலே பின் மயிர் தொங்கறது.

''இதென்னடா யக்ஞம்? இப்படி எல்லாரும் கேக்கும்படியாப் பண்ணிட்டுப் போய் விட்டே. நீ மகா புத்திசாலி. உனக்கு நான் ஒண்ணும் சொல்லித் தரணும்ங்கறது இல்லே. என்னோட தள்ளாத வயசிலே இப்படியொரு அதிர்ச்சியைத் தந்து என்னை ரொம்பச் சோதிச்சுட்டே.''

அவன் மேலே போட்டுண்டிருந்த வஸ்திரத்தைக் கீழே போட்டுட்டு அம்மாப் பொண்ணைப் பார்க்கறான். விசுவை எடுத்து மடிலே வச்சுக்கறான்.

''நான் எங்கேயும் போயிடலே பாட்டி. கோமளியை எதிர்பாராதவிதமா இங்கே பாத்ததிலே ரொம்ப அதிர்ச்சி அடைஞ்சுட்டேன்''ங்கறான்.

''அவகூட எனக்கு இங்கே பழக்கமாயிட்டா. ஆனா அவ இப்ப இந்த ஊர்லே இல்லே. அவ ஆத்துக்காரருக்கு மாத்தலாகிப் போயிட்டா. உன்னைப் பாக்க முடியலேங்கற வருத்தம் அவளுக்கு.''

''அவ இன்னொரு தரம் என்னைச் சந்திக்கறதை நான் விரும்பலே பாட்டி. இதுனாலே அவ மேலே எனக்குக் கோபம்னு எடுத்துக்க வேண்டாம். அவ இப்ப கல்யாணம் ஆனவ. பெரிய உத்யோகஸ்தரோட மனைவி. அப்படியிருக்கற போது அவ எதுக்கு என்னைப் பார்க்க முயற்சி செய்யணும்? நான் இப்பமட்டுமில்லே. எப்பவுமே அவகிட்டே எதையுமே எதிர்பாக்கலே. அவ செஞ்ச தப்புக்கு மன்னிப்புக் கேக்கக்கூட வந்திருக்கலாம். நான் அதைக்கூட அவகிட்டேருந்து எதிர்பார்க்கலே. அவ கனவு கலைஞ்சு, மனசு நிதானப்பட்டு, நல்ல கணவனை அடைஞ்சு நல்வாழ்வு வாழணும்னு அன்னிக்கே வாழ்த்திட்டு வந்திட்டேன். அப்படி அவ திருப்திப்படும்படியா அவ வாழ்க்கை அமைஞ்சிருந்தா நன்னா வாழட்டும். என்னைப் பாக்கணும்ங்கறதும், என்னிடம் மன்னிப்பு வாங்கிக்கணும்ங்கறதும் அனாவசியம். அவ என்கிட்ட மன்னிப்பு வாங்கணும்னு நான் எதிர்பார்க்கவுமில்லே. அப்படிப்பட்ட தப்பு அவ செஞ்சுட்டதாக நான் நினைக்கவுமில்லே. இந்த முடிவோட நான் இருக்கறச்சே அவ எதுக்காக என்னை மறுபடியும், மறுபடியும் சந்திக்க ஆசைப்படணும்? ரெண்டு மூணு தரம் அவள் என்னைத் தனிமையில் சந்திக்கப் பிரயத்தனப்பட்டதை ஜாடையா கவனிச்சேன். எனக்குள்ளே ஒரு பயம் வளர ஆரம்பிச்சுட்டுது. அந்த நேரத்லே எனக்குத் தோணின ஒரே வழி இதுதான். அவ இந்த ஊர்லே இருக்கற வரையிலே நான் வரறதில்லேங்கற முடிவோடதான் யார் கிட்டேயும் சொல்லிக்காம போயிட்டேன்.

''என்னை மன்னிச்சுடு, பாட்டி. நான் உனக்குக் கொடுத்த சிரமம் மனசுக்கு மட்டுமில்லே, உன் சரீரத்துக்கும்கூட ஜாஸ்திதான். இதோட இன்னொரு முக்கிய கடமை ஒண்ணு பாக்கியிருந்தது. அதையும் முடிச்சுண்டு வரேன். கும்போணம் சாஸ்திரி என்னோட முதல் வித்யா குரு. என்னை அவர் குருத் துரோகின்னு சொல்லித்தானே வெளியே பிடிச்சுத் தள்ளினார். அவர் மனசிலே இருக்கற அந்தத் தப்பெண்ணத்தை மாத்த வேண்டாமா? குருவோட ஆசீர்வாதமில்லாம எந்த வித்தையும் பயன் தராது. சிரேயஸ் கிட்டவும் கிட்டாது. நான் அவரை அலட்சியப்படுத்திட்டதாகப் பாவிக்க இடந்தரக் கூடாது இல்லையா ? எந்தப் பெரியவர் மூலம் எந்த வித்தையைக் கத்துண்டேனோ அவர் மனசிலே நல்லவனா இடம் பிடிக்கக்க வேணுமா? நடந்ததைச் சொல்லி அவர் கால்லே போய் சாஷ்டாங்கமா விழுந்தேன். என் மேலே தப்பே இல்லேன்னு அழுதேன். அவர் கண்கள் கலங்கிட்டது. நெறஞ்ச மனசோட என்னைக் கட்டித் தழுவிண்டு, 'எதையும் மனசிலே போட்டுக்காதேடா. ஏதோ அப்பப்ப உண்டாகிற கோப தாபங்களுக்கு ஆட்பட்டுச் சில தவறுகள் சம்பவிச்சுடறது. அது பின்னாலே உணரப்படற போதுதான் சில உண்மைகளும் கண்ணுக்குத் தெரியறது. உடனே தெரியறதைவிடக் கொஞ்ச காலம் தள்ளி ஓர் உண்மை உணரப்படற போது அதனோட தன்மையும் பலபடி உயர்ந்துவிடறது. என்னைப் பொறுத்த வரையிலே என் மனசிலே நீ என்னிக்கோ உயர்ந்தவனாயாச்சு. எழுந்திரு....' என்றார்.

''அவர்தான் சொன்னார், கோமளி ஒரத்தநாட்டிலேருந்து திருச்சிக்குப் பக்கத்திலே ஓர் ஊருக்குப் போயிட்டாங்கறதை. அதைக் கேட்டவுடனே நேரே வரேன். நடுவிலே கொஞ்ச நாள் சீயாழி தோணியப்பருக்குச் சேவை செய்யற பாக்யம் கெடச்சுது. எங்கே இருந்தாலும் நெனைப்பு பூரா இங்கேதான்.''

நான் அவனையே பாத்துண்டு நிக்கறேன். ரேழி மூலையிலே பதிச்சு இருக்கற எந்தரக் கல்மேலே சிம்னி வௌக்கு எரிஞ்சுண்டிருக்கு.

அவனைப் பாத்த சந்தோஷத்லே அம்மாப் பொண்ணு ஸ்தம்பிச்சுப் போய் நிக்கறா.

எனக்குக் கீதையிலே ஒரு சுலோகம் ஞாபகத்துக்கு வரது......

சித்தத்தை அடக்கி ஆத்மாவிலே நிறுத்தி ஆசையை விடறவனுக்குப் பேர் யோகி.

அது மாதிரி !

யக்ஞம் பாமர மனுஷாளுக்கு நடுவிலே ஒரு யோகி !

★ ★ ★

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-31
Managing Editor: T. Sadasivam

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon






# லைப்பாய்

## இருக்குமிடம்: அதுவே...
## ஆரோக்கியம் இருக்குமிடம்

லைப்பாய் ஸ்நானம் - உறசாகப் பெருக்கு. உல்லாச ஊறறு..
ஒவ்வொரு குளியலும் உணர்த்தும்: நல்ல சோப்புக்குரிய நன்மைகள்
யாவும் பெறலாம், அதற்கு மேலும் பெறலாம் ஆரோக்கியமுடன்.

**அழுக்கிலுள்ள கிருமிகளைக் கழுவிக் களைவது லைப்பாய்**

இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு

லிண்டாஸ்-L.51-140 TM